2922

T.N.L.A Debates

Official Report

No 1

Vol 21

7th April 1986

v2 11, 31 N86
N86-21.1
136463

வெளியீடு 22-12-1986

Issued 22-12-1986

909/87

2922

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 7, 1986-தொகுதி 21 எண். 1
Monday the April 7, 1986-Volume 21 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3]

[Price Rs. 3

V2,11,31 N86

N86.21.1

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136463
சென்னை-600 008

## உள்ளடக்கம்,

7-4-1986.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்; | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—39 |
| 2. | தகவல் கோரல்: | |
| | (அ) இலங்கை அகதிகளில் சிலர் கோடைக் கானலில் கொத்தடிமைகளாக நடத்தப்படுவது குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு. | 39—40 |
| | (ஆ) நகரமன்ற, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை குறித்து. | 40—41 |
| 3. | கவன ஈர்ப்பு: | |
| | (அ) ஆவடி நகரியத்தில் சொத்து வரி வசூல் கெடுபிடி. | 41—44 |
| | (ஆ) திருவில்லிப்புத்தூர் தொகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறித் துணித் தேக்கம். | 45—47 |
| | (இ) அமைச்சர்களின் இலாக்கா மாற்றம் குறித்து. | 102 |
| 4. | வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி): | |
| | (அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் | 48—102 |
| | (ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள். | 103—151 |
| | மாண்புமிகு திரு சி. பொன்னையன் | 48—52, 129—150 |
| | திரு. ஏ. எஸ். ரவீந்திரன் | 51—58 |
| | திரு. பூ. மு. நரசிம்மன் | 58—63 |
| | திரு. அ. ரகுமான்கான் | 63—77 |
| | திரு. வி. பி. சிந்தன் | 77— |
| | திரு. மா. சின்னராசு | —92 |
| | திரு. கு. சுப்பராயன் | 92—99 |
| | திரு. கி. கிருஷ்ணமூர்த்தி | 99—106 |
| | திரு. வை. பாலச்சந்திரன் | 106—108 |
| | திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 108—111 |
| | திரு. என். எஸ். வி. சித்தன் | 48, 50, 111—121, 124, 127—129 |
| 5. | அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி தாம் அப் பொறுப்பிலிருந்து விலக இருப்பது குறித்து அளித்த அறிக்கை. | 102—103 |
| 6. | அறிவிப்பு: | |
| | பேரவை அலுவல். | 151—154 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 154—155 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1 மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்)—இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, கால்நடைப் பராமரிப்பு, பால், பால்பெருக்குத் திட்டம், ஆவண பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

2 மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், பொது நிர்வாகம், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொழிலாளர் நலத்துறை.

3 மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத் துறை, மற்றும் அரசு அச்சகம்.

4 மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (செய்தி–அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், திரைப் படச்சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல்பொருள் இயல், மற்றும் பயண இசைவுச் சீட்டு.

5 மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

6 மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

7 மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

8 மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.



9 மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் சர்க்கரைப்பாகு கழிவு.

10 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

11 மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

12 மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

13 மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (ஆயத்துறை மற்றும் கைத்தறி துறை அமைச்சர்)—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

14 மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (சத்துணவு அமைச்சர்)—சமுதாய வளர்ச்சி, சத்துணவு.

15 மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

16 மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (வீட்டு வசதித் துறை அமைச்சர்)—வீட்டுவசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

17 மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

18 மாண்புமிகு திரு. த. இராமசாமி: (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

19 மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (ஆதித்திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதித்திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

20 மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

21 மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

22 மாண்புமிகு திருமதி. விசயலட்சுமி பழனிசாமி: (கதர்த்துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

23 மாண்புமிகு. திரு. யா. சை. மு. யூசுப்: (பொதுப் பணித்துறை அமைச்சர்)—பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

24 மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.



2922

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU
## GOVERNOR OF TAMILNADU

### THIRU SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS:

1. The HON. DR. M.G. RAMACHANDRAN : (CHIEF MINISTER)—Indian Administrativ Service and other All India Services, Police, Prevention of Corruption. Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

2. The HON. DR. V. R. NEDUNCHEZHIAN : (MINISTER FOR FINANCE)—Finance, Revenue, General Administration, Legislature, Elections, Statistics, Youth Service Corps Ex-Servicemen and Labour.

3. The HON. THIRU. S. RAMACHANDRAN : (MINISTER FOR ELECTRICITY) —Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The HON. THIRU R. M. VEERAPPAN ; (MINISTER FOR INFORMATION AND RELIGIOUS ENDOWMENTS)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Public, District Revenue Officers, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits, Planning, Archaeology and Passorts.

5. The HON. THIRU K. RAJARAM (MINISTER FOR INDUSTRIES)— Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

6. The HON. THIRU P. U. SHANMUGAM : (MINISTER FOR LOCAL ADMINISTRATION)— Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development & Rural Indebtedness.

7. The HON. THIRU C. ARANGANAYAGAM : (MINISTER FOR EDUCATION)— Education, Official Language, Tamil Development and Culture.

8. The HON. Dr. K. KALIMUTHU: (MINISTER FOR AGRICULTURE)— Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

9. The HON. THIRU C. PONNAIYAN : MINISTER FOR LAW) Law Courts, Prisons, Deputy Collectors, Legislation on Weights and measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Chits and Molasses.

10. The HON. DR. H. V. HANDE: (MINISTER FOR HEALTH)—Health and Environmental Pollution Control.

11. The HON. THIRU S. MUTHUSAMY: (MINISTER FOR TRANSPORT)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

12. The HON. THIRU S. THIRUNAVUKKARASU: (MINISTER FOR FOOD)—Food, Price Control and Census.

13. The HON. THIRU V. V. SWAMINATHAN: (MINISTER FOR EXCISE AND HANDLOOMS)—Prohibition excluding grant of Liquor Permits, Exise, Handlooms and Textiles.

14. The HON THIRU. R. SOUNDARARAJAN: (MINISTER FOR NUTRITIOUS MEALS)—Nutritious Meals.

15. The HON. THIRU T. VEERASAMY: (MINISTER FOR COMMERCIAL TAXES)—Commercial Taxes.

16. The HON. THIRU N. NALLUSAMY (MINISTER FOR HOUSING) Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

17. The HON. THIRU ANOOR P.G. JAGADEESAN: (MINISTER FOR RURAL INDUSTRIES)— Rural Industries including Village, Cottage and Small Industries.

18. The HON. THIRU T. RAMASAMY: (MINISTER FOR REHABILITATION AND EMPLOYMENT)— Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

19. The HON. THIRU A. ARUNACHALAM: (MINISTER FOR ADI DRAVIDAR WELFARE)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

20. THE HON. THIRU M.R. GOVENDAN; (MINISTER FOR BACKWARD CLASSES)—Backward Classes and Fisheries.

21. THE HON. TMT. GOMATHI SRINIVASAN: (MINISTER FOR SOCIAL WELFARE)—Social Welfare including women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

22. THE HON. THIRU TMT. VIJAYALAKSHMI PALANISAMY: (MINISTER FOR KHADI) – Khadi, Bhoodan and Gramdhan.

23. THE HON, THIRU Y.S.M. YUSUF (MINISTER FOR PUBLIC WORKS)—Public works Department, Irrigation including Minor Irrigation and wakf.

24. The HON. THIRU K.K.S.S.R. RAMACHANDRAN: (MINISTER FOR CO-OPERATION)—Co-operation,



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு.
திரு. செ. செம்மலை,
திரு. சைதை சா. துரைசாமி.
திரு. டி. ஆர் வேங்கடரமணன்.
திரு. பொன் முத்துராமலிங்கம்.

சட்டமன்ற பேரவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி பி. ஏ., பி. எல்.

இணைச் செயலாளர்

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார் பி.ஏ., பி.ஜி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. வெ. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

குழு அலுவலர்கள்

திரு. சா. சீனிவாசன், பி. எஸ்சி.
திரு. கு. ஆ. சீனிவாசன், பி. ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு. ப. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி. ஏ., பி. ஜி. எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.
திரு. மா. கு. ஜோசப், பி. ஏ.

எஸ்டேட் அலுவலர்கள்

திரு. கேசவராம், பி. ஏ.
திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி. எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. கோ. வெங்கட்டராமன்

தலைமை நிருபர்

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம்.ஏ (தமிழ்)



தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 2 அப்துல்சமத், திரு. ஆ. கா.அ. | திருவல்லிக்கேணி |
| 3 அப்துல் மஜீத் திரு. எச். | வாணியம்பாடி |
| 4 அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 5 அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 6 அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 7 அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 8 அன்பழகன், திரு. க. | பார்க் டவுன் |
| 9 அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 10 அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 11 அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 12 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 13 ஆதிமூலம்என்கிற தில்லை காந்தி, திரு. | ஆண்டிமடம் |
| 14 ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 15 ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 16 ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 17 ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஒட்டபிடாரம் (செ.வ.) |
| 18 ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 19 ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 20 ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 21 ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 22 ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 23 இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |
| 24 இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25 இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26 இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 27 இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28 இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல் |
| 29 இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம் |
| 30 இராசாங்கம் திரு. மு. | திருவிடைமருதூர் |

| | தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 31 | இராசாம்பாள், திருமதி. த. | தலைவாசல் (செ.வ.) |
| 32 | இராசாராம் திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 33 | இராசாராமன், திரு எஸ். | பாபநாசம், |
| 34 | இராசு, திரு. வி. கே. | அரக்கோணம்(செ.வ.) |
| 35 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36 | இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 | இராமச்சந்திரன் திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 | இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 40 | இராமச்சந்திரன், திரு சோ. மா. | அண்ணா நகர் |
| 41 | இராமச்சந்திரன், திரு ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44 | இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 | இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| 47 | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ. வ.) |
| 48 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 | எத்திராஜன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு.கே.ஆர். | சிதம்பரம் |
| 52 | கதிர்வேலு, திரு.மா. | ராணிப்பேட்டை |
| 53 | கந்தசாமி, திரு.கா.வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி, திரு.பி. | பொங்கலூர் |
| 55 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57 | காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 59 | கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60 | கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |



| | தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 62 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 63 | குப்புசாமி, திரு. வே. | செய்யாறு |
| 64 | குமர குருபர ராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம் |
| 65 | குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 66 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 67 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68 | கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69 | கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71 | சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73 | சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74 | சண்முகம், திரு.ப. உ. | மேல் மலையனூர் |
| 75 | சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |
| 76 | சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77 | சந்திரசேகர், திரு. மு. | முகையூர் |
| 78 | சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 80 | சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83 | சிந்தன், திரு.வி. பி. | வில்லிவாக்கம் |
| 84 | சிவக்குமார், திரு. ஆர். | சமயநல்லூர் (செ.வ.) |
| 85 | சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 86 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 87 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89 | சிவராஜ், திரு. சு. | ரிஷிவந்தியம் |
| 90 | சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91 | சின்னசாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92 | சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 94 | சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95 | சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96 | சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 97 | சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 98 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 99 | சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 100 | சுப்புராயர் திரு. சி. | கம்பம் |
| 101 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102 | செங்காளியப்பன் திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 104 | செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 107 | செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109 | சேகர், திரு. கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 110 | சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 111 | சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடானை |
| 112 | சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 113 | சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114 | சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115 | ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116 | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117 | தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120 | தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ.வ.) |
| 121 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 122 | தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123 | தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.) |
| 124 | தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 125 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 126 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 127 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 128 | திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.) |
| 129 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130 | திருமலைச்சாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131 | தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132 | தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133 | துரை அன்பரசன், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134 | துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135 | துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136 | துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138 | தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140 | நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141 | நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143 | நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144 | நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 145 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 146 | நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147 | நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150 | பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம் |
| 151 | பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152 | பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153 | பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156 | பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157 | பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158 | பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 159 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 162 | பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 164 | பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165 | பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர், வி. பி. | வேடசந்தூர் |
| 166 | பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167 | பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168 | பாலுச்சாமி திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169 | பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை(செ.வ.) |
| 170 | பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171 | பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172 | பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173 | புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174 | புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175 | பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 177 | பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178 | பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179 | பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு) |
| 180 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 181 | பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 182 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 183 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 184 | மணவாளன், திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 185 | மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186 | மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி—1 |
| 187 | மனோகரன், திரு. கி. | புரசைவாக்கம் |
| 188 | மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 189 | மாசிலாமணி, டாக்டர், ந. | ஜெயங்கொண்டான் |
| 190 | மாதவன், திரு. செ. | திருப்பத்தூர் |
| 191 | மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ. வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 192 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 193 | மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 194 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 195 | முகம்மதுகனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 196 | முகம்மது சலீம் டாக்டர், த. | பெரியகுளம் |
| 197 | முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 198 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 199 | முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 200 | முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202 | முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 205 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 207 | ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 | ராமஜெயம், திரு. மா. நா. | வானூர் (செ.வ.) |
| 209 | ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210 | ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |
| 211 | ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212 | ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213 | லட்சுமி, திருமதி. பி. | அவினாசி (செ.வ.) |
| 214 | வடிவேல், திரு. கு. | கரூர் |
| 215 | வளர்மதி, திருமதி. பா. | மயிலாப்பூர் |
| 216 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 217 | விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி | வீரபாண்டி |
| 218 | வீராணம்பலம் திரு. க. வெ. | மேலூர் |
| 219 | வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 220 | வீராசாமி திரு. தா. | ஒரத்தநாடு |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222 | வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 223 | வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |
| 224 | வெங்கடாசலம், திரு. டி. எம். | பரகூர் |
| 225 | வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |
| 226 | வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதா கிருஷ்ண நகர் |
| 227 | வேணுகோபால், திரு. கே. வி. | தல்லி |
| 228 | வேலு, திரு. கூடலூர், இ.வி. | தண்டராம்பட்டு |
| 229 | ஜகதீசன், திரு. ஆனூர், பு. கோ. | செங்கல்பட்டு |
| 230 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 231 | ஜகதீசன், திரு. சு. | அரவக் குறிச்சி |
| 232 | ஜெயசந்திரன், திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 233 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | பிரான்சிஸ், திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986 ஏப்ரல் 7 திங்கட்கிழமை.

பங்குனி 24 குரோதன திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி''

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

சென்னை மாநகரில் சாலை பழுது பார்க்கும் இயந்திரம்

400—(* வினா எண். 2591 திரு. இரா. தாமரைக்கனி : திரு. பரிதி இளம்வழுதி : திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகராட்சியில் உள்ள ரோடுகளைப் பழுது பார்க்க புதிய எந்திரங்களை வாங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை,

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே,

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரை கேள்வி கேட்கும் வழக்கமில்லை எனவே மாண்புமிகு உறுப்பினர் கேட்டது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் விடையளித்ததை உறுப்பினர் அவர்கள் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இல்லை, வினா எழவில்லையென்றுதான் பதில் அளித்திருக்கிறேன். இயந்திரம் மாநகராட்சியால் வாங்கப்படவில்லையென்றுதான் பதில் அளித்தேன்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, ரோடுகளைச் செப்பனிடுவதற்காக மாநகராட்சியால் புதிய இயந்திரம் வாங்கப்பட்டதாக படம் போட்டு பத்திரிகைகளில் செய்தி வந்தது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை இதன்மூலம் கேட்டுக் கொள்வது, பத்திரிக்கை செய்திகளை நம்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்சி இயந்திரம் வாங்கவில்லை.

திரு. கூடலூர் இ. வி. வேலு : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி புதியதாக தார் போடுகிற இயந்திரத்தை வாடகைக்கு வாங்கி வந்து அதன்மூலம் இப்போது சாலைகளுக்கு தார் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே இயந்திரம் தமிழ்நாட்டிலிருக்கிற நகராட்சிகளுக்கு கிராமப்புறச் சாலைகளை அமைப்பதற்கு வாடகைக்கு விடப்படுமா? அதனை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்று ஒரு இயந்திரத்தை சாலை அமைப்பதற்காக கொண்டு வந்து கொடுத்தார்கள். சோதனையாக சில பாதைகளை போட வேண்டுமென்று அவர்களுக்குச் சொன்னோம். அதன் பணி திருப்திகரமாக இருந்ததால் மேற்கொண்டு பணியைக் கொடுத்து பாதை அமைக்கச்சொல்லியிருக்கிறோம். அவர்கள் பாதை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு கொடுத்த வெள்ள நிவாரண நிதியை வைத்துக் கொண்டு பழுதடைந்திருக்கிற ஒரு சில பாதைகளைப் புதியதாகப் போடுவது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மற்ற மாநகராட்சி, நகராட்சிப் பற்றி பிரச்னை எழவில்லை. அப்படி எழும் போது அரசு அதனைப் பரிசீலிக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, சென்னையில் புதியதாக சாலை அமைக்க வந்திருக்கும் இயந்திரத்தை நானும் பார்த்தேன். அந்த இயந்திரம் நன்றாக சாலைகளைப் போடுவதாக அறிகிறேன். ஆகவே தனியார் நிறுவனத்தால் இது போன்ற இயந்திரத்தை வைத்து சாலை



களைப் போட முடிகிறதென்றால் அரசோ, மாநகராட்சியோ அது போன்ற இயந்திரத்தை வாங்கி சாலைகளை நல்லமுறையில் போட முடியுமே, ஏன் அதை அரசு பரிசீலனை செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இயந்திரம் ஒன்றின் விலை கிட்டத்தட்ட 2½ கோடி ரூபாய் அளவிற்கு வருவதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. இந்த இயந்திரத்தை இந்தியாவிலேயே நாம் தான் முதன்முதலில் தமிழ் நாட்டில் கொண்டு வந்து பரிட்சை செய்து பார்த்தோம். இப்போது டெல்லியில் இதுபோன்ற இயந்திரத்தை வைத்து சாலை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த அளவிற்கு அது பயனுடையதாக இருக்குமென்பதை காலப்போக்கில்தான் நாம் கணக்கிட முடியும். புதிய நவீன இயந்திரம் வரும்போது ஏற்கனவே இருந்த ஒப்பந்தக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதால் அவர்கள் எவ்வளவு கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு அதையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, எல்லோரும் ஏகமனதாக ஒப்புக் கொண்ட விஷயம் இந்த இயந்திரம் நல்ல இயந்திரம் என்பது தான். அதனுடைய முழுப்பயனும் கிடைத்தால் சென்னையில் நல்ல ரஸ்தாக்களை மாநகராட்சியால் போட வாய்ப்பிருக்கிறது. சென்னை மாநகராட்சியில் சாலைகளைப் போட்டு முடிந்த பின்னர் மற்ற மாவட்டங்களுக்கும் கூட அனுப்பலாமென்று இருப்பதால் ஒப்பந்தக்காரர்களுடைய எதிர்ப்பை நாம் நிச்சயமாக புறக்கணிக்க முடியும், புறக்கணிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்ப்பு இருந்தது என்றுதான் தெரிவித்தேனே தவிர, அந்த எதிர்ப்பை இன்றைக்கு நாம் சமாளித்துக் கொண்டு இருக்கிறோம். பரவாயில்லை. இப்போது சில சாலைகளை அந்த இயந்திரத்தை வைத்துக் கொண்டு போட்டுக் கொண்டு இருக்கிறோம். மேற்கொண்டு சில சாலைகளை அந்த இயந்திரத்தை வைத்துப் போடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அந்த இயந்திரம் செய்கின்ற வேலையை மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்வது நல்லது என்று கருதுகிறேன். அந்த இயந்திரமானது ஏற்கனவே இருக்கிற பழைய சாலையை, சுரண்டி எடுத்து, பழைய தார், பழைய ஜல்லியை சுரண்டி எடுத்து, அந்த இயந்திரம் கம்யூட்டரைஸ்டாக இருக்கிற காரணத்தால், பழைய தாரை, பழைய ஜல்லியை, எடுத்துகொண்டு, மேற்கொண்டு எவ்வளவு தார், எவ்வளவு ஜல்லி தேவையோ, அதைப் போட்டுவிட்டு, எவ்வளவு திக்னஸ், கனம் ரோடு வேண்டும் என்று நாம் சொல்கிறோமோ, அந்த அளவிற்கு, அந்த மீட்டரை அட்ஜஸ்ட் செய்துவிட்டால், அது

ரோடை போட்டுக்கொண்டு போகிறது. எனவே இது ஒரு நவீன இயந்திரமாக இருக்கிறது. இப்போது அதை வைத்து போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த இயந்திரத்தை மாநகராட்சி இப்போது விலைக்கு வாங்குவதாக உத்தேசம் இல்லை. வாடகைக்கு வாங்கி, இப்போது சாலையை அமைக்கின்ற பணியை நாம் செய்து கொண்டு இருக்கிறோம். ஏற்கனவே இந்த இயந்திரத்தை வைத்து, வேலை செய்த போது காமராஜர் சாலையில், பீச் ரோடில் வேலை செய்தபோது, நான் நேரிலேயே சென்று பார்த்தேன். சுரண்டும் போது தாரே இல்லாமல், வெறும் வெள்ளையாக வந்தது. கா ணம் கேட்டேன் மாநகராட்சி அதிகாரிகளிடப், ஏன் கீழே தாரே இல்லை, சுரண்டும்போது, வரமாட்டேன் என்கிறது, வெறும் வெள்ளையாக கல்தானே வருகிறது என்று கேட்டேன், அவர்கள் சொன்ன பதில் சரியான சமாதானமாக இல்லை. அதைப்பற்றி தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் கூட அந்த இயந்திரம் பயனுள்ள இயந்திரம் என்கிற காரணத்தால், எந்த அளவிற்கு அந்த இயந்திரத்தைப் பயன்படுத்த முடியுமோ, அந்த அளவிற்கு பயன்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஆணையிட்டு இருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாதையிலே இருக்கின்ற பழைய தார், கல் போன்றவற்றை சுத்திகரிப்பு செய்து புதிய பாதை போடுவதற்கு நவீன இயந்திரம் சென்னையில பயன்படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். ஆனால் இதற்காக ஆகக்கூடிய பொருளாதாரம் என்ன? இப்போது ஏற்கனவே இருக்கின்ற விதத்தில்அந்தப் பாதையை அமைக்கின்ற நேரத்திலே ஏற்படுகின்ற செலவிற்கும் இதற்கும் ஏற்படுகின்ற மாறுபாடு, வித்தியாசம் என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே; இதற்கு தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன். இருந்தாலும் கூட, பழைய முறை, அதாவது கன்வென்சனல் மெத்தேடுக்கும், இதற்கும் கொஞ்சம் கூடுதலாக இருக்கும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் பழைய முறையில் போடப்பட்ட சாலைகள் சரியாக இல்லாத காரணத்தால், இப்போது இந்த இயந்திரம் மூலமாக போட்டுக் கொண்டு வரும் சாலைகள் சரிப்பட்டு வரும் என்ற நம்பிக்கையோடு இப்போது போட்டுக்கொண்டு இருக்கிறோம். காலத்தின் பரீட்சையைப் பார்த்துத் தான் முடிவு செய்ய முடியும்.

கடலாடி ஒன்றியத்தைப் பிரித்தமைத்தல்

401—(* வினா எண். 34 3 திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியத்தை கடலாடி, சாயல்குடி என இரு யூனியன்களாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

தன்னிறைவுத் திட்டம் நிறைவு பெறாத பகுதிகள்

402—(* வினா எண். 4694 திருசீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் நிறைவு பெறாத ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குக்கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து சிறப்பு திட்டப்பணி நிறைவேற்ற அரசு ஏதாவது புதிய திட்டம் தயாரித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கிடமில்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களுடைய புனித திட்டமாக செய்யப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக, பல்வேறு ஒன்றியங்களில் குறிப்பிட்ட துறைகளுக்கு மட்டும் சுமார் 45 லட்சம் ரூபாய் செலவில் தன்னிறைவுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. அதில் சில கிராமங்கள் விடப்பட்டு இருக்கின்றன. அந்தக் கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வருகின்ற ஆண்டுகளில்புதிய திட்டத்தை உருவாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் ஏறக்குறைய 210 கோடி ரூபாய் செலவு செய்து தமிழ்நாட்டில் இருக்கிற 376 ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும், பேருராட்சிகளிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. சில ஊராட்சி ஒன்றியங்கள் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தால் பலன் பெறவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கிறது. ஆனால் இப்போதைக்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எந்தக் கிராமத்தையும், ஊராட்சி ஒன்றியத்தையும் எடுத்துக்கொள்வதாக இல்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் ஒரு சில குக்கிராமங்களில் இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி மன்றத்தில் நிதி வசதி இல்லாத பகுதிகளில் இன்னும் வேலைகளை முடிப்பதற்கு சிரமமாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு ஜெனரல் பண்டிலிருந்து அதிகமாக நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கிராமப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு வேறு பல திட்டங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலமாக இவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய தேவைகளை நிறைவு செய்ய முடியாத பகுதிகள், நிறைவு பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதுதான் இந்தத் தன்னிறைவுத் திட்டம் என்று அறிகிறேன். தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டதற்குப் பின்னரும்கூட, நிறைவு செய்யப்படாத கிராமங்கள், நகரங்கள் இருக்கின்றன. என்பது உண்மைதான், எனவே தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒரு தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரவேண்டிய அவசியம் இருப்பதால், தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வர இந்த அரசு மீண்டும் புனர் பரிசீலனை செய்து அதைக் கொண்டு வருவதற்கு திட்டமிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய உபகண்டத்தில் எந்த மாநிலத்திலும் செய்தறியாத ஒரு தன்னிறைவுத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி 210 கோடி ரூபாய் செலவில் நடத்திக் கொண்டிருக்கிறது. மேலும் சில கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன என்பது உண்மைதான். அந்தக்கிராமங்களில் வேறு சில நன்மைகள் செய்யப்பட வேண்டுமென்கிற உண்மையை ஒப்புக் கொள்கிறேன். குடி தண்ணீருக்காக, இப்போது குடிநீர் வடிகால் வாரியம் அந்த ஏற்பாட்டை மேற்கொண்டிருக்கிறது. கிராம வளர்ச்சிக்காக மேலும் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் வேறு பல திட்டங்களை வகுத்திருக்கிற காரணத்தால், தன்னிறைவுத் திட்டத்திற்காக இப்போது நிதி ஒதுக்குவதாக இல்லை. தேவைப்பட்டால் அரசு இதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்ட பணிகள் முடிக்கப்படாமல் இருக்கின்றன. இடையிலே நிறுத்தப்பட்ட அவ்வேலைகளை நடத்தி முடிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்ற புகார்கள் அரசுக்கு வரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களை எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி குடிநீர் திட்டம்.

403—(*வினா எண் 3487:திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசிக்கு கடையம் கடனா நதியில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போதுமுதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தயாரித்த பின்னர் தேவையான அனுமதிகள் பெற்று நிறைவேற்றப்படும்.

சணல் பயிரிடுதல்.

404—(* வினா எண் 4944) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநிலத்தில் சணல் பயிரிடுவதற்கான சாத்தியக் கூறுகளை கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) விரிவான அறிக்கை ஒன்று ** அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

புதிய சுரங்கப்பாதைகள்..

405—(* வினா எண். 2759) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் இரயில் நிலையம் எதிரில் G. S. T. சாலையில் சுரங்கப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

---

** 155–156ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1986 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இந்தச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக நெருக்கடியான, போக்குவரத்து நெரிசலான பகுதியாக இருக்கின்ற தாம்பரம் ரெயில் நிலையத்திலிருந்து வருகின்ற பயணிகளுக்கு அது பிரதான நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தால், நெருக்கடியாக இருக்கின்ற அந்த இடத்தில் சுரங்கப்பாதை அமைக்கின்ற செயற் குறிப்பு இப்போது இல்லையென்றாலும், இனிமேலாவது இதுகுறித்து பரிசீலனை செய்து பணியினைத் துவக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி எதிர்காலத்திலே பரிசீலிக்கப் படும்.

406—(*வினா எண் 4406) திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதியில், பரங்கிமலை ரயில் நிலையம், பழவந்தாங்கல் ரயில் நிலையம், மீனம்பாக்கம் ரயில் நிலையம், பல்லவபுரம் ரயில் நிலையம், குரோம்பேட்டை ரயில் நிலையம் ஆகிய இடங்களில் (Sub-way) சுரங்கப்பாதை அமைக்கும் திட்டங்களில், நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்து தகவல் ஏதும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: பரங்கிமலை பழவந்தாங்கல், மீனம்பாக்கம் ஆகிய இரயில் நிலையங்களுக்கருகில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டங்கள் இரயில்வே பணிகள் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு உள்ளது. பல்லவபுரம் மற்றும் குரோம்பேட்டை ரயில் நிலையம் ஆகிய மீதி இரண்டு இடங்களில் சுரங்கப்பாதை அமைக்கும்பணி இரயில்வே பணிகள் திட்டத்தில் சேர்க்கப்பட வில்லை.

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிமலை பழவந்தாங்கல், மீனம்பாக்கம், திரிசூலம் பல்லவபுரம், குரோம் பேட்டை ஆகிய பகுதிகளுக்கு, அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுடைய வேண்டுகோள்படி, சுரங்கப்பாதை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டு, பரங்கிமலை, பழவந்தாங்கல், மீனம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களிலும் திட்டப்பணிகள் துவங்குவதற்கு மத்திய அரசு ரெயில்வே மூலமாக



1986 ஏப்ரல் 7]

பணிகளை துவக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறது. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில், அந்தப் பணி துவங்கப் படாமல் இருக்கிறது. இதனால் பழவந்தாங்கல், பரங்கிமலை பகுதி களிலே இருக்கின்ற மக்கள் மிகவும் அல்லலுக்கு ஆளாகிறார்கள். மேலும் காலையிலே வேலைக்குப் போகிறவர்கள் ஆங்காங்கே தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கு இடையூறாகவும், பொது மக்களுக்கு இடைஞ்சலாகவும் இருக்கிறார்கள். காலை நேரங் களிலும், மாலை நேரங்களிலும் பார்ப்போமேயானால் மக்கள் அலைகிறார்கள், அல்லல்படுகிறார்கள். அதனாலே அங்கே விபத்துகள்நிறைய ஏற்படுகின்றன. அதிலும்குறிப்பாகபரங்கிமலை, பழவந்தாங்கல் பகுதிகளில் மக்களுடைய குடியேற்றம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, சுரங்கப்பாதைகள் அமைக்கப்படுவதற்கான ஏற்பாட்டை உடனடியாக அரசு மேற்கொள்ளுமா என நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற நிலைமைகளைப் புரிந்துதான் அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு எழுதியது என்பதையும், மத்திய அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு அந்த மூன்று இடங் களிலும் சுரங்கப்பாதை அமைப்பதற்கான அனுமதியைத் தந்திருக் கிறார்கள். இப்போது பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. எனவே எப்படிக் கட்ட வேண்டும், அந்தப் பகுதிகளை எப்படி உருவாக்க வேண்டுமென்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்கு மொத்தம் எவ்வளவு செலவாகும் என்பதையும் கணக்கிட்டு இதுகுறித்த நடவடிக்கைகளை விரைவாக எடுக்க அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிவித்து நாட்கள் பல ஆகிறது. ஏறக்குறைய 6 மாதங்களுக்கு மேல் ஆகிறது. நம்முடைய தமிழக அரசுதான் அதைக் கிடப்பிலே போட்டிருப்பதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அந்த நிலை உருவாகாமல் அதை உடனடியாக செய்வதற்கான பணியிலே ஈடுபடவேண்டுமென்றும் அதே நேரத்திலே திரிசூலம், பல்லவபுரம், குரோம்பேட்டை பகுதி மக்களுக்கும் இதே போராட்டம்தான் என்று கூறி, அதையும் நம்முடைய தமிழக அரசே மத்திய சர்க்காரிடத்திலே கேட்டு அங்கேயும் சுரங்கப்பாதைகள் அமைக்கும் வேலைகளை துவங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என நான் கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு தேவைப்படுகிறதோ அதைப் படிப்படியாக மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி கிடைக்க கிடைக்க இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கும். அரசாங்கம் கிடப்பிலே போட்டுவிட்டது, ஆறு மாதம் ஆயிற்று, ஒன்றும் தெரியவில்லை,

என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள்" சாதாரணமாக மத்திய அரசாங்கத்திற்கு நாம் பரிந்துரை செய்கிற போது, நூற்றுக்கணக்கான வேலைகளுக்கு அனுமதி தரவேண்டுமென்று நாம் பரிந்துரை செய்கிறோம். நூற்றுக்கணக்கான வேலைகளை எப்படி எடுத்துக்கொள்வது, அதற்கு என்னென்ன பணிகளைச் செய்யவேண்டுமென்பதுபற்றி ஏற்கனவே எல்லா ஆய்வுகளையும் செய்து முடித்துவிட முடியாது. காரணம், ஒவ்வொரு ஆய்விற்கும் பல இலட்சம் ரூபாய் செலவாகின்ற காரணத்தால் பல நூற்றுக்கணக்கான வேலைகளுக்கு ஏற்பாடு செய்ய முடியாது. அப்படி வருகின்றபோது மத்திய அரசு 10 வேலைகளுக்கு, 11 வேலைகளுக்கு அனுமதி கொடுத்தால் அதைமட்டும் ஏற்று ஆய்வு நடத்துகிறோம். ஆகவே காலதாமதம் ஏற்படுகிறது என்றால் அது முறையான காலதாமதம். அரசாங்கம் வேண்டுமென்று காலதாமதம் செய்யவில்லை. அந்த ஆய்வு முடிந்தவுடன் வேலைகள் எடுக்கப்படும்.

## திருவாரூர்—சென்னை பேருந்துப் பணி.

407—(*வினா எண் 4576) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் இருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து விட வேண்டி அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1–3–1986 முதல் திருவாரூரிலிருந்து கொடவாசல் கும்பகோணம், பண்ருட்டி வழியாக சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 2 வண்டிகளை இயக்கி வருகிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னபோது திருவாரூரிலிருந்து. கொட்வாசல், கும்பகோணம், பண்ருட்டி வழியாக சென்னைக்கு வருவதாகச் சொன்னார்கள். அந்தத் தகவலிலிருந்து திருவாரூரிலிருந்து, மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம், கடலூர் ஆகிய வழிகளின் மூலமாக ஒரு பேருந்து விட்டால்தான் ஓரளவிற்கு அங்கிருந்து வருபவர்களுக்கு தூரமும் குறைவாகவும், கட்டணமும் குறைவாகவும் இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட பேருந்துகளை விடுவதற்கு அரசுமுன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றி எழுதித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே அதனுடைய அவசியத்தைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் திருவாரூரிலிருந்து பல வழிகளாக இரண்டு பஸ்கள் விடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தர்மபுரியில் ஹொகனேக்கல் சுற்றுலாத்தலமாக இருக்கிறது. கேள்விக்கு சம்பந்தமில்லையென்றாலும்....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி திருவாரூர் பற்றியது. ஆகவே இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## கும்பகோணத்தில் குடிசை மாற்று வாரியப் பணிகள்.

408—(*வினா எண் 1468) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணத்தில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) கும்பகோணத்திலுள்ள நெசவுத் தொழிலாளர்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, குடந்தை மாநகரத்தைப் பொறுத்தவரையில், குடிசை மாற்று வாரியம் எடுத்த கணக்குப்படி சுமார் 15 குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. அதைத் தவிர, தனியார் பகுதிகளில் ஏழை மக்கள் போட்ட குடிசைப்பகுதிகள் கிட்டத்தட்ட 20 பகுதிகள் இருக்கின்றன. அதைத் தவிர திருவையாறு வாய்க்கால் கரையில் போட்டப்பட்ட குடிசைகள் 5,000-க்கும் மேல் உள்ளன. அந்த ஏழை மக்களுக்கு தமிழக அரசு நல்ல திட்டங்களாக, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தர திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா ? ஏற்கனவே அந்தத் திட்டமும் நெசவுத் தொழிலாளர் குடியிருப்புத் திட்டமும் உள்ளதாக குடந்தை நகரத்தைச் சார்ந்த அமைச்சர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டதே, அந்தத் திட்டம் என்னவானது என்று அறிய விரும்புகிறேன். குடந்தை நகரம் நெசவுத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தர 1984 டிசம்பரில் அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் என்னவானது ? அப்படிப் பட்ட திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகரத்தைப் பொறுத்தவரையில் அரசு எடுத்த கணக்கின் அடிப்படையில் 30 குடிசைப் பகுதிகளில் 17,290 மக்கள் வசித்து வருகிறார்கள். இதிலே 10 குடிசைப் பகுதிகள் தனியாரிடத்திலே இருக்கிறது. இன்று அரசு எடுத்த முடிவின்படி கும்பகோணம் பழைய மீனவர் அங்காடி குடிசைப் பகுதியில் ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக ரூ. 20,02,000 செலவில் 120 குடியிருப்புகள் கட்டப்படும். நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தற்போது அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை. அப்படிப்பட்ட தொழிலாளர்கள் வேறு விதமான திட்டங்கள் மூலம் பயன் பெற முடியும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏராளமான வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்படுகின்றன. அவை ஏராளமாக இருக்கின்ற காரணத்தால் புதிய நவீன யுக்திகளைக் கையாண்டு Pre-stressed அல்லது precast போன்றவை மூலமாக முன்னமேயே தயார் செய்யப்பட்ட வீடுகளின் பகுதிகளையும் கொண்டுவந்து கட்டப்படுவதின் மூலமாக அரசாங்கத்திற்கு லாபம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அந்த முறையைக் கையாள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** தலைவர் அவர்களே, என்னுடைய நினைவு சரியாக இருக்குமென்றால், வெளிநாட்டிலிருந்து ஒரு முறை நிபுணர்கள் வந்து—இதுமாதிரி எவ்வளவு விரைவாக வீட்டினைக் கட்ட முடியும் என்ற நிலையில் அதற்குத் தேவையான ஜன்னல்கள், கதவுகள் ஆகியவைகளைச் செய்துகொண்டு அப்படியே ஃபிக்ஸ் செய்ய இயலும், விரைவாகக் கட்டமுடியும் என்று சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட இயந்திரம் ஒவ்வொன்றும் நம்முடைய துணைக் கண்டத்தின் பொருளாதாரத் தன்மையைப் பொறுத்தவரை அவ்வளவு ஏற்புடையதாக இல்லை என்ற நிலையில், அது எளிதான காரியமல்ல என்ற நிலையில். அப்படிப்பட்ட நடைமுறையைத் தற்சமயம் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

(முற்பகல் 9-20)

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய மீன் அங்காடி என்ற பகுதியில் உள்ள குடிசைப் பகுதி மக்களுக்கு புதிதாக வீடு கட்டித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் இருப்பவர்கள் நகராட்சி துப்புரவுப் பணி செய்யும் தொழிலாளர்கள். அதேபோல் கிட்டத்தட்ட 6, 7 காலனிகள் மனிதர்கள் வாழ்வதற்கே லாயக்கு இல்லாத அளவுக்கு குடிசைகளாக அங்கே இருக்கின்றன. அந்தப் பகுதியில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து குடிசைப் பகுதிகளை மாற்றி அந்த வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தருமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுத்த முடிவின் அடிப்படையில் இப்போது முதல் கட்டமாக பழைய மீன் அங்காடிப் பகுதியில் 120 குடியிருப்புகளைக்கட்டுகின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டிக்கொண்டும் வருகின்றது. மற்றப் பகுதிகளுக்கு நிதிநிலையை மனதில் வைத்துக் கொண்டு முடிவு எடுக்கப்படும்.

## குடிசைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம்.

**409—(*வினா எண். 6631) திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கித் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகளைச் செய்கின்ற குடிசைப் பகுதிகளுக்கு, ஆஸ்பெஸ்டாஸ் சீட்டுகளை பயன்படுத்த வேண்டும் என்ற முறையை கட்டாயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** கூரைவீட்டில் வசிப்பவர்களுக்கு, தீப்பிடிக்காத கூரைகள் கட்டிக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்படுகின்றது. ஆனால், ஆஸ்பெஸ்டாஸ் சீட்டுகளை பயன்படுத்த வேண்டுமென அவர்களை கட்டாயப்படுத்துவதில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்கிறபோது குடிசைப் பகுதிகளில் அவர்களது குடிசைகளைப் பாதுகாக்கின்ற வகையிலும்—அவர்கள் தங்களை அறியாமல் மீண்டும் அந்தக் கீற்றுக் கொட்டகைகளை அமைத்துக் கொள்கின்ற காரணத்தால் பல தீ விபத்துக்கள் அடிக்கடி தொடர்ந்து நடக்கின்றன. அதை நவீனப்படுத்த எல்லா வசதிகளும் கொடுத்து, கடனும் கொடுத்து அந்தக் கடன் தொகையை அவர்கள் முறையாக இனிமேல் பயன்படுத்தும் வகையில், இதுவரை இல்லை என்றாலும் எதிர் காலத்திலாவது 3-வது மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அந்தக் குடிசைப் பகுதிகளை மேம்பாடு வசதி அடைய செய்து தரும் போது அவர்கள் கட்டாயம் அந்த ஆஸ்பெஸ்டாஸ் சீட்டுகளை பயன்படுத்துகின்ற வகையில் அல்லது தீப் பிடிக்காத ஓடுகளை பயன்படுத்துகின்ற வகையில் அந்தக்கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் இதுவரையில் எத்தனை பேர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று இருக்கிறார்கள், எவ்வளவு தொகை வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாம் கொடுத்த அறிவுரையின் அடிப்படையில் குடிசைப் பகுதிகளைப் பொறுத்தவரையில்—சிலபேர் பொருளாதாரத்தில் கொஞ்சம் வசதியாக இருக்கிறார்கள், அவர்கள் மட்டுமே நாம் கொடுக்கின்ற கடனைப் பெற்றுக்கொண்டு இன்றைக்கு அவர்கள் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டைப் போட்டு கட்டிக்கொள்கிறார்கள். லைட் ரூப் சிஸ்டத்தை நாம் சிலயிடங்களில் அறிவுரை செய்து—பொருளாதாரத்தில் கொஞ்சம் வருமானம் உள்ளவர்கள் அதை போட்டுக் கொள்ளலாம். நம்முடைய அரசைப் பொறுத்த வரையில், ஆஸ்பெஸ்டாஸ் சீட்டுகளைப் பயன்படுத்துவதற்கு இப்போது அரசு கொடுக்கின்ற நிதியோடு அவர்கள் தங்கள் சொந்த உழைப்பின் மூலம் கிடைத்த பணத்தை கொஞ்சம் போட்டால் இப்போது நாம் கொடுக்கின்ற பணத்திலேயே நிச்சயமாக அவர்கள் கட்டிக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. உதாரணமாக ரூபாய் 301 முதல் ரூபாய் 600 வரை வருமானம் இருப்பவர்கள் கூட இன்றைக்கும் குடிசைப் பகுதியில் இருக்கிறார்கள். நாம் அரசின் மூலம் 3,500 ரூபாய் கடன் கொடுக்கிறோம். அரசு கொடுக்கின்ற நிதியோடு தங்கள் உழைப்பின் மூலம் வருகின்ற பணத்தையும் போட்டால் இப்போதே அந்த வசதியை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எம்.டி.பி. 1, 2, 3 என்ற திட்டங்கள் சென்னை நகரத்தில் மட்டும்தான் அமலில் இருக்கிறது. இந்தத் திட்டம் 1977-ல் துவங்கப்பட்டது. அதன் மதிப்பீடு 57 கோடி ரூபாய். இதற்கு உலக வங்கி கடன் உதவி ரூ. 21.60 கோடி நம்முடைய அரசுக்கு கிடைத்து இருக்கிறது.

அதேபோல் எம்.டி.பி.2 என்ற திட்டம் 1981-லிருந்து 1986 வரை, இதன் மதிப்பீடு 74.66 கோடி ரூபாய். இதற்கு உலக வங்கியின் கடன் உதவி ரூ. 35.28 கோடி ஆகும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாட்டுத் திட்டம் சென்னை நகரத்தில் மட்டும்தான் அமலில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வாரியப் பணிகள் விரிவு அடைந்து தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கிற இந்த சூழ்நிலையில் 3-வது மேம்பாட்டுத் திட்டத்தை மாவட்ட தலைநகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யப்படுமா? இந்த கடன் தொகையை அதிகரிக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதையும் இல்லை என்றால் கடன் தொகை 3,500 ரூபாய் என்பதை ஒரு 5 ஆயிரமாக உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் சென்னையில் மட்டும் என்று ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். சென்னை தவிர மற்ற 43 இடங்களில் குடிசை மாற்று வாரியம் மூலம் திட்டங்கள் மற்ற நகரங்களுக்கு இன்று விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களுக்கு நிதி, உலக வங்கியிலிருந்து பெறுகிற காரணத்தால் அவர்களின் அனுமதியோடு மற்றப் பகுதிகளுக்கு, மற்ற நகரங்களுக்கு அதைக் கொடுப்பதில் தவறு இல்லை. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தச் சூழ்நிலை வந்தால் அது நம் நாட்டுக்கு நல்லது என்பதை மனதில் கொண்டு நிச்சயமாக அந்த வழிவகைகளை ஏற்றுக்கொள்வோம். ரூ. 3,500-லிருந்து அதிகமாக ஆக்குகிற கோரிக்கை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நாம் அதிகமாக சேர்க்கச் சேர்க்க சிலபேர்களுக்குக் கொடுக்கப்படுவது குறைந்து விடும். இப்போது பலபேர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதால் இப்போது இருப்பதை உயர்த்துகின்ற எண்ணம் இல்லை.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலக வங்கித் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள் செய்கிற குடிசைப் பகுதிகளுக்கு வழங்குகிற இந்தப் பணம் எவ்வளவு ஆண்டுக் கடனாகக் கொடுக்கப்படுகிறது, எவ்வளவு வட்டி அதற்கு வசூலிக்கப்படுகிறது என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதியில் வாழ்கிறவர்களுக்கு கொடுப்பது 15 ஆண்டுகளுக்குள் தர வேண்டும். வட்டி விகிதத்தைப் பொறுத்தவரையில் 12% அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

### மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்கள்.

410—(*வினா எண் 1776) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 31-12-1984 முடிய பதிவு செய்துள்ளவர்கள் பிரிவு வாரியாக எத்தனை பேர்?

(ஆ) கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டது?

மாண்புமிகு திரு. த இராமசாமி: (அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை ஒன்று **தனியாக வைக்கப் பட்டுள்ளது.

திரு. கோ. இரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்ததில் எஸ்.எஸ்.எல்.ஸி., தேறியவர்கள் 4,64,173 என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் வேலைவாய்ப்பு கொடுத்திருப்பது 23,493 பேர்களுக்குத் தான் என்று குறிப்பிட்டிருக்கிறது. 4,64,173 பேர்களில் 23,493 பேர் களுக்குத் தான் வேலை கொடுக்கப்பட்டிருப்பதாக இருக்கிறது. மற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் இவர்களுக்கு என்று தீவிரமாக ஒரு சிறப்புத் திட்டம் மேற்கொள்வதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1985 முடிய வேலைவாய்ப்பு அலுவலகப் பதி வேட்டில் இருப்பவர்களில், வேலைக்கு காத்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் இருபத்தோரு இலட்சம். வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்பது அரசாங்கத்தின் தலையாய கடமையாக இருந்து கொண்டிருக்கிறது. மாநில அளவில் எந்த அளவிற்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியுமோ அந்தளவிற்கு செய்து கொண்டிருக்கிறது. இன்றையதினம் படித்தவர்களுக்கு, பட்டதாரிகளுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரும் வகையில் அவர்களுக்கு அரசாங்கம் கடன் உதவி செய்து வேலைவாய்ப் பினைக் கொடுக்கவேண்டும் என்ற உணர்வில் அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்கிறவர்கள் அதிக மாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கூடுதலோடு கூட தேங்கி நிற்கிற அந்த நபர்களுக்கு, அந்தப் படித்த நண்பர்களுக்கு, படித்த பட்டதாரிகளுக்கு, முதல் நிலை பட்டதாரிகளுக்கும் மற்றவர் களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதில் சீரிய முறையில் ஒரு சிறப்புத் திட்டம் உள்ளதா என்று கேட்டேன். ஆனால் வேறு ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். நான் கூறியபடி ஒரு சிறப்புத் திட்டம் நீட்டி அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் ஒரு சிறப்புத் திட்டத்தை அமைத்து புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் ஒப்புதல் பெற ஆயத்தப் பணிகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அடுத்தபடியாக, பட்ட தாரிகள், கெமிஸ்ட்ரி படித்த பட்டதாரிகள் எனது பகுதியில் உள்ள வெடிமருந்துசாலையில் சேரவேண்டுமென்றால் நாலைந்து ஆண்டுகள் பயிற்சி பெற்றிருந்தால்தான் அங்கே வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என்ற நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட பயிற்சி பெற்றவர்கள் அங்கு இல்லை என்ற காரணத்தால் தனிப்பட்ட

**156-157ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





ஒரு பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டு அவர்களுக்கு வேண்டிய வர்களை எடுத்துக்கொள்ளும் நிலை உருவாகி என் தொகுதியில் உள்ள படித்த நண்பர்களுக்கு, பட்டதாரிகளுக்கு வேலை கிடைக் காத ஒரு நிலை இருப்பதை அரசு அறியுமா? அவ்வாறு இருப்பின் அங்குள்ள பட்டதாரிகளுக்கு பயிற்சி கொடுத்து அவர்களுக்கு அங்கே வேலைவாய்ப்பு நல்க முயற்சிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும், இன்றையதினம் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் தான் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித்தரும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவி செய்வ தற்காக தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வழங்கிக் கொண்டும் வருகிறார்கள். இந்த உதவித் தொகை இந்த ஆண்டுக்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது? இதுவரையில் தமிழ் நாட்டில் எவ்வளவு பட்டதாரிகளுக்கு உதவித் தொகை தமிழக அரசாங்கம் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது? அதை வாங்க தாலுகா அலுவலகத்திலுள்ள தாசில்தார் அவர்களிடம் சான்றிதழ் வாங்கி வரும் நிர்ப்பந்தம் ஏற்படுகின்ற காரணத்தினால், வாங்குகின்ற உதவித் தொகை வேறுபல வழிகளில் போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. ஆகவே, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பட்டதாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஐடென்டிடி கார்டின் மூலம் அவர்களுக்கு இந்த உதவித் தொகையை வழங்க அரசு ஆணை பிறப்பித்தால், அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களிலேயே உதவித் தொகையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி., மற்றும் பி.எஸ்.ஸி., போன்ற பட்டப் படிப்பு படித்த மாணவர்களுக் கெல்லாம் உதவித் தொகை வழங்க தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த திட்டப்படி, தாலுகா அளவில் கொடுக்கப்பட வேண்டுமென்பதிலே நடைமுறையில் சிக்கல்

ஏற்பட்டதைக் கவனத்தில் கொண்டுதான், இன்றைய தினம் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக அந்த உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. எண்ணிக்கையைப்பற்றிக் கேட்டார்கள். தற்போது அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரமான பதில் தரப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு தொழில்கள் தொடங்குவதற்கு அரசு கடன் கொடுத்து உதவுவதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இதுவரை தமிழகத்தில் எத்தனை பட்டதாரிகளுக்கு அப்படிப்பட்ட கடன் தொகையை கொடுத்திருக்கிறார்கள்? அந்தத் தொகையை அதிகப்படுத்துகின்ற த்தேசம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொண்ட ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்களிடையே அதிருப்தியும், ஒருவிதமான அவநம்பிக்கையும் நிலவிக் கொண்டிருக்கின்றது. அத்தகைய அதிருப்தியும், அவநம்பிக்கையும் கொண்டிருக்கின்ற இந்த நிலையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட அனைவருக்கும் அரசு நிவாரணம் அளிக்க முன்வருமா? அல்லது இந்த மாநில அரசு எதிர்காலத்தில் வேலை தருவதை அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமையாக்க மத்திய அரசுக்கு கோரிக்கை விடுமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி இல்லையென்றால், வேலைவாய்ப்பு தேடித் தரும் நிறுவனம் என்பதை வேலைவாய்ப்பு தேடித் தராத நிறுவனம் என்று மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இன்றைய தினம் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக, அந்தப் பட்டியலில் அடிப்படையில் சில மோசடிகளைக் கருத்திற்கொண்டுதான், இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே விவரமாக அறிவிப்பு வரும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு அலுவலகத்திற்கு மாத்திரம்தான் இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நேர்முகத் தேர்விற்கு உத்தரவுகளை அனுப்புகிறார்கள். தனியார் நிறுவனங்கள், தாங்களே ஆட்களை நியமித்துக் கொள்கிறார்கள். தனியார்



நிறுவனங்களும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் ஆட்களை எடுக்க வேண்டுமென்றவகையில் அரசு சட்டத் திருத்தம் கொண்டு வருமா அல்லது அவர்களைக் கட்டாயப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்திலே 1984 ஆம் ஆண்டு முடிய 17,07.940 பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அதிலே 1984 ஆம் ஆண்டு வரையிலும் வேலை பெற்றவர்கள் 60,298 பேர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் 1985 ஆம் ஆண்டு வேறு இருக்கிறது. 17 லட்சம் பேர்களில் 1 லட்சம் பேர்களுக்குக்கூட வேலை கிடைக்காத நிலைதான் இருக்கிறது. 17 லட்சம் பேர்களுக்கும் எதிர்காலத்திலே வேலை கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்யப்படுமா? ஏற்கெனவே சத்துணவு மையங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களிலும் வேலை செய்கிறவர்களையும் சேர்த்து இந்த 60 ஆயிரம் பேர்களா அல்லது நிரந்தரமாக வேலை செய்யக்கூடிய முறையிலே வேலை அந்த 60 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? எதிர்காலத்திலே இந்த மீதம் உள்ள 16 லட்சம் பேர்களுக்கும் வேலைக்கு உத்தரவாதம் கொடுக்க ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு வரையிலே வேலை வாய்ப்புக்குப் பதிவு செய்தோர் எண்ணிக்கை 17,07,940 பேர்கள் என்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்ட விவரம் பின்வருமாறு: 1980 ஆம் ஆண்டிலே 53,514 பேர்களுக்கும், 1981 ஆம் ஆண்டிலே 67,238 பேர்களுக்கும், 1982 ஆம் ஆண்டிலே 72,578 பேர்களுக்கும், 1983 ஆம் ஆண்டு 75,686 பேர்களுக்கும், 1984 ஆம் ஆண்டிலே 60,298 பேர்களுக்கும் ஆக இந்த 5 ஆண்டுகளிலே இவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் 17 லட்சத்திலே நாம் வேலை தந்திருப்பது 60 ஆயிரம் என்பதல்ல. மொத்தக் கணக்கை அவர்கள் கூட்டிப் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே வேலைக்கு பதிவு செய்துவிட்டு வேலை கிடைப்பதிலே காலதாமதம் ஏற்படுவதன் காரணமாக பலர் வயது வரம்பு முடிந்து மீண்டும் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வயதுவரம்பை உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடத்திலே இல்லை.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1980 ஆம் ஆண்டிலிருந்து இங்கே கணக்குத் தரப்பட்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டிற்கு முன்னாலேயிருந்து இத்தனை ஆண்டுக் காலமாக காத்து இருக்கிறார்களே, 1975 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டிலிருந்து இப்படியெல்லாம் காத்து கொண்டிருக்கிறவர்கள் எந்த ஆண்டிலிருந்து காத்திருக்கிறார்கள்? எந்த ஆண்டிலிருந்து வேலை பெறாதவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 5 வருட காலமாக மெடிக்கல் கிராஜுவேட்ஸ், வேலையில்லாமல் இருக்கிறார்கள். கடந்த 8 ஆண்டுக் காலமாக எஞ்சினியரிங் கிராஜுவேட்ஸ் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே வேலையில்லாமல் இருக்கிற மெடிக்கல் கிராஜுவேட்ஸ், எஞ்சினியரிங் கிராஜுவேட்ஸ் எத்தனை பேர்கள் என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலமான தமிழகத்திலே மாத்திரம் வேலையற்றவர்கள் பட்டியலில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற கருத்தைக் குறிப்பிடக்கூடாது. இந்தியாவிலேயே இந்தப் பிரச்சனை தலையாயப் பிரச்சினையாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அவர்கள் சில குறிப்புகளைக் கேட்டிருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தும் வேலை கிடைக்காமல் பல ஆண்டுகள் காத்திருப்பவர்களுக்கு வயது வரம்பு பூர்த்தி ஆகிவிடுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய வகையிலே ஏதாவது ஒரு சட்ட திட்டம் கொண்டுவரவேண்டுமென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடத்திலே இல்லை.





குறும்பர் இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.

411—(*வினா எண். 4846) **திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள குறும்பர், குருமன்ஸ், குறும்பா ஆகிய இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் இணைப்பதற்கு தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (அ) மற்றும் (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள குறும்பர், குறுமன்ஸ், குறும்பா என்ற இந்த 3 இனத்தையும் ஷெட்யூல்ட் காஸ்டிலே சேர்க்கவேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு இந்த அரசின் சார்பாக செயற்குறிப்பு டெல்லி மாநகருக்குப் போயிற்று. ஆனால் அப்போது ஆண்டு கொண்டிருந்த அரசாங்கம் கலைக்கப்பட்டு விட்டதால் டெல்லியால் அந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. மீண்டும் அதைக் கொண்டுவரவேண்டுமென்று டெல்லியிலிருந்து குறிப்பாணை வந்தது. அதை மீண்டும் பரிந்துரை செய்யவேண்டுமென்று நானும் பல்வேறு தடவைகள் நேரிடையாக அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். இப்போது அது சமூக நலத் துறையிடம் இருக்கிறது. அதை உடனே பரிசீலித்து அந்தப் பரிந்துரையை டெல்லி மாநகருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற குறும்பர், குறுமன்ஸ், குறும்பா ஆகிய இனங்களைப் பற்றிய விளக்க அறிக்கையை சென்னைப் பல்கலைக் கழக மனித இயல் ஆராய்ச்சிப் பேராசிரியர் மற்றும் தலைவர் அளித்துள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை ஆய்வு செய்ததற்குப்

(முற்பகல் 9–40)

பிறகு சமூக நலத்துறை மற்றும் பழங்குடி நலத்துறை அதிகாரி ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அனுப்பும்படி கோரப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு சட்டக் கருத்து பெற்று திரும்ப அனுப்புகின்ற சூழ்நிலையில் நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த குறும்பர், குறுமன்ஸ், குறும்பர் ஆகிய இந்த மூன்று வகையைச் சார்ந்த மக்கள் தொகை எவ்வளவு என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, இவர்கள் எல்லோரும் மலைவாழ் மக்கள் பட்டியல் சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்ற அந்தக் கருத்தினை மத்திய அரசுக்குத் தமிழக அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறும்பர், குறுமன்ஸ், குறும்பா போன்றவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எத்தனை பேர் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், இதுபற்றி ஆய்வு செய்ய அதுவும் பல்கலைக் கழக மனித இயல் ஆய்வுப் பேராசிரியர் மூலம் ஆய்வு செய்ய அனுப்பப்பட்டிருக்கிறது. அதைச் செய்த பிறகு அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நரிக் குறவர்கள் தற்போது பிற்பட்டவர்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள குறும்பர், குறுமன்ஸ், குறும்பா என்று அழைக்கப் படுகின்றவர்களைப் போன்றுதான் இருளர், நரிக் குறவர் ஆகியவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் மலைவாழ் மக்கள் பட்டியலில் இடம் பெறுவார்களா? அதற்கு அமைச்சரவர்கள் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய வாழ்க்கை நிலை எப்படி, அவர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற சூழ்நிலைக்கேற்ப ஆய்வு செய்து கட்டாயமாக அனுப்பப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தில் அம்பாசங்கர் குழுவின் பரிந்துரையின்படி உரிக்கார நாயக்கர் என்ற இனத்தைச் சார்ந்த மூன்று இலட்சம் பழங்குடி மக்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் உரிக்கார நாயக்கர்கள் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் நாடோடிகளாக சவுரி முடிகளை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பழங்குடி மக்களைப் பற்றிய லிஸ்டிலே சேர்க்கின்ற பிரச்னை. இருந்தாலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே சேர்க்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். இருந்தாலும், அந்த மக்கள் எந்த வகையான சூழ்நிலையில், எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்ற விளக்கங்கள் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட இருக்கிறது. அதன் பிறகு யாரை, எந்த வகுப்பிலே சேர்ப்பது என்று நாங்கள் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம் என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாதத்திற்குள்ளேயே—டெல்லியிலே பாராளுமன்றம் கூடியிருக்கின்ற இந்த நேரத்திலே, குறும்பர், குறுமன்ஸ், குறும்பா ஆகிய மூன்று இன மக்களையும் ஷெட்யூல்ட் டிரைபிலே சேர்ப்பதற்குக் குறிப்பு இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுகிறார்கள். ஆகவே, பாரளுமன்றத்தில் இந்தச் சட்டம் வருவதற்கு முன் தமிழக அரசு பரிந்துரை செய்து உடனடியாக அனுப்புமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூடிய விரைவில் பரிந்துரை செய்து அனுப்பப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பாலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழங்குடி மக்கள் பட்டியலில் காட்டு நாயக்கர் என்ற வகுப்பினர் சேர்க்கப்பட்டுள்ளனர். பலயிடங்களில் காட்டு நாயக்கர்கள் வசித்துக் கொண்டிருப்பதால், ஒருசில இடங்களில் அவர்கள் காட்டு நாயக்கர்கள் என்ற சான்றிதழ் வழங்கப் படுகிறது; மற்றயிடங்களில் வழங்கப்படுவதில்லை. இப்படி அவர்கள் காட்டு நாயக்கர் என்று சான்றிதழ் வழங்கப்படாத இடங்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிந்து அதன்மீது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு என்னிடம் இல்லை. அப்படியிருந்தால் அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மலைவாழ் அரிசன மக்களுக்கு வீடுகள்.**

412—(*வினா எண். 5196) **திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தாலுகா, மொரப்பூர் தொகுதி அரிசன மலை வாழ் மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும்?

(இ) அதற்கான மதிப்பீடு தொகை எவ்வளவு?

(ஈ) எப்போது திட்டம் ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (அ) இல்லை.

(ஆ, இ மற்றும் ஈ) வினாவிற்கு இடமில்லை.

தரங்கம்பாடியில் மீனவர்களுக்கு வீடுகள்.

413—(*வினா எண் 3828) **திரு. என். விஜயபாலன்:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி தாலுக்காவில் மீனவர்களுக்கு எத்தனை வீடுகள் அரசால் கட்டித் தரப்பட்டுள்ளது?

(ஆ) மேலும் வீடு கட்டப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்** : (அ) 420 வீடுகள் தரங்கம்பாடி மீனவர்களுக்காக கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டு அதில் 120 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மீனவர்களுக்காக மேலும் வீடுகள் கட்டி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

**திரு. கெ. பட்டாபிராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985–86 ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு எந்த, எந்த ஊர்களில், எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்க அனுமதி வழங்கப் பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஒவ்வொன்றும் ரூ.16,000 என்கிற வடிவமைப்பில் 300 வீடுகள் கட்ட 1985–86 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கீழாத்தோட்டம் 150 வீடுகள், அந்தோணியார்புரம் 65 வீடுகள், கணேசபுரம் 36 வீடுகள், திருவத்தேவன்புரம் புதுத்தெரு 49 வீடுகள் ஆக மொத்தம் 1985-86 ஆம் ஆண்டு, ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் இந்த 300 வீடுகள் கட்டுகின்ற திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.





**திரு. க. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பொழுது, தரங்கம்பாடி தாலுகாவில் மீனவர்களுக்கு 420 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்து, 120 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டதாக அறிவித்தார்கள். மீதமுள்ள 300 வீடுகளும் எப்பொழுது கட்டி முடிக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 420 வீடுகள் ரூ. 11.82 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்காக அனுமதிக்கப்பட்டது. 120 வீடுகள் முழுவதுமாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்ற வீடுகள் கட்டுகிற பணி தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விரைவில் கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது ஒரு வீடு ரூ. 16,000 மதிப்பீட்டில் தயாரிக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஒரு வீடு ரூ. 16,000 என்பது ஒரு குடும்பம் வசிப்பதற்கா அல்லது அந்தப் பகுதியிலே உள்ள இரண்டு குடும்பம் வசிப்பதற்கா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 207 சதுர அடி பரப்புள்ள ரூ. 9,460 மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வந்தன, அதற்கடுத்த கட்டமாக 237 சதுர அடி பரப்புள்ள ரூ. 9,850 மதிப்பீட்டில் கட்டப்பட்டு வந்தன. இப்பொழுதுதான், புரட்சித் தலைவர் அரசு, கடலோரத்தில் இருக்கிற அந்த மக்களுக்குப் போதிய வசதியோடு கூடிய நல்ல வீடுகள் கட்டித் தரப்பட வேண்டுமென்ற அடிப்படையில், ஒரு ஹால், ஒரு பெட் ரூம், ஒரு ஸ்டோர் ரூம், ஒரு கிச்சன், லெட்ரின், பாத் ரூம் உட்பட, நல்ல அருமையான வீட்டைக் கட்டித் தரும் திட்டத்தை இப்பொழுது அறிவித்து இருக்கிறது. ஒரு குடும்பம் வாழ்வதற்காகத்தான் இந்த வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.

கடற்கரையோர வழிகாட்டி விளக்குகள்

414 (*வினா எண். 4759) **திரு. ப. ந. இராமச்சந்திரன்**—மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கடற்கரையோரங்களில் உள்ள வழிகாட்டி விளக்குகள் (Guide lights) எத்தனை?

(ஆ) இதனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், 1979-80 முதல் 1985-86 வரை, 20 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றுள் 10 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கப் பட்டு விட்டன. ஏனைய 10 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

(ஆ) இல்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், தரைமேல் பிறக்க வைத்தான், எங்களைத் தண்ணீரில் மிதக்க விட்டான் என்று சொல்கின்ற வகையில், அன்றாடம் கண்ணீரில் வாழ்கின்ற மீனவ மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் புரட்சித்தலைவர் அரசு வழிகாட்டி விளக்குகள் வழங்க வேண்டுமென்பதற்காக 20 இடங்களில் அமைக்க உத்தரவிட்டிருப்பதாகவும், அதில் 10 விளக்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டதாகவும் இன்னும் 10 கட்டுகின்ற பணி நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மீனவ மக்களுக்குக் கட்டித் தரப்படுகின்ற அந்த விளக்குகளின் மதிப்பீடு என்ன? ஒவ்வொரு விளக்கும என்ன தொகையில் கட்டப்படுகிறது? அதை இன்னும் அதிகரிக்கின்ற செயற்குறிப்பு இருக்கிறதா? காரணம், தஞ்சை மாவட்டக் கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற அதிகப்படியான மீனவ மக்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கிறார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட வழிகாட்டி விளக்குகளை இன்னும் அதிகப்படுத்தினால் நன்மை பயக்கும். அந்த விளக்குகளின் வெளிச்சம் கடலில் எவ்வளவு தூரம் தெரியும் என்பதையும் அறிவிக்க இயலுமா?

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** தலைவர் அவர்களே, ஒரு வழிகாட்டி விளக்கு 23,570 ரூபாய் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 47 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு, அவற்றில் பல பணி முடிந்துள்ளன; பலவற்றிற்கு பணி நடந்து கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 20 வழி காட்டி விளக்குகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. 47 வழிகாட்டி விளக்குகளுக்கும் மொத்தம் 11,07,790 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. சாதாரணமாக மீனவர்கள் படகுகளில் 30 கிலோ மீட்டர் தூரம் வரையில் மீன்பிடிக்கச் செல்கின்றனர். அந்த அளவுக்கு இந்த வழிகாட்டி விளக்கு வெளிச்சம் தருகின்ற அளவுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, என்னுடைய தொகுதி பட்டுக்கோட்டையில் அதிராம்பட்டினத்தில் 15,000 மீனவர்கள் வாழ்கின்றார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் வழிகாட்டி விளக்கு அமைக்கப்படுவதற்கான செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அப்படி இருக்கும் என்றால் அது எப்போது கட்டி முடிக்கப்படும்? இல்லை என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஏழை எளிய மீனவர்களுக்கு பயன்படும் வகையில் வழிகாட்டி விளக்கு கட்டித் தர முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் கரையூரில் வழிகாட்டி விளக்கு இருக்கிறது. முத்துப்பேட்டை போன்ற இடத்தில் கட்ட வேண்டுமென்று கேட்டால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

## பனை நுங்கு விற்பனை

415 (*வினா எண் 4421)—**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனை நுங்குகளை சுத்திகரித்து (Process) டின்னில் அடைத்து விற்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** ஆம். தமிழ்நாடு மாநில பனை வெல்ல மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம், பனை நுங்கைப் பதப்படுத்தி டின்னில் அடைத்து விற்பனை செய்கிறது.

**திரு. கே. அன்பழகன்:** தலைவரவர்களே, அந்நியச் செலாவணி ஈட்டக்கூடிய வகையிலே பனை நுங்கினை பிராஸஸ் செய்து டின்களில் அடைத்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவரவர்களே, பனை நுங்கினை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சியாக சிங்கப்பூருக்கு சாம்பிள் அனுப்பியிருக்கிறோம். இது வரையில் அங்கிருந்து பதில் வரவில்லை. பதில் வந்தபின்னால் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கதர்க் கிராமத் தொழில் வாரியம் மூலம் செய்யலாம்.

திரு. கே. அன்பழகன்: தலைவரவர்களே, கோடையில் வாடும் சென்னை மாநகர மக்களுக்கு நியாயவிலையில் பனை நுங்கு கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிசாமி: தலைவரவர்களே, ஏற்கனவே நம் தமிழ்நாட்டில் மட்டும்தான் பனை நுங்கு கடைகளில் அடுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல, விலை அதிகமாக இருப்பதால் இன்றைய தினம் தமிழ்நாட்டில் நுங்கு அதிகமாக விற்பனை செய்யப்படவில்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. குமரி அனந்தன்: கனம் சபாநாயகர் அவர்களே. நுங்கு பழங்காலம் தொட்டே மக்களால் உண்ணப்பட்டு வருகின்றது. 'நுங்குதல்' என்றாலே 'உண்ணுதல்' என்றுதான் பொருள். அந்த நுங்கிற்கு அதிகப்படி விலை இருப்பதாலே விற்பனை ஆகவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நுங்கினைப் பயன்படுத்திவிட்டால் வேறு பொருள்களை அதிலிருந்து எடுக்க முடியாது. நுங்கினை முற்ற விட்டு, பனம் பழம் ஆனபின் மேலே இருக்கிற சதையிலிருந்து 'பனாட்டு' என்கிற ஒரு பொருளைத் தயாரிக்கலாம். தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஐந்து பணியாரம் இந்த பனாட்டுதான். அதற்குப் பிறகு அதனுடைய விதை அல்லது கொட்டையை முளைக்க வைத்தால் கிழங்கு வருகிறது. அந்தக் கிழங்கை விற்கலாம். முளைக்க வைக்கிற கொட்டையில் 40 சதவீதம் சரியாக முளைப்பதில்லை. முளைக்காமல் இருக்கிற அந்த கொட்டைகளை எடுத்து வெட்டினால் 'கெட்டித் தவண்' கிடைக்கிறது. நான் மிகவும் சொல்கிறேன்; கெட்டித் தவண் கிடைக்கிறது. அது நுங்கினை விட நல்ல ருசியாக இருக்கும். இத்தனைப் பொருள்களை எடுத்தபிறகு கிடைக்கின்ற அந்த 'கெட்டித் தவணி'னையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, அதுபற்றி தற்போது என்னிடம் விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை அரசு பரிசீலனை செய்யும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கு, பதனீர் போன்ற உணவுப் பொருட்களைத் தருகின்ற பனைமரங்களில் இன்னும் ஒரு கால் நூற்றாண்டு காலத்திற்குள்ளாக அறிந்து விடுமளவு மரங்களே இல்லை என்ற நிலை வந்துவிடுமோ என்ற பயம் இருக்கிறது. எனவே பயன்தரும் நிலையில் உள்ள பனைமரங்களை வெட்டக் கூடாது என்று தடை செய்து அரசு உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் மானியக் கோரிக்கையில் பேசிய நேரத்தில் எடுத்துக் கூறி இருந்தேன். இன்றைய தினம் இந்தியாவிலேயே 76 சதவீதம் நம்முடைய தமிழ்நாட்டில் இருந்துதான் பனைப் பொருட்களை நாம் வெளி நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு தமிழ்நாட்டில்தான் 5 கோடி பனைமரங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பனைமரங்கள் வெட்டப் படுகின்றன என்ற புகாரை இப்போது இங்கே கூறியிருக்கிறார்கள். அதுபோன்ற புகார்கள் எங்களுக்கு வரவில்லை. அதுபோன்ற புகார்கள் வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தேன் உற்பத்தி

416 — (*வினா எண் 6132) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1983-84, 1984-85 ஆம் ஆண்டில் எவ்வளவு தேன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, மாவட்ட வாரியாக?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

(இ) தஞ்சை மாவட்டத்தில் சங்கங்கள் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: அவையின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே வைக்கப்பட்டிருக்கிற குறிப்பில் 1983-84ஆம் ஆண்டு கதர் கிராமக் கைத்தொழில் அமைப்பாட்டில் ஒவ்வொரு அமைப்புகளின் சார்பாகவும், 16 ஜில்லாக்களில் மொத்தம் 12,21,410 கிலோகிராம் தேன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றும், 1984-85 12,54,118 கிலோ கிராம் தேன் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டதாகவும் குறிப்பு இருக்கிறது. இதன் மூலமாக நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். தேனீக்களை வளர்த்துத் தேனைச் சேகரிப்பதற்குப் பதிலாக எந்தத் தன்மையில் தேன் இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி சர்க்கரையை பக்குவமாக்கி அவைதான் தேனாக விற்கப்படுகிறது என்ற ஒரு புகார் வந்திருக்கிறது. அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா அல்லது அதுபோன்ற நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து தடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

@158—159-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் எங்களுக்கு இதுவரை வந்ததில்லை, எந்த இடத்தில் அதுபோன்ற தவறுகள் நடக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராசாராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தேனீ வளர்ப்பதற்கு மத்திய அரசு எவ்வளவு மானியம் தருகிறார்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற தேனைப் பொறுத்தவரையில் என்னென்ன சலுகைகளை மாநில அரசு தருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதிலளிக்கப்படும்

**திரு. குமரி அனந்தன் :** சபாநாயகர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் மாவட்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறபோது நாகர்கோவில் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாகர்கோவில் என்று ஒரு மாவட்டம் இல்லை. அந்த மாவட்டத்தின் தலைநகர்தான் அது. எனவே குமரி மாவட்டம் என்று குறிப்பிட்டிருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் மிக அதிகமான அளவில் முந்திரிப் பருப்பு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதை ப்ராசஸ் செய்வதற்காகக்கூட வட நாட்டிலிருந்து ஒருவர் வந்து தொழிற்சாலை வைத்திருக்கிறார். அந்த அளவுக்கு நிறைய அளவில் முந்திரி மரங்கள் பூத்துக் கிடக்கிற இடமாக அது இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் தேனீ வளர்ப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை. எனவே அப்படிப்பட்ட இடங்களில் தனியாரோ அல்லது உடனடியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தோ அங்கே தேனீ வளர்த்து தேனை எடுக்கக் கூடிய வாய்ப்பை அரசாங்கம் உண்டாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. அதுபற்றிய விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றிய விவரம் இல்லை. தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தேனீ வளர்த்துத் தொழில் ஆரம்பிக்க வேண்டுமானால் எங்கே மகரந்த தூள் அதிகமாக இருக்கின்ற செடிகள், கொடிகள் பூக்கள் முதலியவை இருக்கிறதோ அந்த இடத்தில் தான் தேனீ வளர்ப்புத் தொழிலை ஆரம்பிக்க இந்தக் கதர் கிராமத்



தொழில் வாரியத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு தேனீ வளர்ப்புத் தொழில் ஆரம்பிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதுபோன்ற வாய்ப்பு அங்கே இருந்தால் நிச்சயமாக அரசின் மூலம் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. உ. சுபபிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தேனுக்கு தேவையான மகரந்தம் அதிகமான அளவில் சூரிய காந்திப் பூவில் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறதே, ஆகையினால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தேனை உற்பத்தி செய்கின்ற சங்கங்கள் சூரிய காந்தி செடிகளை அதிகமாகப் பயிர் செய்து அதன் மூலமாக அதிகமாக தேனை உற்பத்தி செய்யலாமே என்று சொல்லிக் கொள்வதோடு, பழத்தோட்டம் போன்றவற்றில்-அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில், கலப்பு மகரந்த சேர்க்கை என்கிற கிராஸ் பாலினேஷன் முறையைக் கையாண்டு, அதன் மூலம் பழ உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, இவற்றை எல்லாம் கருத்திலே கொண்டு, தேனீ வளர்ப்பவர்களிடமோ, அல்லது கூட்டுறவுச் சங்கத்தினரிடமோ இந்தப் பணிகளை ஆராய மேற்கொள்ளும்படி அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய காந்திப் பூவில் மகரந்த தூள் அதிகமாக இருந்தால் அதையும் அரசு பரிசீலனை செய்யும்படி தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய வழிமுறைகளை, வசதிகளை கொடுத்து வாரியம் உத்தரவிடும். அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொண்டும் தெரிவித்த கருத்துக்களையும் அரசு ஏற்று அதைப்பற்றியும் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்திலே உள்ள மாவட்ட தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திலே தேன் நிறைய தேங்கி இருப்பது அரசுக்குத் தெரியுமா? அரசே அப்படி அதிகமாகத் தேங்கியிருக்கக்கூடிய தேனை நம்முடைய மாநிலத்தில் பல பகுதிகளிலும் அல்லது அண்டை மாநிலங்களுக்கும் விற்பனை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு கேட்கப்பட்டிருக்கும் மூலக் கேள்வி, தமிழகத்தில் 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு தேன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது மாவட்ட வாரியாக என்றும், எந்தெந்த மாவட்டங்களில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன, தஞ்சை மாவட்டத்தில் சங்கங்கள் அமைக்க அரசு முன்வருமா என்றும் கேட்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் தேனீவளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தில் தேன் இருப்பு அதிகமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். அது பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்கப்படும்.

திரு. ஆ- கா. அ. அப்துல் சமது: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூட தேன் உற்பத்தி செய்வது பற்றிய தகவல்களைச் சொன்னார்கள். இந்த நாட்டில் தேன் உற்பத்தி செய்யப்படுகிறதா அல்லது சேகரிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தேன் தொழிலை மேற்கொள்ளுபவர்களுக்கு, தேனீக் கூடுகளை வழங்கி அதன் மூலம் தேன் உற்பத்தியை நம் தமிழகத்தில் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' பஞ்சாயத்து யூனியன்களின் மூலமாக ஒரு காலத்தில் தேன் வளர்ச்சிக்கான ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்பட்டது. ஆனால் இப்போது பஞ்சாயத்து யூனியன் மூலமாக அதற்காக தனி அலுவர்களை நியமித்திருக்கிறார்களா இல்லையா என்பதை தெரிய விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தேனை உற்பத்தி செய்வதற்கு சங்கம் இல்லை என்று தெரியவருகிறது. தஞ்சை மாவட்டத்தில் அப்படி சங்கம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளாட்சித் துறையின் மூலம் இந்த தேன் வளர்ப்புத் தொழில் முன்பு நடந்துக் கொண்டிருந்தது. அப்போது அவ்வளவு நல்லமுறையில் அந்தத் தொழில் நடைபெறவில்லை என்ற காரணத்தினால்தான் கதர் கிராமத்தொழில் வாரியத்திடம் கொடுக்கப்பட்டது. இப்போது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தேனீவயலர் என்ற பதவிகளை உருவாக்கி, அந்த தேன் தொழிலை பயில்வதற்கு எந்த அளவுக்கு பயிற்சி தர முடியுமோ அந்த அளவுக்கு தந்து, கூட்டுறவுச் சங்க பயிற்சியாளர்களுக்கு வாரியம் உதவி வருகிறது.



தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது பற்றியும் இங்கே கேட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே மாயவரம், செம்பனார் கோவில், திருக்காட்டுப் பள்ளி, ஒருகுச்சேரி, நாகப்பட்டினம் போன்ற இடங்களில் தேனீ வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவைகள் நல்ல முறையில் செயலாற்றாமல், இயங்காமல் இருக்கின்றன. அவைகள் நல்லமுறையில் செயலாற்றும் வண்ணம் வேறு எங்காவது பகுதிகள் இருந்தால், அதை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அங்கே சங்கம் அமைக்க முன்வந்து, அந்தத் தொழிலை நடத்துவதற்கு வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பெருஞ்சாணி அணையருகே புதிய அணை.

417—(*வினா எண். 3436) திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணையின் முன்பக்கமாக 1½ கி.மீ. தூரத்தில் புதிய அணை ஒன்று கட்டி விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணை விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுகிறது. இந்தப் பெருஞ்சாணி அணையில் போதிய அளவிற்கு தண்ணீரை நிலைநிறுத்த முடியாத நிலையிருப்பதால் அதன் பக்கத்தில் 1½கி. மீ. தூரத்தில் ஒரு புதிய அணையைக் கட்டித் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, பெருஞ்சாணி அணையின் கொள்ளளவு 81.8 மிலியன் கன அடியாகும். அதற்கென்று தனியாக ஆயக்கட்டு நிலங்கள் கிடையாது. கோதையாறு, பட்டணங்கால், இராதாபுரம் போன்ற கால்வாய்களுக்கு தண்ணீர் அந்த நீர்த் தேக்கத் திட்டத்திலிருந்து தரப்பட்டு வருகிறது. தற்போது பெருஞ்சாணி பகுதியில் தேவையான மழையின்மை காரணமாக தண்ணீர் இல்லாமல் இருக்கிற சூழ்நிலையில் மேலும் கூடுதலாக ஒரு அணையைக் கட்டுவதில் எந்தவிதமான பயனும் தராது என்று அரசு கருதுவதால் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, அப்படி ஒரு அணையைக் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் இல்லையென்றால் பேச்சிப்பாறை அணைக்கு எந்த அளவிற்கு கோதையாறு நீர் வருகிறதோ அதேபோன்று இந்த அணைக்கும் கோதையாறு தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, பேச்சிப்பாறைக்கும், பெருஞ்சாணிக்கும் எவ்வளவு தண்ணீர் எப்படி விட வேண்டுமென்றவையெல்லாம் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள ஒன்றாகும். புதியதாக உருவாக்குவதற்கு ஒன்றுமில்லை. பழைய முறைகளை மாற்றுவதற்கு வழியில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணைக்கு கிழக்குப் பகுதியில் மாம்பழத்துறை ஆறு அணைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நேரிடையாக வந்து பார்த்து, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமென்ற உறுதியைத் தெரிவித்துச் சென்றார்கள். அந்த அடிப்படையில் மாம்பழத்துறை ஆறு அணைத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல மாம்பழத்துறை ஆறு அணை கட்டும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற அவாவின் காரணமாக நேரில் சென்று பார்க்கிற வாய்ப்பினை நான் பயன்படுத்தினேன். அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால் அந்தத் திட்டத்தின் வாயிலாக கிடைக்கக்கூடிய பயனை விட செலவு மிகவும் அதிகமாகும் என்பதால் அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று நம்முடைய ஸ்தல அதிகாரிகளும், ஏனைய அதிகாரிகளும் தெரிவித்தார்கள். அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு, வயபிளாக செயல்படுகிற திட்டமாக மாற்றவேண்டுமென்பதற்காக, அந்தத் திட்டத்தின் பயனை கூடுதல் பகுதிகளுக்கு நீட்டிக்க முடியுமா என்ற ஆய்வினை நடத்தக் கோரினேன். அந்த ஆய்வின் அடிப்படையில் இராதாபுரம் கால்வாயில் தண்ணீர் கொண்டு சென்று அதன் வாயிலாக நெல்லை மாவட்டத்தில் உள்ள இராதாபுரம் பகுதிக்கும் அந்தப் பயன் கிடைக்கக்கூடிய அளவிற்கு நிலைமைகளை உருவாக்க முடியுமென்று அதிகாரிகள் சொன்னார்கள். அந்த நிலைமை ஏற்றுக்கொள்ளப்படுமானால் அந்தத் திட்டம் செயல்முறைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டமாக அமையும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையில் அந்தத் திட்டத்தைப் பற்றிய தொடர் ஆய்வுகளை நடத்த அரசு ஆணையிடும்.



### வெள்ளப்பாக்கம் வாய்க்காலில் ஆக்கிரமிப்புகள்.

418—(*வினா எண். 3853) திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெடிலம் நதியிலிருந்து நெல்லிக்குப்பத்திற்குள் வருகின்ற வெள்ளப்பாக்கம் வாய்க்காலில் ஆக்கிரமிப்புகளை அகற்றி மீண்டும் அந்த வாய்க்காலில் தண்ணீர் வரத்து ஏற்படுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், சீரமைப்புப் பணி எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ&ஆ) நெல்லிக்குப்பம் நகர எல்லைக்குள் வரும் வெள்ளப்பாக்கம் வாய்க்காலில் தூர் அகற்றி நீர்வரத்து நல்லமுறையில் ஏற்பட நடவடிக்கை பொதுப்பணித்துறையால் விரைவில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

### பாமணி ஆற்றில் சிறிய அணை.

419—(*வினா எண். 6469) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பாமணி ஆற்றில் பெட் டாம் (Bed D m) கட்டி தண்ணீரைத் தேக்கி தஞ்சை மாவட்டம் மன்னார்குடி தாலுகா சித்தமல்லி பகுதியையும் பட்டுக்கோட்டை தாலுகா மதுக்கூர் ஜமீன் பகுதிக்குட்பட்ட பகுதியையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் பெறும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ&ஆ) படுகை அணை கட்டினால் வெள்ளக் காலங்களில் நீர் வடிவதற்கு சிரமம் ஏற்படும் என்பதால் படுகை அணை கட்டும் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(முற்பகல் 10-10)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத்திட்டம் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது எல்லாம், இந்த பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் மதுக்கூர் அருகாமையில் இருக்கக்கூடிய அந்த சம்பகோட்டம் என்ற

இடத்தில் 15 ஆயிரம் ஏக்கர் விவசாய உற்பத்தி செய்யக் கூடிய நிலப்பரப்பு இருக்கிறது. அதேபோல் மன்னார்குடி தாலுக்கா விலே சித்தமல்லி பகுதியும் இந்தப் பக்கம் இருக்கிறது. ஆகவே இடையிலே ஓடக்கூடியது பாமணி ஆறு இந்த பாமணி ஆறில் தடுப்புச் சுவர் கட்டாததால், இன்றைக்கு அதிலே வரக் கூடிய தண்ணீர் பூராவும் கடலுக்கு சென்றுவிடுகிறது. வெள்ளக் காலங்களில் தண்ணீர் முழுமையாக வருகிறபோது, உடைப்பு எடுத்து, அந்த சம்பகோட்டை பகுதியில் உள்ள அந்த 15 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுவிடுகிறது. எனவே அந்தப் பகுதியில் உள்ள தாலுக்காக்களின் நலன் கருதி, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் அதற்கு சர்வே செய்திருக்கிறார்கள், அந்த அணையைக் கட்டவேண்டும் என்று தி. மு. க. ஆட்சிக் காலத்திலேயும் சர்வே செய்திருக் கிறார்கள். நம்முடைய ஆட்சிக் காலத்திலே அதிகாரிகள் பார்த்து, அந்த இடத்திலே பெட்டாமை கட்டினால் நன்றாக அமையும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றைக் கருத்தில் கொண்டு, அந்த இடத்தைப் பார்வையிட்டு, எதிர்காலத்தில் இந்த பெட்டாம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று [illegible]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, பாமணி ஆறு என்பது ஒரு பாசன வடிகால் ஆறு ஆகும். அந்த ஆற்றின் பயன் பல்வேறு பகுதிகளில் வருகின்ற வடிகால்களில் இருக்கின்ற தண்ணீரை சேமித்து கடலுக்கு கொண்டு வருவதுதான் அதனுடைய வேலை. அந்த முறையில் வெள்ளக் காலங்களில் அந்த அணை கட்டப்படுமானால், அந்த வெள்ளத்தை கடலுக்குத் தள்ளக்கூடிய பணியை செவ்வனே ஆற்ற முடியாத அளவிற்கு பாமினி ஓய்ந்து விடுவாள்; ஆகவே அந்த வகையில் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். அது நீங்கலாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நில அமைப்பு எப்படிப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். நிலத்தின் சரிவுத் தன்மை, இன்மை, மிகவும் சமமான பூமியைக் கொண்ட பகுதியாக இருக்கிறது தஞ்சை மாவட்டம். அந்த முறையிலே அந்த நீர்த்தேக்கத்தை அமைக்க வாய்ப்பில்லை என்று சொல்லியிருக்கிறார்கள், ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கின்ற நேரத்தில் ஒரு பெட்டாமைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். பெட்டாமைப் பற்றி பரிசீலிக்கப் படும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெட்டாம் என்பது, இந்த இரண்டு திட்டத் திற்கும் பயன்படும். அதிகாரிகள் பார்வையிட்டுச் சொன்னதை நான் சொல்கிறேன். இந்த சித்தமல்லி, பாலகிருஷ்ணாபுரம், பெருககொண்டான் அந்தப் பகுதியில் வாழக்கூடிய 20 ஆயிரம் மக்களுக்கு போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும். மதுக்கூர் போகவேண்டும் என்றால் இப்போது எப்படி போகிறார்



என்று சொன்னால், அந்தப் பகுதி மக்கள் மன்னார்குடிக்குச் சென்று, அங்கேயிருந்து மதுக்கூருக்கு வரவேண்டியிருக்கிறது. 30 கிலோ மீட்டர் வழியாகச் சென்று, இந்த முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை அங்கேயிருந்து மதுக்கூருக்கு வரவேண்டி யிருக்கிறது. ஆகவே சித்தமல்லியிலிருந்து மதுக்கூருக்கு நேர் வழியாகப் போகவேண்டுமென்றால், 10 கி மீட்டர்தான். ஆகவே போக்குவரத்திற்கும் இதனால் வசதி ஏற்படும். இந்தத் திட்டத் தின் மூலமாக இதன்மேலே செல்வதற்கு நடைபாதை அமைத்துக் கொள்ளலாம் என்று எஞ்சினியர்கள் அதைப் பார்த்துவிட்டு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மக்கள் போவதற்கும், வெள்ளத்தைத் தடுப்பதற்கும், வெள்ளம் வருகின்ற பாமினி ஆற்றில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் அந்த உடைப்பின் மூல மாக இந்த மதுக்கூர் ஜமீன், மற்றும் சம்பக்கோட்டை முழுவதும் பாதிக்கப்படுவதால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக, இப்படிப்பட்ட மக்களுக்கு பயன்படும். விவசாயத்தை பாதுகாக்க முடியும். வெள்ளம் வருகின்ற போது தண்ணீரை கடலுக்கு அனுப்புவதற்கும் வசதியிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்களும், அதிகாரி அவர்களும் நேரடியாகப் பார்வையிட்டு, பொதுமக்களுடைய நலனைக் கருதி, இந்த ஆண்டில் இல்லை என்றாலும், அடுத்த ஆண்டிலாவது நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை, மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட அந்த நிலைமைகளை எல்லாம் நானும் ஓரளவுக்கு அறிந்தவனாகத்தான் இருக்கிறேன். போக்கு வரத்துக்குப் பொறுத்தவரையிலும் அது நம்முடைய பணியாக இல்லாவிட்டாலும்கூட எல்லோருக்கும் தேவையான ஒன்று என்ற முறையில் அந்த உள்ளடக்கிய ஆய்வுகளை நடத்த சம்பந்தப் பட்ட அதிகாரிகள் அறிவுறுத்தப்படுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட அந்த அடிப்படை யில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். நல்ல பயனுள்ள முடிவுகள் வருமானால், தொடர்ந்து மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகளை இந்த அரசு ஆற்றும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கனாவூர், புளியக்குடி, ஏயகுலம், சிராங்குடி, பெரிய கோட்டை, வெட்டிக்காடு, கொடநிதகுடி, காரப்பன்காடு, அண்டமி, கலியாககுறிச்சி, பாவாஜிகோட்டை, பாலோஜி, கழிச்சான்- கோட்டை, சிலுமேல்குடி ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் பெருகவாழ்ந்தான், பாலையூர், குறிச்சி, திருமக்கோட்டை, சித்தமல்லி, பழையனூர், தலையாமங்கலம், கோவிலூர் முதலிய பகுதிகளுக்குச் செல்லவேண்டும் என்ற அக்கரையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் கொண்டு வந்த அந்த கோரிக்கையின் மீது மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் அணை கட்ட பரிசீலிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். வெள்ளம் வருகின்ற காலங்களில், அந்தக் கரைகளைப் பலப்படுத்தாத காரணத்தால், அங்கே உள்ள 15 ஆயிரம் ஏக்கர் நிலப் பயிர்கள் எல்லாம் பாதிக்கப் படுகின்றன. ஆகவே உலக வங்கி வழங்குகின்ற 103கோடி ரூபாயிலே கொஞ்சம் பணத்தை இதற்கு ஒதுக்கி, இந்தக் கரையை பலப்படுத்தி இந்த அணையைக் கட்டிக் கொடுத்தால், அங்கே யுள்ள 15 ஆயிரம் ஏக்கர் நிலமும் பாசனம் பெறுவதோடு, அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தற்போது 40 கி. மீட்டர் தூரத் திற்கு சுற்றிச் செல்லவேண்டிய நிலைமை இருப்பதையும் தவிர்க் கலாம்.

அடுத்து எனது தொகுதியில் உள்ள உலயபள்ளம் ஏரிக்கும் பெரியக் கோட்டை ஏரிக்கும் கண்ணனூரிலிருந்து ஒரு பெரிய வாய்க்காலைக் வெட்டிக் கொண்டு போனால் ஏறத்தாழ 700 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலங்கள் இந்த பெரிய 2 ஏரிகளில் தண் ணீர் தேங்குமானால் நேரடியாக சாகுபடிக்கு ஏதுவாக இருக்கும். அதையும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு.யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் நடத்துனரை விட சிறப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வழித்தடங்களை எல்லாம் சொன் னார்கள். ஆனால் எனக்கு இருக்கக் கூடிய கவலை எல்லாம் அத்தனை பகுதிகளுக்கும் பாசன வசதியை செய்து தருவதற்கு காவேரி ஆறு தயாராக இருக்குமா என்பது தான், அவ்வாறு தயாராக இருக்குமானால் ஆற்றை வைத்து நாங்கள் சும்மா இருக்க விரும்பவில்லை. இன்னும் சொல்லப் போனால் தஞ்சை மாவட்ட விவசாய பெருங்குடி மக்களுக்கு வசதியை உருவாக்கு வது இந்த அரசின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று ஆகும் என்ற முறையில் உரிய ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு எல்லா வசதி களையும் செய்து தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். ஆனால் குடந்தை நாச்சியார்கோவில் பகுதியில் கூத்தனூரில் ஒரு பெட் டாம், சுந்தர பெருமாள் கோவிலில் அரசலாற்றில் ஒரு பெட் டாம், பூவரம்பூரில் ஒரு பெட் டாம், பவுண்டரீகபுரம், திருமலை ராஜன் பெட் டாம் போன்ற பல பெட் டாம்களை கட்டுவதற்கு பல ஆண்டுகளாக திட்டம் தயாரிக்கப்பட்டு சில பெட் டாம்களுக்கு டெண்டர் விடப்பட்டும் அவைகளை நிறைவேற்றாமல் காலம் தாழ்த்தி வருவதால் விவசாயிகள் மிகவும் வருந்தக்கூடிய சூழ்நிலையில் அரசு வைத்து இருக்கிறது. அந்த பெட் டாம்கள் அனைத்தையும் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு வசதி செய்ய வேண்டும் என்று சொல்லுகிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக



கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து—வரும் விவசாய காலங் களில் விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்—கட்டித்தருவார் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எல்லாம் அரசுக்கு இது வரையில் வரவில்லை. அவ்வாறு வருமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தந்து தகவல் பெறப்படும், அப் படி கிடைக்கின்ற விவரங்களின் அடிப்படையில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பன் ஆற்றின் குறுக்கே சித்தமல்லி குறுக்கே பெட் டாம் கட்டுவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துச் சொன்னார்கள். இந்த பெட் டாம் கட்டுவதன் மூலம் அந்தப் பகுதி யில் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அந்த பெட் டாம் கட்டுவதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள விவசாய பெரு மக்க ளுடைய பெரும்பகுதியான நிலங்கள் பாசன வசதியைப் பெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதைப் பற்றி விசாரித்து அறிந்து சரியான ஆய்வுகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற் றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்

### அ. இலங்கை அகதிகளில் சிலர் கோடைக்கானலில் கொத்தடிமைகளாக நடத்தப்படுவது குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.

*திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசிடமிருந்து ஒரு விளக் கத்தைப் பெற விரும்புகிறேன். டெல்லியில் உள்ள உச்ச நீதி மன்றத்தில் Chief Justice Thiru P. N. Bhagawathi, Justice V. Khalid, Justice G. L. Oz ஆகிய 3 நீதிபதிகளும் 44 இலங்கை அகதிகள் குடும்பத்திற்கு, கொடைக்கானலில் கொத்தடிமைகளாக வேலை வாங்குவது குறித்து அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சப்-கலெக்டர் Thiru G. S. Pirzada அவர்களுக்கு போட்ட உத்தரவின்படி

14 நாட்களுக்குள் அந்தப் பணத்தை தமிழக அரசும், டான் இந்தியாவும் வழங்க வேண்டும் என்றும், அந்தக் காலத்தில் Thiru G.S. Pirzada (பிர்ஸாடா)-வை டிரான்ஸ்பர் செய்யக் கூடாது என்றும் உத்திரவிட்டிருக்கிறது. இது குறித்து அரசிடமிருந்து பதில் பெற விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, அந்த மாவட்ட கலெக்டர் ..............(மணியடிக்கப் பெற்றது).

(ஆ) நகரமன்ற ஊராட்சி ஒன்றியத்தலைவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை குறித்து.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் நகர மன்ற, ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு வாக்களிக்க உரிமை உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த 2-4-1986 அன்று விருதுநகரில் நகரமன்ற துணைத் தலைவர் தேர்தல் நடந்தது, அங்கே நகரமன்றத் தலைவரை வாக்களிக்க விட மாட்டோம் என்று சொல்லி ஆளும் கட்சியைச் சேர்ந்த கவுன்சிலர்கள் போராடினார்கள். அப்போது அவர்கள் டி.ஆர்.ஓ.-வுக்கு போன் போட்டு கேட்டபோது ஜி.ஓ. இல்லாத காரணத்தால் வாக்கு அளிக்க முடியவில்லை.

(முற்பகல் 10-20).

அந்த நேரத்தில் அங்கே போட்டியிட்ட ஜனதா வேட்பாளர் சம வாக்குகள் பெற்று திருவுளச் சீட்டு மூலம் வெற்றி பெற்று இருக்கிறார். இந்த நிலைமையைப் போக்குவதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் ஒரு ஜி. ஓ. வை அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவை முன்னவர் நான் கேட்டதற்கு பதில் சொல்ல வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லையென்றாலும், உச்ச நீதி மன்றம் ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறதென்றால், அந்த ஆணையை கடைப் பிடிக்க வேண்டியதுதான் அரசினுடைய கடமை. ஆக அவர்கள் குறிப்பிட்டிருக்கிற நாட்களுக்குள் அவர்கள் என்ன உத்தரவு இட்டிருக்கிறார்களோ அந்த உத்தரவை நிறைவேற்ற அரசு எல்லாவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளும்.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, 'பாயின்ட் ஆப் ஆர்டர்'. * *

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நடைபெற்றுள்ள ஒரு குற்றம். அதுபற்றி முறையிட்டு காவல் துறையினரை நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம், விண்ணப்பிக்கலாம், புகார்கள் கொடுக்கலாம், அவர்கள் அதுபற்றி நடவடிக்கை எடுப்பார்கள். ஆக, இதை அந்த முறையில் தான் செய்ய வேண்டுமே தவிர இந்த அவையில் ஒன்றும் தீர்ப்பு அளிக்க முடியாது. இது பாயின்ட் ஆப் ஆர்டரிலும் வராது. ஆகவே முறைப்படி எழுப்ப வேண்டுமே தவிர,—ஆனால் அந்த வழக்கு என்னவாயிற்று என்று கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கேட்கலாம், இந்த அவையில் விவாதித்து எடுத்துச் சொல்வதற்கான சூழ்நிலை இல்லை. எவ்வளவோ குற்றங்கள் நாட்டிலே நடை பெறுகின்றன என்றாலும் கூட அவற்றுக்கெல்லாம் பதில் சொல்கிற முறையில் அவை இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி என் அறைக்கு வந்து அனுமதி கேட்டார். அதனால் கொடுத்தேன். ஆனால் அவர் எழுப்பிய பிரச்சினை பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து நான் ஏற்கெனவே அவையில் விளக்கம் தந்திருக்கிறேன். எங்கெங்கு இப்படி தவறு நடந்தாலும், புகார் எழுதிக் கொடுக்கும்படி நான் கேட்டிருக்கிறேன். அப்படி எழுதிக் கொடுப்பார்களேயானால் நான் சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்க தயாராக இருக்கிறேன். இது குறித்து அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றால் அது பற்றி அரசு பரிசீலித்து உத்தரவு பிறப்பிக்கும்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) ஆவடி நகரியத்தில் சொத்து வரி வசூல் கெடுபிடி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா, திருமதி டி. யசோதா மற்றும் திரு. ஜி. கே. ஜெ. பாரதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை ஆவடி நகரியத்தில் ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட வீட்டு வரியையும் மற்ற வரிகளையும் செலுத்தவில்லை என்று கூறி ஜப்தி செய்வதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஆவடி நகரியத்தில் 1985-86 வரை ரூ. 60.35 இலட்சத்திற்கான வரித்தொகை பாக்கி உள்ளது. எனவே இந்நகரிய சிப்பந்திகளுக்கு மாதா மாதம் சம்பளமும், ஒப்பந்தக்காரர்கள் கட்டிய டேவணித் தொகையை, திருப்பிக்கொடுப்பதற்கும் மற்றும் வேலை செய்யும் ஒப்பந்தத்தாரருக்கு பில் பட்டுவாடா செய்வது போன்றவற்றிற்கும் பணம் இல்லாமல் சிரமமாக உள்ளது என்றும், மேற்குறிப்பிட்ட நிலையில் பொது மக்களுக்கு வசதி செய்ய முடியாமல் இந்நகரியம் நிதிக் கஷ்டத்தில் உள்ளது என்றும், ஆவடி நகரிய நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

2. 1985–86 ஆம் வருடத்தில் பிப்ரவரி முடிய ரூ. 22.78 இலட்சமே வசூல் ஆனது என்றும், பல முறைகள் வரித் தண்டலர்கள் அணுகியும் வரிசெலுத்துபவர்களில் சிலர் நிலுவையை செலுத்தாத காரணத்தால், நகராட்சி விதிகளின் படி ஜப்தி அறிக்கைகள் முதலிய எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பி வசூல் செய்ய வேண்டிய நிலைமை உள்ளது என்றும் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

3. ஆவடி நகரியத்தில் 60,000 ரூபாய் வரை வரி நிலுவை வைத்துக்கொண்டு வரி செலுத்தாத ஒருவர் அத்தொகைக்கான காசோலையை நிர்வாக அதிகாரியிடம் கொடுத்துவிட்டு, அவரே பணம் பட்டுவாடா செய்ய வேண்டாமென்று வங்கிக்கு தெரிவித்ததால் அவரிடம் இருந்து ஜப்தி செய்து வசூல் செய்யப்பட்டது. இதன் காரணமாக வரி செலுத்தாமல் உள்ளவர்கள் வரியை செலுத்தியே தீர வேண்டும் என்ற கட்டாய நிலை உருவானதால், அவர்களிடம் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

4. இந்த நகரியத்தின் வரி வசூல் கணக்குகள் படி பாக்கி உள்ளவர்களுக்கு ஜப்தி எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பப்படும் போது அவர்கள் தாங்கள் ஏற்கனவே வரி செலுத்தி விட்டதற்கு ஆதாரங்கள் காண்பித்தால் ஜப்தி எச்சரிக்கை அறிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

5. வரி வசூல் செய்ய கையாளப்பட வேண்டிய எல்லா முறைகளையும் மேற்கொண்ட பின்னரும் வசூல் செய்யப்பட முடியாத நிலையில் தான் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இது சட்டத்திற்கு உட்பட்டதே ஆகும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி நகரியத்தில் நம்முடைய வரி வசூல் செய்கின்ற பில் கலெக்டர் என்று சொல்லப்படுகின்ற வரி தண்டலர் ஒரு நபரிடம் வரி பாக்கிக்காக 60 ஆயிரம் ரூபாயை காசோலையாகப் பெற்று பிறகு அந்தக் காசோலை நிர்வாக அதிகாரியிடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

சேர்க்கப்பட்டவுடன் அந்தக் காசோலை வங்கியிலே இருக்கின்ற அதிகாரிகளிடம் சென்று, காசோலையைத் தந்தவர் பணம் கொடுக்கவேண்டாம் என்று வங்கிக்கு தெரிவித்ததாக இங்கே நம்முடைய அரசு சார்பிலே அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட நபர் சொல்கிறார், நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அந்தக் காசோலையைத் தந்த வங்கியிலே இருக்கின்ற பணம் முறையாகச் சேரவில்லை என்று சொன்னால், என்னிடம் வினவியிருக்கவேண்டும். வினவாமலேயே அவர்கள் ஜப்தி மூலமாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்ற பகிரங்கக் குற்றச்சாட்டினை சொல்கிறார்கள். மேலும் இந்தக் காசோலையை வழங்கிய நபரிடமிருந்து அந்த காசோலைக்கான பணம் வங்கியிலே இருக்கிறதா இல்லையா என்ற முறையில் அந்த நபருக்கு நகரிய நிர்வாக அதிகாரி அவர்கள் ஒரு தாக்கீது வழங்கி இருக்கவேண்டும். ஒரு தாக்கீது வழங்கியிருந்தால், அவர் மீண்டும் வங்கிக்குச் சென்று பணத்தை வழங்குகின்ற முறையைச் செய்திருக்கலாம். ஆனால் நிர்வாக அதிகாரி அவர்களே இந்தக் காசோலை பணமாகியதா, ஆகவில்லையா என்ற நிலையை உணராமலேயே அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்— அந்தப் பகுதியிலுள்ள மக்களின் உணர்வுகளை, நம்முடைய அரசு, குறிப்பாக நம்முடைய அமைச்சர் பெருந்தகையவர்கள் உணரவேண்டும். இந்த நகரியங்கள் பணம் இல்லாமல் துன்பப்படுவது என்பது உண்மை. வரி வசூல் செய்யப்பட வேண்டும் என்பது உண்மை. நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏழைகளிடத்தில் வரி வசூல் செய்வது சிக்கலான பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையிலிருந்து சுமுகமான ஒரு சூழ்நிலையினை உருவாக்குவதற்கு, வரி வசூல் செய்யும் தண்டல்காரர்களும், நிர்வாக அதிகாரிகளும் முறையாக அணுகுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் பெருந்தகை அவர்கள் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரி பாக்கி உள்ளவர் உரிமையோடும், உற்சாகத்தோடும் கேட்டால் அவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அப்படி உற்சாகத்தோடு கேட்கின்ற முறையைத் தவிர்த்து ஜப்தி போன்ற கொடிய நடவடிக்கைகளில் இறங்காமல் இருப்பதற்கு வழிவகைகளை அரசு வகுத்து, அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : துணைத்தலைவர் அவர்களே, ஆவடி நகரியத்தைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய 60 இலட்சம் வரை வரி பாக்கியிருக்கிறது. இதிலே ஒருவரிடம் மட்டும் ரூ. 60,000 வரி பாக்கி இருந்தபோது, அவர்கள் வசூலுக்குப் போனபோது, காசோலை ஒன்றை கொடுத்திருக்கிறார்கள். காசோலையை மாற்ற வங்கிக்குப் போனபோது குறிப்பிட்ட இந்தக் காசோலைக்கு பணம் தரவேண்டாமென்று தடுத்துவிட்டார்கள். பிறகு வேறு வழியில்லாமல் ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பணம் உடன் வந்துவிட்டது. அங்கு

இருக்கிற மக்கள் அனைவருக்கும் இத்தகைய நோட்டீஸ் கொடுக்கப்பட்டது என்பது உண்மையானது. ஆனால் ஏற்கனவே வரி பாக்கி இருக்கிறவர்கள் பணத்தை உடனடியாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வரியை ஏற்கனவே கட்டிவிட்டோம் என்று சொல்கிறவர்கள் ரசீதை கொண்டுவந்து காட்டினால் அவர்கள் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படுகிறது. வரி ரூ. 60,000 பாக்கியிருக்கிற இடத்தில் ஒரு வேளை வரியை கட்டிவிட்டார்களா இல்லையா, வரித் தண்டலர்கள் வரிகளை அவர்களே கையாடல் செய்து விட்டார் களா என்பதைக் கண்காணிக்கவும், கவனிப்பதற்காகவும் இத் தகைய தாக்கீது அனுப்பப்படுவது உதவியாக இருக்கிறதே தவிர மக்களை சிரமப்படுத்தவேண்டுமென்பதற்காக நினைக்கவில்லை. ஆனால் ரூ. 60,000 பாக்கி உள்ள ஒருவரை ஏழைகள் பட்டியலில் சேர்க்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் பாரதி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு,. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை குறிப் பிட்டது சிறப்பான உணர்வு என்றாலும், அந்த உணர்விலே ஏழை மக்கள் வரியைத் கட்டியிருக்கிறார்கள். ஆனால் வரி ரசீதை எங்கேயோ தவற விட்டுவிடுகிறார்கள். ஆனால் மீண்டும் அந்தத் தண்டல்காரர்கள் அவர்களை பயமுறுத்தி, எச்சரிக்கை விடு கிறார்கள். மேலும் அந்த எச்சரிக்கைக்கு முன்பாக கட்டியவர்கள் தங்களுடைய ரசீதைத் தவற விடுவது என்பது சில நேரங்களில் இயற்கையாகிறது. அதைச் சரிபார்த்து, மீண்டும் அந்த ஜப்தி நோட்டீசை வழங்காமல் இருப்பதற்கு ஒரு வேளை அது கவனக் குறைவாகக் கூட இருக்கலாம் என்பதை அறிந்து அரசு தடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணை தலைவர் அவர் களே, வரி கட்டினாரா, இல்லையா என்பதை வரிப் பட்டியலைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ளமுடியும். ஒரு வேளை வரி கட்டியிருந்தால், ரசீது இருந்தால் தான் வரிக் கட்டியதாக ஆதாரம் இருக்கமுடியும். வரி கட்டிவிட்டேன் விட்டு விடுங்கள் என்று சொன்னால் யாரையும் விட்டுவிடமுடியாது. அப்படி விட்டு விட்டால் அனைவரும் வரி கட்டிவிட்டோம் என்று சொல்லி விட்டால், வரி வசூல் ஆகாமல் போய்விடும். எனவே யார் வரி கட்டினார்கள் என்பதற்கு ரசீதைக் கொண்டு வந்து காட்டினால் தான் அதற்கு ஆதாரம் இருக்கமுடியும். நகரியத்தில் இருக்கிற கணக்கைப் பார்த்து வரி கட்டியிருந்தால், அவர்களுக்கு ஜப்தி நோட்டீஸ் அனுப்பப்பட மாட்டாது. அப்படி அனுப்பியிருந்தால் நிறுத்தச் சொல்கிறேன். அனுப்பியிருக்கமாட்டார்கள், அனுப்பி யிருக்கக் கூடாது. வரிக் கட்டவில்லையென்றால் ஜப்தி நோட்டிஸ் அனுப்புவதைத் தவிர்க்க முடியாது, தடுக்கமுடியாது. காரணம் 60 லட்சம் ரூபாய் பாக்கி வைத்துக் கொண்டு நகரியத்தை நடத்தமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





(ஆ) திருவில்லிப்புத்தூர் தொகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களில் கைத்தறி துணி தேக்கம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, கே. பாலாஜி, ஏ. தங்கராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி, நெசவுத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''திருவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள வர்களிடமிருந்து கடந்த 3 மாதகாலமாக கோ—ஆப்டெக்சில் இருந்து ஆர்டர் கொடுக்கப்பட்ட சுமார் 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஜவுளியைக் கொள்முதல் செய்யாததாலும் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்கு சுமார் 2 கோடி ரூபாய் வரை அவர்களுக்குப் பாக்கி தரவேண்டியிருப்ப தாலும், மேலும் கோ—ஆப்டெக்சில் இருந்து பாலியஸ்டர் சட்டை, ஜனதா, பாலினால் ரகங்களை உற்பத்தி செய்ய ஆர்டர் கொடுக்காமல் இருப்பதால், அப்பகுதி நெசவாளர் களிடையே ஏற்பட்டுள்ள நிலை மற்றும் தமிழகத்தில் ரியல் மெட்ராஸ் ஹேண்ட் கர்சிப், கைலிகள், லுங்கிகள் ஆகியவை தேங்கியிருப்பதால் பல லட்சம் நெசவாளர்கள் வேலையில் லாமல் இருக்கும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி, நெசவுத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, சென்ற 1985 நவம்பர் மாதம் முதல் 1986 பிப்ரவரி மாதம் வரை திருவில்லிப்புத்தூர், இராசபாளையம் மற்றும் சுந்தரபாண்டியம் பகுதி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்த விவரமும் பணம் பட்டுவாடா செய்த விவரமும் பின்வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | துணி கொள்முதல். (2) | பணம் பட்டுவாடா. (3) |
|---|---|---|
| இராசபாளையம் பகுதி .. | 112.68 | 75.92 |
| சுந்தரபாண்டியம் மற்றும் திருவில்லிப்புத்தூர் பகுதி. | 136.57 | 119.94 |

1986 மார்ச்சு மாதத்தில் இவ்விரு பகுதிகளில் இருந்தும் முறையே ரூ. 70.22 இலட்சங்கள் மற்றும் ரூ. 43.50 இலட்சங் கள் அளவுக்கு கொள்முதல் செய்யப்பட்டு ரூ. 11.12 மற்றும் ரூ. 29.38 இலட்சங்கள் அளவுக்கு பணம் பட்டுவாடாவும் செய்யப்பட்டுள்ளது.

மேலும் காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராம நாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்கள் அடங்கிய பகுதியி லிருந்து மட்டும் சென்ற 1985 நவம்பர் மாதம் முதல் 1986 பிப்ரவரி முடிய சுமார் ரூ. 591.03 இலட்சங்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டு, ரூ. 414.27 இலட்சம் அளவுக்கு பணம் பட்டு வாடா செய்யப்பட்டுள்ளது.

தவிர கோ-ஆப்டெக்ஸ் பிரதம சங்கங்களின் மொத்த உற்பத்தியில 50 சதவீதம் அளவிற்கு தனது உற்பத்தி திட்டத்தின் கீழ் உற்பத்தி உத்தரவு வழங்குகிறது. இப்பகுதி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு மாதத்திற்கு வழங்கிய பாலியஸ் டர், ரவிக்கைத் துணி பட்டாப்பட்டி பாலினாசிக் மற்றும் ஜனதா ரகங்களில் சராசரி உற்பத்தி உத்தரவின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தி உத்தரவின் மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| இராசபாளையம் பகுதி | 65.51 |
| சுந்தரபாண்டியன் பகுதி | 83.19 |
| திருவில்லிப்புத்தூர் பகுதி | 29.49 |

இது, இம்மூன்று பகுதி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மொத்த உற்பத்தியில் 90 சதவீத அளவாகும்.

தற்போது பிரதம சங்கங்களிடமுள்ள லுங்கி ரகங்களின் தேக்க நிலையை கருத்தில் கொண்டு கடலூர் மற்றும் குடி யாத்தம் பகுதிகளில் இருந்து லுங்கி ரகங்களை கணிசமான அளவிற்கு நிவாரண கொள்முதல் அடிப்படையில் கொள்முதல் செய்ய ஆவன செய்யப்பட்டு வருகிறது.

ரியல் மெட்ராஸ் ஹேண்ட் கர்சீப் பொறுத்தவரையில் இது 10 சதவீதம் ஏற்றுமதி இரக உற்பத்தியாகும். இது நைஜீரிய மக்களால் ஆடையாக அணியப்படும் ஒன்றா



கும். இந்த உற்பத்தி மைய அரசால் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இராணுவ ஆட்சியினால் விதிக்கப்பட்ட தடை காரணமாக மிக்க அரிதான இந்த கைத்தறி துணி உற்பத்தி சிரமத்திற்குள்ளாகி இருக்கிறது. பிரிஷிப்மென்ட் கிரடிட் மீதான அபராத நட்டத்தை தள்ளுபடி செய்யவும் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய இதர ஊக்குவிப்புகளும் கொடுக்க இந்திய அரசை தமழக அரசு வலியுறுத்தி வருகிறது.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகிற, கோ—ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்கிற துணி கள் சுமார் 3 கோடி ரூபாய்க்குச் செய்துள்ளது. அதிலே 2 கோடி ரூபாய் தான் பாக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். மீதம் இருக்கிற தேங்கியிருக்கிற துணிகளைக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படிக் கொள்முதல் செய்வதன் மூலமாக நெசவாளர்களின் குறைகளைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கை யிலேயிருந்து 2 கோடி ரூபாய்க்கு மேலாகக் கொள்முதல் செய்யப் பட்டிருப்பது தெரியும். மீண்டும் தேங்கியிருக்கிறது என்று சொன்னால் உற்பத்தி செய்கிற சங்கங்கள் உற்பத்தி செய்வதை மட்டும் குறிக்கோளாக கொள்ளாமல் விற்பனை செய்வதையும் அவர்கள் கருத்திலே கொள்ளவேண்டும். It should not only become production-minded but it should also become market-minded.

திரு. ஏ. தங்கராசு ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985—86-ஆம் ஆண்டிலே 30 நாட்களுக்கு மேல் ரிபேட் கொடுக்கிற வகையில் இல்லாமல் 15 நாட்களுக்குத் தான் அகில இந்திய கைத்தறி துணிகள் கண்காட்சி வைக்க ஏற்றுக்கொண்டது உண்மையா? ஆம் என்றால் அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க மைய அரசு ஆல் இண்டியா ஹேண்ட் லூம் மினி எக்சிபிஷன் ஒன்றைச் சென்னையில் 1987-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் வைப்பதற்கு ஒப்புக்கொண்டார்கள். இந்தியாவிலேயே தமிழ் மாநிலத்தில் தான் கைத்தறித்துணிகள் அதிகமாகத் தேங்கியிருப்பதால் 60 ரிபேட் நாட்களை 30 நாட்களாகக் குறைத்திருப்பதால் 15 நாட்களுக்கு தமிழ் நாட்டிலே மாத்திரம் விதிவிலக்காக சென்னைத் தலைநகரில் மினி எக்சிபிஷன் வைப்பதற்கு ஒத்துக் கொண்டார்கள். ஆனால் பிறகு நிதிநிலைமை இடம் தரவில்லை என்று அதற்கான உத்தரவைப் பிறப்பிக்கவில்லை. ஆனால், தமிழக அரசு ஏப்ரல் 27 ஆம் தேதி முதல் 15 நாட்கள் ரிபேட் கொடுத்து கைத்தறித் துணி தேக்கத்தைப் போக்குவதற்காக கண்காட்சி வைக்க இருக்கிறது.

4. வரவு–செலவுத் திட்டம் 1986–37 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண் 13 நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,26,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெரும்பாலான கோர்ட்டுகளில் நீதிபதிகள் பற்றாக்குறையால் பல வருடங்கள் வழக்குகள் தேங்கி இருக்கின்றன, இந்நிலையை போக்க புதிதாக நீதிபதிகள் போடுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,26,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,26,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்தில் இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி ர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,26,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

THIRU N.S.V. CHITHAN : Sir, to discuss about the delay in appointing High Court Judges in the vacancies for the last one year,I move that-

"the allotment of Rs. 16,26,55,000;- under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100;".



திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது உள்ள நீதி மன்றங்களில் வழக்குகள் அதிகமாக இருப்பதால் மக்கள் அதிகம் கூடுவதால் இட நெருக்கடி ஏற்படுவதால் நிர்வாகம் சில சமயங்களில் தடை ஏற்படுவதால் வட சென்னையில் புதிய நீதிமன்றங்கள் கட்டுவதன் (குற்றவியல்) அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,26,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிமாண்ட் நம்பர் 13 என்று போட்டு அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ் என்று போட்டு பாலிசி நோட் என்று போட்டிருக்கிறோம்.
Adminisration of Justice is left to the Courts. It should be called as "Administration of Courts." Administration of Justice is not entrusted with us.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டிமாண்டில் பேசும் பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் ,பதில் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுவார்கள். (குறுக்கீடு) இப்பொழுது தான் பதில் சொல்ல வேண்டுமென்று அவரை நிர்ப்பந்திக்க முடியாது.

(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,59,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்,"

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை கைதிகள் 8 ஆண்டு நிறைவு பெற்று விட்டால் நிபந்தனையின்றி விடுதலை செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைமொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,59,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,59,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திறந்த வெளி சிறைச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,59,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு தண்டனைக் காலம் முடிந்த பின்னும் தமிழக சிறைச்சாலைகளில் வாடிடும் கைதிகள் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,59,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது புதிதாக கட்டப்பட்டுள்ள மத்திய சிறைச்சாலையில் கைதிகளுக்கு வேண்டிய வசதிகளுடன் காற்றோட்டமான அறைகளும், பார்வையாளர் அறையும் வசதியான முறையில் கட்டுவதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,59,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்புகளும், ** திட்டக் குறிப்புகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிந்த பிறகு இறுதியிலே என் பதிலைக் கூறுகிறேன்.

** 160-260 ஆம் பக்கங்களில் இணைப்புகள் IV, V, ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





(முற்பகல் 10–40)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதித் துறை மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலும் என் சார்பிலும் ஒரு சில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விருப்பப்படுகிறேன். நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரை அண்ணா அவர்கள் ஒரு காலத்தில் நீதி தேவன் மயக்கம் என்ற ஒரு நாடகம் எழுதினார். ஆனால் இன்று இருக்கிற நிலையைப் பார்த்தால், நீதி தேவன் மயக்கத்திலே இல்லை, நீதி தேவன் கோமாவிலே இருப்பதாகத்தான் கருத வேண்டியிருக்கிறது, என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலேயே, விளக்கத்தைப் பார்க்கும்போது, பக்கம் 21-லே அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள், "The Government have approved the proposal to call for 126 District Munsifs for recruitment through the Tamil Nadu Public Service Commission.

The Government have approved the list of District Munsifs sent by the Tamil Nadu Public Service Commission......" என்று. ஆகவே, குறைந்த பட்சம் 126-க்கு மேற்பட்ட நியமனங்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலைதான் நீதித் துறையிலே இருந்து வருகின்றது. அதற்குக் காரணம் என்ன என்பதைக் காண முடியவில்லை. உண்மையிலே சொல்லப் போனால், நூற்றுக்கணக்கான நீதிமன்றங்களிலே நீதிபதிகள் இல்லாத காரணத்தினால், வழக்கறிஞர்களுக்கு வேலை இல்லை; இன்னும் சொல்லப்போனால், சென்ற 1980 ஆம் ஆண்டு மானியத்திலே மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், சாத்தூரிலே, திருவண்ணாமலையிலே, கூடுதல் மன்றம் அமைக்கப்படும், என்று. ஆனால், இன்று சாத்தூர் நீதிமன்றத்து நிலை பத்திரிகைகளிலே மிகக் கேவலமான முறையிலே வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஒரு பத்திரிகை சாத்தூர் நீதிமன்றத்திலே நீதிபதி இல்லாத காரணத்தினால், வழக்கறிஞர்கள் தங்களுடைய அறையிலே சீட்டாடிக் கொண்டிருப்பதையும், நீதிமன்றத்திலே வேலை செய்கின்ற குமாஸ்தாக்கள், நீதிமன்றக் கட்டிடத்திலேயே சீட்டு விளையாடிக் கொண்டிருப்பதையும் படம் பிடித்துப் போட்டிருக்கிறது. இத்தகைய ஒரு அவல நிலை எந்தக் காலத்திலும் தமிழக நீதித் துறையிலே இருந்திருக்க முடியாது என்று என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். அப்படிப்பட்ட ஒரு கேவலமான நிலைக்கு இந்த அரசு பொறுப்பேற்க வேண்டிய நிலையிலே இருக்கிறது என்பதை வருத்தத்துடன் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞர். அவைக்குத் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்க வேண்டாம் என்று வேண்டுகிறேன். 126 இடங்களுக்கு சர்வீஸ் கமிஷன் மூலமாக

ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அரசு சர்வீஸ் கமிஷனைக் கேட்டுக் கொண்டிருந்தது. அதனால் 126 வேக்ன்சீஸ் இருக்கிறது என்று பொருள் அல்ல. காரணம், Integration of judiciary has already been contemplated. ஏற்கனவே, நீதித் துறையிலே, 'District Munsif-*cum*-Judicial Magistrate' என்ற திட்டத்தைக் கொண்டு வர சட்டம் இயற்றப்பட்டு இருக்கிறது. அது வருகின்றபொழுது எத்தனை காலியாகும் என்று முன்னெச்சரிக்கையாக அந்த இடங்களை நிரப்புவதற்காக தேர்வு நடத்துவதற்காகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தற்போது காலியாக இருக்கும் மாவட்ட முனிசீப் பதவிகள் 67 இடங்கள்;அதிலே 57 இடங்களில் தேர்வாணைக்குழு தேர்வை முடித்து விட்டது. அதற்கான ஆணையையும் அரசு ஏற்கனவே இட்டுவிட்டது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. 126, 67 ஆகக் குறைந்தாலுங்கூட அது இந்த அரசுக்குப் பெருமை சேர்ப்பதாக அமையாது என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 67 ஆக அது குறையவில்லை, அது வேறு, இது வேறு. 67-லே 57 இடங்களுக்குத் தேர்வுகள் முடிக்கப்பட்டு, அந்த இடங்களை நிரப்ப ஆணையிடப்பட்டிருக்கின்றன. 10 தான் மீதம்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கூறுவது இன்றைய நிலை. 67 இடங்களுக்கு இன்று நீதிபதிகள் பதவி பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. தேர்வு செய்துவிட்டு, பட்டியலை வெளியிடாமலே இருப்பதாலே, நியமனங்கள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன, அந்த நீதிமன்றங்கள் இயங்குகின்றன என்று பொருள் கொள்ள முடியாது. ஏற்கனவே தேர்வாணைக் குழு 57 பேர்களைத் தேர்ந்தெடுத்த பின்னும் இன்னும் அநாவசியமாகக் காலதாமதம் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்பதைத் தான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், சாத்தூர் நீதிமன்றத்தைப் பற்றி நான் குறிப்பிட்டதற்கு மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. இன்னொன்று, அது புகைப்படத்துடன் வெளி வந்துள்ளது. அத்தகைய நிலை இந்த அரசுக்கோ, நீதித் துறைக்கோ பெருமை சேர்ப்பதாக அமையாது என்பதை மட்டும் நிச்சயமாக என்னால் கூற முடியும்.

அதே நிலையில், தற்போது பணியாற்றுகின்றவர்களைப் பொறுத்தவரையில் ஏதேதோ துறைகளிலே இருப்பவர்கள் எல்லாம் சட்டப்படிப்பு பெற்றவர்கள் என்ற காரணத்திற்காக நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு



நியமிக்கப்பட்டதற்கு ஒரு விளக்கமும் தரப்படுவதாக அறிந்தேன். இந்த விளக்கமாவது சரியானதாக எனக்குப் படவில்லை. அதைச் சரியான விளக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் சட்டத் துறையிலே பணியாற்றுகின்ற சட்டப் படிப்பு பெற்றவர்களை நீதிபதிகளாக நியமனம் செய்தால் பொருள் இருக்க முடியும். ஆனால், ஏதேதோ துறைகளிலே, கதர் துறையிலே, புள்ளி விவரத் துறையிலே இருக்கிறவர்களை எல்லாம் சட்டப் படிப்பு படித்துவிட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக நீதிபதிகளாக நியமித்ததால் இன்றைக்கு நீதி கிடைக்காத நிலைமை நாட்டிலே பெருகிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம்; அதனால்தான் சட்ட வழக்குகளை பைசல் செய்வதிலே பெருமளவு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்த்தாலே தெரியும். ஆண்டுக்காண்டு நீதிமன்றங்களிலே பைசல் ஆகாமல் இருக்கிற வழக்குகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறதே தவிர குறையவில்லை. 1980-லே எப்படிப்பட்ட நிலையிலே இருந்ததோ அதைவிட இன்னும் மோசமாகத்தான் இருக்கிறதே தவிர நிலைமை சீரடையவில்லை. 1980-லும் இந்த அவையிலே சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தவர்தான் இப்போதும் சட்ட அமைச்சராக இருக்கிறார். 1980-லேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வழக்குகள்முடிவடைவதில் ஏற்படுகின்ற தாமதத்தை குறைப்பதற்கும் பைசல் ஆகாமல் இருக்கிற வழக்குகள் பைசல் செய்வதற்கும் அரசு உரிய நடவடிக்கையை விரைவிலே எடுக்கும் என்று இந்த மாமன்றத்திலே வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற பட்டியலைப் பார்க்கும்போது அந்த வாக்குறுதிக்கும் இந்தப் பட்டியலுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாது என்றே தோன்றுகிறது. ஏனென்றால், 1983-ல் 2,05,000 வழக்குகள், 1984-ல் 2,17,000 வழக்குகள், இன்றைக்கு 2,25,000 வழக்குகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே தயவு செய்து இந்த மந்த நிலையைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், இங்கே அட்வொகேட் பார் அசோசியேஷன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, தற்போது உச்ச நீதி மன்றத்தில் ரிட் போட்டிருக்கிறது. காலி இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று, பார் அசோசியேஷன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, ஏப்ரல் 23-ம் தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தம் ஒன்றை வழக்கறிஞர்கள் ஆரம்பிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. இதில் விந்தை என்னவென்றால் ஒன்றை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உயர்நீதிமன்ற நீதிபதி இராமானுஜம் அவர்கள் 4 மாதங்களுக்கு முன்னால் காலியான இடங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்ய உடனடியாக நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார். அந்த உத்தரவைக் கூட இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த உத்தரவின் அடிப்படையில் காலி இடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. Will it not amount to contempt of court orders? ஆகவே, நீதிமன்றத்தை அவமதித்தக் குற்றத்திற்கு இந்த அரசு ஆளாகாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்த நடவடிக்கையாக இப்போது பார் அசோசியேஷன் இந்த அரசு மீது கோர்ட் அவமதிப்பு குற்றம் செய்ததாக மனு தாக்கல் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது. இந்த நிலைமை போக்கப்பட வேண்டும். உடனடியாக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த தீர்மானத்தை நிறைவேற்றியது 'பார் அசோசியேஷன் ஆஃப் மெட்ராஸ்' தான். அந்த அசோசியேஷனில் தலைவராக இருப்பவர் அட்வோகேட் ஜெனரல். அவர்கள் அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ளவில்லை என்றாலும் இந்தத் தீர்மானத்தை பார் அசோசியேஷன் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது. இன்று வரையில் அட்வோகேட் ஜெனரல் அதை மறுத்து அறிவிப்பு வெளியிடவில்லை. ஆகவே அட்வோகேட் ஜெனரலுக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்; ஏப்ரல் 23-ந் தேதிக்குள் காலி இடங்களை எல்லாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்த நியமனங்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை கூற வேண்டியிருக்கிறது. சட்டத் துறைச் செயலாளர் அவர்களுடைய பதவிக் காலம் 6 மாதம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரண்டு ஆண்டு காலம் நீட்டிக்கப்பட்ட அவருடைய பதவிக் காலம் மீண்டும் 6 மாதம் நீட்டிக்கப்படுவது சரியான முறையல்ல. காரணம் அவருக்குப் பின்னால் அந்தப் பதவிக்கு வரக் கூடியவர்களின் வாய்ப்பு குறைகிறது, தடுக்கப்படுகிறது என்பதை அரசு உணரும்; உணர வேண்டும். அப்படியே இந்த அரசு இப்போது இருக்கிற சட்டத் துறைச் செயலாளரே நிரந்தரமாக இருக்கட்டும் அவரை விட்டால் வேறு ஆள் இல்லை என்று கருதினால் ஒரே ஒரு விதியைக் கொண்டு வரட்டும். தற்போது இருக்கிற சட்டத்துறைச் செயலாளர்தான் ஆயுள் முழுவதும் இருக்க வேண்டும்; அதன் பிறகுதான் வேறு நபரை நியமிக்க வேண்டும் என்று விதியைக் கொண்டு வரட்டும்; உத்தரவு போடட்டும்.

(முற்பகல் 10–50)

ஏனென்றால் இன்றைய நிலையில் யாருக்கும் எந்தக் காரணத்தாலும் பதவி நீட்டிப்பு கொடுக்கக் கூடாது; அதன் மூலம் அடுத்து பட்டியலில் இருப்போரின் பதவி உயர்வு பாதிக்கப்படக் கூடாது என்பது அரசின் கொள்கை. மத்திய அரசு தன்னுடைய



கொள்கையாக இதை வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், மாநில அரசைப் பொறுத்த வரையில் நினைத்தபோதெல்லாம் ஒருவருக்குப் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது அரசு ஊழியர்களிடையே அனாவசியமான அதிருப்தியை விளைவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தைப் பொறுத்த வரையில் ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நீதித்துறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போதெல்லாம்—இன்று நேற்றல்ல, 1960-லிருந்து அரசாங்கம் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்துகொள்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறி வந்தார்கள். ஆனால், அந்த நிலைமை இன்று இல்லை என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் மறுக்க முடியுமா? அரசுத்துறை வழக்கறிஞர்கள் நியமனத்தில் தகுதி இல்லாத, திறமை இல்லாத பலர் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்தால் அந்தப் பதவிக்கு அமர்த்தப்பட்டு அதனால் அரசுத்தரப்பு வழக்குகள் எந்த அளவுக்குப் பலவீனப்படுத்தப்பட்டுக்கொண்டு, நீதிமன்றங்களில் தோல்வியைத் தழுவ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுக்க முடியாது. இந்தப் பதவிகள் எல்லாம் ஜனநாயக முறையில் தகுதி வாய்ந்தவர்களுக்கு, திறமை அடிப்படையில் அளிக்கப்பட வேண்டிய பதவிகள். எனவே, தயவு செய்து இனிமேலாவது கட்சிக் கண்ணோட்டத்தோடு இந்தப் பதவிகளை நிரப்பாது, தகுதி, திறமை அடிப்படையில் அந்தப் பதவிகளை நிரப்பவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீதிபதிகள் சம்பளம், 'Cesars wife must be above suspecion' சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும் என்று சொல்வார்கள். அதே நிலைமைதான் நீதிபதிகளுக்கும் பொருந்தும். ஆனால், அரசு இந்த நீதிபதிகளுக்கு வழங்குகிற சம்பளம் அந்த நிலையை அவர்கள் காப்பாற்ற உதவுமா என்ற ஐயத்தை எழுப்பக்கூடியதாக இருக்கிறது. நீதித்துறை களங்கப்படுத்தப்படாததாக, கண்ணியம் உள்ளதாக, கறைபடாததாக இருக்க வேண்டும் என்றால் நிச்சயமாக நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்த வேண்டும். நான் சொல்வது டிஸ்டிரிக்ட் முன்சீஃப் கேடரிலே இருப்பவர்களைப்பற்றி. இன்றைய விலைவாசியைக் கருத்தில் கொண்டு சம்பளத்தை உயர்த்த வேண்டியது அரசின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு வசதிகள் அளிக்கப்படுவது பற்றி எத்தனையோ வாக்குறுதிகள் இந்த அரசால் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை காப்பாற்றப்படுகிறதா என்றால் நிச்சயமாக, இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாண்டு காலத்திற்கு முன்பாக நீதிபதிகள் மாநாட்டில் கலந்துகொண்ட போது ஒவ்வொரு சப்-ஜட்ஜுக்கும் டெலிபோன் வசதி, டேப்

ரிக்கார்டர் வசதி செய்து தருவோம் என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதி வாக்குறுதியாகத்தான் இருக்கிறதே தவிர, இன்று வரை அது காப்பாற்றப்படவில்லை. இத்தகைய மலிவான வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு பின்னர் அவற்றைப் பற்றி கருத்தே கொள்ளாமல் இருப்பது கண்ணியமாகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நீதிபதிகளின் பெயர்களைப் பொறுத்தமட்டில் மாவட்ட நீதிபதி என்று குறிப்பிடுவது பொருத்தமில்லாததாக இருக்கிறது. மாவட்டம் என்றால், ரெவின்யூ மாவட்டத்தைக் குறிக்கிறது. ஆனால், இன்றைக்கு தாலுக்காவிற்கு ஒரு முன்சீஃப் கோர்ட் இருக்கிற நிலைமையில் மாவட்ட முன்சீஃப் என்று சொல்வதை விட சிவில் ஜட்ஜ் என்று மாற்றுவது சாலச் சிறந்ததாக இருக்கும். ஏற்கெனவே இத்தகைய யோசனை பல முறை இந்த மன்றத்தில் எனக்கு முன்னாலே இருந்த அங்கத்தினர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மக்கள் மத்தியில் ஒரு தவறான பிரமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவாவது மாவட்ட முன்சீஃப் என்று இருக்கின்ற டெசிக்னேஷனை மாற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதைப் பொறுத்தவரையில் 60-ஆக உயர்த்தினால் நல்லது. ஏனென்றால் இப்போது இருக்கிற நிலைமையில் பல நீதிபதிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கக்கூடிய வாய்ப்பே இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதனை 60-ஆக உயர்த்துவது நல்லதாக இருக்கும்.

அடுத்து இந்த நீதிபதிகளை வேலைக்கமர்த்துவதைப் பொறுத்த வரையில் மூன்றாண்டு காலம் வழக்கு மன்றத்தில் அனுபவம் இருந்தால் போதும் என்று விதி இருக்கிறது. அது சிறப்புடையதாக இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து. ஏறத்தாழ 18 ஆண்டுகளாக வழக்கு மன்றத்தில் ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறேன் என்ற அனுபவத்தின் அடிப்படையில் இதை நான் கூறுகிறேன். Indian Penal Code, Indian Civil Rules of Practice, Civil Procedure Code, போன்றவற்றில் தேர்ந்த அறிவு பெற வேண்டும் என்றால் குறைந்தபட்சம், 5 அல்லது 6 ஆண்டுகள் ஆகும். இப்படிப்பட்ட தெளிவான அறிவு நடைமுறையில்—சட்டச் சிக்கல்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு—இல்லாததால், அவர்கள் நீதிபதிகளாகப் பணியாற்றுவது நிச்சயமாக அவர்களுக்கும் பெருமை தராது, அவர்கள் பதவி வகிக்கின்ற நீதித்துறைக்கும் பெருமை தராது. எனவே, தயவு செய்து இந்த அனுபவ ஆண்டுகளை மூன்றிலிருந்து 7 ஆண்டுக்காலமாக உயர்த்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்ததாக இந்த நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், அவைகளின் நிலை மிக மிக மோசமாக, அருவருக்கத் தக்க வகையில் கேவலமான நிலையில் இருக்கிறது. காரணம் நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறை கிடையாது. கழிப்பிடம் கிடையாது. எங்காவது அவர்கள் சிறிது நேரம் தங்கள் கட்சிக்காரர்களிடம் பேச வேண்டும் என்றால் கூட, அதற்கும் இடம் கிடையாது. அத்தோடு அங்கே இருக்கிற மேஜை நாற்காலிகளைப் பார்த்தால், நிச்சயமாக ஒவ்வொரு வழக்கறிஞரும் தினசரி ஒரு புது கவுன் வாங்கினால் தான் முடியும். இல்லை என்றால், மறு நாள் பஞ்சைப் பரதேசி கோலத்தில்தான் வரமுடியும் அவர், முதல் நாள் போட்டுக் கொண்டிருந்த கவுனையே மறுநாளும் போட்டு வந்தால் என்கிற நிலையில்தான் நீதிமன்றங்கள் இருக்கின்றன.

உண்மையிலேயே ஒன்றைச் சொல்லவதற்கு நான் வருத்தப் பட்டாலும்கூட, அதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். ஒரு பத்திரிகை நிருபர் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்தார். அங்கே கழிப்பிடம் இல்லாததால் ஒரு வழக்கறிஞர் நீதிமன்ற வளாக மைதானத்திலேயே சிறுநீர் கழிப்பதை அவர் படம் பிடித்தார். ஆனால், என்ன காரணத்தினாலோ அதை பெரும் தன்மையுடன் ஆசிரியர் பிரசுரிக்காமல் விட்டுவிட்டார் என்று கருதுகிறேன். குறிப்பிட்டே சொல்லுகிறேன் தராசு பத்திரிகையின் நிருபர் அவர். அத்தகைய நிலைமைகள் அங்கே போக்கப்பட வேண்டும். நீதிமன்றங்களிலே, நீதிபதிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும், வழக்காட வருகின்ற பொது மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து தருவதற்கு அரசு ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வாடகைக் கட்டிடங்களிலே பெரும்பாலான நீதிமன்றங்கள் இருக்கின்ற நிலை இருக்கிறது. அதன் மூலம் தனிப்பட்டவர்கள் பெருத்த இலாபம் சம்பாதிக்க—வாடகை என்ற பெயரால்—பெரும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, அதற்குப் பதிலாக தயவு செய்து எல்லா இடங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கும் சொந்தக் கட்டிடங்களைக் கட்டித் தர முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகரைப் பொறுத்த மட்டில் 1971-லே, தற்போது மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சராக உள்ள திரு. ப. உ. ச. அவர்களின் முயற்சியினால், புதிய வளாகம் ஒன்று கட்டுவதற்கு ஏற்பாடு ஆகியது. அப்படி ஏற்பட்டபோது அதற்கு மதிப்பீடு 8 இலட்சம், ஆனால், இன்று வரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதை இப்போது நிறைவேற்ற எடுத்துக்கொண்டால் 80 இலட்சத்திற்குக் குறைந்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. எனவே, அது குறித்தும் உரிய நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக துப்பாக்கிச் சூடு, போலீஸ் காவலில் இருந்த கைதி மரணம் போன்றவை இன்று நாட்டிலே பரவலாக ஏற்படத் தொடங்கி விட்டன. அந்த நிலைமையில் அது குறித்து நீதி விசாரணை நடக்கிறபோது, அதை ஆர்.டி.ஓ., கலெக்டர் போன்றவர்கள் நடத்துவதற்கான வகையில் அரசு ஏற்படுத்தி விடுகிறது. ஆனால், நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஆர்.டி.ஓ.வும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவரும் சரி, அரசு நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் அ[illegible] இருக்க ஆ[illegible]கள் நடத்துகின்ற நீதி விசாரணையில் மக்களுக்கு நன்மை கிடைக்கும், உண்மை புலப்படும் என்று இந்த அரசு உண்மையிலேயே மனப்பூர்வமாக நம்புகிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். எனவே இனிமேலாவது அத்தகைய நீதி விசாரணையில் ஒரு நீதிபதியைக் கொண்டு நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் உண்மை வெளிவரும்.

இந்த மானியத்தின்மீது பேசுகின்ற நேரத்திலே நான் இன்னொன்றையும் குறிப்பிட ஆசைப்படுகின்றேன். இந்த மானியத்தின்மீது பேசுகின்ற நேரத்திலே வழக்குரைஞர்களாகிய நாங்கள் சிறிது அச்சத்துடன் தான் பேச வேண்டிய நிலை இருக்கிறது. எனக்கு அந்த நிலைமை நேரிடையாக ஏற்படவில்லை என்றாலும் என்னுடைய அருமை நண்பர் ஒருவர் சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது நீதிபதிகளைப் பற்றி விமர்சித்த காரணத்தினால் இன்று அவர் பாவப்பட்ட ஜென்மமாக இருந்துக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய நிலைமைகள் மாற்றப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, நீதித்துறை ஒழுங்காக, செம்மையாக சரியாகச் செயல்பட்டால்தான் அது இந்த அரசுக்கும் பெருமை, தமிழகத்திற்கும் பெருமை, மக்களுக்கும் பெருமை. எனவே, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இன்னும் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி, யானைப் பசிக்கு சோளப்பொறிதான் என்கிற நிலைமையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒரு வழக்குரைஞராக பணியாற்றியவர்கள். அந்த காரணத்தினால் தயவுசெய்து இந்தத் துறைக்கு வேண்டியவைகளையெல்லாம் செய்துக் கொடுத்து, இந்த நீதித்துறையின் தரத்தை உயர்த்த முன்வரவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-00)

**திரு. பூ. மு. நரசிம்மன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற நீதி–நிர்வாகம், சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அனைத்து மக்களுக்கும் நீதி வழங்குவதே இவ்வரசின் கொள்கையாக இருந்து வருகிறது. அரசியல் செயல் பிரிவு மற்றும் அரசு நிர்வாகப் பிரிவிலிருந்து நீதி–நிர்வாகம் தனித்து செயல்பட்டு வருகிறது. சிலர் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று சொன்



னார்கள். இன்றையதினம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவுகளை நிறைவேற்றுபவர்களாக தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சீர்திருத்தங்களை நீதி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். 1—2—1982 ஆம் தேதியிலிருந்து உயர்நீதிமன்றத்தின் கீழ் இருக்கிற நடுவர் நீதிமன்றங்களிலும், வருவாய் நீதிமன்றங்களிலும், உரிமையியல் நீதிமன்றங்களிலும் தமிழில் தீர்ப்புகள் எழுதப்பட வேண்டுமென்ற உயர்வான திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் கொண்டு வந்து, இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பாமர மக்கள் எல்லாம் தீர்ப்புகளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு சிறப்பான திட்டத்தை தமிழக மக்களுக்காக கொண்டு வந்திருக்கிறார்கள். நிர்வாக வசதிக்காக வெளியூர்களில் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் சென்னை காவல்துறை கமிஷனரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறார்கள். குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கு இயக்கத்தை ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வந்தது. நமது மாநிலத்தின் குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கு இயக்கத்தை அமைப்பதற்கு செயல்குறிப்பை கொள்கை அளவில் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்காக 1986–87 ஆம் ஆண்டில் இந்த இயக்கத்தை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு முடிவெடுத்திருப்பதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். குற்றவியல் நீதிமன்றங்களில் இதற்கு முன்பெல்லாம் வழக்குகள் தேங்கியிருந்தன. காரணம் குற்றவியல் வழக்குரைஞர்கள் இல்லாத காரணத்தால் வழக்குகள் தேங்கியிருந்தன. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றியாக வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து குற்றவியல் நடுவர் மன்றங்களில் பப்ளிக் பிராசிகியூட்டர்களை ஒவ்வொரு மன்றத்திற்கும் நியமித்தாக வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு செய்து இன்றைக்கு நடுவர் மன்றங்களில் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதனை நினைக்கும் போது அனைவரும் ஆனந்தப்பட்டு கொண்டிருக்கிறோம். காரணம் குற்றவியல் வழக்கு நடத்துநர்களை நியமித்ததற்குப் பின்னாலே இன்றைக்கு எல்லா வழக்குகளையும் பைசல் செய்கிற வகையில் இன்றைக்கு நீதி மன்றங்கள் இருக்கின்றன. இதனை உள்ளபடியே நாம் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவ வேண்டுமென்று நீண்டகாலமாக நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது. இதற்கு நமக்கு அதிகாரம் இல்லையென்றுச் சொன்னாலும் பாராளுமன்றத்தின் துணையோடு உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை தமிழகத்தில் கொண்டு வரவேண்டுமென்று நாம் போராடி வருகிறோம். எனவே இதிலே கவனம் செலுத்தி மத்திய அரசு நடவடிக்கையெடுத்து உச்சநீதிமன்றத்தின் ஆயம்

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1986 ஏப்ரல் 7

ஒன்றினை சென்னையில் நிறுவ வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு வேண்டிய துரித நடவடிக்கையை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள் அதிக அளவில் இருப்பதைத் தவிர்ப்பதகாகவும், தங்களுடைய வழக்குகளுக்காக தலைமையிடங்களுக்குச் செல்வது பொது மக்களுக்கு கடினமாக இருக்கின்ற காரணத்தாலே, தலைமையிடங்களில் உள்ள நீதிமன்றங்கள் பரவலாகக்கப்பட வேண்டும் என்று அரசும், உயர்நீதி மன்றமும் கருதுகின்றன. அப்படிப் பார்க்கின்றபோது, குவிந்து கிடக்கின்ற நீதிமன்றங்களை எல்லாம் தமிழகத்திலே பொதுமக்கள் எல்லாம் பயன்பெறுகின்ற வகையில் பரவலாக்கப்பட வேண்டும். குறிப்பாக என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதி, வட்டமாக உயர்த்தப்பட்டு இருந்தாலும், இங்கே நீதிமன்றங்கள் இல்லாத ஒரு குறை இருக்கிறது. இன்றைக்கு பள்ளிப்பட்டு வட்டத்திற்கும், திருத்தணி வட்டத்திற்கும், ஆக இரண்டு வட்டங்களை இணைத்து, திருத்தணியிலே நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. ஏறக்குறைய 50, 60 கிலோ மீட்டர் தூரம் சென்று நீதி பெறுகின்ற வகையில் பள்ளிப்பட்டிலே இருக்கின்ற பொதுமக்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். எனவே பள்ளிப்பட்டு வட்டம், தலைமை வட்டமாக அறிவித்ததற்குப் பின்னால், அந்த வட்டத்தின் மையப் பகுதியாக இருக்கிற ஆர். கே. பேட்டையில், குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றத்தினை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் சொள்ளக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று திருத்தணியிலே உரிமையியல் நீதிமன்றமும், முதல் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களும் இருக்கின்றன. 25 ஆண்டுக்காலமாக அந்த இடங்களில் நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. வெள்ளி விழாவினைக் கொண்டாடுகின்ற நேரத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களும், மற்ற நீதிபதிகளும் அங்கே வருகை தந்து, விழாவிலே கலந்து கொண்டு பேசுகின்ற போது, திருத்தணியிலே நிச்சயமாக ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே உயர்நீதிமன்றமும், திருத்தணியிலே சப்-கோர்ட் வரவேண்டும் என்ற கருத்தினை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. எனவே, நம்முடைய அரசு முனைப்பாக இருந்து, திருத்தணியிலே ஒரு சப்-கோர்ட் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1986 ஏப்ரல் 7] [திரு. பூ. மு. நரசிம்மன்]

நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்து, குழு பரிந்துரைத்த 28 சிவில் நீதிமன்றங்களில், 27 சிவில் நீதி மன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. மற்றும் 19 குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது கண்டு, இன்றைக்கு வழக்கறிஞர்கள் உலகம் பாராட்டிக் கொண்டு இருக்கிறது.

நீதித்துறை இரண்டாம் வகுப்பு, மாஜிஸ்ட்ரேட் பதவிகளை நீதித்துறை முதல் வகுப்பு பதவிகளாக நிலை உயர்த்தப்படலாம் என்றும், மாவட்ட முன்சீப் பதவி தகுதியுடன் இணைக்கலாம் என்றும் அரசு முடிவு செய்திருப்பது கண்டு வழக்கறிஞர் என்ற முறையிலே நான பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றன. குற்றவியல் மேஜிஸ்ட்ரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இரு வகையினரும் மாவட்ட செசன்ஸ் நீதிபதியாக பதவி உயர்வு பெறுகின்ற நேரத்தில், அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பணிகளை அறிந்திருக்க வேண்டி மேஜிஸ்ட்ரேட்டுகள், சிவில் வழக்குகள் விசாரணை பற்றி அனுபவம் பெறவும் சிவில் நீதிபதி குற்றவியல் வழக்கு பற்றி அனுபவம் பெறவும், வகை செய்வது இதனுடைய நோக்கமாக இருக்கிறது. விரைவில் இச்சட்டத்தை நிறைவேற்ற நமது அரசு முனைப்பாக இருப்பது பற்றி நான் பாராட்டுகிறேன்.

மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39 (ஏ) பிரிவின்படி ஏழை எளியவர்களுக்கு, சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது அரசின் கடமையாக இருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், 1977 ஆம் ஆண்டிலே, ஏழை எளியவர்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும், இலவசமாக சட்ட உதவி வழங்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இந்த சிறப்பான திட்டத்தை தமிழகத்திலே கொண்டு வந்தார்கள்.

[முற்பகல் 11-10]

34 சட்ட உதவி மையங்களுடன் மாவட்டத்திலும், வட்டத்திலும், செயல்படுத்தி வருகின்றனர். இக்குழு ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனைப் பெற தகுதியுடையவர்களுக்கும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர இக்குழு சட்ட உதவி செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கின்ற நலிந்த பிரிவினர், தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் தங்கள் பக்கம் நியாயம் இருந்தாலும், நீதி மன்றத்திற்குச் சென்று பணத்தைச் செலவழிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்ற அறிய எண்ணத்துடன்தான் இந்த இலவச சட்ட ஆலோசனை குழுவைத் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளியவர்களுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித்துறை பணி இடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலமாக 126 மாவட்ட முன்சீப் தேர்ந்தெடுத்து நியமிக்கும் செயற்குறிப்புக்கு ஒப்புதல் அளித்திருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். நீதித்துறையின் சப் ஜட்ஜ் பதவிகளை நேரடியாக தேர்ந்தெடுத்து கீழ்நிலையிலிருந்து சப்-ஜட்ஜ் பதவி உயர்வுபெரும் அதிகாரிகளுடன் சேர்ந்து நிரப்புவதற்கு அரசு முடிவு செய்துள்ளதை நான் இந்த நேரத்திலே மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு திருத்தணியிலும் 3 நீதி மன்றங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் 30 ஆண்டு காலமாக வாடகை கட்டடத்திலே மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் செலவிட்டு இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களுக்கு அறைகள்கூட இல்லாத நிலை திருத்தணியிலே இருக்கிறது. எனவே நீதி மன்றக் கட்டிடத்தை உருவாக்குவதற்கு அங்கே நிலத்தையும் இன்றைக்கு நீதித்துறையைச் சார்ந்தவர்களிடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. எனவே நீதி மன்றங்களுக்கு கட்டிடங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்வழக்குரைஞராகப்பணியாற்றிய காரணத்தினாலே நீதி மன்றங்களுக்கு கட்டிடம் வேண்டுமென்பதிலே ஆணித்தரமாக இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். எனவே திருத்தணியிலே விரைவாக நீதிமன்றங்களுக்கு கட்டிடங்களை உருவாக்கிக்கொடுக்க வேண்டும். அதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தப் பகுதியிலே நீதி மன்றக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழாவினை ஏற்பாடு செய்து அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோன்று தமிழ்நாட்டு சிறைகளின் நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் விசாரணைகளில் இருக்கும் சிறைவாசிகளுக்கும் தண்டனை அடைந்த சிறைவாசிகளுக்கும் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு சட்ட உதவி அளித்து வருகிறது. மேலும், சிறைவாசிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்ய மத்திய சிறைகளிலும், தனிக் கிளைச் சிறைகளிலும், கிளைச் சிறைகளிலும் வழக்குறைஞர்களை அமர்த்தும் திட்டத்தை இக்குழுகொண்டு வந்துள்ளது.





இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும், சிறைகளின் நிர்வாகத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து பரிசீலிப்பதற்கும், செயல்படுத்தப்பட வேண்டிய சட்ட சீர்திருத்தங்களைத் தெரிவிக்கும் பொருட்டும் நீதிபதி ஏ. என். முல்லா தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. அதில் 656 பரிந்துரைகள் உள்ளன. நீதிபதி முல்லா குழு அளித்த பரிந்துரைகள் சிறைத்துறை இயக்குநருடன் கலந்தாலோசித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

எனவே இப்படிப்பட்ட நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களையும் என் தொகுதியின் சார்பில் பாராட்டி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறை நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்து இருக்கின்ற கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்த 2 துறைகளும் மிக முக்கியமான துறைகள், சிறைத் துறை சம்பந்தமாக கமிஷன்களிடமிருந்து ரிப்போர்ட்டுகள் பெறப் பெற்று இருக்கின்றன. (Lord Macaulay) அவர்கள்உறுப்பினராக இருந்த காலத்தில் கொடுக்கப்பட்ட ஜெயில் கமிட்டி ரிப்போர்ட், Tamil Nadu Jail Reforms Committee, Krishnaswami Commission, Ismail Commission, Narasimhan Commission இவைகளில் சொல்லப்பட்ட நல்ல கருத்துக்களை எல்லாம் இந்த அரசு பெயருக்கு இல்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை. நம்முடைய குறிப்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் அரசு செலவில் ‘ பி ’ கிளாஸ் சிறைவாசிகளுக்கு கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன. தினமணி, சுதேசமித்திரன், அண்ணா, தினந்தந்தி, தினமலர், இந்து என்று அதில் ஒரு தவறான தகவலை தந்து இருக்கிறார்கள். சுதேசமித்திரன் பத்திரிக்கை சிறையில் கொடுக்கப்படுவதில்லை. அந்த பத்திரிக்கை நின்று பல மாதங்கள் ஆகின்றன. இந்த சபைக் குறிப்பில் சுதேசமித்திரன் கொடுக்கப்படுவதாக தவறான தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள். இதை மந்திரி பார்க்க வேண்டாமா? துறை பார்க்க வேண்டாமா?

அடுத்து அண்ணா பத்திரிக்கை கூட போடப்படுவதாக கூறியிருக்கிறார்கள். போடட்டும், தினத்தந்தி போடட்டும் வரவேற்கிறேன், தினமலர் போடுகிறார்கள், வரவேற்கிறேன். இந்து போடுகிறார்கள், வரவேற்கிறேன். ஆனால் ஏன் தினகரன் போடக்கூடாது. ஏன் முரசொலி போடக்கூடாது. ஏன்.

தீக்கதிர் போடக்கூடாது. ஏன் விடுதலை போடக்கூடாது. ஏன் ஜனசக்தி போடக்கூடாது. உங்கள் கட்சி பணமாக இருந்தால் பிரச்சினை இல்லை. இது அரசின் பணம். ஆனால் அதே நேரத்தில் தினகரன் பத்திரிக்கைக்கு அரசின் விளம்பரம் இல்லை. விளம்பரம் தரமாட்டோம் என்று சொல்லி மிகவும் போர் கொடி உயர்த்தி இப்போது மாதம் 10 ஆயிரம் ரூபாய் விளம்பரம் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை வந்திருக்கிறது. என்ன காரணம் கோர்ட்டில் போனதற்கு பிறகு அப்படி தந்திருக்கிறது. சாதாரணமாக இருந்தால் தர மாட்டார்கள். கோர்ட்டுக்குப் போனால் அந்த காரியத்தைச் செய்கிறார்கள். காரணம் முதலமைச்சருக்கு விரோதமாக ஒரு சம்பவத்தை வெளியிட்டு விட்டார்கள் என்ற காரணத்தினால் விளம்பரத்தை நிறுத்தி தண்டனை கொடுத்தார்கள். ஆனால் இப்போது வேறு வழி இல்லாமல் கோர்ட் கட்டளை போட்டதற்கு பிறகு 10 ஆயிரம் ரூபாய்க்கு விளம்பரம் தருகிறார்கள். இது சரியான போக்குதானா? இதுபோல் எல்லா பத்திரிக்கைகளும் கோர்ட்டுக்கு போக முடியுமா? ஆனால் கோர்ட்டுக்கு போனால் தான் நியாயத்தை ஒத்துக்கொள்வீர்களா? என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆளும் கட்சி பத்திரிக்கை போடப்படுகிறது. மற்ற கட்சிகளுடைய பத்திரிக்கைகளும் போடப்படவேண்டும். ஜனநாயகத்தை அவதூறு செய்யக்கூடாது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை, Remanded and Under trial prisoners இவர்களுக்கு எல்லாம் கோர்ட்டில் ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அதில் மிக முக்கியமான தீர்ப்பு Bihar Court'ல்சொல்லியிருக்கிறார்கள். Bail without Securities ஜாமீன் இல்லாமல் அவர்களை எல்லாம் நாம் ரிலீஸ் செய்யலாம், பெயிலில் விடலாம். அது இல்லை என்று சொன்னால் ஏழைகள் ஆயிரக்கணக்கானவர்கள், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள்..

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சிறைச்சாலையில் எதிர்க் கட்சிகளின் பத்திரிக்கைகள் போடப்பட்டனவா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எந்த எந்த பத்திரிக்கைகள் போடப்பட்டன என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அப்படி போடாமல் இருந்தால் அது தவறு. அந்தத் தவறை நீங்கள் செய்யலாமா என்று கேட்டுவிட்டு அதே தவறை புரட்சித் தலைவர் தலைமையில் இருக்கக்கூடிய நீங்கள் செய்யக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



ஆகவே, அந்த Suspected persons 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அனைவரும் சந்தேக கேஸ்கள். அவர்களுக்கு கோர்ட்டுக்கு கொண்டு போவதற்கு கூட வாகனங்கள் கிடையாது. பல வேலைகளுக்கு அவர்களை ஜெயிலில் பயன்படுத்துகிறார்கள். எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிரமாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறைச்சாலையில் ஆயுள் கைதிகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு அட்வைசரி போர்டு வைத்து விடுதலை செய்ய பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் அதற்கு மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது என்று. Criminal Procedure code Section 455 433-A படி ஆயுள் கைதியாக இருப்பவர்கள் 14 வருடங்கள் இருந்தால் தான் அப்பொழுது தான் கன்சிடர் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதை நான் ஒப்புக் கொள்கிறேன். 1978க்கு முன்னால் ஆயுள் கைதியாக இருப்பவர்களுக்கு இந்த சட்டம் பொருந்தாது என்று கோர்ட் சொல்லியிருக்கிறது.

(முற்பகல் 11–20)

எனவே 1978-க்கு முன்னாலே உள்ளவர்கள் யாரையாவது போர்டு வைத்து அவர்களை வெளியே விடுவதற்கு கன்சிடர் செய்திருக்கலாம். ஆனால் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால், அதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. கட்சிக்காரர்கள் என்றும், வேண்டியவர்கள் என்றும் காட்டப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

17 வருஷத்திற்கு மேலே ஜெயிலில் பல பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் பாலகாந்தன் என்ற ஒரு ஆயுள் கைதி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இவ்வாறு 10 வருஷத்திற்கு இருக்கக்கூடாது என்பது கருத்தல்ல. ஆனால் எல்லோருக்கும் பொருந்த வேண்டும். டைரக்டர் திருமலையினுடைய மகன், துரைபாபு என்பவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர். ஆயுள் கைதி கருணை மனு போட்டிருக்கிறார். தண்டனைக் காலம் 7 ஆண்டு என்று குறிப்பிடப்படுகிறது. சானிக்குளம், முருகேசன் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் 8 பேர் விடுதலையாகியிருக்கிறார்கள். அதை நான் ரொம்ப வரவேற்கிறேன். "Criminals are not born but are made by circumstances" அது எல்லோருக்கும் பொருந்துமாறு இருக்கவேண்டும். எங்கள் கட்சியைச் சார்ந்த மாசிலாமணி குற்றம் சுமத்தப்பட்டு இன்றைக்கு வேலூர் ஜெயிலில் 10 வருஷத்திற்கு மேலே இருக்கிறார். அட்வைசரி போர்ட் என்று சொல்லிவிட்டு, இன்னும் $2\frac{1}{2}$ ஆண்டுகள் தள்ளி வைத்திருக்கிறார்கள். இந்த நியாயம் சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். பரோலிலே வேலூர் சிறையிலே எனக்குத் தகவல் வந்திருக்கிறது. மகளின் திருமணத்திற்காகக் கல்யாணப் பத்திரிகை கொடுத்தாலும் கூட, அந்த பெண்ணினுடைய தகப்பனாரை வெளியேவிட மறுத்திருக்கிறார்கள் என்பதைக் கூட அமைச்சரிடம் நேரடியாக பெயரைக் கூட கூறியிருக்கிறோம்.

தந்தை இறந்ததற்கான சான்றுகள்கொடுக்கப்பட்டும், காவல் துறை அதிகாரிகளால் பரோலில் விடுவதற்கு அனுமதி மறுக்கப் படுகிறது, என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள், மாசிலாமணியினுடைய சிறு குழந்தை மணிமேகலை—அவருடைய மனைவி ஒரு வழக்கறிஞர். அனுமதி பரோலில் மறுக்கப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ப்ரபேஷனரி ஆபிசர், போலீஸ் ரெக்கார்டு எல்லாம் கேட்கிறார்கள். இந்த வேறுபாடுகள் இருக்கக் கூடாது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் இதைத் தவிர பல்வேறு விவரங்களைப் பேச வேண்டுமென்று சொன்னாலும், நேரத்தினுடைய அருமையைக் கருதி, இந்தத் துறையைப் பற்றிய கருத்தை இந்த அளவிலே முடித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கோர்ட் விஷயம். கோர்ட்டைப் பொறுத்த வரையில், நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் இந்தத் துறையைப் பற்றி நீங்கள் 8 ஆண்டுக்காலமாக பேசி, காது குளிர, இந்த வார்த்தைகளை கேட்கமுடியவில்லை என்று வருத்தப்படுகிறேன். சென்னை உயர்நீதி மன்றத்தின் பெயரை மாற்றி, தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கேரளத்திலே திருவனந்தபுரம் உயர் நீதிமன்றம் என்று இல்லை, கேரள உயர்நீதி மன்றம் என்று தான் இருக்கிறது. நம்முடைய துணை சபாநாயகர் அவர்களே 8 ஆண்டுக்காலமாக பேசுகிறார். நானும் பேசுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தச் சபையிலே நான் ஆறு ஆண்டுகாலமாகத்தான் இருந்து வந்திருக்கிறேன். நீங்கள் எட்டு வருடமாக நான் பேசியதாகச் சொல்கிறீர்களே. இது தவறு.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இன்னும் நீண்டக்காலம் இருக்க வேண்டும். அதற்காகச் சொல்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, இது மத்திய சர்க்காருடைய அதிகாரம் தான், ஆனால் தமிழ் உணர்வைப் பற்றிப் பேசுகிறபோது வெளியிலே குறைபாடுகள் எழலாம். நாம் தமிழ் உணர்வைப் பற்றி பேசினால் மட்டும் போதாது. நம்முடைய ஆளுங்கட்சி நண்பர்கள் எல்லாம், நீங்களெல்லாம்—மத்திய சர்க்கார் தான் ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.—தென்றலிலே மலர்ந்த மல்லிகையாக மணம் பரப்ப வேண்டுமென்றால், நம்முடைய அருமை நண்பர் காளிமுத்து வெளியே பேசிவிட்டு, இங்கே பேசாமல் இருந்தால் நியாயம் கிடைக்காது. ஆகையால் இதை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



தமிழ் தெரிந்த தலைமை நீதிபதி உயர் நீதிமன்றத்திலே இருக்கவேண்டும். தமிழ் தெரிந்த தலைமை நீதிபதி உயர்நீதி மன்றத்திலே இருக்கிறாரா என்றால், இல்லை. தீர்மானம் எல்லாம் போட்டோம். கேட்டால் அமைச்சர் சொல்வார், கடிதம் எழுதியிருக்கிறோம். முதலமைச்சர் ஒப்புதலோடு கடிதம் எழுதியிருக்கிறோம். வரும் என்று சொல்வார். சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கின்ற பிரச்சினையில். . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் தமிழ் தெரிந்த தலைமை நீதிபதி வரவேண்டுமென்று அண்ணா தி.மு.க. ஒரு தீர்மானத்தை போட்டது. அப்போது தி.மு.க. போட்டதா, அல்லது ஆதரித்ததா?

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நண்பரை நான் அறிவேன். இதைக் கேட்டவுடனேயே இந்தக் கேள்வியைப் போடுவார் என்று எனக்குத் தெரியும். ஏற்கெனவே சட்ட மன்றத்தில் இது குறித்து நான் பேசியிருக்கிறேன். வழிபடுகின்ற ஆண்டவனுக்கு தமிழ் தெரியவில்லை என்றால், அந்த ஆண்டவனே தேவையில்லை என்று நாங்கள் சொல்கிறபோது நாங்களா இதற்கு எதிர்ப்பு என்று நம்முடைய துணை சபாநாயகர் கேட்டதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். ப்ரோசிடீங்ஸ்சும் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே துணை சபாநாயகர் அவர்களே, அடுத்தபடியாக முக்கியமான பிரச்சினை ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் இங்கே சென்னையிலே இருக்க வேண்டும். இதுவும் நீண்ட கால கோரிக்கை. இதுபோன்று நம்முடைய மெட்ராஸ் ஹைகோர்ட் பெஞ்ச் மதுரைக்கு வரவேண்டுமென்று கேட்டோம். பணத்தை செலவழித்து, வெகு தொலைவிலிருந்து சென்னைக்கு வந்து வழக்காடுவதற்கு, வழக்கு நடத்துவதற்கு முடியாது. நீதி எல்லோருக்கும் போய்ச் சேரவேண்டும். ஆகவே தயவு செய்து இதற்கான ஏற்பாடுகளை விரைவிலே செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றைக்கு நிலைமை என்னவென்று கேட்டால், எனக்குத் தெரிந்த தகவல்படி, சப்ஜெக்ட் டு கரெக்ஷன்ஸ். எக்மோர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இரண்டு இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஜார்ஜ் டவுன் கோர்ட்டில் இரண்டு இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. சைதாப்பேட்டை கோர்ட்டில் ஒரு இடம். சிட்டி கோர்ட்டில் ஏ.பி.பி. பதவி நீண்டகாலமாக காலியாக இருக்கிறது. மெட்ராஸ் ஹைக்கோர்ட்டில் இன்னும் 4 போஸ்ட்கள் நிரப்பப்படாமல் இருக்கிறது. நமக்கு அதைக்காட்டிலும் வேறு என்ன வேலை? சட்டத்துறையிலே சட்ட அமைச்சர், அரசு அதிகாரிகள், தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கேசஸ் பெண்டிங் என்றால் எப்படி பெண்டிங்காக இருக்கிறது? 'ஜஸ்டீஸ் டிலெய்ட் இஸ் ஜஸ்டிஸ் டினைய்டு'. ஆக நீதியானது இன்றைக்கு . . . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** ஜஸ்டீஸ் ஹரீய்டு இஸ் ஜஸ்டீஸ் பரிய்டு' என்ற பழமொழி உண்டு.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, நாடகம் பார்க்கும் போது முன்னாலே உட்கார்ந்து பார்ப்போம். சினிமா பார்க்கும்போது பின்னால் உட்கார்ந்து பார்ப்போம். அதேபோல் நீதித்துறையைப் பொறுத்தவரையில் நிதானமான போக்கு இருக்க வேண்டுமென்பது தான் இதற்கு பொருள். வேகமாக இருந்த காரணத்தினால்தான் ஒத்தல்லோவினுடைய கதி மோசமாகப் போனது. ஹாம்லட் லேசாக காலதாமதமாக இருந்த காரணத்தால் ஹாம்லட் முடிவு இப்படி ஆகிவிட்டது. இந்தச் சர்க்கார் ஹாம்லட்டாகவும் இருக்க வேண்டாம். ஒத்தல்லோவாகவும் இருக்க வேண்டாம் என்பது தான் பொருள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்களே பேசியிருக்கிறார்கள். டென்மார்க் இளவரசனுக்கு உங்கள் தலைவர் கலைஞரைத் தாங்கள் ஒப்பிட்டுப் பேசியிருக்கிறீர்கள். டென்மார்க் இளவரசனுடைய முடிவு சோக முடிவு. ஆகவே அப்படிப்பட்ட உதாரணத்தைத் தாங்கள் சொல்லலாமா?

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் உவமைக்கு ஒரு முறை விளக்கம் சொன்னார். பால் போன்ற கொக்கு என்று சொன்னால் கொக்கு திடமாக இருக்கிறதே பால் திரவமாக இருக்கிறதே திரவத்தைத் திடத்திற்கு ஒப்பிடலாமா என்று கேட்பது தப்பு என்று சொல்லியிருக்கிறார். ஆகவே பிரச்சினையைத் திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இராமன் இல்லாமல் இராமாயணம் இல்லை என்று சொன்னால் இராமனை ஒத்துக் கொள்கிறோம், இராமாயணக் கருத்துக்களை தென் இலங்கை வேந்தனான இராவணனை வாரிசாகக் கொண்டு நாம் எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம் என்பது பொருள் அல்ல. ஆகவே விவாதத்தைதிசை திருப்ப வேண்டாம். தனியாக அதற்குத் அரை மணி நேரம் கொடுங்கள் நான் அதைப்பற்றி விவாதிக்க தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்களின், தலைவரின் மீது எனக்கும் பாசம் இருக்கிறது. அதைப்பற்றி நான் சொல்லவில்லை. டென்மார்க் இளவரசனுக்கு ஏற்பட்டது சோக முடிவு. ஆகவே அந்த உதாரணத்தைச் சொல்லவேண்டாம் என்பதைத்தான் தெரிவித்தேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, கண்ணகியினுடைய முடிவு சோகம் தான். அதற்காகப் பெண்கள் கண்ணகியாக இருக்கக்கூடாது என்று திரு. காளிமுத்து அவர்கள் சொல்ல மாட்டார்கள் என்று நம்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, டென்மார்க் இளவரசன்பற்றி விமர்சகர்கள் சொல்வது, அவன் குழப்பவாதி, உண்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவன் என்றெல்லாம் சேக்ஸ்பியருக்கு விளக்கம் எழுதக்கூடியவர்கள் சொல்கிறார்கள். கல்லூரியில் படித்ததை எல்லாம் மறந்துவிடக் கூடாது.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, ஹாம்லட்டைப்பற்றி நான் சொல்வதற்குக் காரணம், சேக்ஸ்பியர் அவர்கள் அந்த டிராமாவிலே முக்கியமான கருத்தைச் சொல்கிறார், அவர் இல்லாமல் நாடகம் இயங்காது என்பதற்காகத்தான் சொல்கிறார். நீங்கள் இந்தத் திசையில் இருந்து அவரைப் பாராட்டினாலும் சரி அந்தத் திசையில் இருந்து தூற்றினாலும் சரி அவரை மையமாக வைத்துத் தான் தமிழகத்தில் அரசியல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தான் சொன்னேன். ராமனை விட்டுவிட்டு ராமாயணத்தைப் பார்க்க முடியுமா? கோவலனை விட்டுவிட்டு சிலப்பதிகாரம் இருக்கிறதா? அது மாதிரித்தான். மற்றவற்றில் நாம் உத்தரவின்றி உள்ளே நுழையவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன, அவைகளை பரிசீலிக்க வேண்டும். மாவட்ட முன்சீப் விவகாரத்தை எடுத்துக் கொண்டால் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. நான் ராத்திரி பாண்டிச்சேரிப் பொதுக் கூட்டத்திற்குப் போனேன். அங்கே சொன்னார்கள். திண்டிவனம், பண்ருட்டி, விழுப்புரம், இந்த மூன்றிற்கும் ஒரே முன்சீப் ஜூரிஸ்டிக்ஷன்தான். எப்படி நிர்வாகம் இயங்கமுடியும். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். பல இடங்களில் பதவிகள் நிரப்பப் படாமல் இருக்கின்றன. சபார்டினேட் ஜூடிஸ்யரியலும் பல இடங்களிலே போஸ்ட்கள் வேக்கண்ட் ஆக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ராமானுஜம் அவர்களுடைய தீர்ப்பை அமல் நடத்தக்கூடிய விதத்திலே செயல்படுங்கள். நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே சொல்கிறேன். நீதித் துறையிலே சர்வீஸ் கமிஷன் மூலமாக, பிராக்டிஸ் செய்யக்கூடிய வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டும். அதிலே எந்தவிதமான மாறுபாடும் வேண்டாம். டிபார்ட்மெண்டிலேயிருந்து வந்த மாஜிஸ்திரேட்டுகள் சில முக்கியமான கிரிவன்சை சொன்னால் வருத்தங்களைச் சொல்வார்களானால் எல்லோரையும் சேர்த்து வைத்து காம்ப்ரொமைஸ் மனிதாபிமான அடிப்படையில் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான ஒரு பிரச்சனை. நம்முடைய லா செக்ரட்டரி மிஸ்டர் வடிவேல், அவருக்கு எத்தனை தடவைகள் எக்ஸ்டன்ஷன் கொடுப்பது? ஏன் அவரை விட்டால் இந்த நாட்டிலே ஆளே கிடையாதா? நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு எத்தனையோ கெட்டிக்காரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நான் அவரைக் குறை சொல்லவில்லை. ஓய்வு எடுக்க மறுக்கிறவரை நீங்கள் ஏன் விட மறுக்கிறீர்கள்?

* * * *

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு செயலாளரைப்பற்றி * * என்றெல்லாம் இங்கே பேசுவது அவையின் மரபிற்கு அழகாகாது. நாகரீகமும் ஆகாது. ஆகவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** * * * * என்ற நல்ல எண்ணத்திலேதான் நான் சொல்கிறேனே தவிர என்னுடைய மெயின் பாயின்ட் அடிக்கடி எக்ஸ்டன்ஷன் கொடுப்பது அவசியமா என்பதுதான். 5 தடவைகள், 4 தடவைகள், 3 தடவைகள் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் இருக்கட்டும். தனிப்பட்ட முறையிலே எனக்கும் அவர்மீது எந்தவிதமான கோபமும் கிடையாது. நான் இங்கே பேசுகிறேன் என்றால் யார் மீதும் தனிப்பட்ட முறையிலே கோபத்திலே சொல்லவில்லை. பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல வேண்டியது ஒரு எதிர்க்கட்சியின் கடமை.

இன்னொன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீதி வழங்குகின்ற நீதிபதிகள் சரியான தீர்ப்பை வழங்கவேண்டும். நம்முடைய நீதிபதி ஒரு ஸ்ட்ரிக்சர் பாஸ் பண்ணி ஜட்ஜ்மெண்ட் டெலிவரியாகியிருக்கிறது, இன்னும் அது ஆல் இண்டியா ரிப்போர்ட்டிலே வரவில்லை, சப்ஜூடிஸ் கிடையாது. இப்போது அது எந்தக் கோர்ட்டிலேயேயும் பெண்டிங் கிடையாது. அதிலே 13வது மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்திரேட் பற்றி ஜஸ்டிஸ் மோகன் அவர்களும் சென்னியப்பன் அவர்களும் டிவிஷன் பெஞ்சிலே ஒரு தீர்ப்பை கொடுத்திருக்கிறார்கள். தனசேகரன் என்ற 16 வயதுடைய மைனர் பையன், அதைப்போலவே சுப்பிரமணியன் என்ற ஒரு திருவள்ளூரைச் சேர்ந்த பையன் ஏதோ சினிமா டிக்கட் பிளாக்கிலே விற்று விட்டார்களாம். போலீஸ் ஸ்டேஷனிலே கேஸ் போட்டார்கள். கோர்ட்டிலே. போய் நிறுத்தினால் வயதைப் பார்க்க வேண்டாமா?

(முற்பகல் 11-30)

கோர்ட்டிலே கொண்டு போய் நிறுத்துவதற்கு முன்னால் வயதைப் பார்க்க வேண்டாமா? வயதையே பார்க்காமல் போலீசார் எதைச் சொல்லிக் கொடுத்தார்களோ அதையே அங்கேயும் பார்த்து அப்படியே கையெழுத்துப் போட்டு சென்ட்ரல் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்கள். மைனர் பையன் சென்ட்ரல் ஜெயிலுக்குப் போனால் என்னவாகும்? எவ்வளவு பெரிய சமூக விரோத காரியங்களுக்கு அங்கே இடம் தருகிறது? இதைக் கண்டித்து தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். நான்

****மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.**



கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு இதுகுறித்து இந்த அமைச்சர் என்ன பதில் சொல்ல விரும்புகிறார்? இப்படித் திறமையற்றவர்கள் அந்தப் பொறுப்பிலே இருக்கிறார்களே என்று நான் வருத்தப்படுகிறேன்.

நம்முடைய இந்திரா காங்கிரஸ் நண்பர், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே ஒரு தகவலைத் தந்திருக்கிறார்கள். அது என்னவென்றால், குளித்தலை மாவட்ட முன்சீப், குற்றவியல் இரண்டாவது மாஜிஸ்ட்ரேட் இவர்களைப் பற்றி எல்லாம் வக்கீல்கள் சங்கமே தீர்மானம் போட்டிருக்கிறது. அதை வட்டச் செயலாளர் சொல்லவில்லை, வக்கீல்கள் சங்கம் சொல்கிறது. நான் கேட்க விரும்புகிறேன். உங்களுக்கும் பலமுறை பெட்டிஷன் வந்தாகிவிட்டது. அதை நீங்கள் கவனிக்கக்கூடாதா? ஆகவே, அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய அமைச்சரிடத்தில் கேட்கிறேன், கேசஸ் பெண்டிங்காக இருக்கிறது என்று சொல்கிறீர்கள். எங்கள் கட்சியைச் சார்ந்த—திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர் மீது ஒரு மான நஷ்ட வழக்கு போட்டிருக்கிறீர்கள். ஏழு ஆண்டுகளாக அந்த கேஸ் நடக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன். அமைச்சர் என்ற காரணத்தினால் கம்ப்ளெயிண்டே - கோர்ட்டுக்குப் போகக் கூடாதா? 7 வருஷமாக நடக்கிறது. டிஸ்போசல் ஆகாமல் இருக்கிறது. பிறகு அறிக்கையிலே கொடுக்கிறார்கள், கேஸ் டிஸ்போசல் ஆகாமல் பெண்டிங்காக இருக்கிறது என்கிறார்கள். மான நஷ்ட வழக்கு போடுகிறார்கள். என் மானம் போகிறது. நான் சரியானவன்தான், இதோ ஆதாரம் இருக்கிறது என்று போக வேண்டியதுதானே! ஆனால் 7 வருஷமாக போகாமல், மெட்ராசிலேயிருந்து மோகனூருக்கு இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், கேஸ் டிஸ்போஸ் ஆகாமல் இருக்கிறது. மந்திரி வர வேண்டும், மந்திரியே 7 வருஷமாகக் கோர்ட்டுக்குப் போகவில்லை என்றால், நீதிபதி இடும் உத்தரவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால், நான் கேட்கிறேன், பிறகு நீதித் துறைக்கு - என்ன மரியாதை? இதையெல்லாம் நம்முடைய அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும்.

இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன், தங்கள் அனுமதியோடு. நீதிமன்றங்களின் தீர்ப்பை அரசாங்கம் அருள்கூர்ந்து நிறைவேற்ற வேண்டும், மதிக்க வேண்டும். இதிலே சப்ஜூடிஸே கிடையாது, சுப்ரீம். கோர்ட் பற்றிய பிரச்னை ஒன்றும் கிடையாது. அரசாங்கம் மன்னிப்பு கேட்டிருக்கிறது. நம்முடைய ஹோம் செக்ரட்டரி அன்கன்டிஷனல் அப்பாலஜி கேட்டிருக்கிறார். நம்பரைக் குறித்துக் கொள்ளுங்கள், சொல்கிறேன். கன்டெம்ப்ட் நம்பர் 244/85.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதையெல்லாம் சொல்வது எல்லாம் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். போன முறை இதுமாதிரிதான் மார்க் பட்டியல் விவகாரத்தைச் சொன்னீர்கள். எனவே, நீங்கள் சொல்லப் போவதைப்பற்றி முதலிலேயே சேருக்குச் சொல்லிவிட்டால் அமைச்சருக்குத் தகவல் கொடுத்து விடுவோம். அன்கன்டிஷனல் அப்பாலஜி கேட்டார் என்று சொன்னால் அது உண்மையா இல்லையா என்று பார்க்க வேண்டாமா? (குறுக்கீடு) ரிப்போர்ட் இருந்தால் என்னிடத்தில் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இது சப்-ஜுடிஸ் அல்ல. பெட்டிஷன். நம்பரைச் சொல்கிறேன். அவர்மேல் எனக்கொன்றும் வருத்தமில்லை. நீதிபதி சொன்னதை வாசித்துக் காட்டுகிறேன். ஒரு நிமிஷம் தாருங்கள். யார் மேலும் தனிப்பட்ட முறையில் எனக்குக் கோபமா? ஹோம் செக்ரட்டரி மீது எனக்குக் கோபமா? அவர் மீது உங்களைக் காட்டிலும் நான் மிகுந்த அன்புடையவன், மரியாதை உடையவன். ஆகவே மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, செக்ரட்டரி—கவர்ன்மென்ட் பற்றித்தான் சொல்கிறேன், தனிப்பட்ட நபரைப் பற்றிஅல்ல. மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, நீதிமன்றத் தீர்ப்பை நாம் மதிக்க வேண்டும். நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு போட்டவுடன் அரசாங்கம் அன்கன்டிஷனல் அப்பாலஜி கேட்டிருக்கிறது.

அந்த சம்பவத்தைச் சொல்கிறேன். கதிர்வேலுசாமி என்பவர் ஒரு ரிசர்வ் இன்ஸ்பெக்டர். அவருடைய ஜுனியர்களுக்கெல்லாம் டி.எஸ்.பி. கேட்டகிரி செகண்டிலே புரமோஷன் கொடுக்கிறார்கள். ஆனால் இவருக்கு புரமோஷன் இல்லை. உடனே கோர்ட்டுக்குப் போகிறார். நீதிமன்றத்திலே ரிட் போடுகிறார். ரிட் போட்டவுடனே நீதிபதி தீர்ப்பு வழங்குகிறார். அவரை புரமோஷனிலே சேர்த்துக்கொள்ள வேண்டும்; டி.எஸ்.பி. யாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று உத்தரவு போடுகிறார். அப்படி உத்தரவு போட்டவுடன் அரசாங்கம் அவருக்கு டி.எஸ்.பி. போஸ்டிங் கொடுத்ததா என்றால் கொடுக்கவில்லை. இதில் வேடிக்கை என்னவென்று கேட்டால் அவர், எஸ்.எஸ். ராஜேந்திரன்—உங்கள் கட்சியிலேதான் அவர் இன்னும் இருப்பதாக நம்புகிறேன்—அவருக்கு தேர்தல் பிரச்சாரம் செய்தார் என்று குற்றஞ்சாட்டி அவரை சஸ்பென்ட் செய்து விட்டார்கள். உடனே மறுபடியும் கன்டெம்ப் போடுகிறார். ஹைகோர்ட்டிலே போட்டவுடன் டி.ஜி.பி.—அவர் ஒரு ரெஸ்பான்டென்ட்—அதுபோலவே நம்முடைய அரசாங்கம் ஒரு ரெஸ்பான்டென்ட். டி.ஜி.பி. சொல்கிறார், டி.எஸ்.பி. அப்பாயிண்ட்மெண்டுக்கும் எனக்கும் சம்பந்தமே கிடையாது என்று. அடுத்து நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக ஹோம் செக்ரட்டரி அவர்கள் என்று கருதுகிறேன், அங்கே சொல்கிறார், அன்கன்டிஷனல் அப்பாலஜி கேட்டுக்கொள்கிறோம், கோர்ட்டினுடைய உத்தரவை



நிறைவேற்ற முடியாததற்குக் காரணம் அவர் மீது என்கொயரி பெண்டிங்காக இருந்தது, அதனால் நிறைவேற்ற முடியவில்லை என்று சமாதானம் சொல்லி மறுபடியும் புரோமோஷன் கொடுத்தாகி விட்டது. ஆனால் ஸ்டிரிக்சர் என்னவென்று கேட்டால் நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு விஷயத்திலே மன்னிப்பு கேட்க வேண்டிய அளவிற்கு அரசாங்கத்திற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? கண்டெம்ப்ட் பெட்டிஷன் போட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போலவே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 1979 ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரி அமைச்சர் என்னுடைய மரியாதைக்குரிய இனிய அமைச்சர் ஹண்டே அவர்கள் இருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டு—ஏற்கனவே முடிந்த போன கேஸ். சப்ஜுடீசே கிடையாது. 1979 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்டது. ஒரு சின்ன கேஸ். உங்கள் பாணியிலேயே சொல்கிறேன். தேர்தல் சம்பந்தமாக ரிக்கார்டு திருத்தப்பட்டு—அதாவது டேட் திருத்தப்படுகிறது. கோர்ட்டே ஒத்துக்கொள்கிறது. அது ஏன் கோர்ட்டை மிஸ்லிட் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறது உடனே அட்வகேட் ஜெனரல், ஹைகோர்ட்டிலே 'மை லார்ட்' என்னிடத்திலே விட்டுவிடுங்கள், நாங்கள் தப்பு செய்யவில்லை; அரசாங்கம் வேறாம், அதிகாரி வேறாம். அதிகாரி தவறு செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் தப்பு செய்திருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரியிலே, இட ஒதுக்கீடு சம்பந்தமான வழக்கிலே, ரெக்கார்டுகளிலே டேட் திருத்தப்பட்டது சம்பந்தமாக, அதிகாரி தப்பு செய்துவிட்டார். அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கிறோம் என்று ஒப்பன் கோர்ட்டிலே, அட்வகேட் ஜெனரல் சொல்கிறார். நான் அமைச்சரைக் கேட்கிறேன், அந்த அதிகாரியை உங்களுக்குத் தெரியாதா? அதிகாரி பெயர் தெரியாதா? நடவடிக்கை எடுக்க வேண்டாமா? நீதிக்குத் தலை வணங்குகிற, சட்டம் தன் கடமையைச் செய்யும் என்கிற போது, இது யார்? விவரம் தெரிய வேண்டாமா என்று உங்கள்மூலம் நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, இன்னொரு முக்கியமான பிரச்னையை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். புரசைவாக்கத்திலே ஒரு தனியார் பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தத் தனியார் பள்ளிக்கூடத்தினர் மைனாரிட்டி இன்ஸ்டிடுயூஷன் என்று சொல்லி, கோர்ட்டுக்குப் போகிறார்கள். அதை எதிர்த்துப் போராட வேண்டியது யார்? அரசாங்கம். அரசாங்கமோ அதிலே கண்டு கொள்ளவே இல்லை, கோர்ட்டுக்குப் போகவில்லை. எக்ஸ்-பார்ட்டி தீர்ப்பு வழங்கப்பட்டது. எக்ஸ்-பார்ட்டி தீர்ப்பு ஆனவுடனே என்ன நடந்தது என்றால் ஒரு வாத்தியார் அம்மாவை, 58 வயதாகிவிட்டது,

வெளியே போங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அந்த அம்மையார் சொல்லிவிட்டார்கள். அரசாங்க உத்தரவு இருக்கிறது. அக்கடமிக் மிடில் இயரிலே என்னை இப்படி அனுப்புகிறீர்கள். நான் கடைசி வரையிலும், மார்ச் வரையிலும் இருக்கிறேன், என்று சொன்னவுடன் அது பிரைவேட் இன்ஸ்டிடியூஷன்—அது தனியார்—மைனாரிட்டி—இன்ஸ்டிடியூஷன் என்ற புரடக்ஷனுக்குள்ளே வருகிறது என்று சொன்ன போது, நீதிபதி சத்தியதேவ் அவர்கள் The Tamil Nadu Government for its failure to go to the Civil Court resulted in an ex-parte decree in favour of a private school. என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன்., இதைக் காட்டிலும்நம்முடைய அரசாங்கத்திற்கு என்ன வேலை? என்ன சலுகை செய்வதற்காக கோர்ட்டுக்குப் போகவில்லை? இலாகா செயல்படுகிறதா? அதிகாரி செயல்படுகிறார்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாராயணசாமி முதலியார் அவர்கள் இங்கே சட்ட அமைச்சராக இருந்தார். இப்பொழுதுள்ள சட்ட அமைச்சருக்கு முன்னால், அவர்கள் இந்த சட்டசபையிலே பேசும்பொழுது ஒன்றைச் சொன்னார். இந்த Public Men Criminal Misconduct Act' பில்லை நான் கொண்டு வந்திருக்கிறேன். பொது வாழ்வில் இருக்கக் கூடிய மந்திரிகள், எம்.எல்.ஏக்கள், புகார் கொடுத்து நிரூபித்து விட்டால்,—பொது வாழ்வில் இருக்கிற மந்திரி, எம்.எல்.ஏ., தண்டிக்கப்படுவார். அப்படி நிரூபிக்காவிட்டால், யார் புகார் கொடுத்தார்களோ. அவர்களுக்குத் தண்டனை என்ற ஒரு சட்டம் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலே இங்கே கொண்டு வரப்பட்டது. நம்முடைய நாராயணசாமி முதலியார் அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் சட்ட மந்திரியாக இருந்தபொழுது, அந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு, இதை சபையிலே சொன்னார்கள். நாங்கள் இந்தச் சட்டத்தை எடுத்து விடுகிறோம். மாறாக ஒரு காம்ப்ரஹென்சிவ்—முழுமையான, பரிபூரணமான ஒரு பில்லைக் கொண்டு வருகிறது என்று சொல்லி பல ஆண்டுக்காலம் ஆகிறது. ஏன் அதைக்கொண்டு வரவில்லை.

வெங்கடாத்ரி கமிஷன் என்ற கமிஷன் இருந்தது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கர்நாடகத்திலே லோக் ஆயக்த் என்று நீதிபதி தலைமையிலே ஒரு கமிஷன் இருக்கிறது. அந்த கமிஷனிலே, யார் வேண்டுமானாலும், மந்திரி மீது, எம்.எல்.ஏ.க்கள் மீது குற்றச்சாட்டுக்கள் சொல்லலாம். ஊழல் குற்றச்சாட்டுக்கள் சொல்லலாம். அந்த மாதிரிதான் வெங்கடாத்ரி கமிஷன் இருந்தது. அதை நீங்கள்தான் எடுத்தீர்கள். நீங்கள் அந்த கமிஷனை எடுக்கிறபொழுது கேட்ட கேள்விக்கு என்ன சொன்னீர்கள்? யாருமே மந்திரியைப் பற்றி புகார்கள் கொடுக்கவில்லை; பொது வாழ்விலே ஈடுபடுபவர்கள் மீதும் யாரும் புகார் கொடுக்க வில்லை, ஆகையினாலே எடுக்கிறோம் என்று சொன்னீர்கள், சந்தோஷம்.



அடுத்து, காபினெட் சப் கமிட்டி போட்டீர்கள். ஊழலை விசாரிப்பதற்காக என்று. அதில் யார், யார் இருந்தார்கள் தெரியுமா? என்னுடைய அருமை நண்பர் அமைச்சர் காளிமுத்து, அமைச்சர் கே. ஏ. கே, அமைச்சர் பன்ருட்டி இராமச்சந்திரன், அமைச்சர் நாவலர்,முதல்அமைச்சர் ஆகியோர், அப்படியானால், இவர்களுக்கு எதிராக, எங்கே நியாயம் கேட்க முடியும்? நண்பர் காளிமுத்து அவர்களோ, கே.ஏ.கே. அவர்களோ, தப்பு செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் எல்லோரையும் யார் விசாரிப்பார்கள். உங்களை மட்டும் விசாரித்தால் பரவாயில்லை. எங்களையும் எங்களுடைய எம்.எல்.ஏக்களையும் எம்.எல்.சிக்களையும் நம்முடைய பெரியவர்களையும், அது மட்டுமா, நம்முடைய பார்லிமெண்டிலே இருக்கக் கூடிய....

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் ஏற்கனவே ரகுமான்கான் இங்கே பேசி, அதற்கு விளக்கம் எல்லாம் அளிக்கப்பட்டு, அதெல்லாம் முடிந்து போய்விட்டது. முடிந்து போனதற்குப் பிறகு மறுபடியும் அரைத்த மாவையே அரைப்பது சரியல்ல.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, எனக்கு விளக்கம் அதிலே சரியாக இல்லை. ஆகவே, விளக்கம் பெறுகின்ற நல்ல நோக்கத்தோடு சொல்கிறேன். அமைச்சர் காளிமுத்து அவர்களுக்கு அரைத்த மாவாக இருப்பதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

(முற்பகல் 11-40.)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவரவர்களே, தொடர்ந்து ஒரே பிரச்சினையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஏற்கனவே அரசின் சார்பிலே இதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது அந்த சப் கமிட்டி இல்லை. இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துக்கொண்டு பேசி, நேரத்தை வீணாக்க வேண்டாம். முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, அந்த சப் கமிட்டியைப்பற்றி நான் இப்போது ஒன்றும் குறிப்பிடவில்லை. அரசாங்கத்தினுடைய நோக்கம் நல்ல நோக்கமாக இருக்க வேண்டும். அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் விளக்கம் தெரிந்துகொள்வதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். அந்த சப் கமிட்டியும் கலைக்கப்பட்டுவிட்டது; ஏற்கனவே கொண்டுவரப்பட்ட சட்டமும் எடுக்கப்பட்டுவிட்டது. கமிஷனும் எடுக்கப்பட்டு விட்டது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, அமைச்சர்களைப் பற்றி இப்போது கிடைத்திருக்கிற ஊழல் குற்றச்சாட்டுக்களைத் தெரிந்துகொள்ள உங்களுடைய கட்சியிலே பெட்டி வைத்து தெரிந்துகொள்கிறீர்கள்; ஆனால் நாங்கள் எதை வைத்து தெரிந்து கொள்வது? ஆகவே, இந்த சர்க்கார் உண்மையிலேயே 26 பேர்களைப்பற்றி அல்லது 11 பேர்களைப்பற்றி உண்மையான விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால் ''பப்ளிக்மென் கிரிமினல் காண்டக்ட் ஆக்ட்'' போட்டு விசாரியுங்கள்; அல்லதுகர்நாடகத்தைபோல் விசாரணைக்கமிஷன் வைத்து விசாரியுங்கள். அங்கே ஊழல் புகார்களைச் சொல்ல ஏற்பாடு செய்யுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேசொல்லியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட வாசகத்தையே இங்கே குறிப்பிடுகிறேன். யாருக்கும் எதற்கும் லஞ்சம் கொடுக்காதீர்கள். எங்கே ஊழல் இருக்கிறது என்று தெரிவியுங்கள். உங்கள் குறைகளை முறையிடுங்கள். நான் தகுந்த நடவடிக்கை எடுக்கிறேன். ஊழல் செய்கிறவர் யாராக இருந்தாலும்எவ்வளவுபெரியபொறுப்பிலே இருந்தாலும் அவரைத் தூக்கி எறிய நான் தயங்கமாட்டேன் என்று கூறியிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சரின் வாசகம் இது. ஆகவே, முதலமைச்சர் கூறியதை நிறைவேற்றுகின்ற வகையில், ஊழல்களை எடுத்துச் சொல்வதற்கு உங்கள் கட்சிக்குள்ளே மட்டும் ஒரு பெட்டி வைக்காமல் எங்களுக்கும் வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கண்ணகியாக இருந்தால் காற்சிலம்பை உடைத்து உங்களுடைய நியாயத்தை நிலைநாட்டுங்கள்; சீதையாக இருந்தால் அக்கினிப்பிரவேசம் செய்யுங்கள் என்று எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்வீர்களா? நீங்கள் கண்ணகியும் அல்ல; சீதையும் அல்ல. வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவரவர்களே, கதைகட்ட ஒருவன் பிறந்துவிட்டால் கண்ணகி மீதும் களங்கம் உண்டு என்று ஒரு கவிஞர் பாடியிருக்கிறார். அதை வலியுறுத்தப் போகிறார்களா?

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் வைக்கத் தயாராக இருந்தால் பேசுங்கள். இல்லை என்றால் பேசாதீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, கமிஷனைப் பற்றி நீங்கள் பேசக்கூடாது.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மீது குறை இருந்தால் சொல்லுங்கள். நான் திறந்த புத்தகம். மாண்புமிகு அமைச்சர் இதைப்போல சொல்லத் தயாரா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் திறந்த புத்தகம். நான் திரையில்லா மேடை.



**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, ஊழல் பேர்வழிகள் யார் என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும்; மத்திய புலனாய்வில் யார்மீது விசாரணை இருக்கிறது என்பதும் தெரியும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, கலைஞரைப்பற்றியும் மத்திய புலனாய்வுத் துறையிலே புகார் இருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவரவர்களே, அமைச்சர் தவறான தகவலைச் சொல்கிறார். கலைஞரைப்பற்றி அங்கே புகார் எதுவும் இல்லை. அமைச்சரைப்பற்றி......

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, அவரைப் பற்றியும் விசாரிக்கட்டும், என்னைப் பற்றியும் விசாரிக்கட்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே ஒரு தவறான கருத்தை அமைச்சர் சொல்கிறார். தவறு இருந்தால் நிரூபிக்கட்டும். கலைஞர் தவறு செய்தார் என்றோ லஞ்சம் வாங்கினார் என்றோ எந்த நீதிமன்றத்திலும் புகார் விசாரணையில் இல்லை. அமைச்சர் காளிமுத்து அவர்கள் மீதுதான் புகார் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவரவர்களே, வரலாறு பதில் சொல்லும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே, இப்போது நடைபெற்ற விவாதம் அவைக்குறிப்பில் இருக்க வேண்டுமா ?

**திரு. அ. ரகுமான்கான் :** பாராளுமன்ற நடைமுறைக்கு உட்பட்டதுதான் இது.

***திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த கொள்கை அறிவிப்புகளை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தபோது சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கைக்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் பல ஆண்டுகளாக உங்கள் ஆட்சியிலே சமர்ப்பித்திருக்கிற அறிக்கைகளுக்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. ஆண்டை மட்டும் திருத்திப்போட்டால், பொதுவாக ஏற்றுக்கொள்கிற அறிக்கையாக இருக்கிறது.

உண்மையிலேயே நீதித்துறையின் செயல்பாடுகள் சமுதாயத்தில் ஏற்படுகிற பல்வேறு மாற்றத்தின் காரணமாக ஏற்படுகின்ற தாக்கத்தை பிரதிபலிக்கவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களோ அல்லது அரசோ யதார்த்த நிலையிலிருந்து பரிசீலிக்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஏராளமான பிரச்சனைகள் இன்றைக்கு சமுதாயத்திலே அலைமோதுகின்றன. அவற்றின் தாக்கம் நீதித் துறையின்மீதும் சிறைத் துறையின் மீதும் உண்டு. அதை எல்லாம் புதிய அணுகுமுறையிலே பரிசீலித்து, தீர்வு காண்பதற்கான முயற்சி இந்த அறிக்கையிலே இல்லை என்பது என்னுடைய வருத்தம்.

பல பிரச்சினைகளிலே நான் விளக்கமாகப் பேசுவதற்கு நேரம் இல்லாவிட்டாலும் ஏராளமான வழக்குகள் சாதாரண கோர்ட்டுகளிலே இருந்து உயர்நீதிமன்றம் வரையில் தீர்ப்பு கூறப்படாமல் ஆண்டுக் கணக்கில் நின்றுகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்குத் தீர்வு காணுவதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனை இதிலே இலை. எனனென்ன வழக்குகள் அவை என்ற விவரங்களுக்குள்ளே நான் போகவில்லை. ''Justice delayed is justice denied' என்று சொன்னபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சண்டைக்கு வருகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சண்டைக்குவரவில்லை. "Justice hurried is justice buried" என்று நானும் ஒரு பழமொழியைத்தான் சொன்னேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, நீதிவழங்குவதில் ஏற்படுகிற தாமதம் ஜனநாயக உள்ளம் படைத்தவர்களுக்கெல்லாம் மிக வருத்தத்தை உண்டு பண்ணுகிறது. ஆயிரக்கணக்கில் இந்த வழக்குகள் இப்படி நிற்பது, நீதித்துறையின் செயல் முறைகளின் வேலை நேரம் ஒரு நீதிபதியினுடைய ஒருநாள் வேலை ஆகிய இவற்றை எல்லாம் பரிசீலனை செய்யாமல் இந்தப் பிரச்சினையை இப்படி நீடித்துக் கொண்டு போவது எந்த விதத்திலும் தமிழகத்திற்கு நியாயம் வழங்குவதாக ஆகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதேமுறையில் நீதித்துறையில் ஏராளமான இடங்களில் காலியான இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்திலிருந்து பரிந்துரைகள் வந்ததற்குப் பிறகும் கூட, 10 பேர், 15 பேர் கொண்ட பெயர்ப்பட்டியல் அரசுக்கு அனுப்பிய பிறகும் அரசினுடைய ஒதோ ஒரு கோப்பிலே அந்தப் பிரச்சினைகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். பல இடங்கள் காலியாகத்தான் இருக்கிறது. காலியான இடங்களைப் பூர்த்தி செய்வதில் என்ன தாமதம் என்றும் புரியவில்லை..



இங்கே எனக்கு முன்னால் பேசிய மூன்று பேரும் வழக்கறிஞர்கள், நான் வழக்கறிஞர் அல்ல. சாதாரண குடிமகன் என்ற முறையில்தான் இந்தப் பிரச்சினையை அணுகுகிறேன். ஏராளமான வழக்குகளுக்கு உள்ளாக்கப்பட்டவன் நான். நீதி மன்றத்தில் நானே வழக்காடியதும் உண்டு. பொதுவாக மக்களிடையே பேசப்படுவதெல்லாம் இந்த நியமனங்களில் அரசின் தலையீடு மேலோங்கி இருக்கின்றது என்பதுதான், அதன் காரணத்தால் தான் உயர்நீதி மன்றத்திலிருந்து பெயர்ப்பட்டியல் அரசுக்குக் கொடுத்த பிறகும் அந்தக் காலியிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு மாதக் கணக்கில் ஆண்டுக்கணக்கில் தாமதம் ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது.

இன்னொரு கருத்தையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். காலத்திற்கேற்ப தீர்ப்புகள் அமைகிறதா, காலத்தினுடைய கருத்துக்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அமைகிறதா, நீதிபதிகள் அவற்றை எல்லாம் பார்க்கிறார்களா என்று அரசு கவனிக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. நிர்வாகம், நீதிமன்றம், பாராளுமன்ற அமைப்புகள் என்ற இந்த மூன்றும் தான் அரசியல் அமைப்பினுடைய பிரதானமான உறுப்புகளாகும். இவை பரஸ்பரம் கண்காணிக்கவில்லை என்று சொன்னால்,, எங்கேயாவது ஒரு கோளாறு ஏற்பட்டால் அது முற்றிலும் கோளாறாக அமைந்து விடும். நீதித்துறையிலே — சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும் — அங்கே வழங்கப்படுகிற தீர்ப்புகளில் பல தீர்ப்புகள் முற்றிலும் தவறான முடிவுகளை ஏற்படுத்துகிற காட்சியை நாம் பார்க்கிறோம். இதை யார் அவர்களுக்கு எடுத்துக் கூறுவது? இந்த மன்றத்திலே பேசினால் நீதித்துறையைப் பற்றி அப்படிப் பேசலாமா என்று கூச்சல் போடுவதால் மட்டும் பயன் இல்லை. பல தீர்ப்புகளை எடுத்துக் கூற முடியும்.

* * *

ஆகவேதான் ஒரு கண்காணிப்பு தேவை. அந்த வகையில் கண்காணிப்பதற்கு ஏதேனும் அமைப்பு உண்டா ? நீதிபதிகளைக் கண்காணிக்கவேண்டும் என்று சொல்லும்போது, நீதிமன்றத்திலே நீதிபதிகளை உளவாளிகள் காண்காணிப்பதாக குற்றச்சாட்டுகள் பத்திரிகைகளில் வந்ததே அதை நான் சொல்லவில்லை.

காலத்திற்கேற்ற தீர்ப்பு வருகிறதா ? மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள உயர்நீதிமன்றமானாலும், மேற்கு வங்கத்திலே உள்ள உயர்நீதி மன்றமானாலும், கேரளாவிலே இருக்கிற உயர்நீதி மன்றமானாலும் , சென்னையிலே உள்ள உயர்நீதிமன்றமானாலும், தொழிலாளர்கள் பிரச்சினையானாலும், விவசாயிகளின் சட்டப்பிரச்சினையானாலும் .

* * *

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜுடீஷியரியை ஹோல்சேலாகச் சொல்வது சரியல்ல. ஜுடிஷியரி பற்றி ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டவை நீக்கப்படுகின்றன.

**தி. வி. பி.சிந்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் டற்றியும், சிறைச் சாலை பற்றியும் இருக்கிற கருத்து உலகறிய விவாதிக்கப்படுகிற பிரச்சினைதான்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. மா. சின்னராசு) :** நாம் போட்ட சட்டத்தைத் நிறைவேற்றுகிற வகையில்தான் நீதிபதிகள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் மீது நம்முடைய கொள்கையைத் திணிப்பது சரியாக இருக்காது.

(முற்பகல் 11.50)

**திரு. வி. பி. சிந்தன் :** நான் எந்த நீதிபதியின் மீதும் குற்றம் சாட்டவில்லை. பொதுவான, நீதித்துறையிலே வழங்குகிற தீர்ப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டேன். அங்கே வழங்கப்படுகின்ற தீர்ப்புகளையெல்லாம் படித்துப் பார்த்ததற்குப் பிறகு இங்கே படித்துக் காட்டுவதற்கு நேரம் இல்லை. ஒரு தொழில் துறை சட்டத்திலே உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இருக்கிறது. துணைத் தலைவர் அதைப் படித்தால் நலம் என்று நினைக்கிறேன். அப்படியானால் அரசியல் சட்டத்திலே உள்ளபடி நாம் பாராளுமன்றத்திலே நிறைவேற்றி, இந்த மாமன்றம் ஒத்துக் கொண்டதை டிரிப்பியூனல் எதிர்க்கிறது என்றால், சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய கருத்து அதுவாக் இருந்தால் எதற்கு டிரிப்பியூனல் என்று கேட்கிற அளவுக்கு அங்குள்ள தீர்ப்புகள் வந்திருக்கின்றன. ஆகவே, 'Social out look is Outmoded' என்று சொல்வது, ஏதோ குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதைச் சொல்வதற்கு இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அதில் எதுவும் அன்பார்லியமெண்ட்டரி வொர்டு இல்லை. யார் மீதும் குறை கூறுவதற்காகவும் எடுத்துக்கூறப்பட்டது இல்லை. அதே சமயத்தில் சமுதாயத்தில் ஏற்படுகிற பல்வேறு தீய சக்திகளுடைய இன்புளுயன்ஸ் செல்வாக்கு அந்த நீதிபதிகள் மீதும் ஏற்படுகிறதா என்பதை நீங்கள் கண்காணிக்கிறீர்களா?



நான் சொன்னால் துணைத் தலைவர் அவர்கள் 'அதைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடு' என்று சொல்லிவிடுவார்கள். நீதிமன்றங்களிலே நடக்கக்கூடிய சிக்கல்கள், சூழ்நிலைகள் பல. கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்கள் 15 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் நீதிபதிகளுக்குக் கொடுத்து அக்கியூட்டல் ஆன வழக்குகளை நான் நிரூபிக்கத் தயார். பொறுப்புணர்ச்சியோடு இந்தக் குற்றச்சாட்டுகளை நான் சொல்ல விரும்புகிறேன். சமுதாயத்திலே லஞ்சமும், ஊழலும் நாளுக்கு நாள் மலிந்து வரக்கூடிய சூழ்நிலையில் நீதித்துறையின் வாசலை மட்டும் அது எட்டாது, அந்தக் கதவுகளைத் தட்டாது என்று தயவுசெய்து நினைக்காதீர்கள். Don't be in a dreams land.

ஒரு கனவுலகத்திலே நாம் வாழ வேண்டாம். அதை எல்லாம் கண்காணிப்பதற்கு நம்முடைய அரசு என்ன கொள்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய நான் ஆசைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல நீதி வழங்குவதிலே, நீதித்துறை முறையாக நடந்துக் கொள்வதிலே வழக்குரைஞர்கள் ஒரு முக்கியமான பகுதி. அந்த வழக்குரைஞர்கள் சம்பந்தமாக, அவர்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். வழக்கறிஞர்கள் நல மசோதா என்று ஒரு சட்டம் கொண்டு வரப்போவதாக அமைச்சர் பல இடங்களில் பேசி, பத்திரிகையிலேயும் செய்தி வந்திருக்கிறது. நான் பார்த்தேன். ஆனால் கேரளா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேஷ் போன்ற பல இடங்களில் அத்தகைய சட்டங்கள் உள்ளன. மத்திய அரசும் இப்போது அத்தகைய சட்டத்தை தயாரித்துக் கொண்டிருப்பதாக பத்திரிகையிலே நான் படித்தேன். ஆனால் ஏதோ தமிழகத்திலேயும் அப்படி ஒரு சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக, வழக்கறிஞர்களுடைய நலனை பாதுகாப்பதற்குரிய ஒரு சட்டம், அதன் நகல் தயாரிக்கப்பட்டிருப்பதாக செய்தி வந்தது. ஆனால் அது எந்த அளவுக்கு உண்மை? அந்த ஆய்வு சட்டம் எங்கே இருக்கிறது? ஏன் அது அமலாக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

வழக்குரைஞர்களுடைய உணர்வுகளைப் பிரதிப்பலிப்பதற்காகத்தான் நான் இங்கே கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். 1961 வது ஆண்டு சட்டப்படி பார் கவுன்சில் ஒன்று அமைக்கப்பட்டது சட்டத்தின்படி. அந்த பார் கவுன்சில் இந்த மாதம் அதாவது ஏப்ரல் 23ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் நடத்தப் போவதாக முடிவு எடுத்து இருக்கிறது. அரசு இந்த அறிக்கையிலே அது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அமைச்சர் அவர்களுடைய பதிலிலாவது குறிப்பிட வேண்டும். ஏன் வேலை நிறுத்தம்? மாநிலம் தழுவிய வழக்குரைஞர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குரிய காரணங்கள் என்ன? அரசு அதை எப்படி சமாளிக்கப்போகிறது. அரசினுடைய கொள்கை அதில் என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்.

இதை ஒரு நிர்வாகப் பிரச்சினையாக மட்டும் கருதாமல் ஏனென்றால் சமுதாயத்தின் ஒரு பகுதி வழக்குரைஞர்கள் கொண்ட சமுதாயம். ஒரு ஓகல் செக்ஷன். நீதித்துறை முறையாக நடப்பதற்கும், சிறப்பாக செயல்படுவதற்கும் அவர்களுகளுடைய உதவி நமக்குத் தேவை. ஆகவே, அவர்களுடைய பிரச்சினை என்னவென்று அரசு ஆழமாக பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல இந்த மாமன்றத்தை நம்பி, அரசு அத்தகைய பிரச்சினைகளை இங்கு விவாதிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் எல்லோரும் தேர்ந்து எடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் என்று இங்கு வந்திருப்பது படி வாங்குவதற்கோ அல்லது ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஓரிரு வார்த்தைகள் பேசுவதற்காக மட்டும் தான் என்றோ இருப்பது சரியல்ல. நம்முடைய பிரச்சினைகளை இங்கே பேசுவதற்கு வந்திருக்கிறோம். அதுவும் இந்த சமுதாயத்தினுடைய மிக முக்கியமாக நீதிமன்றத்தினுடைய பல்வேறு பிரச்சினைகளை இந்த மன்றத்திலே விவாதிப்பதற்குரிய வசதிகளைச் செய்து தர வேண்டும். துரதிருஷ்டவசமாக இந்த அறிக்கை அப்படி இல்லை.

பொதுவான ஒரு பிரச்சினையை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். முன்சீப் தேர்விலே 11:9 என்ற விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்று 20 ஆண்டுகளுக்கு முன் தமிழக அரசு முடிவு எடுத்திருக்கிறது. ஆனால் இந்த 20 ஆண்டுகளாக அது அமல் நடத்தப்படவே இல்லை. கவனிக்கவும் நான் பத்தாண்டுகள் என்று சொல்லவில்லை. 20 ஆண்டுக்காலமாக அமல் நடத்தப்படவில்லை. டி.என்.பி. எஸ்.ஸி. என்கிற தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு நடத்தும்போதும் இந்த சட்டவிதிகளைப் புறக்கணித்து வருகிறது.

இந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுவதே இல்லை. மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமிப்பதில் 6:4 என்ற வீதத்தில் வழக்கறிஞர்களுக்கு 6, சர்வீஸ்ஸிற்கு 4 என்ற இந்த முறையில் 16 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. ஏராளமான நியமனங்கள் டெம்பரரி நியமனங்களாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த மன்றத்தில் 24—11—1973-ஆம் நாளன்று அன்றைய சட்டத்துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் கேள்வி எண். 374-க்கு பதில் அளிக்கும்போது, இநத அசெம்பிளியில் விதிப்படி நாங்கள் ரெக்ரூட் பண்ணுவோம் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. கேள்வி நேரத்தில் அளிக்கப்படுகிற வாக்குறுதியை வாக்குறுதியாக கணக்கில் எடுக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் எடுத்த முடிவையும், டெல்லி உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பையும் உங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

1981-ஆம் ஆண்டில் இது சம்பந்தமாக ஒரு ரிட் சென்னை உயர் நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நீதிபதி இராமானுஜம் அவர்கள் நான்கு மாதக்காலத்தில் காலியான இடங்களைப்



பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். துணைத்தலைவர் அவர்களே, இப்போது நாம் 1986-ஆம் ஆண்டிலே இருக்கிறோம். 1981-ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றத்தில் கூறிய தீர்ப்பு, நான்கு மாதத்தில் நிறைவேற்ற வேண்டுமென்று, அரசு அதை கடைப்பிடிக்கவில்லை. இன்றைக்கும் ஏராளமான இடங்கள் காலியாக இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் ரெகுலரைசேஷன் ஆப் டெம்பரரி மாஜிஸ்ட்ரேட்ஸ் என்பது 3 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக செய்யப்படவில்லை. நாங்கள் தொழிற்சங்க இயக்கங்களில் கேஷ்வல் தொழிலாளர்களைப் பார்த்ததுண்டு. அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை எழுப்புகிறோம். ஆனால் இங்கே மாஜிஸ்ட்ரேட்ஸ், முன்சீப்ஸ் ஆகியவர்கள் 2 ஆண்டு, 3 ஆண்டிலிருந்து 20 ஆண்டுகளாக நிரந்தரமாக்கப்படாமல், சர்வீசே ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இதில் 1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கேபினட் முடிவு எடுத்ததாக ஒரு பத்திரிகைச் செய்தி பார்த்தேன். ஆனால் இதுவரையில் அது அமல்படுத்தப்படவில்லை. 200 மாஜிஸ்ட்ரேட்டுகளும், 120 முன்சீப்களும் இன்றைக்கும் டெம்பரரியாக இருக்கிறார்கள். அப்படியென்றால் மொத்த இடங்களில் 90 விழுக்காடு இன்றையதினம் டெம்பரரியாக இருக்கிறது. அந்த டெம்பரரி நீதிபதிகளை நீங்கள் வைத்திருப்பது உங்களுக்கு சாதகமாக தீர்ப்பை எழுதவைக்கிற நிர்பந்தத்தை ஏற்படுத்துவதற்காகவா அல்லது அவர்களைப் பர்மனென்ட் ஆக்குவதில் என்ன தடை, என்ன கொள்கைப் பிரச்சினை இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில் பாரா 39 பக்கம் 21-ல் 126 பதவிகள் மாநில சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரப்படுத்தப்படுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பாரா 30, பக்கம் 17-ல் அவர்களை பர்மனென்ட் ஆக்குவது சம்பந்தமாக அரசு முடிவெடுக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குழப்பத்தையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்சினை. தமிழகத்தின் போலீஸ் நிலையங்களில் எவ்வளவு கற்பழிப்புகள், கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது இந்த மன்றத்தில் நடைபெற்ற விவாதங்களை வைத்தே தெரியும். ஆனால் இவைகள் நடந்து கொண்டிருப்பது விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது தான். விசாரணை நடத்துவதற்கு தனி அதிகாரிகள் உண்டு. பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ் மற்றும் போலீஸ் அதிகாரிகள். இவர்களுக்கு எல்லாம் நீங்கள் கொடுக்கிற டைரக்ஷன்ஸ் என்ன? பெண்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்றால் இரவு நேரத்தில் அவர்களை காவல் நிலையங்களில் வைக்கக் கூடாது என்று அரசு உத்தரவு இருக்கிறது. அதை மீறி பெண்களை காவல் நிலையங்களில் வைக்கிறார்கள். பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ் இதற்கு உடந்தையாக உள்ள நிலைமை இன்றைக்கு

எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. இந்த நீதித் துறையின் பொறுப்பில், மாண்புமிகு அமைச்சரின் பொறுப்பிலே உள்ள பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ் இதிலே கவனம் செலுத்துவதேயில்லை. ஆகவே இந்த பப்ளிக் பிராசிகியூட்டர்களை டைரக்ட் பண்ண வேண்டும். அதற்கு ஒரு பொலிடிக்கல் கைடன்ஸ் வேண்டும். இந்த அரசுக்கு அத்தகைய பொலிட்டிக்கல் கைடன்ஸ் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை).

இந்த நியமனங்கள் அரசியல் அடிப்படையில் நடைபெறுவதும் இன்றையதினம் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றனயென்பதைத் தெரிவித்து அடுத்து சிறைத் துறைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன். உள்துறை இலாக்காவிலிருந்து 23—12—1985 அன்று ஒரு சுற்றறிக்கை எல்லா கவர்ன்மெண்ட் ப்ளீடர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் எல்லா சிவில் வழக்குகளிலும் தகவல் கிடைக்கும் முன்னே எதிர்க் குறிப்புரையில் வாதியின் வழக்கை முதலில் மறுத்து தாக்கல் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00.)

ஏன் அந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய கட்சியின் சார்பிலே என்னுடைய முழு பலத்தையும் வைத்து இந்த அறிக்கையை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தவறான தகவலை, வழக்குகளினுடைய தன்மைகளை புரிந்து கொண்டு வழக்காடுவதற்குப் பதிலாக அவர்களுடைய வழக்குகளை நிராகரித்து பதில் கொடுக்க வேண்டும் என்று அரசே ஒரு சுற்றறிக்கை அனுப்பியது எந்த விதத்திலேயும் சரியானது அல்ல. இத்தகைய நடவடிக்கைகள் ஏராளம் உண்டு. இரண்டு மாவட்ட தலைமை நகரங்களில் நீதிமன்றங்களுக்கான கட்டிடம் கட்டப்பட்டு இன்னும் அது திறக்கப்படவில்லை.

அடுத்து அமெனிட்டிஸ் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒரு வழக்கறிஞர். நீதிமன்றத்திலே இருக்கின்ற வசதிகள் மிகவும் கம்மி. இப்படி இருக்கும் போது, 1 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவு செய்து, தலைமை நீதிபதி அலுவலகத்திலே ஏர் கண்டிசன் போடுவதற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். ஜி.டி. கோர்ட்டிலே எக்மோர் கோர்ட்டிலே, இன்னும் பல கோர்ட்டுகளிலே சிறு நீர் கழிப்பதற்குக் கூட வசதி கிடையாது. குடிநீர் வசதி கூட கிடையாது. நம்முடைய நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் ஏராளம். இந்த நேரத்திலே தலைமை நீதிபதிக்கு மட்டும் இப்படிப்பட்ட ஒரு வசதி கொடுக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது. எல்லா நீதிபதிகளும் ஒரே அந்தஸ்தைப் பெற்றவர்கள் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



நான் வழக்கறிஞராக இல்லாவிட்டாலும். அனுபவத்திலேயிருந்து பேசுகிறேன். சிறைத்துறையைப் பற்றி ஒரு நிமிடம் பேசுகிறேன். சிறைச்சாலையில் 10 ஆண்டுகளுக்கு மேலே இருந்த சட்டமன்ற உறுப்பினர் என்னைத் தவிர வேறு யாரும் இங்கே இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த அனுபவத்தை வைத்து என்னால் அதிகம் பேச முடியும். ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் கவனிக்க வேண்டும்.

தற்போது சிறையினுடைய நிர்வாகம் சீரழிந்து கிடக்கிறது லஞ்சமும், ஊழலும் தலைவிரித்து ஆடுகிறது. அடக்குமுறை என்பது, கோயம்புத்தூரிலே, திருச்சியிலே இன்னும் பல்வேறு சிறைச்சாலைகளிலே நேரம் இல்லாத காரணத்தாலே விவரங்களுக்குள்ளே நான் போகவில்லை—நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. நீண்டகாலமாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். நிர்வாணமாக சிறையில் கைதிகளை அறைகளில் அடைத்து மாதக் கணக்கிலே—தேதியுண்டு சிறைச்சாலையினுடைய பெயருண்டு, கைதிகளுடைய பெயர்களும் என்னிடம் உண்டு நிர்வாணப்படுத்தி அடிப்பது என்பது என்ன நாகரீகம் என்று எனக்குப் புரியவில்லை. அவர்கள் குற்றவாளிகளாக இருக்கலாம், அவர்கள் தண்டிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால் சிறைச்சாலைகளிலே அவர்களைத் தண்டிக்கலாமா? இப்படி அடித்ததன் காரணமாக இறந்தவர்கள் எண்ணிக்கை அதிகம். ஆகவே இதைப் பற்றி விவரங்களுக்குள்ளே நேரத்தைக் கருதி நான் போகவில்லை. இன்றைக்குப் பல சிறைகளில் உண்ணாவிரதம் நடந்து கொண்டு இருக்கிறது. சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு விடுதலை வேண்டும் என்று சொல்லி, 22 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தவன் நான். ஆனால் அவர்கள் விடுதலை கோரி உண்ணாவிரதம் இல்லை. எங்களுக்கு வழங்கக்கூடிய பத்திரிகையைக் கொடு. எங்களுக்கு வழங்குகின்ற தேங்காய் எண்ணெயைக் கொடு, சோப்பு கொடு' எங்களுக்கு இருக்கும் ரேசனை முறையாகக் கொடு. அதிலே கை வைக்காதே, அதைத் திருடாதே என்று சொல்கிறார்கள். அதைக் கேட்டால் அவர்களை அடிக்கிறார்கள். பூட்ஸ் காலால் உதைக்கிறார்கள். அவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்கள். இதிலே செத்துப் போனவர்களும் உண்டு. ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் சிறைச்சாலைகளிலே தூக்குப் போட்டு கொண்டார்கள் என்று சொல்கிறார்கள்.

துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஜெயில் பர்ட். எவ்வளவு திறமை உள்ளவர்களாக இருந்தாலும்; சிறைச்சாலை அலுவலகத்திற்கு உள்ளே தூக்குப் போட்டுக் கொள்வது என்பது சாத்தியம் அல்ல. அன்றாடம் எங்களை சோதனை செய்துதான் உள்ளே போட்டு வைக்கிறார்கள். கயிறு எங்கே கிடைக்கும்? கொடுப்பது அரைச் சட்டை, ஒரு பனியன், அதை வைத்துக் கொண்டா, அங்கே தூக்குப் போட்டுக் கொள்ள முடியும். ஆனால் அடித்துக் கொன்ற அங்கேயுள்ளவர்கள் தூக்குப்போட்டுக் கொண்டதாக ரிப்போர்ட் அனுப்புகிறார்கள். ஆகவே நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுமைய விசாரணைக்குழு ஒன்றை அமைத்து, எல்லாச் சிறைச்சாலைகளுக்கும் சென்று, சிறைச்சாலைகளினுடைய நிர்வாகத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் சிறையில் கைதிகளை சித்திரவதைக்கு உள்ளாக்குவது ஜனநாயகத்திற்கு இழுக்கு. மிக மோசமான நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. 10 ஆண்டுகள் முடிந்தால், சாதாரணமாக கொலைக் குற்றவாளிகள், ஆயுள் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்வது உண்டு. ஆனால் இப்போது பரிசீலனை முறையாக நடப்பது இல்லை. சிறைக்கூடங்களையும், நீதிமன்றங்களையும் ஆளும் வர்க்கத்தினுடைய அடக்குமுறை கருவிகள் என்று கருதுகிற மார்க்சிசத்திலே நம்பிக்கை வைத்து இருப்பவன் நான். எனவே நான் இந்த மன்றத்திலே கேட்பது எல்லாம் சிறைக்கூடங்களை முறையாக நடத்துவதற்கு, நீதிமன்றங்களை முறைப்படுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

*திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற நீதி நிர்வாகம் மற்றும் சிறைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை முன்வைக்க விழைகிறேன்.

'Democracy is divided into three wings'—namely Executive. Legislature and Judiciary

என்று சொல்வார்கள் Executive, Legislature and Judiciary இந்த மூன்றும் நம்முடைய இந்திய நாடு ஜனநாயக அடிப்படையில் ஏற்படுத்திக் கொண்ட குடியரசுத் தத்துவத்தின் அடிப்படையிலே ஒவ்வொன்றும் தன்னிச்சையாக செயல்பட வேண்டும் என்பது நம்முடைய குறிக்கோளாகும். நம்முடைய அரசியல் சட்டத்தினுடைய ப்நாக்கமாகும்.

ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்த அளவில் நம்முடைய சமுதாயத்திற்காக செய்ய வேண்டுமென்கிற நீதியை நிலை நாட்டுவதற்கு பல்வேறு சட்டங்களை இயற்றி அதை நடைமுறை படுத்துகிற பணியை எக்ஸிகியூட்டிவ் என்கிற நிர்வாகத்திற்கு விட்டுவிடுகிறோம். நீதித் துறையிலே அந்தச் சட்டங்கள் செல்லாது என்று சொல்கிறபோதும் அதை ஏற்றுக் கொண்டு அதற்கு மாற்று வழிகளை நாம் காண முயலுகிறோமேயொழிய அந்தச் சட்டத்தை மீண்டும் அப்படியே நிலைநிறுத்துவோம். நாம் சமுதாயத்திற்காக நிறைவேற்றிய சட்டம் நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் 234 பேரும் அவர்களுடைய ஆதரவை தந்து எதிர்க்கட்சியினர் என்று கூட பார்க்காமல் ஆதரித்தச் சட்டம் கூட உயர்நீதி மன்றத்திலே செல்லுபடியாவதற்கில்லை என்று சொல்கிறபோது இல்லை இல்லை நிறைவேற்றித் தீருவோம் என்று விழைவது இல்லை நாம் நமக்காகவே ஏற்படுத்திக் கொண்ட ஒரு கட்டுப்பாட்டின் கீழ் இந்த ஜனநாயக முறை செயல்பட்டு வருகிறது. ஆனால் அண்மைக் காலங்களில் நீதித்துறை நம்முடைய நிர்வாகத்தில் ஏற்படுகிற அன்றாடப் பிரச்சினைகளில் கூட தலையிட்டு பல தீர்ப்புகளை வழங்கி வருவதை நாம் அறிவோம். வெளியிலே பேசுகிறபோதும்



நீதிபதிகள் தீர்ப்பு அளிக்கிற போதும் பல இடங்களில் நம்முடைய சாதாரண, அன்றாட நிர்வாகங்களிலே அரசு செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் கூட நீங்கள் இப்படித்தான் செய்ய வேண்டும், அது ப்ரமோசனானாலும் சரி அல்லது அரசாங்கம் தன்னுடைய கொள்கையை நிறைவேற்றுவதற்காக அன்றாடம் எடுத்துக்கொள்கிற நடவடிக்கையானாலும் சரி, நீதிமன்றங்களில், உச்சநீதிமன்றமானாலும் சரி அவைகள் கொள்கையில் முடிவெடுக்கிற ஒரு இடமாக மாற்றப்பட்டு வருகிறது. அதைக் கூட பல மாண்புமிகு நீதிபதிகள் நியாயப்படுத்தியும் பேசி வருகிறார்கள் என்பதை எண்ணுகிற போது உள்ளபடியே இது நம்முடைய ஜனநாயகத்தின் தேவைக்கு ஏற்ற அடிப்படையில் ஏற்படுகிற ஒரு மாற்றம் என்றாலும், இது தேவையானதுதானா என்பது விவாதத்திற்குரிய ஒன்று என்றாலும்கூட, அளவுக்கு மீறிய குறுக்கீடு, தலையீடு, அரசாங்கத்தினுடைய கொள்கையை நிறைவேற்ற முன்வருகிற போது நீதிமன்றங்களிலிருந்து வரக் கூடாது என்பதுதான் என்னைப் போன்றவர்களுடைய தாழ்மையான கருத்தாகும். ஆகவே, அந்த அடிப்படையில் தான் இன்று நாம் எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றுகிறோம்.

உதாரணமாக ஒன்று சொல்வேன். ஆதிதிராவிட மக்களுக்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும். நாம் பல லட்சக்கணக்கில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற போது ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்கான இடமில்லை. நிலத்தை ஆர்ஜிதப்படுத்தினாலொழிய அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முடியாது என்ற நிலை இருக்கிற போது நம்முடைய ஆர்ஜித நடவடிக்கைகள் வழக்கு மன்றங்களிலே தடை செய்யப்படுகின்றன. செய்யப்படுகின்ற தடைகள் பல காலம் நீக்கப்படுவதே இல்லை. இன்னும் சொல்லப் போனால் அந்தத் திட்டங்களை கை விடுகின்ற அளவுக்கு, மீண்டும் நீக்கப்பட்ட பின்னால் அதை நாம் நிறைவேற்றுவது என்றால் நாம் ஒதுக்கிய நிதியைப் போல 4 மடங்கு 5 மடங்கு கூடுதலாக செலவிட வேண்டிய ஒரு கட்டாயம் நமக்கு ஏற்படுகிறது.

ஆகவே அரசாங்கம் நல்ல நோக்கத்தோடு ஒரு முயற்சி எடுக்கிற போது தனது கொள்கையை நிறைவேற்ற முற்படுகிற போது நீதி மன்றத்தினுடைய தீர்ப்பும் தடை ஆணைகளும் அவைகளுக்கு தடையாக இருக்க முடியாது. இது ஒரு மியூட்சுவல் அண்டர் ஸ்டாண்டிங் தான். ஜனநாயகத்தில் நமக்கு நாமே வரையறுத்துக் கொண்ட கட்டுப்பாடுகள் தான். எழுதி வைக்கப்பட்ட சட்டமாக இருந்தாலும் கூட எந்த அளவுக்கு நாம் நீதி மன்றத்தைப் பற்றி விமர்சிக்க முடியும் என்பதோ நீதிமன்றம் எவ்வளவு தூரம் நிர்வாகத்திலே தன்னுடைய உத்தரவுகளை பிறப்பிக்க முடியும் என்பதோ நமக்கு நாமே வகுத்துக் கொண்ட வரையறைக்குள் நிற்கவில்லை என்றால் பின்னாலே ஒரு காலத்தில் ஜனநாயகமே ஒரு கேலிக் கூத்தாக ஆகிவிடுகிறஒரு சூழ்நிலை கூட உருவாகும். ஒரு நீதிபதி தன்னுடைய கருத்து இது தான் என்று சொல்கிற போது இந்த ஜனநாயக நாட்டில் சட்டமன்றத்தினுடைய கருத்து

என்ன என்பதைத் தான் மக்கள் பார்ப்பார்களே ஒழிய தனிப்பட்ட ஒருவருடைய கருத்தை யாரும் ஏற்க முடியாது என்கிற நிலைமையும் நாம் உணர்ந்தாக வேண்டும். ஆக, அந்த வகையிலே, நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னது போல அவர்கள் ஒவ்வொரு கொள்கையையும் கடைபிடிக்கிறார்கள்என்றுநான்சொல்லவில்லை. அரசாங்கத்தினுடைய கொள்கையை நிறைவேற்றுகிற சட்டத்தை நிலை நிறுத்துபவராகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். ஆக அந்த வகையிலே நீதித் துறையே அரசாங்கத்தின் சமுதாய நல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். அது தான் மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிற அன்றாட பிரச்சனைகளையும், இது போன்ற மிகப்பெரிய வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்கிற கோடானு கோடி மக்கள் இருக்கிற நாட்டில்நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நெறிமுறையாக இருக்குமென்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த வகையிலே நாம் நம்முடைய அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்ற தடையாக இருக்கிற புரோசிஜர்களை, அதற்கென்று தனி நீதிமன்றம் அமைத்தாலும் சரி, ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக வழங்கப்படுகிற தடை ஆணைகள் இந்த கால கெடுவுக்குள் நீக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவை வழங்க, அதற்கான ஏற்பாடுகளை நீதிமன்றத்தோடு கலந்து பேசி நாம் எடுத்தாக வேண்டும். இது காலத்தின் கட்டாயம் என்பதை ஙிங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–10)

நம்முடைய சென்னை நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க ஒரு நீதிமன்றம். இந்த நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு நீதிமன்றம் என்று பெயர் இடப்படவேண்டும் என்று திரு. ரகுமான்கான் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்த கோரிக்கையின் அடிப்படையிலும், மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் வலியுறுத்தி வந்து இருக்கிற அந்த கோரிக்கையின் அடிப்படையிலும் அந்த கோரிக்கையை விரைவில் மத்திய அரசு ஏற்கும்படி நம்முடைய அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய 'நீதித்துறையின் மிக முக்கியமான திட்டம்' இந்த (Integration of Jdiciay) என்பது நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் ஆழ்ந்த சிந்தனையோடு ,நெடிய நாட்களை அதற்கு செலவழித்து இஃத கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அதற்கு பின்னால் (Tempor ry Judici l M gis'rate Court) கோர்ட்டுக்குச் சென்றார்கள். அதற்கு ஒரு தீர்வு ஏற்பட்ட பின்னால் மீண்டும் வழக்கறிஞர்கள் மன்றம் இப்போது உச்ச நீதிமன்றத்திற்கு சென்று இருக்கிறது என்று கருதுகிறேன். இதை கூட நான் ஏற்கனவே சொன்ன கருத்துக்கு உதாரணமாக சொல்லமுடியும். நாம் (Judicial Reform) வேண்டும்



என்று நினைக்கிறோம். பலவிதமான கோர்ட்டுகள் ஒவ்வொரு இடத்திலும் உள்ளன. ஒவ்வொரு தரப்பு மக்களுக்கும் ஒவ்வொரு ஊருக்குச் சென்று ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் செல்லவேண்டும் என்று இல்லாமல் அதை இண்டகிரேட் செய்து ஒருங்கிணைத்து ஒரு குறிப்பிட்ட வழக்குக்கு இந்த நீதிமன்றம் என்றும் அதற்கு மேல் சிவியர் அபன்ஸ் (கிரிமினல் குற்றங்கள்) ஆக இருந்தால் அல்லது கூடுதலான உரிமைப் பற்றிய பிரச்சினையாக இருந்தால் இந்த நீதிமன்றம் என்றும், ஒரு திரி டையர் சிஸ்டம் என்று சொல்வது போல் தாலுக்கா அளவிலும் அதற்கு மேல் டிவிஷன் அளவிலும், அதற்கு மேல் மாவட்ட அளவிலும் ஆக 3 படிக்கட்டுகளை அமைத்து ஒரு நீதிமன்ற முறையை ஏற்படுத்தவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு வரையறுக்கப்பட்ட அந்த முயற்சி விரைவில் வெற்றி பெறுவதற்கு அந்த தீர்வை நம்முடைய உயர் நீதிமன்றம் நமக்குப் பெற்றுத் தரவேண்டும் என்று உரிமையோடு கேட்பதற்கும் அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏற்படுத்தினால் தான் இன்று இருக்கிற தேக்க நிலையை ஓரளவுக்கு குறைத்து கீழே இருக்கிற மாவட்ட நீதிமன்றங்கள், மற்ற வழக்கு மன்றங்களில் உடனுக்குடன் வழக்குகளை தீர்க்க முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே அரசு வழக்கறிஞர்களை நிர்வாகத்தை கவனிப்பதற்கு இன்றைக்கு (Director of Prosecutions) ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியை எடுத்துக் கொண்டார்கள். அது இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்று அறிவிப்பை பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதன் மூலம் நம்முடைய அரசின் வழக்குகள் ஒவ்வொரு துறையினுடைய வழக்குகள் உயர்நீதிமன்றம் சென்று விட்டால் அரசு வழக்குகள் தானே, என்கிற ஒரு சாதாரண எண்ணம் அரசின் வழக்கு நமக்குச் சொந்தம் அல்ல என்பது போல் ஒரு உணர்வு, அரசு வழக்கறிஞர்களுக்கே கூட இப்படி ஏற்பட்டு, விடுகிற காரணத்தால் நாம் பெரிய இழப்புக்கு ஆளாகியிருக்கிறோம். பல நேரங்களில் நம்முடைய வாதங்களை அங்கே சரியாக எடுத்து உரைக்கவில்லை, அல்லது உரிய நேரத்தில் சொல்லவில்லை என்ற காரணத்திற்காக நீதிபதிகள் (Prejudice) ஆக. அதன் மூலம் நாம் சொல்லி தவிர்த்திருக்கும் வாய்ப்புள்ள தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறோம். என்பதை இந்த நேரத்தில் நினைவு கூற விரும்புகிறேன். அதை தவிர்ப்பதற்கும் நம்முடைய அரசு வழக்கறிஞர்கள் நம்முடைய சட்டமன்றத்தினுடைய அங்கீகாரத்தோடு நாம் செலவிட்டு, அதற்காக இந்த துறைக்கு நியமிக்கப்படுகிற அரசு வழக்கறிஞர்கள் அரசு திட்டங்களை, அரசு சட்டங்களை, முயற்சிகளை பாதுகாக்க ஒரு அமைப்பாக ஏற்படுத்துவதற்கு இந்த (D rect r of Prosecuti n) மிக நல்ல முறையில் நமக்கு பயன் தருவதாக இருக்கும். ஆக அதை மிக விரைவாக ஏற்படுத்துவதற்கு அனுமதியைப் பெற்று இருக்கிற நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சருக்கு இந்த நேரத்தில் பாராட்

டுதலைச் சொல்லி விரைவாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நியமிக்கிற (Director of Prosecution) அவர்கள் கூட பதவிக்கு உரியவர்களை தகுதியானவர்களை தேர்ந்தெடுக்கவேண்டும்.

இன்று கூட 126 டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புகளை தேர்ந்தெடுக்கக் கூடிய அங்கீகாரத்தை அரசு வழங்கியிருக்கிறது. ஏற்கனவே 57பேர் நீதித்துறைக்கு டிஸ்ட்ரிக் முனிசீப்புகளாக தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். அந்த தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்றி வெளியில் பேசுகிறபோது இவர்கள் முழு தகுதி உடையவர்கள் தானா, இவர்கள் அரசின் கொள்கை படி, அரசு வகுத்து இருக்கின்ற அந்த ரோஸ்டர் சிஸ்டம் என்று சொல்லுகிறார்களே, பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதி திராவிடர்கள் என்ற அந்த வரைமுறையில் வந்து விட்டாலும் கூட பிற்படுத்தப்பட்டவர்களில் 57 பேரில் அங்கே ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு இனத்தை, ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் அதிகம் வந்து விட்டார்கள் என்று வழக்கறிஞர்களே வெளியில் சொல்லுகிற அளவுக்கு நீதித்துறையில் நியமனம் இருக்கக்கூடாது. நீதிபதிகளுக்கான தேர்வுகள் நடக்கும்போது அந்தக் குறை இருக்கக் கூடாது, அது தவிர்க்கப்படவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அது எவ்வளவு தூரம் உண்மை என்று நான் அறிய விரும்பவில்லை. ஆனால் எந்த காரணத்திற்காகவும் இதுபோன்ற எண்ணங்கள் வளர நாம் விடக்கூடாது. ஆகவே தேர்வாணைக்குழு என்பது நாம் எப்படி நீதிமன்றம் வைத்து இருக்கிறோமோ அதைப் போல் ஒரு அட்டானமஸ் பாடி. தனியாக அது அரசினுடைய மிகப்பெரிய பதவிக்களுக்கான அதிகாரிகளை நேரடியாக சுயேச்சையாக, தன்னிச்சையாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதற்காக இயற்றப்பட்ட அந்த சர்வீஸ் கமிஷன் அதனுடைய தேர்வு பற்றி நமக்கு ஐயப்பாடு எழக் கூடாத அளவிற்கு சீரமைக்கப்படவேண்டும்.

ஜுடீசியரி போன்ற துறைகளில் நிரப்பப்படுகிற பதவிகள் பொறுத்து இந்த ஐயப்பாடு நிச்சயமாக இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜாதிக் கூட்டங்களையும் மாநாடுகளையும் கூட்டி எங்களுடைய ஜாதிக்காரருக்கு சர்வீஸ் கமிஷன் பதவி அளிக்கப்படவேண்டும், நம்முடைய ஜாதிக்காரர், ஒரு ஆண்டுக்காலம் இருந்தார், 2 ஆண்டுகளாக இல்லை மூன்று ஆண்டுகளாக இல்லை என்று சொல்கிறார்கள். நம்முடைய ஜாதியிலே 3 பேர் இருந்தார்கள் இப்போது 2 பேர் தான் இருக்கிறார்கள் என்று இப்படியெல்லாம் தீர்மானம் நிறைவேற்றி, ஆக ஜாதி அடிப்படையில் நியமனம் வேண்டும் என்று கேட்கிறபோது, அது ஏதோ ஒரு தவறுக்கு வித்திடுவதாக இருக்கிறது என்று தான் பொருள், ஆக அந்த அடிப்படையிலே விமர்சிப்பதிலே நாம் அதைப்பற்றி கருத்து பரிமாறிக்கொள்வதிலே தவறில்லை என்று கருதுகிறேன். ஜனநாயகத்தில் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. நிச்சயமாக இதை நீதித்துறையில் ஏற்படுத்தாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.



அந்த வகையில் இது அரசினுடைய கடமை, நம்முடைய கடமை என்றுதான் கருதுகிறேன். அந்த முறையிலே நீதிபதிகள் திறமையின் அடிப்படையிலே, நியமிக்கப்படவேண்டும். அப்போது தான் நீதி பரிபாலனம் செய்யக் கூடியவர்கள் நேர்மையுடையவர்களாக இருப்பார்கள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படும். அந்த வகையில் பதவிகள் நிரப்பப்படவேண்டுமென்று பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே அறிவித்தபோது வழக்கறிஞர்கள் நலச் சட்டம் கேரளாவில் இருப்பதைப் போல இங்கும் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அதிலே சில சிறிய மாறுதல்கள் தான் நமக்குத் தேவைப்படுகிறது. வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களுடைய குமாஸ்தாக்கள், அட்வகேட்ஸ், அட்வகேட் கிளார்க்ஸ் (Advocates and Advocates-Clerks Benevolent fund Act.) என்ற சட்டத்தை இங்கே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீதித்துறையில் கூடுதலாக நீதிமன்றங்கள் பல இடங்களில் அமைத்திருக்கிறோம். கூடுதலாக வழக்குகள் இருக்கின்றன. அவை தேங்கிவிடுகின்ற நிலையும் இருக்கிறது. நீதிமன்றங்கள் கூடுதலாக அமைக்கின்றபோது அதற்கேற்ற பணியாளர்களும் நியமிக்கப்படவேண்டும். ஆனால் அண்மைக் காலத்தில் நீதிமன்றங்களைக் கூடுதலாக ஆக்கிய அளவிற்கு, பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. மற்ற அரசுத் துறைகளில் பலன் பெறுகிறவர்களைப் போல் நீதித்துறையில் பணியாற்றுகிற ஊழியர்கள் அரசின் சலுகைகளின் பலனைப் பெறவில்லை. அரசாங்கம் மற்றவர்களுக்கு 10 ஆண்டுகள் கழித்துவிட்டால் எப்படி ஒரு தேர்வு நிலை அளிக்கிறதோ, அதுபோல் நீதித்துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு செலக்ஷன் கிரேட் போன்று கொடுத்து, அவர்களுக்கு ப்ரமோஷன் இல்லை என்றாலும் சம்பளத்தை உயர்த்தவேண்டும். நீதித்துறையிலுள்ளவர்களுக்கு அந்த வாய்ப்பு வசதிகளை தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட அளவிலே மாவட்ட நிர்வாகத்தில் 'சிரஸ்ததார்' தலைமை அதிகாரி. நீதிபதியை அடுத்து நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் ஏற்றிருக்கிறவர் சிரஸ்ததார் தான். அந்த சிரஸ்ததாரின் சம்பளம் நம்முடைய ஹையர் செகண்டரி ஹெட்மாஸ்டர் சம்பளத்தைவிடக் குறைவு. தயவு செய்து இதைக் கருத்தில்கொண்டு, நியாயம் வழங்கவேண்டும். மற்றவர்களைப் போல் அவர்கள் போராடுவது இல்லை. நீதிபதியினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கக் கூடியவர்கள், ஒரு நாள் கூட மற்றவர்களைப் போல் உண்ணாவிரதமோ, ஊர்வலமோ நடத்தக் கூடியவர்கள் அல்ல. அந்தக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறவர்கள். அவர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்புகள், வசதிகள் இல்லை என்றாலும்கூட, மாநாடு போடமாட்டார்கள் என்றாலும் கூட, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை மனுக்கள் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கின்ற கோரிக்கைகளை நாம் நிறைவேற்றவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இதுவரையும் முன்சீப்களை டைரக்ட்டாக செலக்ட் பண்ணுகிறோம். அதைப் போலவே மாவட்ட நீதிபதிகளை தேர்வு செய்கிறோம். ஆனால் சப்-ஜட்ஜுகளை மட்டும் நேரடியாக நியமிப்பதில்லை. இந்த ஆண்டிலிருந்து சப்-ஜட்ஜுகள், (சார் நீதிமன்றத்தின் நீதிபதிகளை) நேரடியாக தேர்ந்தெடுப்பார்கள் என்பதாக அறிவிப்பு தந்திருக்கிறார்கள். இது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அதே நேரத்தில் முன்சீப்புகளுடைய ப்ரமோஷன் அதிக அளவிற்கு பாதிக்கப்படாமல் அந்த (P. oportional represen-tation for p omo ion a d for direct retiretmert) என்று பகுத்து வழங்கப்படவேண்டும். இதில் முன்சீப்புகள் குறைபாடு காணப்படக் கூடாது என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேரடி நியமனம் எல்லா இடங்களுக்கும் தேவையான ஒன்று. இது அவசியம் என்று சொல்லிக் கொள்ளுகிற அதே நேரத்தில் பல துறைகளிலிருந்து, மாஜிஸ்ட்ரேட் பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டவர்களை தயவுசெய்து நீதித் துறையிலிருந்து விலக்குவதை அரசு ஏற்றுக்கொண்டு, அந்தத் கொள்கையை நிலைநாட்ட வேண்டும். இந்தக் காரணத்தை முன்னிட்டு, சட்டம், சட்டமன்றத் துறையில் அல்லாமல் வேறு துறையிலிருந்து வந்த நீதிபதிகளாக வருவதை நாம் அனுமதித்தால், அது நிச்சயமாக அவர்கள் ப்ரமோஷன் பெற்று, மாவட்ட நீதிபதிகளாக உயர்நீதிமன்ற நீதிபதிகளாக வருகின்றபோது நம்முடைய நீதித்துறை மிகப் பெரிய இழப்பைத் தாங்கிக்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகும். ஆகவே அதைத் தவிர்க்கவேண்டும். நான் வழக்கறிஞர் என்பதால் சொல்லவில்லை. நியாயத்தின் அடிப்படையில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கையின் அடிப்படையில் வேறு அரசு துறைகளிலிருந்து நியமனம் செய்யப்பட்டிருக்கின்ற மாஜிஸ்ட்ரேட்டுகளை அந்தந்த துறைக்கு அனுப்பி, வழக்கறிஞர்களை மட்டும் தான் நீதித்துறையில் நியமிக்கவேண்டும். இதை ஏற்கனவே தெரிவித்ததைப்போல் திறமையானவர்களை நியமிப்பதற்கு அங்கே தேர்வு முறைகள் இருக்கவேண்டும். அந்த முறையில் நியமனம் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

நம்முடைய திரு. ரகுமான்கான் அவர்கள் நீதியை மதிக்க வேண்டும். தீர்ப்பை மதிக்கவேண்டும். என்று சுட்டிக்காட்டிப் பேசினார்கள். புரட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் நீதிக்குத் தலைவணங்கக் கூடியவர்கள். அந்த இயக்கத்திலே தான் நாங்கள் எல்லாம் இருக்கிறோம். திரு. ரகுமான்கான் சொல்கிறபோது சொன்னார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது: நீதியை மதிக்கிறபோது நீதிமன்றத்தை மதிக்க வேண்டும். நீதிபதியின் தீர்ப்பை மதிக்கவேண்டும். நீதிபதிகளை மதிக்கவேண்டும் என்கிறபோது அவர்கள் வழங்குகிற உத்திரவுகளை மதிக்க வேண்டும். அவர்களுடைய சம்மனை மதிக்காதவர்கள் அவர்கள் ஆர்டரை மதிக்காதவர்கள், குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்திற்கு வா என்று சொல்லக் கூடிய சம்மனைக் கூட மதிக்காதவர்கள் தீர்ப்பை மதிக்கிறார்கள்





என்று நாம் பொருள் கொள்ளமுடியாது. அளிக்கப்பட்ட தீர்ப்பை மதிக்கவேண்டும். சர்க்காரியா கமிஷனாக இருந்தாலும் மதிக்கவேண்டும். எந்தக் கமிஷனானாலும் மதிக்க வேண்டும். நீதிபதி சதாசிவம் அவர்களை புரட்சித் தலைவர் அவர்கள் நியமிக்கிறார்கள். அதை எப்படி வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். நமக்கு சாதகமாக வருகிறபோது அவரைப் பாராட்டலாம், என்ற போக்கு நிச்சயமாக நீதியை, நீதிபதிகளை மதிப்பதாக இருக்காது என்பதைச் சொல்லி அப்படிப்பட்ட நல்ல உணர்வு நீதிக்காக இருக்கவேண்டுமே தவிர அரசியலுக்காக இருக்கக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ரெவின்யூ கோர்ட் அதிகாரத்தைப் பல அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல எக்ஸிகியூடிவ்விடம் நீதியைப் பரிபாலிக்கிற, நீதியை நிலைநாட்டுகிற மிகப் பெரிய பொறுப்பினை வழங்குவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் ரெக்கார்ட் ஆப் டெனன்சி, கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் புரட்டக்ஷன் ஆக்ட் என்பவை சாதாரணச் சட்டங்கள் அல்ல. ஒருவர் குத்தகைக்காரர் என்று நிரூபித்து விட்டால் அதற்குப் பிறகு நிலத்தின் உரிமை நிலச் சொந்தக்காரருக்கு இல்லாமல் போய்விடுகிறது. அந்த அளவுக்கு மிக முக்கியமான நில்வுடைமைத் தீர்ப்புகளை வழங்குகிற நீதிமன்ற அதிகாரத்தை தாலூகா தாசில்தாரிடம் இன்று கொடுத்திருக்கிறோம் என்றால் நீதிபதி செய்யக்கூடிய பணியை எப்படி தாசில்தார் செய்ய முடியும் என்பதை யோசித்து பலமுறை நான் வலியுறுத்தியதை இந்த நேரத்திலே நினைவூட்ட விரும்புகிறேன். ரெவின்யூ கோர்ட்டுகளில் உள்ள அதிகாரத்தை நீதித்துறைக் கோர்ட்டுகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்த இடத்திலும், வழக்கறிஞர் ஆஜராகக் கூடாது, எந்தச் சட்டத்தில் இருந்தாலும் அதை நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அரசு, ஊட்டிக்கு சென்ற ஆண்டு மாவட்ட நீதிமன்றத்தை வழங்கியிருக்கிறது. ஆனால் அந்த மாவட்ட நீதி மன்றத்தில் நீதிபதிகள், பணியாளர்கள் பணியாற்ற முடியாது. காரணம், தங்குவதற்கு இடவசதிகள் இல்லை. கோர்ட்டிலேயும் எந்தவித வசதியும் கிடையாது. ஊட்டியைப் பொறுத்தவரையில் போதிய இடவசதியும் தங்குவதற்கு வசதிகளும் இல்லாமல் பணியாளர்கள் பணியாற்ற முடியாது. அதனால் அங்கே பணியாற்ற யாரும் முன்வரவில்லை. ஆகவே அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோயம்புத்தூர் பார் அசோசியேஷனிலிருந்து பல முறைகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அங்கே ஒரு ஒருங்கிணைந்த கோர்ட் கட்டடமாக—தொழில் கோர்ட் ஒரு இடத்திலே இருக்கிறது, மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகள் 4 இடங்களில் இருக்கின்றன—இப்படிப் பல இடங்களிலே பல கோர்ட்டுகள் தொலை தூரத்திலே இருப்பதால் வழக்கறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் பல சிரமங்கள் ஏற்படுகின்றன என்ற காரணத்தினாலே அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனித்து கூடுதல் கட்டடத்தை கோவை மாவட்ட நீதிமன்றம் இருக்கிற அதே இடத்திலே கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டுப்பாளையத்திலே முன்சீப் கோர்ட் ஒன்று வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அது தாலூகா தலைநகரமாக இருப்பதால் அவசியமாக, அங்கே முன்சீப் கோர்ட்டை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து திரு. கு. சுப்பராயன், 10 நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கு. சுப்பராயன் :** எனக்கு முன்னாலே பேசியவருக்கு 20 நிமிடங்கள் கொடுத்தீர்கள், எனக்கு மட்டும் ஏன் முதலிலேயே குறைக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16 நிமிடங்கள் தான். 20 நிமிடங்கள் அல்ல. ஒவ்வொருவரும் 10 நிமிடத்தில் முடிப்பதில்லை. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கு. சுப்பராயன் :** பார்ட்டியின் கருத்தைச் சொல்லகூடாதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பக்கம் 134 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அந்த எண்ணிக்கையை வைத்துத்தான் கொடுக்க முடியும். நீங்கள் தினசரி பேச வேண்டுமென்றால் எப்படி நேரம் ஒதுக்க முடியும்? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

***திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துவக்கத்திலேயே இப்படி டைவர்ட் செய்யும் முறையில் பல்வேறு விஷயங்கள் நிகழ்ந்தாலும் கூட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இங்கே மாநில அரசால் முன் வைக்கப்பட்டிருக்கின்ற நீதி நிர்வாகம் பற்றியும் சிறைத்துறை நிர்வாகம் பற்றியும் உள்ள கொள்கைக் குறிப்புகளின்மீது ஒருசில விஷயங்களை முன் வைக்க விரும்புகிறேன்.





குறிப்பாக, நீதித் துறையைப் பொறுத்த வரையிலும், நீதி மன்றங்களின் நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்வி கேட்பதற்குரிய உரிமை இல்லை என்ற முறையில் பலயிடங்களில் ஒடுக்கப்படுவதைப் பார்க்கின்றோம். இங்கே சட்டமன்றத்திலே ஒருவிஷயத்தைப் பற்றி நான் குறிப்பிடுகின்ற பொழுது, ஒரு குறிப்பிட்ட நீதி மன்றத்தைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது, அப்படிக் குறிப்பிடுவதற்கு ஆதாரம் ஏதாவது உண்டா என்ற முறையில் கேட்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் நியாயம் இருக்கிறதா என்று பார்ப்பது டெக்னிக்கலாக வேண்டுமென்றால் ஒருவேளை சரியாக இருக்கலாமே தவிர, சமூகத்தின் தேவையை நிறைவேற்றுவதற்கான மார்க்கமாக அது இருக்காது. ஏனென்றால் இதே ன்றத்தைப் பொறுத்த வரையிலும் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உலை வாயை மூடலாம்? ஆனால் ஊர் வாயை மூட முடியாது என்று சொல்வார்கள். இன்றைக்கு நீதிமன்றங்களில் நீதி வழங்கும் முறைகளைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், துணைத் தலைவராக அமர்ந்திருக்கின்ற தங்களுக்கும், இதே ஆளும் தரப்பிலே அமர்ந்திருக்கின்ற வழக்கறிஞர்கள் பலருக்கும் நிச்சயமாகத் தெரிந்திருக்கக்கூடும். நீதி என்பதிலே நிதியும் சேர்ந்தே வருகிறது. நிதியால் நீதி கிடைக்கும் என்ற அளவிற்கு நீதிமன்றம் மலிந்து போய் விட்டது. இது முறை அல்ல. ஆகவேதான், விமர்சனங்களும், அதிருப்தியும் மக்கள் மத்தியிலே நிலவுகிறது. இந்தத் தேதியில் எனக்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டு கையெழுத்துப் போடுவதற்காக ஒரு குடிமகன் பத்து ரூபாய் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. நீதி மன்றத்தின் கதவுகளுக்குள்ளேயே நீதி சந்தேகிக்கப்படுவதும், நீதி தற்கொலை புரிந்துகொள்ளும் அளவிற்கு நிர்ப்பந்திக்கின்ற கொடுமைகளும் நிறுத்தப்படுகிறதா? சட்டம் முறைப்படி அமலாகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு மிக்க சட்டமன்றம் போன்ற மக்களின் பிரதிநிதித்துவ அமைப்புகள் எதுவானாலும் அந்த முறையில் பிரச்சினைகளை கண்காணிக்க வேண்டும். சட்டம் முறைப்படி அமலாகிறதா என்று கண்காணிக்கின்ற பொறுப்பு இந்த அமைப்புகளுக்கு இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் நாம் பிரச்சினைகளை அணுக வேண்டுமென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப் பார்க்கின்றபொழுது ஆளுங்கட்சி நண்பர்கள் ஒரு சிலர் குறிப்பிட்டார்கள். நீதிமன்றத்தைப் பற்றி நாம் எப்படி விமர்சிக்கலாம் என்று. இப்படி சிந்தனைக்குக் கட்டுத்தறி சட்டிக்கொள்ளாதீர்கள். சிந்தனையை மூளைக் குச்சியிலே கட்டிக்கொண்டு சிந்திக்காதீர்கள். சிந்தனை உலகளாவியது ; சிந்தனை வரம்பிற்கு உட்பட்டது அல்ல; இன்றைய சமூக வளர்ச்சிக் கேற்ப இன்றைய மனிதக் கட்டமைப்புகளை மாற்ற வேண்டிய தவிர்க்க முடியாத அவசியத்தை உணர்த்துகின்ற வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இன்றைய சமுதாயத்தி

னுடைய தேவைகளையும், வேட்கைகளையும் நிறைவேற்றுதற்குரிய தீர்ப்பு வருகிறதா என்பதைப் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பு மக்களால் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற இந்த அமைப்புக்கு உண்டு என்பதை நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

எந்த அளவிற்கு இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். நீதிமன்ற நடைமுறை குறித்து நான் திரும்பத் திரும்பச் சொன்னாலும், நியாயம் கிடைக்கப் போவதில்லை என்றாலும்கூட அது ஏதோ தனிப்பட்ட சட்ட அமைச்சர் பிரச்னை அல்ல; தனிப்பட்ட இந்த மாநில அரசினுடைய பிரச்னை அல்ல என்றுகூட நான் சொல்லவில்லை. இந்த நீதித் துறையைப் பற்றியும், சட்டத் துறையைப் பற்றியும் அடிப்படையிலே முரண்பட்ட ஒரு இயக்கத்தைச் சார்ந்தவன் நான்; இந்த நீதிமன்றமும் சட்டமன்றமும் எப்படி இயங்குகிறது என்பதை உங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட விமர்சனத்தைக் கொண்டவன் நான். அத்தகைய இயக்கத்தைச் சார்ந்தவன் என்றாலும் அவற்றைப் பற்றி இங்கே பேசுவதற்காக அல்ல. அந்த அனுபவத்தின் அடிப்படையிலே இன்றைய சமூகத்தில் ஏற்படக்கூடிய முனகல்களின், ஈனஸ்வரங்களின் அடிப்படையை உணர்ந்து, அவற்றில் தீர்ப்பளிப்பதற்கு எந்த அளவிற்கு முடியும் என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு உதாரணத்தைப் பாருங்கள். 39 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் பிரிட்டிஷ்காரன் விரட்டப்பட்டு விட்டான். ஆனால் இன்றைக்கும் உச்ச நீதிமன்றங்களிலே நீதிபதியை சார் என்று அழைக்க முடிகிறதா? அப்படி அழைப்பதற்கு அரசு தடை விதிக்கவில்லை. அழைக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் நாம் நீண்ட கால அடிமை வாழ்வால் நம்முடைய, சிந்தனையிலேகூட அடிமை உணர்வு தழும்பேறிப் போய்விட்டது. எனவே, வெள்ளையனின் பிரபுத்துவ முறை விரட்டப்பட்டிருந்தாலும்கூட வெள்ளை பிரபுத்துவ முறை புறக்கணிக்கப்பட்டிருந்தாலும் கூட, அதனுடைய மேலாதிக்கத்திற்கு ஆட்பட்டு அந்தச் சிந்தனையிலேயே இருக்கிற வழக்கறிஞர்கள் இன்றைக்கும் அவரை "பிரபுவே" என்று அழைக்க வேண்டிய ஒரு விபத்தும், துர்ப்பாக்கியமும் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. அந்த முறை மாற்றப்பட வேண்டாமா என்பதைப் பற்றி அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். நீதிமன்றத்தின் தீர்ப்புகள் சந்தேகிக்கப்படுகின்றன. என்னுடைய சொந்த அனுபவத்தில், எங்கள் தொழிற் சங்க வழக்குகளில், கீழ்க் கோர்ட்டில் விடுதலை செய்யப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தண்டிக்கப்படுகிறது. தண்டிக்கப்படுவதற்கு என்ன காரணம் என்று நிரூபிக்கப்பட முடியாமல் இருக்கலாம். ஆனால் நியாயம் இப்படி நீதிபதிகளின் பேனா முனையிலே கொல்லப்படுவதை இந்த மன்றம் எப்படி தடுக்கப் போகிறதென்று சிந்திக்க வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். நீதிபதிகள் ஒன்றும் நாடாளுமன்ற அமைப்புக்கு மேம்பட்ட அதிகாரம் படைத்தவர்கள் அல்ல.



(பிற்பகல் 12–30)

நாடாளுமன்ற அமைப்பு வரையறுக்கிற சட்ட நியாயங்களை முறைப்படி மக்களுக்கு வழங்குகின்ற நியாய உணர்வு கொண்டவர்களும் அல்ல, நமக்கு வியாக்கியானம் சொல்கிறவர்களும் அல்ல, நமக்கு மேற்பட்ட அதிகாரம் படைத்தவர்களும் அல்ல. நமக்கு என்ன பொறுப்பு? நாம் வகுத்துத் தந்த சட்ட நியாயங்களை மக்களுக்கு முறையாக அவர்கள் தருவதும் இல்லை. இது எப்படி நடக்கிறது என்றெல்லாம் நான் சொல்லத் தயார். நியாயம் வழங்குவதில் நீதிமன்றங்கள் பொறுப்போடு நடந்துக் கொள்ளவில்லையென்று முணுமுணுப்பு என்னிடம் அல்ல, கடந்த ஒரு வார காலத்திற்கு முன்னால், உச்ச நீதிமன்ற நீதிபதி சொல்கிறார். இன்றைய நீதிமுறை ஏழைகளைப் பாதுகாப்பதாக இல்லை என்று. ஆகவே, இந்த விஷயங்களை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தில் நம்முடைய மாநில அரசாங்கம் சில முயற்சிகளை எடுத்திருந்தாலுங்கூட, அவை காலத்தில் மத்திய அரசால் அனுமதிக்கப்படவில்லை. 1973 ஆம் ஆண்டிலேயிருந்து உயர் நீதிமன்ற ஆயம் ஒன்று மதுரையிலே அமைக்கப்பட வேண்டுமென்ற முயற்சி தொடர்ந்து நடந்து வருகிறது. இப்பொழுது, 1986 இல் இருக்கிறோம். இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது—நம்முடைய உறுப்பினர்கள் தயவுசெய்து கவனித்துப் பார்க்க வேண்டும்— 1973 ஆம் ஆண்டிலே மத்திய அரசுக்கு மதுரையிலே ஒரு ஆயம் வேண்டுமென்று வேண்டுகோளினை வைத்தோம். இப்பொழுது, 1986 பாலிசி நோட்டிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? இன்னும் மத்திய அரசாங்கத்திடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது என்றால், ஏதோ போகிற போக்கிலே வேகமாகப் பேசிவிட்டு போவதற்கா? 13 ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட, இலட்சக்கணக்கான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இந்நிலையை மாற்ற மதுரையிலே ஒரு ஆயம் வைப்பதற்கு இன்றைக்கு வரையிலும் அனுமதி இல்லை. இது மக்களுக்கு மிகமிக விரைவில் நியாயம் வழங்குகிற அரசாங்கத்தினுடைய நடைமுறைதானா என்பதை நாம் பொறுப்போடு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதே போன்றுதான் உச்ச நீதிமன்ற ஆயம் சென்னைக்கு வரவேண்டுமென்கிற நிலைமையும் தொடர்ந்து இருந்துக்கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இன்னொரு விஷயம் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஜாமீன் எடுக்கிற முறையைப் பற்றி தயவுசெய்து உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்த நாட்டில் சொந்த வீடு கூட இல்லாத கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். யாராவது ஒரு பொய் வழக்கு போட்டு, 10 பேர்

களை போலீசார் உள்ளே அடைத்து விட்டால், சொத்து ஜாமீன் கொடுத்தால் தானே அவன் வெளியே வர முடியும். ஆனால் சாதாரண விவசாயி, தொழிலாளி என்ன செய்வான்? அரிசன், என்ன செய்வான்? அவனுக்குச் சொந்த வீடு கிடையாது. சொத்து கிடையாது. காலம் பூராவும் அவனுடைய வழக்கு முடிகிற வரையில் அவன் அந்தச் சிறைச்சாலைக் கூடத்திலேயே சாக வேண்டுமா? இதற்கு ஒரு வழியே கிடையாதா? ஜாமீன் முறையைப் பற்றி தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். இன்றைக்கும் சொத்து கொடுத்தால்தான் ஜாமீன். தயவுசெய்து மனிதனை மதிக்க இந்தச் சட்டத்திற்குக் கற்றுக் கொடுங்கள். மனிதனுக்கு ஜாமீன் இல்லை. இந்தச் செங்கல்லுக்கு ஜாமீனா? கட்டிடங்களுக்கு ஜாமீனா? வெற்றுத் தரைக்கு ஜாமீனா? ஆகவே, இது என்ன நியாயம்? இந்தக் கருத்தினுடைய உள்ளடக்கம் என்னவென்றால், இன்றைய கட்டமைப்பில் பணக்காரர்கள் எந்தக் குற்றத்தைச் செய்தாலும், தப்பித்துக் கொள்ள வாய்ப்பளித்துவிட்டு, ஏழைகளை தண்டிக்கிற முறைதான், இந்த முறை வஞ்சக முறை என்பதால், கிஞ்சிற்றும் இந்த முறையோடு எங்களுக்கு உடன்பாடில்லை என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்ட அமைச்சர் அவர்கள் பேரவையிலே தெளிவாகத் தானிருக்கிறார்கள். பொது நல உணர்வைக் கொண்டவராகத் தான் தென்படுகிறார்கள். இந்த சொத்து ஜாமீன் விஷயத்தில் ஒரு தீர்வு அளிக்க வேண்டும். நிச்சயமாக அவர்கள் பதில் அளிக்கிறபொழுது, சொத்து ஜாமீன் கொடுத்துதான் ஒருவன் வெளியே வர வேண்டுமென்று கிடையாது, நபர் ஜாமீன் கொடுத்தால் போதும் என்ற அளவில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள உறுதியாக முன் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)*

இன்னும் சிறைக்கே வரவில்லை. சிறைத் துறையைப் பொறுத்தவரையிலும், நான் சிறைச்சாலைகளால் பாதிக்கப் பட்ட ஒரு இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே, அதிகமாக இதுபற்றி பேசவேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தாலே, ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன், சிறைச்சாலை எப்படி நடத்தப்படுகிறது? மாண்புமிகு தலைவர் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். உண்மையிலேயே இந்தச் சிறை நிர்வாகத்தைப் பொறுத்த வரையிலும் நான் குறிப்பாக, சுட்டிக் காட்டுவது, சிறை ஒரு மருத்துவ மனையைப் போல, நடத்தப்பட வேண்டும். குற்றம் புரிந்த குற்றவாளிகள், நோயாளிகளைப் போல் நடத்தப்பட வேண்டும். ஆனால், அப்படி நடத்தப்படுவதே இல்லை. நான் தனிப்பட்ட சட்ட அமைச்சர் குறை என்று சொல்லவில்லை, இந்த மாநில அரசாங்கத்தின் குறை என்று கூடச் சொல்லவில்லை, இந்தச் சமூகக் கட்டமைப்பில் இந்தக் குறைகள் நியாயங்களாக நிலைப் பெற்று நடைபெறுகின்றன. இது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.



அடுத்து, இன்னொரு விஷயம், இங்கே எந்த அளவுக்கு நிலைமைகள் மாறிப் போயிருக்கின்றன என்பதையெல்லாம் அரசாங்கம் தன்னுடைய கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருந்தாலும் கூட, இந்தக் குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யாத நிலைமைக்குத் திருந்துவதைப் பார்க்கவும் அவர்கள் நன்மக்களாகி, புது வாழ்க்கை அவர்களுக்குக் கிடைப்பதுதான் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட, நோக்கம் நல்லதாயிருப்பதனாலேயே அது நடைமுறைக்கு வந்து விடாது. நோக்கம் நல்லதாயிருந்தாலும் நடைமுறையில் அப்படி இல்லையென்பதைத் தயவு செய்து நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இங்கே இன்னொரு விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சிறைச்சாலைகளிலே எந்த அளவுக்கு ஊழல் பெருகியிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சில மாதங்களுக்கு முன்னால் திருச்சி மத்திய சிறையில் கண்காணிப்பாளர் பொறுப்பில் இருந்த திரு. சுவாமி நாதன் என்பவர் 200 ரூபாய் லஞ்சம் பெற்றார் ஒரு கைதியிடம் விடுமுறை கொடுக்க என்று பத்திரிகையில் செய்தி வந்தது. செய்தி வந்த ஒரு வாரத்திற்குள் அது மறுக்கப்பட்டு விட்டது. அப்படி என்றால், பத்திரிகையில் வந்தது பொய்யான செய்தி என்றால், அந்த அதிகாரி ஏன் அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கவில்லை. உண்மையில் இப்படி நடந்த நிகழ்ச்சியிலிருந்து தப்புவிக்கப்பட்டிருக்கிறார். என்ன விஷயம்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு விஷயத்தை கடந்த முறையும் சொன்னேன்; இப்போதும் சொல்ல விரும்புகிறேன். 'ஹாபிச்சுவல் பிரிசனர்ஸ்' என்று இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே போடப்பட்டிருக்கிறது. இது நல்லதல்ல. இந்த சமுதாயத்தில் யார் குற்றவாளி? குற்றங்களை இயல்பாகக் கொண்டவர் யார்? மனிதனுக்கு குற்ற உணர்வு என்பது இயல்பானது அல்ல. குற்ற உணர்வு பிறப்பிலே வந்தது அல்ல. சுற்றுச் சார்பிலேதான் ஒருவன் குற்றவாளியாகிறான். உண்மையாகப் பார்க்கப் போனால்,

* *

சிறைக்குள்ளே இருக்கிற குற்றவாளிகள் யாரும் வழக்கமான, நிரந்தரமான குற்றவாளிகள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிட்ட வார்த்தைகள் பொருத்தமானவை அல்ல; அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

திரு. கு. சுப்பராயன் : ஆகவே, தயவு செய்து அடுத்த முறையிலாவது இந்த வார்த்தைகள் கொள்கை விளக்கக் குறிப்பிலே வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அடுத்து, ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கிளைச் சிறைச்சாலைகள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 'அநேகமாக எல்லா கிளைச் சிறைச்சாலைகளிலும் நீரடிக் கழிப்பிடம் அமைக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமைக்கப்பட்டிருக்கிறது என்று சட்டத் துறை அமைச்சரால் சொல்ல முடியவில்லை. அநேகமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? அதிகாரிகள் உப்பரிகையிலே இருந்துக் கொண்டு, ஆங்காங்கேயிருந்து வருகிற அறிக்கைகளை வைத்துக் கொண்டு, இந்த குறிப்பைத் தயாரித்திருக்கிறார்கள். அதிகார வர்க்கத்திற்கு மக்கள்பால் அக்கறையற்ற உணர்வு இருப்பதால்தான் இப்படி அநேகமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மை நிலைமை என்னவென்றால் இந்தக் கிளைச் சிறைச்சாலைகளில் சிறுநீர்க் கழிவு நாற்றத்திலேதான் அந்தக் கைதிகள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பரம்பரைதான் இங்கே ஆளுகிறது—நமக்கு அந்த நம்பிக்கை இல்லை—ஆளுகிறவர்கள் சொல்கிறார்கள். ஆனால் யதார்த்த நிலைமை என்ன என்று பார்த்தால், இன்றைக்கு சிறைச்சாலைகளில் மதக் குருமார்கள் மதப் போதனை நடத்தலாம்; எந்த மதக் குருமாரும் வந்து மதப்போதனை நடத்தலாம். ஆனால் நாஸ்திக போதனை நடத்தக் கூடாதாம். கடவுளைக் கும்பிடு என்று சொல்லலாம்; ஆனால் கடவுளை மறுத்து போதனை நடத்தக் கூடாதாம். ஏன் தடுக்கிறது இந்த மாநில அரசு? அடுத்து, மதச் சார்பற்ற பிரச்சாரம் செய்ய சட்ட அனுமதி உண்டா? சிறைக் கைதிகளுக்கு மதச் சார்பற்ற பிரச்சாரம் செய்வதற்கும் கடவுள் மறுப்புப் பிரச்சாரம் செய்வதற்கும் என்னைப் போன்றவர்களை அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த சிறைத் துறையைக் கவனிப்பதற்கு விசிட்டர்ஸ் இல்லை. இனிமேலாவது இந்த மாநில அரசு அந்தந்த மாவட்ட சிறையிலே கண்காணிப்பு செய்வதற்கு நிரந்தரமாக கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும். அந்தக் குழுவிலே அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டும். பெட்டியை வைத்தால் என்ன நடக்கும் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். குறைகளைத் தெரிவிக்க புகார் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியின் அடிப் பகுதிப் பலகையை ஸ்குரு ட்ரைவர் வைத்துத் திறந்து, அடிப் பலகையை மாற்றிவிட்டு, கைதிகள் போட்ட குற்ற மனுக்களை எல்லாம் எடுத்து விட்டார்கள் ஜெயில் அதிகாரிகள். இப்போது தெரிகிறதா குற்றவாளி யார் என்று? அதனால்தான் இப்படிப் பட்டவர்கள் வழக்கமான குற்றவாளிகள் என்று சொல்கிறேனே தவிர குற்றஞ்சாட்டுவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜெயிலிலே வைக்கப்பட்ட புகார் பெட்டியை



600 008.

உடைத்து, குற்றவாளிகள் போட்ட மனுக்களைத் திருடியவர்கள் அங்கே இருக்கிற அதிகாரிகள்தான். அதிகாரிகள்தான் திருட்டுக் குற்றம் செய்திருக்கிறார்கள். இந்தத் திருட்டைச் செய்தவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்பட வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அவர்களை டிஸ்மிஸ் செய்ய வேண்டும். இப்படிப் பட்ட திருட்டுக்கள் தடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, பஞ்சாயத்து முறை சரியில்லை. குற்றவாளியை தீர்ப்பு அளிக்க அனுமதித்திருக்கிறார்கள். இந்த முறையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு, முடித்துக் கொள்கிறேன். சிறையில் இருக்கின்ற கைதிகளை இனிமேல் அதிகாரிகள் கண்காணிகளாகப் பயன்படுத்தக்கூடாது. தற்போது சிறைத் துறையில் இருக்கின்ற அதிகாரிகள் கைதிகளை முழுக்க முழுக்க இந்த முறைக்குப் பயன்படுத்துகிறார்கள். சிறைத்துறை கமிஷன்கூட, சிறை சீர்திருத்தக் கமிஷன் கூட இதுபற்றி பரிந்துரை செய்திருக்கிறது.

மேலும் கடந்தமுறை பேசும்போதே நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டேன். சிறைகளில் போடப்படும் பத்திரிகைகள் பற்றி. இந்த முறையும் மீண்டும் குறிப்பிடுகிறேன். அண்ணா பத்திரிகை மட்டும்தான் இப்போது போடுகிறார்கள். மற்ற பத்திரிகைகளையும் போட வேண்டுமென்று கடந்த முறையும் சொன்னேன், இப்போதும் சொல்கிறேன். அண்ணா பத்திரிகையை மட்டும் சிறைகளில் போடுவது என்ற உங்களுடைய நடைமுறையை மாற்றி, எல்லா பத்திரிகைகளையும் போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12–40)

*திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மானியக் கோரிக்கைகளின் விவாதத்தில் கலந்துகொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்த வகையில் இந்த விளக்கக் குறிப்பும், இதில் நான் கடந்த ஆண்டு பேசியதும் தான் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. 'The contents in the affidavit may be treated as part and parcel of the written statement' என்று சொல்வார்கள். 25–6–1985 அன்று இந்த மானியக் கோரிக்கையில் நான் என்னென்ன பேசினேனோ அதனையும், அதையே தற்போதும் நான் பேசியதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். அந்தப் பேச்சின்போது

என்னென்ன கோரிக்கைகளை நான் வைத்தேனோ அப்பிரச்சினைகள் அனைத்தும் இன்றும் அப்படியே இருககின்றன. அதே போன்றுதான் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கைக்கானக் கொள்கை விளக்கக் குறிப்பில் என்ன இருந்ததோ அதேதான் இந்த ஆண்டும் வந்திருக்கிறது.

நீதிபதிகளுக்குச் சம்பளம் பற்றவில்லை; அவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டவர்களாக இருக்க வேண்டும் ; அவர்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லாத அளவுக்கு, அவர்கள் வாழ்க்கை வசதிக்கு ஏற்ற சம்பளத்தைக் கொடுக்க வேண்டும்; நான்காவது சம்பளக் கமிஷனில் நீதிபதிகளின் வாழ்க்கைத் தரத்துக்கு ஏற்றவகையில் அமைக்கப்படவில்லை; இவற்றை எல்லாம் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கொள்கை விளக்கங்களைப் பற்றிப் பேசுவதைப் பின்னால் வைத்துக் கொண்டு முதலிலே எங்களுடைய பகுதிகளுக்கான காரியங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மணியடிப்பதைத் தவிர்ப்பதற்காக.

கும்பகோணம் டார் அசோசியேஷன் 100 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவருகிற அசோசியேஷன், 1870-ஆவது வருடத்தில் ஐந்து, ஆறு உறுப்பினர்களுடன் என்ன நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையில்தான் இப்போதும் அந்த இடம் இருக்கிறது. அதே நாற்காலிகள்தான் இன்னும் இருக்கின்றன. அங்கே கிட்டத்தட்ட 110 வழக்கறிஞர்கள் தொழில் நடத்துகிறோம். பெரிய ஜனசமுத்திரம் என்ற வகையில் அந்தச் சிறிய இடத்தில் நாங்கள் இருக்கிறோம். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பே இது பற்றிய கோரிக்கை இந்த அரசுக்கு வைத்து அந்த அடிப்படையில் அங்கே ஒரு பில்டிங் 3.20 இலட்சத்தில் கட்டுவதாக ஒரு அறிவிப்பு தொடர்ந்து வந்துகொண்டு இருக்கிறது. அது பற்றி என்னால் கொடுக்கப்பட்ட ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது நடவடிக்கை எடுக்கப்படும் உடனடியாக என்று அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் 11 இலட்சம் ரூபாய் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

மற்ற விஷயங்களைப் பற்றிச் சொல்லும்போது எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியத்தொகை யானைப் பசிக்குச் சோளப்பொறி என்று சொல்வார்கள். ஆனால், தமிழகத்தில் இருக்கின்ற நீதிமன்றங்கள் அதைச் சார்ந்துள்ள வழக்கறிஞர்கள் சங்கங்கள் ஆகியவற்றின் நிலைமைகளைப் பார்க்கும் போது இந்த 11 இலட்சம் என்பது ஒரு சிறு துளி கூட ஆகாது. எனவே, மாநிலம் முழுவதும் உள்ள வழக்கறிஞர்களுக்கு அவரவர்களுடைய இடங்களில் பார் அசோசியேஷன் உடனடியாக அமைத்து அவர்களுக்கு சேம்பர் வசதியும் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



1973-ஆம் ஆண்டு அரசு குழுவின் பரிந்துரையின் பேரில் 28 அரசு சிவில் நீதிமன்றங்களும் 19 கிரிமினல் நீதிமன்றங்களும் தொடங்க ஆரம்பிக்கப்பட்டன. இன்று கிட்டத்தட்ட 13 வருடத்தில் 27 சிவில் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களைப் புதிதாகத் தொடங்குவது என்பதைப் பொறுத்த வரையில் மிகவும் தாமதமாகத் தொடங்கப்படுகிறது என்பதோடு அவை சரியாக அமையவில்லை. எனவே, தற்போதுள்ள வழக்குகளின் நிலைமையில் பார்த்தால் சிவில் நீதிமன்றங்களும் கிரிமினல் நீதி மன்றங்களும் பற்றாது. ஆகவே புதிதாக, ஒரு கமிஷன் ஏற்படுத்தி தற்போது தமிழகத்தில் உள்ள நிலைமைக்கு எவ்வளவு புதிய நீதிமன்றங்கள் தேவை என்பதை நிர்ணயித்து அந்த அளவில் உடனடியாக ஆரம்பிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்ற ஆண்டு நான் பேசிய போது டைரக்டரேட் ஆஃப் ப்ராசிக்யூஷன் பற்றிக் குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள். இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், ஒரு இறுதியான முடிவு தெரிய வேண்டும்.

வழக்கறிஞர் சேமநல நிதித் திட்டம் கடந்த பல ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அளிக்கும் கொள்கை விளக்கக் குறிப்பில் ஒவ்வொரு ஆண்டும் வருகிறது. ஆனால், சரியான முறையில் முடிவு வரவில்லை. அதனை ஏற்படுத்தி வழக்கறிஞர்களுக்கும், வழக்கறிஞர் குமாஸ்தாக்களுக்கும் நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே, வழக்கறிஞர் சேமநலத் திட்டத்தை இப்போதே அறிவிக்க வேண்டும் ; அந்த வகையில் மாண்புமிகு, அமைச்சர் அவர்கள் தனது முடிவை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே நீதித்துறையைப் பார்த்தால் மிகவும் விசித்திரமாக இருக்கிறது. வழக்கறிஞர்கள் தங்களைப் பதிவு செய்து கொண்டு தங்களுடைய தொழிலைக் கட்டுப்படுத்திக்கொள்ளக் கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ள பார் கவுன்சில் ஆஃப் தமிழ் நாடு இன்று அரசின் மீது உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து இருக்கிறது. அதாவது, அரசினால் நியமிக்கப்பட்டுள்ள அமைப்பினால் குற்றம் சொல்லப்படுகிற அளவுக்கு இந்த மாநில அரசு இருக்கிறது. அந்த அளவுக்கு அரசு தன்னுடைய செயல் திறனை இழந்து எந்த நடவடிக்கையையும் முறையாக செயல் படுத்தாமல் இருப்பது வருந்தத்தக்கது. கண்டிப்பதற்கும் உரியது.

கடந்த பல ஆண்டுகளாக நேரிடையாக டைரக்ட் ரெக்ருட்மெண்ட் என்ற வகையில் பார் உறுப்பினர்களிலிருந்து நீதிபதிகள் தேர்ந்தெடுக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் 1965க்குப் பிறகு 1984 ஆம் ஆண்டு தான் ஜூடிஷியல் செகண்ட்

கிளாஸ் மேஜிஸ்ட்டிரேட்டுக்கு நேரிடையாக தேர்வு செய்து தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் முன்சீப்களைப் பொறுத்த வரையில் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பே அந்தப் பணி நேரிடையாக தேர்ந்தெடுக்கும் பணி ஆரம்பித்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

1965 ஆம் ஆண்டிலேயிருந்தே பல துறைகளிலேயிருந்தும் அவர்கள் சட்டம் படித்திருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் புரொபஷனல் எத்திக்ஸ்லே (Ethics or etiqc tte) தெரியாதவர்களாக இருந்தும் அவர்களை நீதிபதிகளாகப் பதவியில் நியமித்திருக்கிறார்கள். அவர்கள் தவறான முறையிலே பல காரியங்களைச் செய்து......

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) அமைச்சர்களின் இலாக்கா மாற்றம் குறித்து

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், ஆன் ய பாயின்ட் ஆப் ஆர்டர், மற்றும் ஆன் ய பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். மிக முக்கியமான விஷயம். இன்றைக்குக் காலையிலே தமிழக அமைச்சரவையிலே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றும், இலாகா மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றும் தகவல்கள் வந்துக் கொண்டிருக்கின்றன. அது பற்றி ஏதாவது விவரங்கள் இருந்தால், அவைக்கு அறிவித்தால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு அறிக்கையைப் படிக்க இருக்கிறார்கள்.

5. அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி தாம் அப்பொறுப்பிலிருந்து விலக இருப்பது குறித்து அளித்த அறிக்கை

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, இன்று ஆளுநர் பிறப்பித்துள்ள அரசு ஆணையின்படி இதுவரையில் இருந்த தொழிலாளர் நலத்துறை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கு மாற்றப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

என் இனிய தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆணையை ஏற்று கடந்த 1 ஆண்டுக்கும் மேலாக தொழிலாளர் நலத்துறையை என் சக்திக்கு ஏற்றவாறு உளத் தூய்மையோடு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய புகழுக்குப் பெருமை சேர்க்கிற வகையில் நிர்வகித்து வந்திருக்கிறேன். ஆனால், என்ன காரணப் பொறுப்போ திடீர் என்று இந்த மாறுதல் செய்யப்பட்டுள்ளது.



எனது இனியத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தொண்டனாகப் பணியாற்றுவேன் என்ற வகையில், அமைச்சர் பொறுப்பில் நான் ஆற்றியிருக்கிற பணி அவருக்கு நிறைவுத் தரவில்லையோ என இதன் மூலம் நான் அறிவதால், அவர்கள் எனக்கு அளித்திருக்கிற மற்ற அமைப்பு, பொறுப்புகள் எல்லாவற்றிலும் சேர்த்து இது செல்லும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இதன் மூலம் இந்த அவைக்கும் தமிழக மக்களுக்கும் இந்த தீர்க்கமான முடிவைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று மாலை மேதகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து எனது அமைச்சர் பதவி விலகல் கடிதத்தை அளிக்க இருக்கிறேன். நாளை இதே மன்றத்தில் இது குறித்து விவரமான அறிக்கையும் அளிக்க இருக்கிறேன்.

4. வரவு—செலவுத் திட்டம் 1986—87—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம், (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்—தொடர்ச்சி

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற பல துறைகளில் அதிகாரிகளாகப் பதவியில் இருந்தவர்கள், நீதித்துறையிலே தங்களுடைய சட்டப்படிப்பை, மட்டுமே காரணமாகக் கொண்டு நீதிபதிகளாக நியமிக்கப்படும் போது அதனால் ஏற்படும் குழப்பங்கள் பலப் பல என்பதை அனைவரும் அறிவோம். அதிலே ஒரு சின்ன உதாரணம் சொல்ல வேண்டும் என்று சொன்னால், கடந்த ஆண்டு இந்த நீதித்துறை மானியத்திலே நான் பேசியபோது என்பகுதியிலே உள்ள ஒரு குறிப்பிட்ட நீதிபதியைப் பற்றி, அவர் செய்கிற தவறுகளைப் பற்றி எடுத்துக் கூறி விளக்கி. சொல்லியதால், கடந்த ஓராண்டுக் காலமாக வழக்கறிஞர் என்ற முறையில் பல இன்னல்களை நான் அனுபவித்துக் கொண்டு வருகிறேன். என்னை வழக்குரைஞர் பணியைச் செய்வதிலிருந்தே எப்படியும் விலக்கிவிடப் போவதாக சபதம் எடுத்து அந்த நீதிபதி செய்யக்கூடிய அளவுக்கு, செயல்படக்கூடிய அளவுக்கு, நிலைமை இருக்கிறது. ஒரு தனி மனிதர் என்ற முறையில் அந்த நீதிபதியின் செயல் இருக்கிறதே தவிர, ஒரு பொறுப்பான நீதிபதி சமூகத்தின் விமர்சனத்திற்கு ஆட்பட்டவர் என்ற முறையில் அவர் செய்கை இல்லை என இந்தச் சந்தர்ப்பத்திலே நான் உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நேரிடையாக மாவட்ட முன்சீப்களையும் ஜூடிஷியல் செகண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்டிரேட்டுகளையும் நியமிக்காத காரணத்தால், தற்போது பதவியில் இருக்கும் அனைவரும் டெம்பரரி ஜூடிஷயல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்டாகவும், டெம்பரரி முன்சீப்பாகவும் இருக்கிற நிலைமை ஏற்பட்டு வருகிறது.

(பிற்பகல் 12–50)

1986 ஆம் ஆண்டிலே மாநில அளவிலே கிட்டத்தட்ட 19 உயர் மட்ட நீதிபதிகள் ரிடையர் ஆகப்போகிறார்கள். 1987 ஆம் ஆண்டில் நான் அறிந்தவரையில் கிட்டத்தட்ட 40 நீதிபதிகள் ரிடையர் ஆகப்போகிறார்கள். அந்தப் பதவிகளை நிரப்பும் போது இந்த டெம்பரரி முன்சீப்ஸ், டெம்பரரி மாஜிஸ்ட்டிரேடஸ் ஆகியவர்களை எப்படி நீங்கள் புரோமோட் செய்து பணியமர்த்தப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் நிரந்தர நீதிபதிகளாக தகுதியானவர்களாக, எக்ஸ்பீரியன்ஸ்டாக, சர்வீஸ் உள்ளவர்களாக இருந்தால் தான் அவர்களை புரோமோட் பண்ணுவது முறையாக இருக்கும். மற்ற டிபார்ட்மெண்ட்களிலிருந்து வழக்கறிஞர் துறையில் எந்தவிதமான அனுபவமும் இல்லாத நிலையிலிருந்து வந்தவர்களை நீங்கள் உயர் பதவிகளுக்கு அனுப்பி இன்னும் பிரச்சினைகளை உருவாக்கப் போகிறீர்களா ? அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொள்கைக் குறிப்பில் சப் ஜட்ஜ்களை நேரிடையாக நியமிப்பதாக வந்திருக்கிற அறிவிப்பு இதற்கு முன்னால் நான் சொன்னதை சமாளிப்பதற்காகத்தான் என்று நினைக்கிறேன். கடந்த 20 ஆண்டுகளாக நேரடியாக நிரந்தர ஜூடிஷியல் செகண்ட்கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டை நியமிக்காமலும், முன்சீப்புகளை நியமிக்காமலும் இருப்பதற்கான காரணத்தை அரசு முறையாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது பல மாவட்டங்களில் பல பெரிய நீதிபதிகளின் பதவிகள் காலியாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் கிழக்கு தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் பதவி காலியாக இருக்கிறது. மன்னார்குடி, பட்டுக்கோட்டை, திருவாரூர் ஆகிய ஊர்களில் முன்சீப் பதவிகள் காலியாக இருக்கின்றன. கும்பகோணத்தில் புரட்டக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் என்ற நீதிபதி பதவி ஜூடிஷியல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் காலியாக இருக்கிறது. தஞ்சையிலே புரகிபிஷன் கேஸ்களுக்காக தனியாக நியமிக்கப்பட்டுள்ள பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பதவி காலியாக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிகளும், இரண்டு ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட் பதவிகளும் காலியாக இருப்பதாகவும், தகுதியானவர்கள் நியமிக்கப்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

பல மாவட்டங்களில் நீதிபதிகள் பதவி காலியாக இருக்கிறபோது வழக்குகள் தேக்க நிலை ஏற்படாமல் எப்படி இருக்கும் ? ' ஜஸ்டிஸ் டிலேய்ட் இஸ் ஜஸ்டீஸ் டினைட் ' என்று மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் சொன்னார்கள். அதைப் போல வழக்கறிஞர்கள் தயாராக இருந்தாலும் வழக்குகளை நடத்த நீதிபதிகள் இல்லாததால் வழக்குகள் தாமதமாகின்றன.





12—4—1986 அன்று தமிழ் நாடு மாநில பார் கவுன்சில் கூடி மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி தீர்மானிக்கவுள்ளது. அதற்கு முன்னமே பார் கவுன்சில் அரசு சார்புடைய நிறுவனமே போராட்டத்தை அறிவிப்பது என்பது ஏற்பட்டு அதனால் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க அரசு தகுந்த நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இனிமேலாவது ஆண்டுதோறும் வழக்கறிஞர்களிலிருந்து நீதிபதிகள் பதவிக்கு தகுதியானவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறைச்சாலை என்ற பிரிவிற்கு வருகிறேன். சிறைச்சாலை என்பது ஒரு தனி கொடுங்கோல் சாம்ராஜ்யமாக இருந்துவருகிறது. மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் தெளிவாக சொன்னதைப் போல சிறைச்சாலையென்ற அமைப்பே கொடூரமான மக்கள் விரோத சக்திகளை, மக்கள் விரோதிகளை உருவாக்குகிற ஒரு அமைப்பாக இன்றைக்கு தமிழ் நாட்டில் செயல்பட்டு வருகிறது. அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய, தவறுகளை அரசின் கவனத்திற்கும், உயர் அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு வர சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்க வேண்டும். விருப்பு வெறுப்பின்றி அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் நியமித்தால் பல உண்மைகள் வெளி வருவதற்கு வாய்ப்புண்டு. அந்த வகையில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைதிகளை கோர்ட்டிற்கு கொண்டு வருகிறபோது ஒரு மிகப் பெரிய பிரச்சினை வருகிறது. கைதிகள் வெளியே வருகிற போது அவர்களுக்கு கொடுக்கப்படுகிற படித் தொகை மிகவும் குறைவானதாக இருக்கிறது. ஒரு சாதாரண மனிதன் சாப்பிடுகிற அளவு கூட அதில் சாப்பிட முடியாதபடி இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு அளிக்கப்படுகிற படித் தொகையை போதுமான அளவிற்கு உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்து கும்பகோணம் கிளை சிறைச்சாலை, தஞ்சை மாவட்டத்தின் தலைநகராக கும்பகோணம் இருந்த காலத்திலிருந்து, கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கிளைச் சிறைச்சாலை இருக்கிறது. அது புதுப்பிக்கப்பட வேண்டும். சீரழிந்து இருக்கிறது. அதேபோல் திருவிடைமருதூர் கிளைச் சிறைச்சாலை தற்போது பயனற்று இருக்கிறது. அதுவும் சீரழிந்து இருக்கிறது. அதையும் புதுப்பிக்க வேண்டும். அடுத்து பாபநாசத்திலே உள்ள கிளைச் சிறைச்சாலையும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

அடுத்து வழக்கறிஞர்களின் நிலை பற்றி ஒரு வார்த்தை. கோர்ட்டிலே உள்ள அனைத்து நாற்காலிகளும், மேசைகளும் மோசமாக உடைந்து பயன்படுத்த இயலாமல் இருக்கின்றன. வழக்கறிஞர்களுடைய கோட்டுகளையும், கவுன்களையும் அவைகள் கிழித்து விடுகின்றன. இதைப்பற்றி சென்ற ஆண்டு நான் பேசினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைகள் உடன்டியாக மாற்றப்படும் என்றும், புதிய நாற்காலிகள், மற்றும் மேஜைகள் வாங்கப்படும் என்று உறுதிமொழி சொன்னார்கள். அந்த உறுதிமொழியை இந்த ஆண்டாவது நிறைவேற்றி, வழக்கறிஞர்களுக்கு ஓரளவிற்கு வசதிகளை உண்டாக்கித் தருமாறு வேண்டி கேட்டுக்கொண்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதிமூன்றாவது, பதினான்காவது மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. 2, 3 நிமிடங்கள் மட்டும்தான் எடுத்துக் கொள்ளப் போகிறேன். வழக்கறிஞர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் நானும் ஒருவன் என்ற காரணத்தால், வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் கத்தரிக்கோலில் உள்ள இரண்டு கத்திகள் போல் ஒருவரையொருவர் வெட்டிக்கொள்கிற வகையில் இருந்தால் நீதி தேவனுடைய ஜீவநாடி அறுந்துபோகும் என்று சொல்வார்கள். ஆகவே, வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் ஓரே நுகத்தில் கட்டப்பட்ட இரு காளைகள் போல் இருக்க வேண்டும். அந்த இரண்டு காளைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் அவைகள் கட்டப்பட்டுள்ள அந்த ஏரை இழுத்துச் சென்றால்தான் சமுதாயம் என்ற வயல் உழுது, சாகுபடி செய்யப்பட்டு, அங்கே அநீதி என்ற களை ஏற்படாமல் பாதுகாக்கப்படும் என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய வழக்கறிஞர்கள் கடந்த 31 ஆம் தேதி அவசரமாக அவர்களுடைய சங்கப் பொது குழுவைக் கூட்டி, ஓரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். அந்த தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிற அவர்கள் வருகிற மாதத்தில் ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் உள்ள வழக்கறிஞர்கள் சேர்ந்து ஒரு போராட்டத்தை நடத்தப் போவதாகவும் எந்தவிதமான சமரசத் திட்டத்தையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவது இல்லை என்றும் அறிவித்து இருக்கிறார்கள்.

1966 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு அரசு துறைகளில் இருந்து பெறப்பட்டு பணியமர்த்தப்பட்ட தற்காலிக மேஜிஸ்ட்ரேட்டுகளை, குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிபதிகளையும் குற்றவியல் முதல் வகுப்பு நீதிபதிகளையும் நிரந்தரமாக்கக் கூடாது என்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை வைத்து அவர்களை நிரந்தரப்படுத்துகிற அந்தப் பணியில் அரசாங்கம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டால், தமிழ்நாடு தழுவிய போராட்டம் என்று அவர்கள் ஒன்றை நடத்தப்போவதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்கின்ற வகையில் நம்முடைய மேஜிஸ்ட்ரேட்டுகளுடைய சங்கம் கூடி, எங்களை நிரந்தரப்படுத்தவில்லை என்றால், நாங்கள் மட்டும் போராடப்போவதில்லை, எங்களோடு பல்வேறு பணியாளர் சங்கங்களைச் சேர்ந்த, 7 லட்சம் பேர்கள் சேர்ந்து போராட்டம் நடத்தப்போகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கத்தின் மீது வழக்கு தொடரப்போகிறோம் என்று அவர்கள் மிரட்டியிருக்கிறார்கள். ஆக, இரண்டு பேர்களும் ஒரே ஏரில் பூட்டப்பட்ட இரண்டு காளைகளாக சேர்ந்து செயல்பட வேண்டிய இரண்டு காளைகளும் ஒன்றுக்கொன்று மோதுகிற சூழ்நிலை இருக்கிறது.



ஆசிரியர்கள் பிரச்சினையை இந்த அரசாங்கம் தீர்த்து வைத்தது. ஆனால் காலம் கடந்து செய்த காரணத்தால், இதனால் ஏற்பட்டுப் போன அந்த களங்கம், அந்த கறை இன்றைக்கும் மாறவில்லை. அதேபோல் மீனவர் பிரச்சினை தீர்க்கப்பட்டாலும் கூட, காலம் கடந்து தீர்க்கப்பட்ட காரணத்தால், அதனால் சமுதாயத்திற்கு பல பேரிழப்புகள் ஏற்பட்டது என்பதை அரசாங்கம் மறந்து இருக்காது.

அதேபோல் வழக்கறிஞர்களுக்கும் நீதிபுதிகளுக்கும் இடையில் ஏற்படுகிற இந்தப் பிரச்சினையை உடனடியாக அரசாங்கம் ஒரு தீவிரமான பிரச்சினையாக ஒரு அவசரப் பிரச்சினையாக கருதி, இரண்டு தரப்பாளரையும் அழைத்து வைத்துப் பேசி, ஒரு தீர்க்கமான முடிவை, சமரச முடிவு ஏற்படுவதற்கு அரசாங்கம் முயல வேண்டும். அந்த சுமுகமான முடிவு, சமரச முடிவை மேற்கொள்கிற போது, இரண்டு பேர்களையும் உடனடியாக அழைத்து வைத்துப் பேச வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

இதுவரையில் நியமிக்கப்பட்ட நீதிபதிகளை நிரந்தரமாக்கிவிட்டு, இனிமேல் நியமிக்கப்படுகிற நீதிபதிகளைத் தேர்வாணைக் குழு மூலமாக தேர்வு செய்து நியமிக்கப்படும் ஒரு நிலையை அரசாங்கம் மேற்கொண்டு, அதை வற்புறுத்துகிற வகையில், அந்த சமரசத் திட்டம் அமையுமானால், பல்வேறு பிரச்சனைகள் ஏற்படாமல் நாம் தவிர்க்க முடியும். வழக்கறிஞர்கள் சங்கம் சொல்வதுபோல், பணியில் இருக்கக்கூடிய அந்த மேஜிஸ்ட்ரேட்டுகளை ' நாட் குவாலிபைட் ' என்று பதவி நீக்கம் செய்தால், அவர்களை பதவி நீக்கம் செய்த பிறகு, அவர்கள் பதவியில் இருந்தபோது வழங்கிய தீர்ப்புகள், பல்வேறு ஆணைகள் எல்லாம் சட்டத்தில் செல்லுபடியாகுமா ? என்ற பிரச்சினையும் , அதன் காரணமாக பல்வேறு வழக்குகள் ஏற்பட்டு, அந்த தீர்ப்புகளின் மூலமாக பாதிக்கப்பட்டவர்கள் அதனால் மனச் சோர்வு ஏற்பட்டு, நீதி மீது, நீதி நிர்வாகத்தின் மீது அவர்கள் நம்பிக்கை இழக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே பிற்காலத்திலே அப்படிப்பட்ட நிலைமை ஏற்

படாமல் தடுப்பது நம்முடைய அரசாங்கத்தின் கடமை என்பதை மனத்திலேகொண்டு உடனடியாக ஒரு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட குற்றவியல் முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் நடுவர் இல்லாமல் கடந்த ஓர் ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது. எனவே அங்கே நடுவரை உடனடியாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு; பத்மநாபபுரம் அடிஷனல் முன்சீப் கோர்ட்டிலே நீதிபதி இல்லாமல் காலியாக இருக்கிறது. அந்தகாலி இடத்தையும் உடனடியாக நிரப்பி மக்கள் குறை தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-00)

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலை நிருவாகத்தினுடைய மானியம் மீது ஜனதா கட்சியின் சார்பாக கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி எனது உரையை துவக்குகிறேன்.

நீதிநிருவாகத்தைப் பொறுத்த அளவில், உயர்நீதிமன்றத்திலே 4 நீதிபதிகள் குறைவாக இருக்கிறார்கள். சிவில் நிர்வாகத்திலே 61 ஜட்ஜ்கள் குறைவாக இருக்கிறார்கள். இன்னும் பல்வேறு முன்சீப் கோர்ட்களிலும், மற்ற கோர்ட்டுகளெல்லாம் நீதிபதிகள் இல்லாமல் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கே எடுக்கப் படுகின்ற வழக்குகள் உடனடியாக அங்கிருக்கக்கூடிய கிளார்க்குகளினால் தள்ளிப்போடப்படுகின்றன. மாவட்ட நீதிமன்றங்கள் மொத்தம் 17 இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது இருக்கின்ற மாவட்டங்கள் எண்ணிக்கை 21,22 என்று நினைக்கிறேன். மற்ற இடங்களில் நீதிமன்றங்கள் வரவில்லை. உதாரணமாக, காமராஜர் மாவட்டத்திலே நீதிமன்றம் அமைக்கப்படவில்லை, ஆனால் காமராஜர் மாவட்டம் அமைக்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகிறது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லியும்கூட, அவர் மூடித்து வைக்கிறேன், திறந்து வைக்கிறேன் என்று சொல்கிறாரே தவிர, வாடகைக்கு ஒரு கட்டிடத்தை எடுத்தும் அவர்கள் அந்த வேலைகளை தொடங்காமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்குள்ள வழக்கறிஞர்களெல்லாம் அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் சந்திப்பதற்காக இங்கு வர இருக்கிறார்கள் என்பதை இங்குள்ளவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே, 1983, 1984, 1985 ஆம் வருடங்களின் வழக்குகளைப் பார்க்கும்போது, அந்த வழக்குகளின் ,எண்ணிக்கையே குறையவில்லை. சென்னை உயர்நிநீதி மன்றத்திலே சிவில் வழக்குகள் 1983 ஆம் ஆண்டிலே பெண்டிங்காக இருந்தவை 1,500. தற்சமயம் 3,000 ஆக இருக்கிறது. சப் கோர்ட்டில் 1983 பெண்டிங்காக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை



12 ஆயிரம் ; ஆனால் இப்போது 15 ஆயிரமாக ஆகியிருக்கிறது. பல்வகை வழக்குகள் என்ற இனத்தில் 24 ஆயிரமாக இருந்த வழக்குகள் தற்போது 32 ஆயிரமாக இருக்கிறது. மாவட்ட முன்சீப் கோர்ட்டில் 83 ஆம் ஆண்டில் சிவில் கேஸ் பெண்டிங் 1 இலட்சத்து 16 ஆயிரம் இருந்தது. இப்போது 1985 ஆம் ஆண்டில் 1 லட்சத்து 27 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. சிவில் பல்வகை வழக்குகளின் எண்ணிக்கை 99 ஆயிரம் இருந்தது. இப்போது 1 லட்சத்து 14 ஆயிரமாக இருக்கிறது. இந்த வழக்குகளின் எண்ணிக்கை உயர்வு, நீதிபதிகளின் எண்ணிக்கைக் குறைவைக் காட்டுகிறதா அல்லது நீதிபதிகள் சரிவர தங்கள் கடமையைச் செய்யவில்லை என்பதைக் காட்டுகிறதா என்று அறியப்பட வேண்டியிருக்கிறது.

கிராமங்களில் உள்ள மக்கள் ஜாமீன் கேஸ்களினால் மிகவும் பாதிப்புக்குஉள்ளாகிறார்கள். காவல்துறை அதிகாரிகளால் ஜாமீன் கேஸ்கள் போடப்படுகின்றன. ஆனால் ஜாமீன் கேஸ்கள் உடனுக்குடன் நடத்தப்படாமல் அந்தக் கேஸ்களுக்கு வாய்தா கொடுத்துவிடுகிறார்கள். உதாரணமாக கிராம மக்களை இந்த ஜாமீன் கேஸ் விஷயமாக 6 மாதம், 1 வருடம் அலைய விடுகிறார்கள். இவ்வாறு வாய்தா கொடுக்கப்படுவதனால் அந்த அப்பாவி மக்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் நீக்குவதற்கு உடனுக்குடன் ஜாமீன் கேஸ்களை விசாரணை செய்ய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்றும், அதற்குரிய தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். சிவில் வழக்குகளை எடுத்துக்கொண்டால். அவைகளிலும் மிகமோசமான நிலைமை இருக்கிறது. பல சாட்சியங்களை அவர்கள் விசாரிக்கவேண்டியதிருக்கிறது. ஒரு சாட்சியை விசாரணை செய்தவுடன் 15 நாட்களுக்கு அந்த வழக்கை வாய்தா கொடுத்து தள்ளிப் போட்டு விடுகிறார்கள். மீண்டும் அடுத்த சாட்சியங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். இவ்வாறாக ஒவ்வொரு சாட்சியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்வதானால் 4, 5 மாதங்கள் இதற்காகவே ஆகிவிடுகிறது. இதனால் அப்பாவி கிராம மக்கள் கோர்ட் பக்கம் வந்ததே தப்பு என்று நினைக்கக் கூடிய அளவுக்கு நிலைமையை உண்டாக்கி விடுகிறார்கள். இதையெலலாம் இந்த அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வழக்கு சம்பந்தமாக கோர்ட்டுகளுக்கு வரும் மக்களுக்குத் தங்கும் வசதி கிடையாது. தெருக்களிலும், கோர்ட் வராண்டாவிலும் தங்கவேண்டிய ஒரு அவல நிலை இருக்கிறது. ஆகவே வழக்கு சம்மந்தமாக வரும் ஏழை எளிய மக்கள் அங்கே தங்குவதற்கு வசதி செய்துதர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தீர்ப்புகள் தமிழிலே எழுதப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழிலும் தீர்ப்புகள் எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழில் தீர்ப்புகள் எழுதப்படுவதில்லை. மூன்று மாதத்திற்கு முன்புகூட ஆங்கிலத்தில்தான் தீர்ப்பு வந்திருக்கிறது. மக்களுடைய இன்றைய நிலைமையை அனுசரித்து தமிழிலே தீர்ப்பு எழுதப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அதுவே மக்களுக்குச் சிறப்புடையதாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் 14 ஆண்டுகள் கூட சிறையில் இருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு விடுதலை கொடுக்கப்படவில்லை. ஒரு கமிட்டி வைத்திருக்கிறார்கள். 10, 11 ஆண்டுகள் ஆனவுடனே கைதிகளை வெளியே விட்டுவிடுவதாக செய்தி வந்திருக்கிறது. அந்த கைதிகள் என்னிடம் புகார்கள் கொடுத்தார்கள். நாங்கள் சென்று பார்க்கும்போது நாங்கள் 14 வருடமாக இருக்கிறோம் விடுதலை செய்யவில்லை என்ற புகார்கள் எல்லாம் சொன்னார்கள். நீங்கள் அதை எல்லாம் முறையாக உடனடியாக அனைவருக்கும் பொதுவான சட்டமாக அதை வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கமிட்டி போட்டு முறையாக நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைதிகளைப் பார்ப்பதற்கு வரும் பார்வையாளர்களிடம் கெடுபிடி பயங்கரமாக இருக்கிறது. பார்வையாளர்களைப் பார்க்க நேரம், காலம் எல்லாம் பார்த்து, விடுகிறபோது அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பார்ப்பதற்கு கிராமத்தில் இருந்து வருகிற மக்கள் ஏழைகள், பெண்கள், தாய்மார்கள் எல்லாம் தங்கள் உறவினர்களை வந்து பார்ப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. கம்பியின் அந்தப் புறமும், கம்பியின் இந்தப் புறமும் இருந்து குழந்தைகள் பார்க்கும்போது தன்னுடைய தந்தையையும், அண்ணனையும் சித்ரவதை செய்கிறார்கள் என்பது அந்த குழந்தையின் மனதில் பட்டு அப்போதே ஒரு வெறி ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. கைதிகளைப் பார்க்கும்போது ஒரு சுமுகமான முறையில் பார்ப்பதற்கு நீங்கள் வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகள் வசதிகள் பற்றி சொல்லும்போது, அந்த சிறைச்சாலைகள் ஆங்கிலேயர் காலத்தில் இருந்தது போலவே இருக்கிறது. சுகாதார வசதி இல்லை, உணவு வசதி இல்லை, தண்ணீர் வசதி இல்லை. எந்த விதமான வசதியும் அங்கே இல்லை, அதை எல்லாம் முறையாக சரி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல் உணவு மாலை 6 மணிக்கு முன்பாக கொடுத்து அவர்கள் உள்ளே அடைக்கப்பட்டு விடுகிறார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை. அவர்கள் சாப்பிடுவதற்கு வைத்திருக்கக்கூடிய சரியான நேரம் இரவு 8 மணி என்று நினைக்கிறேன். இந்த 8 மணிக்கு சாப்பாடு போட்டு அதன் பிறகு அவர்களை அவர்களுடைய இருப்பிடத்திற்கு அனுப்புவது நலமாக இருக்கும்.

அதேபோல் கைதிகள் வேலை பார்க்கிறார்கள். முறையாக வேலை வாங்குகிறார்கள். ஆனால் ஒரு நாளைக்கு 1 ரூபாய் சம்பளம் தான் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு உரிய சம்பளத்தைக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளுக்கு வேண்டுமென்றே செல்லுகிறார்கள். அவர்கள் கட்சிகளுக்காக போராட்டம் நடத்தி கைதிகளாக செல்லுவதால் தப்பிச் செல்ல விரும்பமாட்டார்கள். ஆகவே அவர்களை திறந்த வெளிச் சாலைகளில் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் கைதிகளுக்கும் இதே கொடுமைகளைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கைதிகளை கோர்ட்டுகளுக்கு அழைத்துச் செல்லும்போது விலங்கை மாட்டி அழைத்துச் செல்கிறார்கள். சாதாரண குற்றவாளிகளைக் கூட விலங்கைமாட்டி அழைத்து செல்லுகிற ஒரு அவமரியாதையை இந்த அரசு உடனடியாக தடுக்கவேண்டும் என்று கேட்டு எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், தமிழ்நாடு சிறைச்சாலைகள் நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரவிந்திரன், திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உரையை தொடர்ந்து நான் கொடுத்து இருக்கின்ற வெட்டு தீர்மானங்களை வலியுறுத்தி எதிர்க்கட்சி அணியின் உரையை நிறைவு செய்கின்ற வகையில் என்னுடைய ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக இந்த மன்றத்தில் சொல்லப்பட்ட ஒரு கருத்து பல்வேறு வழக்குகள் பல ஆண்டுகளாக தாமதம் ஆகிக்கொண்டு இருக்கின்றன என்று. எனவே வழக்குகள் நீதி அளிப்பதிலே நியாயம் கொடுப்பதிலே விரைவாக வழங்கவேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டு இருக்கிறது. நான் கூட சில நாட்களுக்கு முன்னால் ஒரு செய்தியை பார்த்தேன். நம்முடைய நீதிமன்றம் இதே முறையில் இயங்கிக்கொண்டு இருக்குமானால்

இன்றைய தேதியில் புதிய வழக்குகளை எடுக்காமல் பழைய வழக்குகளை மட்டும் எடுத்து தீர்ப்பு சொல்வதற்கே கி. பி. 2018 ஆண்டு ஆகும். இந்த பழைய வழக்குகளுக்கே தீர்ப்பு சொல்லுவதற்கு அவ்வளவு காலம் ஆகும் என்று உச்ச நீதிமன்ற செய்தியை நான் பார்த்தேன். விரைவாக நீதி மன்றத்தின் எண்ணிக்கையை கூட்டவேண்டும், நீதிபதிகளின் எண்ணிக்கையையும் கூட்டவேண்டும் என்ற கருத்து ஒரு புறம் இருந்தாலும் திறமையான நடுவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே நீதித்துறையிலே ஏறத்தாழ 250-க்கும் அதிகமான பதவிகள் இன்றைக்கு நிரப்பப்படாமல் இருக்கிறன. இந்த செய்தி சில நாட்களுக்கு முன்னால் பரபரப்பாக பேசப் பட்டது. Subordinate Judge, District Munsif Judicial, First Class Magistrate போன்ற பல்வேறு பதவிகள் பல மாதமாக நிரப்பப் படாமல் இருப்பதால் இன்றைக்கு ஆயிரக் கணக்கான வழக்குகள் தேங்கியிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலமாக 33 டிஸ்ட்ரிக்ட் முனிசீப் பதவிக்கான நேர்முக தேர்வு 1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது. ஆனாலும் கூட பல மாதங்கள் ஆகியும் கூட அந்த பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் 67 பதவிகளில் 50 பதவிகள் நிரப்புவதற்கு உத்திரவு போட்டதாக சற்று முன்னால் சொன்னார்கள். ஆக இது போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதற்கு ஏன் அதிக அனாவசியமான கால தாமதம் ஏற்படுகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–10.)

அதைப்போலவே டிஸ்ட்ரிக்ட் செஷன் ஜட்ஜ் (செகன்ட் கிரேட்) மூன்று பதவிகள் நிரப்பப்படவேண்டுமென்று 16–12–1982-ல் அரசு ஒரு அறிவிப்பு கொடுத்தது. 31–12–1982-ஆம் தேதிக்குள் மனு செய்யவேண்டுமென்று ஒரு தேதியை ஒரு காலக் கெடுவை கொடுத்திருந்தார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி, 5,000-க்கும் அதிகமான பேர்கள் மனு செய் திருந்தாலும், அதற்குத்தேவையான எல்லா நிகழ்ச்சிகளும் முடிவடைந்ததற்குப் பிறகும், ஒருவரையும் தேர்வு செய்யாமல் மீண்டும் அதே பதவிக்கு 16–4–1985 என்று ஒரு தேதியை நிர்ணயித்து, கால நீடிப்பு செய்யப்பட்டதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்த 3 பதவிகளுக்கு 500 பேருக்கு மேல் அனுப்பப்பட்டும், 3 பேரைக் கூட தேர்ந்தெடுக்க முடியவில்லை என்பதற்கு என்ன காரணம் என்பது



எனக்கு விளங்கவில்லை. அதைப்போலவே அண்மையிலே நடுவர்களை நியமிப்பதிலே 33 பேர் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் தேர்வு என்று தெரிகிறது. ஆனால் அமைச்சர் அதிகமாகச் சொன்னார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதிலே பல முறைகேடுகள் நடந்திருப்பதாக தமிழகம் முழுவதும் பரவலாக பேசப்பட்டது. எனவே உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களை கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தேர்வுக்கான நடுவர்களைத் தேர்ந்தெடுப்பதிலே முறைகேடுகள் இருக்கிறதா, இல்லையா என்று பார்ப்பதற்கு ஒரு நீதி விசாரணை, ஒரு பரவலான விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே நடுவர்களைத் தேர்வு செய்வதற்கு எப்படி, ஐ. ஏ. எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பதவிகளை தேர்ந்தெடுப்பதற்கு நாம் ஒரு சரியான குழுவினை வைத்திருக் கிறோமோ, அது போலவே ஐ. ஜே. எஸ். இண்டியன் ஜுடிசியல் சர்வீஸ் என்று சொல்லி ஒரு நல்ல அமைப்பை உருவாக்குவீர் களேயானால், திறமையான நடுவர்களும், நீதிபதிகளும் நமக்குக் கிடைப்பதற்கு அரசாங்கம் முனைந்து செயல்பட முடியும். இது தேசம் முழுவதும் இருக்கிற நிலையாக இருந்தாலும் கூட, மாநில அளவிலாவது ஒரு உயர் கமிட்டியை அமைத்து, அதன் மூலமாக நடுவர்களை தேர்ந்தெடுக்கவேண்டும். ஏதோ சர்வீஸ் கமிஷனிலே இருக்கின்ற ஒரு உறுப்பினரோ அல்லது ஒரு நீதிபதியோ நடுவர்களுக்கான அந்தத் தேர்வை நிர்ணயம் செய்துவிடமுடியாது. அப்படி அதைச் செய்ய முடியாத காரணத்தால்தான், ''தெர் இஸ் நோ வெல் இன் தி வாட்டர்' என்று தீர்ப்பு எழுதப்படக்கூடிய அளவிற்கு இன்று நிலைமையும் வாய்ப்பும் இருக்கிறது. அதைப்போலவே இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னாலேயே வலியுறுத்திச் சொல்லப்பட்ட கருத்து.

வழக்கறிஞர் நல நிதி என்று ஒன்று உருவாக்க வேண்டு மென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூட பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு கருத்து இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் 1981-ஆம் ஆண்டில சொல்லப்பட்டது. இந்தியாவிற்கு முதன் முறையாக தமிழகத்தில் சொல்லப்பட்ட கருத்தை மாண்புமிகு அமைச்சர் ஏற்றுக்கொண்டார் என்று கருதுகிறேன். ஏற்றுக்கொண்டபிறகு அதை நடைமுறைப்படுத்தாத காரணத்தால்,—கேரளா, மகா ராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் எல்லாம் இதுமாதிரி வழக்கறிஞர் நல நிதி உருவாக்கப்பட்டிருக்கிறது;—வழக்கறிஞர்கள நல நிதி உருவாக்குவதில் அரசாங்கத்திற்கு ஒரு காசு கூட, செலவு கிடையாது. அதிலே வழக்குகள் வருகின்ற நேரத்திலே ஒரு வக்காலத்துக்கு ரூ. 2 நாமினலாக செலுத்து வார்களேயானால், வழக்கறிஞர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 செலுத்துவார்களேயானால், 'குருப் இன்ஷ்யூரன்ஸ்' மூலமாக

அந்த பாதுகாப்பு ஏற்பாட்டை செய்யமுடியும். வழக்கறிஞர் திடீரென்று இறப்பாரேயானால், அந்த நிதியின் மூலமாக, இன்ஷ்யூரன்ஸ் மூலமாக ரூ. 20,000, ரூ. 30,000 வழங்கப்படக் கூடிய பாதுகாப்பு இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மாநிலச் சட்டக் கமிஷன் ஒன்றையும் அரசு அமைத்து, இதுவரைக்கும், தமிழக அரசு எத்தனையோ சட்ட முன்வடிவுகளிலே சட்ட திருத்தங்களை கொண்டுவந்திருக்கிறது. அந்த வரிசையிலே சொல்கின்ற அளவிற்கு, இது முறையாக அலங்கோலத்திலே, அவசரக் கோலத்திலே அவர்களிடம் பல்வேறு சமயங்களிலே இங்கே சொன்னாலும் கூட, முறையாகக் கொண்டு வராத காரணத்தால், உச்ச நீதிமன்றத்திலே நம்முடைய சட்டங்கள் தள்ளாடுகின்ற நிலையில் நாம் பல்வேறு நிலைகளில் பார்த்து வருகிறோம். எனவே மாநில சட்டக் கமிஷன் ஒன்றை அமைத்து அதன்மூலம் அத்தனை சட்டங்களிலுள்ள ஓட்டை உடைசல்களை சரிப்படுத்தி அடைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு நீதிமன்றங்களில் அடிக்கடி வாய்தாக்கள் கொடுக்கின்ற ஒரு வழக்கம் இருக்கிறது. அதனால் பல இலட்சக்கணக்கான வழக்குகள் பல ஆண்டுகளாக தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் இந்த முறையை குறைக்க வேண்டும். வேண்டுமானால் அரசு ஊழியர்கள் சம்பந்தமான வழக்குகளுக்கு, அவர்களுக்கான நீதிமன்றங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், தனியாக ஒரு ட்ரிபியூனல் கூட அமைக்கலாம் என்ற ஆலோசனையை இந்த அரசுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பல்வேறு துறைகளில் பிற நீதிமன்றங்களில் நடுவர்களாக நியமிக்கப்படுபவர்களில் அவர்கள் செவ்வனே பணி புரிந்தாலும்கூட, அவர்களுடைய நியமனத்திற்கு எந்த விதமான இடைஞ்சலும் செய்யாமல் தொடர்ந்து அவர்கள் பணியை ஏற்றுக்கொண்டு, புதியதாக பணியாற்றுகிற நடுவர்களை நியமிக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் திருமங்கலத்தில் ஒருவர் காரைக்குடியிலிருந்து சாக்கோட்டை பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் ஆபீசராக பணிபுரிந்து வந்தார். 4–3–1975 ஹைகோர்ட் நோட்டிபிகேஷன்படி 36/75-ல் திருச்சி நீதித்துறையில் இரண்டாம் வகுப்பு நடுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பின்னர் ஆர். ஓ. சி. 2/82 இ. 1. படி முதல் வகுப்பு நடுவராக 29–4–1982 இல் பதவி உயர்த்தப்பட்டு நாகர்கோவிலில் அவர் பணியாற்றினார். பின்னர் ஆர். ஓ. சி. 43/82 இன்படி ஜுலை 1982-ல் ஜில்லா முன்சீப் பதவி உயர்வுபெற்று குளித்தலையிலே பணியாற்றினார். பின்னர் ஆர்.ஓ.சி. 20/85 இன்படி 13–5–1985 இல் திருமங்கலத்தில் முன்சீப்பாக டிரான்ஸ்பர் செய்யப்பட்டார். அவருடைய பணியில் நாளது தேதிவரையில் எந்தவிதக் குறையும்



இல்லாமல் அவர் பணிகளை மேற்பார்வையிட்ட அதிகாரிகள் எல்லாம் திருப்திகரமாக இருக்கிறது என்று பல சமயங்களில் சான்று கொடுத்தும்கூட 14–3–1986 அன்று அவர் பேரன்ட் டிபார்ட்மென்டிற்குச் செல்ல வேண்டுமென்று மாற்றப்பட்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது பல ஆண்டுக்காலமாக ஒரு துறையிலே பணியாற்றிப் பல பதவிகளுக்கு உயர்த்தப்பட்டவர் பணிக் காலத்திலே எந்த விதமான அப்பழுக்கும் இல்லாமல் பணியாற்றியவருக்கு, அரசாங்கம் கொடுக்கிற வெகுமதியா இது என்று கேட்க விரும்புகிறேன். சாதாரணமாக கடைகளிலே வேலை பார்க்கும் சிப்பந்தி 10, 11 ஆண்டுக் காலம் வேலை பார்த்தவரைச் சொல்வதுபோல் பல ஆண்டுக்காலம் பணியாற்றியவரை நீ அந்த இலாகாவிற்குப் போ என்று சொல்வது என்ன நியாயம்? அரசாங்கம் இதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். இல்லையானால் மீண்டும் அவரை அதே பதவியில் நியமிக்க வேண்டும். எதிர்காலத்திலே அந்தமாதிரி நடக்காமல் இருக்கக்கூடிய முறையிலே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதிமன்ற நடுவர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற ஊதியத்தைப்போல் இன்னொரு மடங்கு அதிக ஊதியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு விலைவாசிகள் உயர்ந்து வருகின்ற நேரத்திலே நிச்சயமாக அவர்கள் நல்ல முறையிலே நேர்மையாக பணியாற்றுவதற்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இரண்டாம் வகுப்பு நடுவர் மன்றங்களை ஒழித்துவிடலாம். குறைந்தபட்சம் தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் வீதம் அமைத்து அந்த நடுவர்கள் நீதிமன்றத்திலே சிவில், கிரிமினல், வழக்குகளை விசாரிக்கிற அதிகாரத்தைக் கொடுக்கலாம் என்ற யோசனையை நான் சொல்லவிரும்புகிறேன். முன்பு எல்லாம் இரண்டு மாதங்களுக்குள் கிரிமினல் வழக்குகள் முடிவடைய வேண்டும் என்று இருந்த நிலை மாறி இப்போது வருடக் கணக்கில் நிலுவையில் வழக்குகள் இருக்கிற நிலையை உத்தேசித்து வழக்குகளை துரிதமாக பைசல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களுக்கு இருக்கிற கட்டடங்கள் பற்றி நான் சொல்லவிரும்புகிறேன். பல கட்டடங்கள் இன்றைக்குச் சரியான நிலையில் இல்லை. உதாரணமாக திருமங்கலத்திலே ஜில்லா முன்சீப் கோர்ட் 1979-ல் கட்டப்பட்டது. அந்தக் கட்டடம் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்

இரண்டு மாடிக் கட்டடம் கட்டுவதற்கு அந்தக் கட்டடம் பொருத்தமானது என்ற குறிப்பை அங்கே எழுதி வைத்திருக்கிறார்கள். இப்போது என்ன நேர்ந்திருக்கிறது என்றால் எல்லா சுவர்களிலும் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனக்கு இருக்கிற அச்சமெல்லாம் அந்த அஸ்திவாரமே கீழே இறங்கியிருக்கிறது, சுவர்களிலே வெடிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலே 2 மாடிக் கட்டடம் கட்டலாம் என்று சர்டிபிகேட் கொடுத்தால் என்ன ஆவது? ஆகவே உடனடியாக அந்தக் கட்டடத்தை அவசர உணர்வோடு மாற்ற வேண்டும், அல்லது பழுதுபார்க்க வேண்டும்.

கோர்ட்டுகளிலே போதுமான தளவாட சாமான்கள் இல்லை. இருக்கக்கூடிய பழைய ஆசனங்கள்கூட சரியாகப் பராமரிக்கப்படவில்லை. கோர்ட் கட்டடங்களையும் தளவாட சாமான்களையும் பார்த்து சீர்செய்யக் கூடிய முறையிலே மாவட்டத்திற்கு ஒரு கமிட்டி அமைத்து உடனடியாக அவைகளை சீர்செய்ய வேண்டுமென்ற யோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு இயற்றக்கூடிய சட்டங்களையும் அவை சம்பந்தப்பட்ட ரூல்ஸ் மற்றும் நோட்டிபிகேஷன்களையும் வருடம் ஒருமுறை தொகுத்து வெளியிட வேண்டும். அதோடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பெரும்தொகுப்பு என்ற முறையில் குவின் குவினியல் (quin-quennial) என்ற முறையிலே இவைகளை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக் சொல்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கோர்ட் பீஸை ரத்து செய்ய வேண்டும். அதனால் ஏழை எளிய மக்கள் எளிதாக நீதிபெற முடியும். ஆகவே கோர்ட் பீஸ் முறையை ரத்து செய்ய வேண்டும்.

கோர்ட்டுகளிலே சேராக்ஸ் காப்பிகள் வழங்கப்படுவதற்கேற்ற முறையிலே சாதனங்கள் வழங்கப்பட வேண்டும். மொபஸல் கோர்ட்டுகளைப் பொறுத்தவரைக்கும் சம்பந்தப்பட்ட நீதிமன்ற அலுவலர்க்கும் வழக்கறிஞர்களுக்கும் அவர்களுடைய குறைகளைக் கவனிப்பதற்கு 3, 4 அட்வைசரி கமிட்டிகளைப் போடலாம் என்ற யோசனையை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்னதைப் போன்று மதுரையிலே தனியாக உயர்நீதிமன்றப் பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்று நீண்டநாட்களாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. மத்திய அமைச்சர்கள் தமிழகத்திற்கு வருகிறபோது துவக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். டெல்லியில் இருக்கிற மன்றங்கள்கூட அதற்கு ஆதரவு தெரிவிப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. தமிழக மக்கள்



தென்கோடியான கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றால் அதிகச் செலவும் சிரமங்களும் ஏற்படுகின்றன. எனவே அமைச்சர் அவர்கள் அதிலே அக்கறை கொண்டு வெகு விரைவிலே இந்த ஆண்டிலேயே மதுரையிலே தனி உயர்நீதிமன்றப் பிரிவு அமைப்பதற்கு முனைப்போடு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குவாஸி ஜுடிஷியல் முறைகளை ரத்து செய்ய வேண்டும். தாசில்தாருக்கு குத்தகை சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் கொடுக்கக்கூடாது. நீதித் துறையில் இருப்பவர்களுக்குத்தான் அந்த அதிகாரத்தை வழங்கவேண்டும்.

திருப்பரங்குன்றத்திலே போலீஸ் வழக்கறிஞர் மோதல் சம்பந்தமாக விசாரிக்க கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்த கமிஷன் ரிப்போர்ட்பேரில் சம்பந்தப்பட்ட அதிகாரியின்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. யார் மீது தவறு இருந்தாலும்கூட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் சொல்கிறார்கள், ஜில்லா முன்சீப் கோர்ட் வத்தலகுண்டில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை. பல்வேறு முறைகளிலே முறையீடுகள் செய்தும் கூட, அது என்ன காரணத்தினாலோ இன்னும் நிறைவேறவில்லை, அது பற்றிச் சொல்லுமாறு சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமான ஒரு வழக்கைப் பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அது முக்கியமான வழக்கு மட்டுமல்ல, அசாதரணமான வழக்கு என்றும் கூடச் சொல்லலாம். இந்த வழக்கிலே கொடுக்கப்பட்ட நியாயத்தைப் பற்றி, நியாயம் முறையாக வழங்கப்படாத காரணத்தினால் நியாயம் கேட்டு நான் இந்த வழக்கைக் சொல்ல விரும்புகிறேன்.

சென்னையில் மிண்ட் தெருவிலே வாணிகம் செய்யும் சுக்கிராசங்கியும், அவர் தம்பி சந்தாலாலும், இன்னும் சோனிகிராப், அவருடைய தம்பி ஆக நான்கு பேர்கள் சேர்ந்து ஒரு தொழில் தொடங்குகிறார்கள். இந்த நால்வரும் இந்தத் தொழிலிலே பங்குதாரர்களாக இருக்கிறார்கள். சுக்கிராசங்கியும், சந்தா

லாலும் முதல் போடுகின்ற பங்குதாரர்கள் ; சோனிகிராபும், அவருடைய தம்பியும் ஓர்க்கிங் பார்ட்னர்ஸ் என்று சொல்லுவோமே அப்படி உழைக்கின்ற கூட்டாளிகளாக இருக்கிறார்கள். ஆனால் பின்னால் கூறப்பட்டவர்கள் ஒன்றரை இலட்சம் ரூபாய் கையாடல் செய்தார்கள் என்று சொல்லி குற்றம் சாட்டப்பட்டு, அந்த மோசடி வழக்கிலே சிறையிலே இருந்திருக்கிறார்கள். அவர்கள் சிறையிலே இருந்த நேரத்திலே ஒரு வியாபார ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சிறையிலே உள்ளவர்களின் கையெழுத்தை வெளியிலே இருக்கின்ற இரண்டு பங்குதாரர்களும் மோசடி செய்து அந்த வியாபார ஒப்பந்தப் பத்திரத்தை ரெஜிஸ்தார் ஆஃப் பர்ம்ஸ், அங்கே பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டு, 31–7–1978-லே ஒரு வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு 13–2–1981 ஆம் தேதியன்று 7-வது மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட், மெட்ராஸ் கோர்ட்டிலே எடுத்துக் கொள்ளப்பட்டு, வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. அந்தக் கையெழுத்து போர்ஜரி கையெழுத்து என்பதற்கான ஆதாரம் போதுமானதாக இல்லை என்று சொல்லி தள்ளுபடி செய்யப்படுகிறது.

அதன் மீது அரசு மேல்முறையீடு செய்து, உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டு 22–6–1981 ஆம் தேதியன்று ஜஸ்டிஸ் சுந்தர் அவர்கள் கீழ்க் கோர்ட்டிலே விடுதலை செய்யப்பட்டது சரி என்று சொல்லி தீர்ப்பளித்து விடுகிறார். பின்னர் அரசு மறுபடியும் எக்ஸ்கியூஸ் டிலே போட்டு, அதைக் கோர்ட்டிலே அப்பீல் போட டிலே ஆப் கண்டோனேஷன் வாங்கி, அதன் மூலமாக மீண்டும் வழக்கு தொடரப்படுகிறது.

இதற்கிடையிலே ஒரு விரும்பத்தகாத பேரம் நடந்திருக்கிறது. இந்த வழக்கிலே உங்களை விடுதலை செய்ய வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, உங்களைச் சிறையிலே போட வேண்டுமென்பதற்காக இன்னார் இவ்வளவு கொடுக்கிறார், நீங்கள் அதிகமாகப் பணம் கொடுத்தால் உங்களை விடுதலை செய்கிறோம் என்று சொல்லி பேரம் நடந்து, அது சரிவர வராத காரணத்தினாலே மீண்டும் அந்த வழக்கு உயர் நீதிமன்றத்திலே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உயர் நீதிமன்றத்திலே நீதிபதி சிங்காரவேலு அவர்கள் இந்த வழக்கை எடுத்துக் கொள்கிறார். அவர் முன்னாலே இந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது. இந்த வழக்கைப் பற்றி 30 அல்லது 40 நாட்கள் அல்லது 45 நாட்கள் விவாதம் நடைபெறுகிறது. ஆனால், நீதிபதி சிங்காரவேலு அவர்கள் தீர்ப்பை நிறுத்தி வைத்து விடுகிறார். இந்த வழக்கிலே தீர்ப்பை நிறுத்தி வைத்துவிட்டு, இதற்கிடையிலே கோர்ட்டிலே விடுமுறைக்காக—வெக்கேஷனுக்காக 3–5–1985-லே கோர்ட் மூடப்படுகிறது. கோர்ட் திறக்கப்பட வேண்டுமானால் 17–6–1985-லே



தான் திறக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவசரம் அவசரமாக நீதிபதி சிங்காரவேலு அவர்கள் 17–6–1985 அன்று கோர்ட் திறப்பதற்கு இருக்க, 15–5–85 ஆம் தேதி கோர்ட்டுக்கு வந்து, இவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு கொடுக்கிறார்.

கோர்ட் மூடியிருக்கும் நேரத்தில் ஒருவரை விடுதலை செய்ய வேண்டுமானால் அவசரமாக வரலாம். ஆனால், நீதிபதி, யாருக்கும் முன்னறிவிப்பு கொடுக்காமல், சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்களுக்கோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கோ எந்தவிதமான அவகாசமும் கொடுக்காமல், நீதிபதி சிங்காரவேலு அவர்கள் கோர்ட்டுக்கு வந்திருந்து சுக்கிராசங்கி அவர்களுக்கும், சந்தாலால் அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் அபராதமும், ஆறு மாதம் சிறைத் தண்டனையும் கொடுத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

பாதிக்கப்பட்டவர்கள் மேதகு ஆளுநர் அவர்களுக்கு ஒரு புகார் கொடுத்திருக்கிறார்கள். 5–12–1985 ஆம் தேதியன்று ஒரு புகார் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கொடுத்தால், உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு அதை அனுப்பி விசாரிக்கச் சொல்லலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமுதாய அமைப்பிலே நிர்வாகத்திலே யாராவது தவறு செய்வார்களேயானால் நீதிமன்றங்கள் கேட்கின்றன. இந்தச் சட்டமன்றம் உயர்வானது, தலையானது என்று சொல்கிறோம். யாரும் கேள்வி கேட்க முடியாது என்று சொல்கிறோம். ஆனால் நம்மையே கூட கேள்வி கேட்கக் கூடிய உரிமை நீதிமன்றங்களுக்கு இருக்கின்றது. ஆனால் அதே நேரத்திலே நீதிபதிகள் தவறு செய்வார்களேயானால் யார் தண்டனை கொடுப்பது ? நம்முடைய தலைவிதியா, நாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேட்கலாம். கேட்க முடியாது என்று அல்ல. அதை யாரும் கேட்பது கிடையாது. பப்ளிக் கான்பிடன்ஸ் குறைந்து விடக் கூடாது என்பதால் யாரும் கேட்பது கிடையாது. இங்கே, எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி, இருக்கிறது. ஆளுங் கட்சியினுடைய குறைபாடுகளை, எதிர்க் கட்சி பேசுகிறது. என்னதான் இருந்தாலும், இங்கே, நம்முடைய அவையிலே ஒரு இண்டர்னல் ஆடிட் மாதிரி இருக்கிறது. எதிர்க் கட்சியில் இரண்டு பேர் இருந்தாலும் பேசுகிறார்கள். திருப்தி அளிக்கவில்லையென்றால் போய் விடுகிறார்கள். ஆனால், அங்கே தொன்று தொட்டு இருந்து வந்து விட்டது. தீர்ப்பே எதிராக வந்தால் ஒரு பெரிய பாவம் செய்த மாதிரி தான் நினைப்பு வருகிறது, வேறொன்றும் அல்ல.

[1986 ஏப்ரல் 7

திரு. கே. குப்புசாமி : தலைவர் அவர்களே, பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகளோ, அல்லது அரசியல்வாதிகளோ தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குச் சுலபமான சட்டங்கள் இங்கே இடம் கொடுக்கின்றன. ஆனால், நீதிபதிகள் தவறு செய்யும்போது, அவர்கள் மீது குற்றச்சாட்டு எழுப்பப் படுமானால், அவர்களை உடனடியாக பதவி இறக்கி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப் பதில் இது தான்.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

சான்றோரின் சால்பு என்னும் நிறைந்த பண்பு குறைபடுமானால், இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய்விடும். இதுதான் நீதிபதிகளைப் பற்றிச் சொல்லக் கூடியது. சிலப்பதிகாரத்திலே அப்படித்தான், அரங்கன் அவையிலே தவறு நடந்ததால், அந்தப் பாவைதான் அழுதது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவரின் தீர்ப்பு என்ன?

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே அதற்கு ஒரு அமைப்பு வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டத்தைச் சொல்கிறேன், அரசியல் சட்டத்திலே 211—வது பிரிவின்படி

You cannot discuss about the conduct of the High Court or Supreme Court Judges inside the Legislature....

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கான்டக்டைப் பற்றி அல்ல, மிஸ் கான்டக்டைப் பற்றித்தான் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : மிஸ் கான்டக்டைப் பற்றி விவாதிப்பது அந்த அந்த அவையைப் பொறுத்தது. எப்படி என்றால்,

recently, a full Bench of the Madras High Court has passed a judgement that 'receiving bribe is not in the discharge of duty' in a former Chief Justice's case.

ஆகவே, அந்த 211 அதிலே அடிபடுகிறது. ஆர்க்யூமென்டிலே விஷயம் வெளியே கொண்டு வந்தால், திருப்பி நாளைக்குக் காலையிலே, அங்கே போய் எப்படி நீதி கேட்பார்கள் இன்றைக்குப் பத்திரிகையிலே வெளி வந்து விட்டாலே, நாளைக்குக் கோர்ட்டிலே .. .. .. ...



1986 ஏப்ரல் 7]

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இதற்கு முடிவுதான் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மாநில அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்றால், 24 சட்டமன்ற உறுப்பினர்கள் போதும். பாராளுமன்றத்தில் 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுந்தால் மத்திய அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். ஆனால், நீதிபதிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யாராவது விரும்புவார்களானால், குடியரசுத் தலைவர் உத்தரவைப் பிறப்பித்து அதற்குப் பிறகு, மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் விவாதித்த பிறகுதான், அவர்களை அந்தப் பதவியிலிருந்து விலகச் செய்ய முடியும். நாம் அதைப் பேச முடியும். இதை 1700 ஆம் ஆண்டிலே அந்தக் காலத்திலே போட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்பொழுதிருந்த நீதிபதி அப்படி. இப்படிப் பிரச்னைகள் அன்றைக்கு வரவில்லை.

We have to simplify the procedure.

இப்பொழுது நீங்கள் சொன்னீர்கள், முதலிலே,

He was acquitted by a magistrate. Then, he filed a revision petition before the High Court. That was dismissed by one judge.

கிரிமினல் கேஸ்களைப் பொறுத்தவரையிலே,

It is a finality. ஒரு ஜட்ஜ்மென்ட் வந்தாலே, அதற்குப் பிறகு

It cannot be opened by any judge.

அதற்கு சுப்ரீம் கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும். ஆனால் இந்த கேஸிலே,

the State has filed an appeal subsequently.

இரண்டாவது எடுக்கும்போது இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துதான் எடுத்திருக்கக் கூடும், எடுத்திருக்க வேண்டும். அதை எடுக்கத் தவறினால், அந்தத் தீர்ப்பே செல்லாது. தவறியது தவறு. பிரைவேட் ரிவிஷனையும் ஸ்டேட் அப்பீலையும் இரண்டையும் சேர்த்துதான் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியும்; இரண்டையும் ஒரே நாளில்தான் எடுத்து தீர்ப்பு சொல்ல முடியும்.

The first judgement will operate as a law of estoppel for the second judgement. The second judgement is invalid.

இந்த estoppel போய்விடுகிறது, எல்லா உறுப்பினர்களுக்கும் புரியாது.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப நுணுக்கமாக, டெக்னிக்கலுக்குள்ளே போகிறீர்கள். நம்முடைய மாண்புமிகு திரு. என். எஸ். வி. சித்தன் பேசுகிறபொழுது, நீதிபதிகளிடமிருந்து நியாயம் கிடைக்கவில்லையென்றால், அதற்கு நிவாரணம் கிடைப்பதற்கு என்ன வழி என்று கேட்டார். அதுதான் இங்கே கேள்வி. இங்கே பாதிக்கப்பட்டவர் ஆளுநர் அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். பாதிக்கப்பட்ட அந்த நபர் இங்கே ஆளுநருக்கு விண்ணப்பம் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்திற்கு என்ன முடிவு? ஏற்கனவே பாராளுமன்றத்தில் ஒரு முறை உண்டு, பெட்டிஷன் கமிட்டி என்று. இந்த நாட்டு குடிமகன் யாராகஇருந்தாலும் பாதிக்கப்பட்ட நிலையிலே பாராளுமன்ற சபாநாயகர் கவனத்திற்குக் கொண்டு வந்து நியாயம் வழங்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்பதற்கு வழிவகை வகுத்திருந்தார்கள். அதை ஒட்டி. தான் சென்ற சட்டமன்றத்தில் நம்முடைய ரூல்ஸ் கமிட்டியிலே புதிதாக பெட்டிஷன் கமிட்டி என்று ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். ஆனால் இன்று வரையில் அதற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு ''கான்ஸ்டிடியூட்'' பண்ணியதாக எனக்கு நினைவு இல்லை. ஆகவே, புதிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருக்கும்போது பொதுமக்கள் சார்பாக, நியாயம் கிடைக்க என்ன வழிவகை இருக்கிறது என்பதை உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*(பிற்பகல் 1-30.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

அரசியல் சட்டத்தில் there are checks and balances. நிர்வாகம் தவறு செய்தால், நிர்வாகம் எக்ஸஸாகப் பண்ணினால் கூட நீதிமன்றம் கட்டுப்படுத்த முடியும். நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகளில் கூட சில பிரச்சினைகள் வந்து, நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று சொல்லியிருந்தாலும் அதைத் தொட்டுப் பார்க்கக்கூடிய அதிகாரம் இருக்கிறது என்று அவர்கள் காட்டியிருக்கிறார்கள். நிர்வாகம் ஏதாவது தவறு செய்தால் அதை நீதிமன்றம் கட்டுப்படுத்துகிறது. நம்முடைய சட்டமன்றம், ஏதாவது நடவடிக்கையில் தவறு என்று சொல்லமாட்டேன், தலையீடு இருந்தால், அவர்கள் தவறு செய்தால், நிச்சயமாக இந்த அவை தலையிடலாம் என்பது என்னுடைய கருத்து, என்னுடைய எண்ணமும் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) வரவேற்கிறீர்கள். ஆனால் ஒவ்வொன்றிலும் நான் 'கான்ட்ரவர்சி'. இதிலே 234 பேர்களையும் 'கான்ஃபிடன்ஸிலே, எடுத்துக்கொண்டுதான் நான் பேசுகிறேன். யாராவது என்னுடைய 'வியூ'வில் தவறு என்று சொல்லிவிட்டால், I will shed it, because I shall take you all with me; அப்படி ஒரு தீர்ப்பு வந்தது என்றால் it is definitely erraneous.



நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். என்னுடைய அறைக்குக்கூட ஒரு மனு வந்திருக்கிறது இந்த பெட்டிஷன் கமிட்டியைப் பொறுத்தமட்டில் ரூல்ஸ் கமிட்டியில் பாஸ் பண்ணியிருக்கிறோம். We have not named the members. நான்கு மாதங்கள் ஆகின்றன. இதை வேறு வகையில் ஏதாவது பண்ணலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

ஜுடிஷியரிக்கு இருக்கிற கான்ஃபிடன்ஸ் மக்கள் மத்தியில் குறைந்து வருகிறது. அப்படி என்றால் 'கான்டக்ட்' பற்றி பேசலாமா என்று ஒரு கேள்வியை நானே போட்டுக்கொண்டேன். இப்போது நீங்கள் சொன்னீர்கள். மிஸ்கான்டக்ட் பற்றி டெஃபனிட்டாக, You can deliberate it anywhere. Even in public meetings, you can attack if there is a grave misconduct. When the conduct of the President is questioned, when the conduct of the Government is questioned, when the conduct of the Chief Minister is questioned and when the conduct of the Ministers is questioned, you can definitely question the conduct or misconduct of the Judges, whoever they may be. Because we are all representatives of the people. Our goal is only to serve the people.

Even the Madras Advocates' Association has offered their views in this particular case. அதிலே இது தவறு என்று அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். The Madras Advocates' Association have also been apprised of the matter. The President of the Advocates' Association has also written to me that it is an illegal judgement and that we can set it aside and set the individual at liberty. இதில் வந்து நான் வக்கீல் என்ற முறையில் முழுமையாகச் சொல்லவில்லை; பேரவைத் தலைவர் என்ற முறையில் சொல்கிறேன். இந்த அவைக்கு முழு அதிகாரம் இருக்கிறது. மக்களுக்கு எங்கே நீதி கிடைக்கவில்லை என்றாலும் இந்த அவையில் நிச்சயமாக நீதி கிடைக்கும். அதையும் நான் ஒருமுறை திரு.வி.பி. சிந்தன் அவர்களிடம் கூட சொன்னேன். நீதி விசாரணை வேண்டும், நீதி விசாரணை வேண்டும் என்று கேட்காதீர்கள். இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு, நாமே ஒரு கமிட்டி அமைத்து, சில விசாரணை நடத்திக்கொள்ளலாம் என்று சொன்னேன். இதை எண்ணிப்பார்த்துதான் அன்றைக்கே நான் சொன்னேன். The moment they are appointed, they cannot be touched. The moment they are appointed, they enjoy the immunity under the Constitution. மிஸ்கான்டக்ட் என்று ப்ரூவ் பண்ணினால் கூட இதுவரையில் இம்பீச்மென்ட் என்பது எனக்குத் தெரிந்து 17 வருஷமாக நடக்கவில்லை. நான் 17 வருஷமாக வக்கீல் தொழிலில் இருந்து இருக்கிறேன். ஒரு இடத்தில் கூட இம்பீச்மென்ட் என்பது நடக்கவில்லை. அதனால் எல்லோரும் நல்லவர்களா என்பதை எல்லாம் நீங்கள்

தான் பார்த்துக் கொள்ளவேண்டும். அக்கவுன்டபிளிட்டி இல்லை. But the Ministers are accountable to the Legislature. We, the Members of the Legislature are accountable to the people whereas the Judges are not responsible to anybody in the House. There is no accountability for them. *Res judicata* –

** ** ** **

எனவே இதை இதோடு விட்டுவிட்டு........

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேட்டுக்கொண்டது போல் இதனை இந்த அளவிலே விட்டுவிடலாம் என்று........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையிலே கூட எந்த அளவுக்கு வருகிறது. இது வந்தவுடனே நாளைக்கு ஹைக்கோர்ட்டிலே என்ன ரீயாக்ஷன் என்றால்—அந்த லிட்டி கேன்ட்ஸ்-க்கு ஒரு கான்ஃபிடன்ஸ் வரவேண்டும்—வழக்குகள் வரும், வாதிகள் பிரதிவாதிகள் செல்லவேண்டி இருக்கும். அந்த நிலையில் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு சட்ட அமைச்சர், தலைமை நீதிபதி, இந்தியத் தலைமை நீதிபதி எல்லோரையும் பார்த்து என்ன நடவடிக்கை நீங்கள் எடுக்கவேண்டுமோ 124-லே அதை எல்லாம் எடுக்கலாம். ஏனென்றால், நம்முடைய மந்திரி மாதிரி இல்லை. Till he is there, he will be a serving judge.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் தலைவர் அவர்களே, தங்களுடைய கருத்து இந்த அவைக்கு உடன்பாடானதுதான். ஆனால், அதே நேரத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். My question is which is supreme—either 'judiciary' or 'Legislature' என்ற கொஸ்டின் இன்னும் கான்ஸ்டிட்யூஷன்படி செட்டில் ஆக வில்லை. அப்படி செட்டில் ஆகாத நிலைமையில் தாங்கள் சொல்கிற கருத்து எங்களுக்கு உடன்பாடுதான் என்று சொன்னாலும் கூட இந்த நிலையிலே ஒரு சட்ட மன்ற உறுப்பினர் சொல்ல முடியாது. ஆனால் அதே நேரத்தில் அந்த இன்டிப்பென்டன்ஸ் ஆஃப் ஜுடிஷியரி என்பது குறித்து ஏதோ ஒரு தவறான கருத்து வந்துவிடும்; பத்திரிகையைப் பார்க்கும்போது அப்படித் தோன்றும். ஆகவே, தாங்கள் இதனை டைப் செய்து வெளியிட்டுவிட்டால் தெளிவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: The three wings of the Constitution are Legislature, Executive and Judiciary. They are independent in their respective spheres. செக்ஸ் அன்ட் பேலன்ஸ் என்ற அளவில்தான் நான் இதைச் சொல்லுகிறேன். சுப்ரீம் என்று சொல்லி நான் செய்யுவில்லை. We have to direct through the House. The House recommends to the Sovereign Parliament. After all, they are appointed through our re-

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



commendation by the President. யாருடைய ரெக்கமன்டேஷனிலும் நாம் வரவில்லை. We are the representatives of lakhs of people. சுப்ரீம் என்று சொல்லி நான் தீர்ப்பை வழங்கவில்லை. ஒரு செக்ஸ் அன்ட் பேலன்ஸ் என்ற அளவில்தான் சொன்னேன். சட்டமன்றத்தில் கூட ஒரு வழக்கு சம்பந்தமாக விவாதிக்கும் போது சட்டமன்றத்திற்கு சிறையில் அனுப்பக்கூடிய அளவுக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஆயுள் தண்டனை விதித்துவிட்டால் என்ன செய்வது என்று கூட என்னுடைய ஜூனியர்ஸ் என்னிடம் கேட்டார்கள். அதுதான் செக்ஸ் அன்ட் பேலன்ஸ். We are all equals. Three wings are equal and independent in their respective spheres. அதாவது எக்ஸஸிவ் ஆகப் போய்விட்டால் Naturally they will come to play their respective roles;இதற்கெல்லாம் காரணம் பொதுவாக நான் மத்திய அரசைச் சொல்வதாக யோசிக்க வேண்டாம். மத்திய அரசும் இம்மாநில அரசுதான். எனவே நீங்கள் கொஞ்சம் நல்ல ஆட்களைப் போட்டு, அதாவது ஆஃபர் பண்ணி வேலைக்கு வரவேண்டும்.

** ** ** **

(பிற்பகல் 1-40.)

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். துணைத் தலைவர் வழக்கறிஞராக இருப்பதால், நீதித்துறை சம்பந்தப்பட்ட மானியமாகவும் இருப்பதால், துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால், அப்படிக் கூறிவிட்டேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று மக்களுக்கும் சட்டப் பேரவைக்கும் தேவையான சில சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறீர்கள். அதற்காக மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகிறேன். அத்தோடு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னீர்கள். உயர்நீதிமன்றத்திலே புல் பென்ச்சினுடைய தீர்ப்பு என்ற முறையில் தான் அதைச் சொன்னீர்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய தீர்ப்பைப் பற்றிச் சொன்னீர்கள்.

** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் வேண்டாம். அவர் கடைசியாக சொன்னது அவைக்குறிப்பில் இருந்து நீக்குகிறேன். கான்கிரீட்டாக சொல்லவேண்டும். அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன்.

திரு. கே. குப்புசாமி: தலைவர் அவர்களே, ஒரு நீதிபதி லஞ்சம் வாங்குகிறார் என்ற ஆதாரம் யாரிடமாவது இருக்குமேயானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, கண்டிக்கும் அதிகாரம் இங்கு இல்லை. பாரிலியமென்டிலே மூன்றிலே இரண்டு பங்கினர் விசாரிப்பதோடு, அவர்களை இம்பீச் செய்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வது என்ற முறையில் செய்வதைத் தவிர, தவறு செய்கிற நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்க ஏதாவது வழி இருக்கிறதா? அதற்கு தாங்கள் விளக்கம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய அவையைப் பொறுத்தவரையில் அந்த அதிகாரம் அரசியல் சட்டத்தின் கீழ் வழங்கப்படவில்லை. சில நேரங்களில் சட்டத்தை முழுமையாகப் பார்க்கக் கூடாது. பார்க்கவும் முடியாது. * *

ஒரு நீதிபதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் பாராளுமன்றத்திலே 3-ல் 2 பங்கு உறுப்பினர்களை அணுகி, இன்றைக்கு இருக்கின்ற சட்டத்தின்படி, அந்த நீதிபதிகளை இம்பீச் செய்வதற்கு முயற்சிக்கலாம். வேண்டும் என்றால் அரசாங்கம் எடுத்துக் கொண்டால் ஏதாவது ஒரு நீதிபதி மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்படக்கூடிய அளவுக்கு இருக்குமானால், அந்த அளவுக்கு கூடுதல் ஆகும்போது பாராளுமன்ற சபாநாயகருக்கு அனுப்பி, அந்த சபாநாயகர் அதை சபைக்கே கொண்டு வரலாம். * * * * *

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, நம்முடைய அவை சம்பந்தப்பட்ட வரையிலே நாம் சுப்ரீம். அதை மீறுவதற்கு அதற்குள்ளே We cannot allow any inroad into that. We cannot accept. இந்தப் பிரச்சினை என்னவென்று கேட்டால், மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் குறிப்பிட்டிருக்கும்படியான சம்பந்தப்பட்ட அந்த வழக்கு குறிப்பிட்ட வரைக்கும், கவனிக்கப் பட்ட வரைக்கும், அவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டு இருக்கிறது. அது கோர்ட்டினுடைய தீர்ப்பு. நீதிபதியினுடைய தீர்ப்பு. * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு லீகலாக அப்படிப் பார்க்கப்போனால் அப்பீல் செய்ய வேண்டும். அப்பீல் செய்வதற்கு பாயிண்ட் ஆப் லா ஒன்றும் இல்லை. கிரிமினல் கேஸ்களிலே மட்டும் லேசிலே பாயிண்ட் ஆப் லா கிடைக்காது. ரெண்ட் கண்டிரோல் கேஸ்களிலே பாயிண்ட் ஆப்லா கிடைக்கும். டெனன்ட்டா, ஓனரா என்று பார்க்கிறது. கிரிமினல் கேஸ்களிலே அப்பிரிசியேஷன் ஆப் எவிடன்ஸ் தான்.

இந்திய அரசியல் சட்டத்திலே தூக்கு தண்டனை அடைந்த ஒரு கைதி உரிமையோடு உச்ச நீதிமன்றத்திற்கு செல்வதற்கு இன்றைக்கு உரிமை கிடையாது. ஆனால் சிவில் துறைக்கு செல்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. தூக்கு தண்டனை அடைந்த கைதி நேரிடையாக நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு உரிமையோடு செல்வதற்கு கிடையாது. அதிலே பாயிண்ட் ஆப் லா இருக்கிறதா என்று பார்த்துத்தான் அனுமதிப் பார்கள். 100-க்கு 90 வழக்குகளில் அனுமதிக்கப்படாமலேதான் வந்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், கிரிமினல் வழக்குகளில் பாயிண்ட் ஆப் லா கிடைக்காது. பாக்கி வழக்குகளில், அக்கவுண்ட்ஸ், பேரேடு போன்றவை எல்லாம் கிடைக்கும். இதிலே கத்தி, அறுவாள் தான் இருக்கும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்னை குறித்து உங்கள் கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். ஆனால் சில அபாயங்களை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணமாக இந்த சபையைப் பொறுத்த வரையில் நான் தான் சுப்ரமசி என்று சொன்னீர்கள். அதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களையெல்லாம் கான்பிடன்சில் எடுத்துக் கொண்டு தான் அதைச் செய்கிறேன். எல்லா கேசிலும் நாம் தலையிடப் போவதில்லையே? ஒரு ஸ்பெசிபிக் சார்ஜ் வந்து அதிலே அட்வகேட்ஸ் அசோசியேஷனுடைய பரிந்துரை வந்த பிறகு தான் அந்த முடிவிற்கு வந்தது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, உங்களுக்கே புகார் வந்திருக்கிறது, இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மனு வந்திருக்கிறது ; அதாவது கான்பிடன்ஸ் குறைந்துவிடும். இதையெல்லாம் வெளியே சொல்ல வேண்டாமென்று. . . .

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, இருக்கிற சிக்கலைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எதைச் சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். *

**திரு. வி. பி. சித்தன் ;** தலைவர் அவர்களே, ஒரு சந்தேகம். ஒரு சட்டம் என்று சொன்னால்

In the ultimate analysis it is the majority மெஜாரிட்டி கட்சியைச் சேர்ந்தவர் ஒரு கொலைக் குற்றத்தில் ஈடுபடுகிறார் என்றால். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சித்தன் அவர்களுக்குச் சொல்கிறேன். இதெல்லாம் வேண்டாம்.

If you read the Preamble of the Constitution, you will know that:— We the people of India resolve to establish'Sovereign Democratic Republic' and to secure to all its' citizens justice, equality andliberty.

'we the people'யார், நாம் தான். சோஷியல் ஜஸ்டிஸ் நீதிமன்றம் வழங்கதான்வேண்டுமென்பது அவசியமில்லை. இந்தச் சட்டமன்றம் கூடவழங்கலாம். இதை நான் பொங்கல் நாள் தமிழரசு இதழில்கூட எழுதியிருக்கிறேன். (குறுக்கீடு) கட்டுமரத்தை அகற்ற வேண்டுமென்று கூட சொன்னார்கள். இங்கே மனு கொடுத்திருந்தால், நாம் அதுபற்றி பேசியிருந்தால் நாமே கூட அகற்றலாம். நாம்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நமக்குள்ளே பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முன்வராத காரணத்தால் தான் அங்கே பிரச்னை போகிறது. இதிலே விமர்சனம் வேண்டாம். இது செக்ஸ் அண்ட் பேலன்ஸ் தான், வேறொன்றுமில்லை. ஆக்ஷன் எடுப்பதைப் பொறுத்தவரையில்

It is upto the Law Minister, Chief Justice of Tamil Nadu, Chief Justice of India, Prime Minister of India and the Hon. Speaker of the Lok Sabha.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நீங்கள் சபையின் கான்பிடன்சை எடுத்துக்கொண்டு—இதில் ஒரு முடிவு வரவில்லை—கருத்துக்கள் அடிப்படையில் சொல்லியிருக்கிறீர்கள்.

*   *   *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடைசியாக சொன்ன ரெபரன்ஸ் அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம். (குறுக்கீடு) நான் எப்படி சொன்னேன் ? நீங்கள் எல்லாம் சொல்லாமல் நான் சொல்வேனா ? ஆர்க்கியூமெண்ட்டாக வேண்டாம். பிரிவிலெஜ் இஷ்யூவில் கூட கான்சென்ஸஸ் தான் எடுத்திருக்கிறோம். நீங்கள் சொல்லாமல் நான் டெசிஷன் எடுப்பதில்லை. இந்தப் பிரச்னையை இத்தோடு முடித்துக் கொள்வோம். மாண்புமிகு உறுப்பினருக்கு தேவையென்றால் இன்னொரு நாள் தனியாகயிருந்து இதுபற்றி பேசிக் கொள்வோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, சிறைத் துறைப் பற்றி ஒன்றிரெண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டில் சிறைச்சாலைகளில் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தில் கூட தமிழ் நாட்டில் இருக்கிற எல்லா சிறைகளிலும் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்வோமானால் ஏறக்குறைய 15,740 பேர்களுக்குத் தான் இடமிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிகமாக கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிர் வரிசையில் இருக்கிற பலரும் சொன்னதைப் போல ஆயுள் தண்டனைக் காலம் முடித்ததற்குப் பிறகும்கூட பல கைதிகள் சிறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் கூட இதுபற்றி எழுதியிருக்கிறார்கள். ஏதோ ஒரு குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள், வெளியே வருகிறபோது மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு புனர் வாழ்விற்கு துணையாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்கு அகற்றப்பெற்றது.





இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கைதிகளை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல நேரங்களில் கைதிகளுக்கும் சிறை அதிகாரிகளுக்கும் மோதல் சம்பவங்கள் நிகழ்கின்றன. சிறையில் மரணமென்றெல்லாம் செய்திகள் வருகின்றன. இவற்றையெல்லாம் இந்த அரசு தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பரோலில் வருவதற்கு பல்வேறு விண்ணப்பங்கள் வந்தாலும் அவற்றை தகுதியின் அடிப்படையில், என்னென்ன காரணங்களுக்காக கேட்கிறார்கள் என்பதைப் பார்த்து அவர்களுக்கு பரோல் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பலருக்கு அது கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

(பிற்பகல் 1.50)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டார்கள். மானியக் கோரிக்கையை முன்மொழிகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் குமரி அனந்தன் அவர்கள் 'அட்மினிஸ்ட்ரேசன் ஆப் ஜஸ்டிஸ்' என்று தலைப்பிட்டு, அது ஆட்சி நிர்வாக இயந்திரத்தோடு இருப்பது, 'இன்டிபென்டென்ட் ஆப் தி ஜுடிசியரி' என்று சொல்லக்கூடிய தன்னிச்சையான நீதி நிர்வாகத்திற்கு தலையீடாக கருதப் படமாட்டாதா என்கிற கருத்தைச் சொன்னார்கள். ஆழமாக பொருளை எண்ணிப் பார்ப்போமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் குமரி அனந்தன் அவர்கள் கூறியது சரியான ஒன்று என்றாலும் கூட, அரசியல் சட்டத்தில் 11-A of the concurrent List-ல் Administration of Justice, constitution and administration of all Courts except the Supreme Court and High Courts, vest with the State Governments

என இருக்கிற காரணத்தால்தான் அது பல்லாண்டுக்காலமாக தொடர்ந்து பிரிண்டாகி வந்து கொண்டு இருக்கிறது. ஒருவேளை அந்தக் காலத்திலே பொருளை அவர்கள் ஆழ்ந்து பார்க்கவில்லை என்று கருதுகிறேன். இங்கே பேசிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டார்கள்.

உயர்திரு உறுப்பினர் ரவீந்திரன் அவர்கள் பேசுகின்றபோது நீதி மன்றங்களில் தற்போது நிலவுகிற காலி இடங்கள், நிரப்பப்படாத இடங்கள் குறித்துச் சொன்னார்கள். இதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசுகிறபோதும், கிட்டத்தட்ட 250 இடங்கள் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள்

126 இடங்கள் காலியாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் ரவீந்திரன் அவர்களும் சொன்னார்கள். அது உண்மை நிலைக்கு மாறான ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குற்றவியல் இரண்டாம் வகுப்பு மேஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றங்களைப் பொறுத்த வரையிலும், இரண்டே இரண்டு இடங்கள் தான் காலியாக இருக்கின்றன. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களைப் பொறுத்த வரைக்கும் 67 இடங்கள் மட்டுமே காலி இடங்கள். காரணம் என்ன என்பதை விளக்குகிறேன். அதில் 57 இடங்களுக்கு தேர்வாணைக் குழு மூலமாக உயர்நீதிமன்றத்தினுடைய இரண்டு நீதிபதிகள் அங்கே தேர்வை நடாத்தி 57 பேர்களைத் தேர்ந்தெடுத்து, அதை நிரப்புகின்ற ஆணையை அரசும் அதற்கு இட்டு, உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

மாவட்ட நீதிபதிகளைப் பொறுத்த வரைக்கும் 3 இடங்களுக்கு, முன்னர் மூன்று இடங்களுக்கும், பின்னர் மேலும் 3 இடங்களுக்கும், ஆக 6 இடங்களுக்கும் விண்ணப்பங்களைக் கோரி, தேர்வுகளை நடத்துமாறு, உயர்நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. முதலில் ஒரு தடவை விண்ணப்பம் கோரப்பட்டபோது, அதிலே ஏன் தேர்வுகளை இறுதி செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கேட்டார்கள். உயர்நீதிமன்றம் அந்தத் தேர்வினை நடாத்தி, ரூல் ஆப் ரிசர்வேசன்' என்ற அந்தக் கொள்கையினை நடைமுறைப் படுத்தாமல் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களை பரிந்துரை செய்துவிட்ட காரணத்தால், 'ரூல் ஆப் ரிசர்வேசன்' -க்கு உட்பட்டு தேர்வினை நடத்துமாறு உயர்நீதிமன்றம் மீண்டும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதையொட்டித்தான் 6 இடங்களுக்கு அவர்கள் விளம்பரம் செய்திருக்கிறார்கள். உயர்நீதி மன்றம் விண்ணப்பங்களைப் பெற்று, தேர்வினை நடத்தும். விரைவிலே அவைகள் பில் அப் செய்யப்படும்.

இந்த நீதிபதிகளுடைய குறிப்பாக டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்களைப் பொறுத்த வரைக்கும், ஏதோ, இந்த ஆட்சிக் காலத்திலேதான் அந்த இடங்கள் காலியாக இருக்கிற இடங்கள் போலவும், இந்தப் பிரச்சனை இந்த ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டது போலவும், ஒரு தவறான பிரமையை— ஏனோ தெரியவில்லை, சரியான உண்மை நிலை என்ன ஏன்பதை அரசு மூலமாக கூட கேட்டுக் கொள்ளத் தெரியாமல், சில நேரங்களில் அரசு விளக்கம் தெரிவித்தபோதும் கூட அதை ஏற்றுக்கொள்ளாமல் பத்திரிகைகள் கூட அதிகமாக அதை வலியுறுத்தி வருகின்றன என்பது வேதனைக்குரிய ஒன்றாகும். உண்மை நிலை என்ன என்றால், இந்த ஆட்சி அல்ல, இதற்கு முன்னால் இருந்த,தி.மு.க. ஆட்சி அல்ல, அதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்து தற்காலிக முறையிலே இந்தத் துறைக்கு நீதிபதிகளை தேர்ந்தெடுத்து நியமிக்கிற ஒரு முறையை, முறையற்ற ஒரு முறையை நடைமுறையில் கடைப்பிடித்து வந்தார்கள்.





அதை மாற்றியமைக்கக்கூடிய முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் இதில் முழுமையான மாற்றம் ஏற்படாததற்கு உயர்நீதி மன்றமே காரணம் என்று—இது குற்றச்சாட்டாக— கடந்த கால கோப்புகளைப் பார்த்தபோது நான் அறிய வந்தேன். 1963–64 ஆண்டு காலத்திலிருந்தே சப் மாஜிஸ்டிரேட் கோர்ட், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் இருக்கிற இடங்களிலெல்லாம் எங்கெங்கே இடங்கள் காலியாகிறதோ உயர்நீதி மன்றத்தினுடைய இரண்டு நீதிபதிகள் அந்தத் தேர்வுகளை நடாத்தி தற்காலிகமாக அவர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்பும்படி அரசே அவர்களுக்கு தற்காலிக ஆணையிடுமாறு அவர்கள் அனுப்பி வந்தார்கள். அதை ஏனென்று கேட்காமல் அந்தத் தேர்வை கொஸ்டியன்கூட செய்யாமல் உயர்நீதி மன்றம் எத்தகைய தேர்வை நடத்துகிறதோ, யாரை தேர்ந்தெடுக்கிறதோ அதில் எந்தவிதமான மாற்றமோ இல்லாமல்தான் காங்கிரஸ் ஆட்சி காலத்திலும், தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், இந்த ஆட்சி காலத்திலும் இன்றுவரை நீதித்துறையிலே அவர்கள் தலையிடாமல் Though they were tempoarily selected by the High Court, since their selection was done only by the High Court and that too, by the two Judges of the High Court, this Government or the Government in the past had never interfered with the selection of those people by the High Court. அந்த முறையிலே அவர்கள் நிரப்பப்பட்டார்கள். தற்போது,குறிப்பாக் புரட்சித்தலைவர் ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகுஇந்த முறையின் காரணமாக, உயர்நீதி மன்றமேசெய்த இன்னொரு தவறையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்-அதை தவறுஎன்று சொல்லவில்லை-அவர்கள் கடைபிடித்த அணுகுமுறையிலுள்ள கோளாறுகூட என்று சொல்லலாம். வழக்குரைஞர்கள் சங்கம், உயர்நீதிமன்றத்தினுடைய அட்வகேட் அசோசியேஷன் ஆக இருந்தாலும் சரி, தமிழ்நாடு பார் கௌன்சில்-ஆக இருந்தாலும் சரி பன்னெடு ஆண்டுகளாக இருக்கின்ற இந்தப் பிரச்சனை எப்படி அவர்கள் கவனத்திற்கு வராமல் இருந்துவிட்டது என்றுஎனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எப்போது அவர்களது கவனத்திற்குவந்தது என்றால் பன்னெடு ஆண்டுகளாக இருக்கின்ற இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று இந்த அரசு—நான் முயற்சி எடுத்துக் கொண்ட பிறகுதான் அவர்களுக்கே இது தெரியும். அதுவரை அவர்களே இதை சட்டை செய்தது கிடையாது. நாங்கள் பொறுப்புக்கு வந்த பிறகு 1981ஆம் ஆண்டு நீதித்துறைக்கு நீதிபதிகளை தேர்ந்தெடுக்கின்றபோது வழக்குரைஞர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும், மாறாக நிர்வாகத்தினுடைய பல்வேறு துறைகளில் அது அனிமல் அஸ்பண்டரி, டிபார்ட்மெண்ட்டாக இருக்கலாம், ஹெல்த் டிபார்ட்மெண்டாக இருக்கலாம், விவசாயத்துறையாகக்கூட இருக்கலாம். இப்படி பல்வேறு துறைகளில் பணியாற்றியவர்களை கடந்த பன்னெடு ஆண்டுகளாக அரசு தேர்ந்தெடுக்கவில்லை, இந்த ஆட்சி அல்ல, தி.மு.க. ஆட்சி அல்ல, காங்கிரஸ் ஆட்சி அல்ல, இந்த

ஆட்சிக் காலத்தில் உயர்நீதி மன்றங்களே ஏன் நிர்வாகத் துறையிலே இருந்தவர்களை தேர்ந்தெடுத்தார்கள் என்று புரியாத ஒன்றாக இருக்கிறது என்ற வினாவை எழுப்பித்தான் இன்றைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மாறாக, நீதித் துறைக்கு, கீழ்மட்ட நீதித்துறைக்கு, கண்டிப்பாக வழக்குரைஞர்கள் மத்தியிலிருந்துதான் இந்தத் தேர்வினை நடாத்தவேண்டுமென்று முடிவுக்குவந்து அதற்கான கோப்பினை சுற்றனுப்பி நடவடிக்கை எடுக்க இந்த அரசுதான் முன் வந்தது. அதற்குப் பிறகு இந்த Temporary Subordinate Judicial Officers, Sub-Magistrate and District Munsiffs— பொறுத்தவரைக்கும் 10, 15, 20 ஆண்டு காலமாக இவர்கள் பதவியிலே ஏதோ ஒரு தாய்த்துறையிலே இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு பன்னெடு ஆண்டுகளாக அவர்கள் பதவியிலே இருந்துவிட்ட காரணத்தால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை அந்த அமைப்பைச் சார்ந்தவர்களும் அதுமட்டுமல்ல அவர்கள் என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தினுடைய அங்கமாகவும் இருக்கின்ற காரணத்தால் தமிழகத்திலே என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தினுடைய ஒரு பெரிய வேண்டுகோளாக அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்றும்' ஆண்டு பலவாக் அவர்கள் பணியிலே இருந்து விட்டார்கள். மூன்று ஆண்டில், நான்காண்டில் ஒரு வழக்கறிஞரை நேரடியாக நீங்கள் எடுப்பீர்களேயானால் Three years of Bar experience என்று இருக்கிறது. இவர்கள் மூன்று ஆண்டு காலத்தில் ஒரு அனுபவத்தை பெற்றுவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. சட்டக் கல்லூரியிலிருந்து வெளியே வந்த மூன்றாண்டு காலத்தில் சட்டத்தை முழுமையாக தெரிந்து நீதிபதியாக வரக்கூடிய தகுதியினைப் பெற்றுவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. எனவே 10 ஆண்டு, 15 ஆண்டு காலமாக சட்டப் படிப்பை படித்து பட்டம் பெற்ற, ஆனால் அரசுத் துறையிலே பணியாற்றி இந்த நீதித் துறைக்கு வந்திருக்கிறவர்களை ஆங்கு நிரந்தரப்படுத்துவது அவர்கள் அனுபவத்தைப் பயன்படுத்துவதற்கு உதவும் என்ற முறையிலே என்.ஜி.ஜி.ஓ. சங்கமும், அதைப்போலவே இந்தச் சங்கமும், அரசுக்குக் கோரிக்கை வைத்தது. இது ஒரு பெரிய பிரச்சனையாக வந்து, ரேஷியோ கூட இதற்கு முன்பு 11:9 என்ற முறையிலே டிஸ்டிரிக்ட் முன்சீப்புக்கு இருந்தது. 6:4 என்ற முறையிலே மாஜிஸ்டிரேட்க்கு இருந்தது. இதைக்கூட மாற்றவேண்டுமென்று சொல்லி கடந்த காலத்தில் நடந்த குறைபாட்டுக்கு பரிகாரமாக வழக்குரைஞர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று 5:1 என்ற ரேஷியோவிலே 5 பேர் வழக்குரைஞர் சங்கத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது ஒருவர் மட்டும் நிர்வாகத் துறையிலே, அந்த ஒருவர் கூட நிர்வாகத்துறையிலே, குறிப்பாக சட்டத்துறை, அல்லது நீதித்துறையிலே சட்டங்கள் சம்பந்தமான பயிற்சி பெற்றவர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றுகூட விதியை மாற்றவேண்டுமென்று கேபினெட்டிலே நாம் முடிவு எடுத்தோம்.



(பிற்பகல் 2-00)

அப்படி முடிவு எடுத்து அப்போதுதான் இந்த பன்னெடுங் காலமாக பதவியில் இருந்தவர்களை நிரந்தரம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தைவைத்து க்ருஷியல் தேதியை வைத்து செய்தார்கள். இந்த ஆட்சிக் காலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களுக்கு நாங்கள் சலுகை எதுவும் காட்டவேண்டிய தேவை இல்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தேர்ந்தெடுத்து பன்னெடும் காலமாக பணியில் இருப்பவர்கள் அவர்கள். அவர்களை அனுபவத்தின் அடிப்படையில் நிரந்தரம் செய்துவிட்டு எதிர்காலத்தில் 5:1 என்ற ரேஷியோவில் வழக்குரைஞர்கள் பதவிக்கு அதிகமான முக்கியத்துவத்தை கொடுத்து இந்த குறைபாட்டை ஈடு செய்ய வேண்டும் என்று கேபினெட்டில் அரசு முடிவு செய்தது. இதற்கு இடையில் நாம் உயர்நீதி மன்றத்தில் கலந்து பேசினோம்.

இன்னும் ஒன்றையும் இங்கே எடுத்துச் சொல்லி ஆகவேண்டும். உயர்நீதிமன்றத்தில் There are Portfolio Judges in respect of each district. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்த மாவட்டத்தினுடைய நீதி பரிபாலனத்தைக் கண்காணிப்பதற்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள் பிரத்தியேகமாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கு செல்கிறார்கள். மாவட்ட தலைமை நீதிபதி இருக்கிறார். மாவட்ட தலைமை நீதிபதி மாவட்ட கீழ் மட்டத்தில் பணியாற்றுகின்ற கீழ் மட்ட நீதிபதிகளின் நடவடிக்கைகளை திறமை, எஃபிசியன்சி, மற்றும் இண்டகிரிட்டி இவைகளை எல்லாம் ஆய்ந்து அதற்கு ஏற்ப பர்சனல் பைலில் அவர்கள் கான்ஃபிடென்சியல் ரிப்போர்ட் எழுதக்கூடிய அளவுக்கு அந்த நிலையில் இருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு Periodical inspection by the Portfolio Judges என்ற முறையிலே அப்படி நடந்து வந்தும் கூட இவர்கள் தகுதி அற்றவர்களாக இருந்தார்கள் என்றோ அல்லது திறமை அற்றவர்கள் என்பது மட்டும் அல்ல தவறு செய்கின்றவர்கள், தூய்மைக்கு அப்பாற்பட்டவர்கள் என்றோ, இந்த 15, 20 ஆண்டு காலமாக அந்த தூய்மையானவர்கள் தகுதி உடையவர்கள் என்பதைக் கண்டு அறியக்கூடிய உயர்நீதி மன்றத்தில் பொறுப்பில் உள்ள நீதிபதிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. மாவட்ட நீதிபதிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக அங்கே பணியாற்றியவர்கள் தற்காலிகமாக பணியாற்றக்கூடிய சட்டம் படித்தவர்கள் They are not qualified என்பது தவறு. அவர்கள் பூரண தகுதி உடையவர்கள். சட்டம் படித்தவர்கள், விதியிலேயே அவர்களை தேர்ந்தெடுக்கலாம் என்று இருக்கிறது. அப்படிப்பட்ட விதி 20 ஆண்டு காலமாக தமிழகத்தில் இருந்து வருகிறது. அந்த விதிக்கு உட்பட்டு—அரசு தேர்ந்தெடுக்கவில்லை—உயர்நீதிமன்றம் தேர்ந்தெடுத்தது. உயர்நீதிமன்றத்தில் உள்ள 2 நீதிபதிகள் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் தகுதி குறைந்தவர்கள், தவறு செய்கிறவர்கள் என்று They have not been reverted to the parent Department by the High Court, அவர்கள் அதையும் செய்யவும் இல்லை. இது தான் நடந்த

உண்மை. இந்த நிலையில் தான் தற்போது இந்த பிரச்சினை ஒரு உச்சக் கட்டத்தை அடைந்து அவர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற ஒரு முடிவு வந்து அதாவது 3 ஆண்டு காலம் சட்டப்படிப்பு முடித்து விட்டு பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களோடு அவர்களும் போட்டியிட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வழக்கறிஞர்கள் சங்கம் வைத்தது. அதற்கு மாறாக மேஜிஸ்ட்டிரேட் சங்கத்தைப் பொறுத்தவரையில் அதை அவர்கள் எதிர்த்தார்கள். உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பார் கவுன்சிலின் சேர்மன் திரு. ராஜய்யா அவர்கள் தமிழ்நாடு பார் கவுன்சில் சார்பாக ஒரு ரிட் தாக்கல் செய்தார்கள். அந்த ரிட்டின் அடிப்படையில் தற்காலிகமாக பன்னெடுங் காலமாக பணியாற்றிக்கொண்டு இருக்கிறவர்களை நிரந்தரம் செய்யக்கூடிய ஆணை நிறுத்தி வைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசும்போது என்று கருதுகிறேன், 1981-லிருந்து 5 ஆண்டு காலம் இடைவெளி ஏன் என்று கேட்டார்கள். உயர்நீதி மன்றத்தில் தடை ஆணை விதித்து 1985 ஆம் ஆண்டுதான் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனால் தான் இந்த 4 ஆண்டு காலம் அந்த கால தாமதம் ஏற்படுவதற்கு காரணம். உயர் நீதிமன்றத்தில் தடை ஆணை 1981-லிருந்து 1985 வரை நடைமுறையில் இருந்தது.

பிறகு நீதிபதி திரு. ராமானுஜம் அவர்கள் தீர்ப்பை வழங்கினார்கள். நீதிபதி திரு. ராமானுஜம் அவர்கள் 4 மாதங்களில் அவர்களை எல்லாம் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற தீர்ப்பினை வழங்கியதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் போன்றவர்கள் பேசும் போது சொன்னார்கள். அது தவறு. உண்மை அல்ல. நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் அளித்து இருக்கிற தீர்ப்பிற்கு இன்றைக்கு ஒரு விளக்கம் தேவை என்பதால் இதைச் சொல்ல விரும்புகிறேன். The power of the Government to invoke Rule 38 is notwithstanding the existence of any other contrary rule ; That means, the Government has got the power to regularise notwithstanding any other rule to the contrary, provided they exercise the power in a case which is just and equitable. However, while acting under Rule 38 the Governor has to naturally keep in mind Articles 234 and 235 of the Constituion in the interests of not only the individuals concerned but also in the interests of the judicial administration as well and also the interests of the feeder categories whose interests are likely to be affected by the exercise of the power of relaxation—என்று நீதிபதி திரு. ராமானுஜம் அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். அந்த தீர்ப்பினை ஒட்டி இவர்கள் கலந்து கொள்ளும்படி உயர்நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டது.





ஆர்ட்டிகள் 234, 235 பிரகாரம், அரசு எதேச்சாதிகாரமாக ஒரு முடிவினை எடுத்து, அவர்களை நிரந்தரப்படுத்திவிடுகிறோம் என்று சொல்வதுகூட, இந்தத் தீர்ப்புக்கு உட்பட்டது அல்ல என்ற காரணத்தால் எந்த முறையில் அவர்களை நிரந்தரமாக்குவது அல்லது நிரந்தரமாக்க வேண்டாமென்றால், எத்தகைய முறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது என உயர்நீதிமன்றம் 1985-ல் உயர்நீதிமன்ற நீதிபதி இராமானுஜம் தீர்ப்பு கொடுத்த போது கேட்டுக்கொள்ளப்பட்டது. அப்படி உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்ட பிறகு, உயர்நீதிமன்றம் ஸ்கிரீனிங் கமிட்டி, என்ற ஒன்றைப் போட்டு, இந்த 12 ஆண்டுகளாக தற்காலிகமாக பணியாற்றி வருகிற இந்த நீதிபதிகளில், தகுதி குறைந்தவர்கள் அல்லது தூய்மைக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கண்டறிந்து அவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்து விட்டு, மீதமானவர்களை நிரந்தரப்படுத்தலாம் என்று உயர்நீதிமன்றம் ஒரு முடிவிற்கு வந்து, அரசும் வந்து, அவர்களும் அதற்கு இசைந்து அந்த ஸ்கிரீனிங் கமிட்டி மூலமாக அவர்களை நிரந்தரப்படுத்துகின்ற முயற்சியில் உயர்நீதிமன்றம் ஈடுபட்டிருக்கிறது. இது தான் இதுகாறும் நடந்த உண்மை. அதற்கு மாறாக ஏதோ தமிழக அரசு தான் இந்த இடங்கள் இது வரை காலியாக இருப்பதற்கு ஒரு காரணம் என்று எண்ணத்தை வெளியே ஏற்படுத்துவது உகந்தது அல்ல என்பதற்குச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு இடையில் கூட இவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்ற காரணத்தால் பொது மக்களுக்கு இன்னல்களும், இடர்பாடுகளும் ஏற்படுகிறது என்பதற்காக, pending a decision by the High Court pending a decision of the screening committee of the High Court என்பற்தகாக தற்காலிக முறையில் சர்வீஸ் கமிஷன் மூலமாக அவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று விழைந்தோம். ஆனால் தற்காலிக முறையிலே சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்ந்தெடுக்க முடியாத நிலை இருந்தது. நீதிபதி சத்தியதேவ் அவர்கள் ஒரு தீர்ப்பின் மூலமாக இப்படி தேர்வாணைக் குழுவின் மூலமாக நடைபெறும் தேர்வுகளில் கூட, இந்தப் பிரச்சினை செட்டில் ஆகிய வரைக்கும் அவர்களை தற்காலிகமாக நியமனம் செய்யலாம் என்ற காரணத்தால் இந்த 57 பேரை தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்திருக்கிறதே, அந்த 57 பேரை தேர்ந்தெடுத்ததிலே அரசு தேர்ந்தெடுக்கவில்லை. அரசுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது என்ன காரணம் என்று கேட்டார்கள். அரசுக்கு தேர்வாணைக் குழுவாலே நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதிலே எள் அளவும் சம்பந்தமில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். காரணம் தேர்வாணைக் குழுவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளைப் பொறுத்தவரைக்கும், தேர்வாணைக்குழு கூட தன்னிச்சையாக செய்துவிட முடியாது. காரணம் உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு தெளிவாக்கப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றப் பிரதிநிதிகளே நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்க, தேர்வாணைக் குழுவிலே இடம் பெற வேண்டும். அவர் சிட்டிங் ஜட்ஜ்-ஆக இருக்க வேண்டும். அவர் என்ன மார்க் போடுகின்றாரோ அந்த அடிப்

படையில், அந்த சீனியாரிட்டி பிரகாரம் தான் உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் தற்போது உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளாக பதவி ஏற்றிருக்கிறார்கள். மாண்புமிகு நடராஜன் அவர்களும், மோகன் அவர்களும் உயர்நீதிமன்றத்தால் அனுப்பப்பட்டு, அவர்கள் அந்தத் தேர்வை நடாத்தினார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னால் வந்த தீர்ப்புக்கு உட்பட்டு, அவர்கள் போடுகிற மார்க்கை மாற்றுகின்ற அதிகாரம் கூட தேர்வாணைக் குழுவிற்கு இல்லை. அவர்கள் மார்க் போட்டால் கூட அது செல்லாது என்ற முறையில் உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இருக்கிற காரணத்தால் அந்த அடிப்படையிலே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 57 பேரும் டிசம்பர் மாதத்திலேயே தேர்ந்தெடுக்கப்பட்டும், ஏன் இவ்வளவு கால தாமதம் என்று ஒரு வினாவை வினவினார்கள். 57 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், 9 பேர்கள் என்ன கம்யூனிட்டி என்பதற்கு சர்டிபிகேட் கொடுக்கப்படவில்லை. அந்த 9 பேரும் உயர்நீதிமன்றத்திலிருந்து வந்தவர்கள். அந்த Rule of Reservation apply செய்கின்றபோது ஒரு வேளை 9பேரும் பார்வர்டு கம்யூனிட்டியாக இருந்து விட்டால், பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வருகின்ற இடத்தை அவர்கள் பிடித்து விடுவார்கள். அதற்கு விளக்கம் கேட்டு, அதிலே சற்று தாமதம் ஏற்பட்டது. பிறகு உயர்நீதிமன்றம் அதற்கு ஒரு பதிலை அனுப்பியது, தேர்வாணைக் குழுவிற்குச் சென்றது. பிறகு அந்த 9 பேர்களுக்கு மட்டும் தனியாக ஒரு தேர்வை நடத்தி, அதைக் கண்டறிந்து ஆக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களை அந்த முறையிலே பதவியிலே அமர்த்த அரசு ஆணையிட்டது. அந்த ஆணையை உயர்நீதிமன்றம் ஈடேற்றியது என்பதே இதற்குக் காரணம் என்று சொல்ல விரும்புகிறேன். டிஸ்டிரிக்ட் ஜட்ஜைப் பொறுத்த வரையில், 6 பேர்களுக்கு விளம்பரப்படுத்தியிருக்கிறது. உயர்நீதிமன்றத்தால் அது நிறைவேற்றப்பட இருக்கிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது பெண்டன்சியைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது என்று கேட்டார்கள். பெண்டன்சியைப் பொறுத்தவரைக்கும், இதிலே ஒரு நிதித் தட்டுப்பாடு இருக்கிறது. 7-வது பைனான்ஸ் கமிஷனைப் பொறுத்த வரைக்கும், நீதித் துறைக்கு பிரத்யேகமான நிதியை மைய அரசு ஒதுக்கவில்லை. 7-வது பைனான்ஸ் கமிஷனிலே அதனுடைய இறுதிக் காலக் கட்டத்திற்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் இது ஒரு சர்ப்ளஸ் ஸ்டேட் என்று நிர்ணயித்து, 7-வது 8-வது நிதிக் கமிஷனிலே நீதித் துறைக்கு அவர்கள் எந்தவித நிதியும் ஒதுக்கவில்லை.

(பிற்பகல் 2-10)

அதன் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்பட்டன. இருந்த போதிலும் நீதிமன்றம் கட்டுவதில் நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசு தன்னுடைய வருவாயைக் கொண்டே பல இடங்களில் நீதிமன்றங்களை உருவாக்கி



இருக்கிறது. உதாரணமாக 1977-க்கு முன்னாலே 31 நீதிமன்றங்கள்—டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜஸ் கோர்ட்ஸ் இருந்தன. தற்போது அது 59 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப் போலவே ஒட்டுமொத்தமாக சப்கோர்ட்டுகளைப் பொறுத்த வரைக்கும் 67 ஆக இருந்தது. இந்த 7 ஆண்டுக் காலத்தில் 27 கோர்ட்கள் துவக்கப்பட்டு அது 94 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில் 93 ஆக இருந்தது, இன்றைக்கு 146 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. சீப் ஜூடிஷியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில் 16 ஆக இருந்தது 20 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. சப் ஜூடிஷியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளைப் பொறுத்த வரையில் 15 ஆக இருந்தது 29 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஜூடிஷியல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில் 21 ஆக இருந்தது 58 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஜூடிஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில் 30-லிருந்து அது 45 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக 180 புதிய நீதிமன்றங்களை பென்டன்சி ஆப் கேஸஸைக் குறைக்க வேண்டுமென்ற முறையிலே நாம் துவக்கியிருக்கிறோம்.

அதைப் போலவே வழக்கறிஞர்கள் போதாததன் காரணமாக சில நேரங்களில் காலத்திலே மக்களுக்கு நீதி கிடைக்காத நிலைமை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்காக 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு இடங்களிலே எ.பி.பி. 1, 2 என்ற முறையிலே 184 போஸ்ட்களை உருவாக்கி அவர்களை நியமித்து அந்த அடிப்படையில் பென்டன்சி ஆப் கேஸஸ் இல்லாத ஒரு நிலையை அரசு ஏற்படுத்தி வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் அட்வகேட்ஸ் அசோசியேஷன் தீர்மானத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் அதற்கு விளக்கம் அளித்துவிட்டேன். சட்டத் துறைச் செயலாளருடைய எக்ஸ்டன்ஷன் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இருவர் பேசுகின்றபோது சொன்னார்கள். சட்டத் துறைக்கும் மற்றத் துறைகளுக்கும் மாறுபாடு இருக்கிறது. Here the Proprie ory knowledge of the individual coun s a lot இதை நடைமுறையில் நாம் கண்டு வருகிறோம். மகாராட்டிரா மாநிலத்தில் 73-வது வயதை எட்டுகிற வரைக்கும் திரு. பாட்ரி என்று பெயர் கருதுகிறேன், அவர் சட்டத் துறைச் செயலாளராக தொடர்ந்து நீடிக்கப்பட்டு வந்து இருக்கிறார். ஏதோ இந்தச் சட்டச் செயலாளர் அவர்களை புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகு அவரைச் சட்டத் துறைக்குக் கொண்டு வந்தது போலவும் ஏதோ ஒரு காரியத்திற்காக அவருக்கு நீட்டிப்புத் தருவதைப் போலவும் யாரும் எண்ணிவிட வேண்டாம், காரணம் அவர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து இருந்திருக்கிறார். நமக்கு உள்ள பெருமை எல்லாம் மைய அரசிலே இருக்கிறவர்கள் திரு. ஏ. கே. சென், சாலெஜ்ராஜ், கே. கே. வேணுகோபால் போன்றவர்கள் கூட திரு. வடிவேலு அவர்களைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட

முறையில் வழக்குகளை அரசு சார்பில் ஆலோசனை நல்கியதில் இருந்து நான் சொல்கிறேன், தமிழகத்திலே பெருமையாக சொல்லலாம். He is an expert in Constitutional law இது வெளிப்படையான உண்மை. கான்ஸ்டிட்யூஷனில் அவருக்கு இருக்கிற தனிப்பட்ட திறமையை நாம் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அவருக்கு நீட்டிப்புத் தரப்பட்டது. அதற்காக அந்தத் துறையில் மற்றவர்கள் இல்லை என்று அல்ல, இருக்கிறார்கள். சட்டத் துறைச் செயலாளர் திரு. வடிவேலு அவர்களைப் பொறுத்தவரைக்கும் தனிப்பட்ட முறையிலே நீதிமன்றத்திலே பணியாற்றுகிற வழக்கறிஞர்களைவிட—திரு. ஏ. கே. சென், இந்தியாவிலேயே ஒரு தலை சிறந்த வழக்கறிஞர், திரு. சோலெஜ்ராஜ் அதைப் போலவே, டாக்டர் சிட்டாலே அதைப்போலவே. ஏகமனதாக இவர்கள் எல்லாம் திரு. வடிவேலு அவர்களிடம் கான்ஸ்டிட்டியூஷனில் கலந்தாலோசனை கேட்கக் கூடிய நிலைமையைக் கண்டிருக்கிறேன். அவர்களுடைய Proprietory individual knowledge in constitutional law, பயன்படுத்த வேண்டுமென்ற முறையிலே அவர்களுக்கு நீடிப்புத் தரப்பட்டதே ஒழிய வேறு எந்தக் காரணமும் இல்லை. உண்மை என்னவென்றால் அவருக்கே அதில் விருப்பம் இல்லை. நீட்டிப்பை அவர் கூட விரும்பவில்லை என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது அடிஷனல் பி.பி., அடிஷனல் ஜி. பி., ஜி. பி. ஆகியவர்களைப் போடுவதிலே திறமையற்றவர்களை நியமிக்கிறார்கள். ஆளுங் கட்சிக்காரர்களை நியமிக்கிறார்கள் என்று திரு. ரவீந்திரன் சொன்னார். கடந்தகால வரலாற்றை எடுத்துப் பார்ப்போமானால் அது காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, தி.மு.க. ஆட்சியிலும் சரி, எடுத்துப் பார்த்தால் இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் அல்லாதவர்கள் தான் அதிகமாக நியமிக்கப் பட்டிருக்கிற காலம் இந்த 7 ஆண்டுக் காலம் தான் என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். காரணம் திறமைக்கு நாம் முக்கியத்துவம் தர வேண்டுமென்ற அடிப்படையிலே அவர்களை நியமித்து இருக்கிறோம். It is a tenure post. There is absolutely nothing wrong in appointing persons relating to political parties. போடுவது தவறு என்று சொல்ல முடியாது. முழுக்க முழுக்கக்கட்சிக்காரர்களை போடவில்லை. கட்சிக்காரர்களைப் போடாமலும் இல்லை. கட்சிக்காரர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். But this is purely a temporary post; a tenure post lasting only for three years என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே, மூன்று ஆண்டுக் காலத்திலிருந்து ஐந்தாண்டுக் காலமாக அந்த டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புக்குத் தேர்வு செய்யப்படுகிற வயது வரம்பை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை திரு. ரவீந்திரன் அவர்கள் சொன்னார்கள்.



நாம் ஏற்கெனவே ஆணை இட்டிருக்கிறோம். இது நடைமுறைக்கு வந்திருக்கிறது. ஏ.பி.பி.-2, கூட முன்பு மூன்றாண்டு என்று இருந்தது. தற்போது ஐந்தாண்டுகளாக நாம் உயர்த்தியிருக்கிறோம்.

பள்ளிப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. நரசிம்மன் அவர்கள் பேசுகின்ற பொழுது ஆங்கே நீதிமன்றம் ஒன்று தேவை என்று கேட்டார். இன்டகிரேஷன் ஆப் ஜுடீஷியரி என்ற ஒரு நிலையைக் கொண்டு வந்து, District Munsif and Sub-Magistrate Courts should be integrated together and they should be called district Munsif-cum-Judicial Magistrate. என்ற முறையிலே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் இருக்க வேண்டும் ; ஒரே குடையின்கீழ் நீதி பரிபாலனம்—சிவில் அண்ட் கிரிமினல் இரண்டுமே பொது மக்களுக்கு ஒரேயிடத்திலே கிட்ட வேண்டுமென்ற முறையிலே நாம் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். இந்த டெம்பரரி மாஜிஸ்ட்ரேட் பிரச்சினை வந்து, வழக்கறிஞர்கள் பக்கம் பிரச்சனை வந்து, நீதிமன்றங்களெல்லாம் சென்று, இந்தப் பிரச்சினைக்கு நீதிமன்றத்திலே தடை ஆணை வாங்கி நான்காண்டு காலம் இருந்துவிட்ட காரணத்தால், அந்தத் தடை ஆணை 1985-லே நீக்கப்பட்டிருக்கிறது. தற்போது இருக்கிற தலைமை நீதிபதி அவர்கள் விசேஷ அக்கறையோடு இந்தப் பிர்ச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதை ஒட்டி அந்த இன்டகிரேஷன் ஆப் ஜுடீஷியரிக்கு சட்டமே இந்த அவையிலே நாம் இயற்றிவிட்டோம். அதை நடைமுறைப் படுத்துகின்றபொழுது பள்ளிப்பட்டு போன்ற ஒவ்வொரு வட்டத்திற்கும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கம் ஜுடீஜிஷியல் நீதிமன்றம் கொண்டு வரக்கூடியதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறையிலே உள்ள கைதிகளுக்குப் பத்திரிக்கைகளைப் போடுவதைப் பற்றிச் சொன்னார்கள். அது பன்னெடும் ஆண்டுகளாக மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிற பொழுது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, தவறு இருந்தால் ஏன் அதை மாற்றி இந்த ஆட்சிக் காலத்தில் அமைத்து எதிர்க்கட்சி பத்திரிக்கைகளைக் போடக் கூடாது என்ற வினாவை எழுப்பினார்கள். மற்றவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். வி. பி. சிந்தன் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இது குறித்து அரசு தனியாக பரிசீலிக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

பிரிமெச்சூர் ரிலீஸ் பற்றிச் சொன்னார்கள். பிரிமெச்சூர் ரிலீசைப் பொறுத்தவரைக்கும் பத்தாண்டு காலத்திற்கு முன்பே இந்த ஆட்சி வந்தபிறகு, ஒரே ஒருவருக்கு மட்டும்தான் பிரிமெச்சூர் ரிலீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களைப் பொறுத்தவரையில் விதிக்கு உட்டபட்டு 1978-ஆம் ஆண்டுக்கு முன்னால் சிறைச்கு சென்றவர்கள் 10 ஆண்டு காலம் முடிந்தபிறகு, அவர்கள் ஈடுபட்ட வழக்குகளினுடைய தன்மைக்கேற்ப விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு சிறைக் கைதி மாசிலாமணி என்பவரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள். மாசிலாமணி அவர்களைப் பொறுத்தவரைக்கும் விதிப்படி அவருக்குக்கொடுக்க வேண்டிய விடுமுறையை விட அதிகமான விடுமுறையை மிகத் தாராளமாக இந்த அரசு கொடுத்திருக்கிறது. அவருக்கு 126 நாட்கள்தான் விதிக்கு உட்பட்டு விடுமுறை தந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குமாறாக 300-க்கு மேற்பட்ட நாட்கள் ஒவ்வொரு முறையும்—முன்பு இந்த அவையிலே இருந்த மரியாதைக்குரிய பெரியவர் புலவர் கோவிந்தன் அவர்கள் வந்தாலும் மாண்புமிகு பாபு ஜனார்த்தனம் அவர்களோ அல்லது மாசிலாமணி அவர்களுடைய மனைவியோ என்னிடம் வந்து ஒவ்வொரு முறையும்—வந்த நேரமெல்லாம் நான் கொடுத்திருக்கிறேன். ஏதோ ஆளுங்கட்சியைச் சார்ந்த மாணவர் பிரிவைச் சார்ந்த ஒருவரை, மாணவர் தலைவரை, அண்ணாமலை யூனிவர்சிட்டியிலே கொலை செய்து விட்டார் என்ற காரணத்திற்காக அவருக்கு விடுமுறை கொடுக்கக் கூடாது என்ற முறையிலே இந்த அரசு என்றுமே செயல்படவில்லை. அது மாசிமாலணி அவர்களுக்கே தெரியும். ஆனால் ஒன்று. நான் விடுமுறை கொடுத்து விடுகிறவன். விடுமுறை 15 தினங்கள் எனக் கொடுத்த அடுத்த நாள் அவரைச் சார்ந்த கட்சியினுடைய பத்திரிக்கையிலே வரும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு இல்லக்கிழத்தி இல்லையா. மனைவி இல்லையா, மாசிலாமணி திருமணம் ஆனவரே. அவருக்கு விடுமுறை கொடுக்க மறுக்கிறாரே என அட்டாக் செய்து ஒரு ஆர்ட்டிகிள் எழுதுவார்கள். பலமுறை இப்படிப் பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. காரணம் என்னவென்று புரியவில்லை. இது மாசிலாமணிக்கே தெரிந்து வந்ததா? மாசிலாமணி துணைவியாருக்குத் தெரிந்து வந்ததா அல்லது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் போன்றவர்களுக்குத் தெரிந்து வந்ததா என்று புரியவில்லை. அதிகப்படியான அளவிற்கு, மனிதாபிமான முறையிலே அவர்கள் திருமணம் ஆனவுடன் விடுமுறை கொடுக்கப்பட்டது; அவர்கள் கர்ப்பிணி ஆன பிறகு விடுமுறை கொடுக்கப்பட்டது. ஆனால் ஒவ்வொருமுறையும் ஏன் அப்படிப் பத்திரிக்கையிலே போட்டார்கள் என்றுதான் எனக்கு இன்னமும் புரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர.வர்கள் பல்வேறு சந்தர்ப்பத்தில் மாசிலாமணி அவர்களுக்கு பரோல் வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அவர்களுடைய மகள் உடல் நலம் இல்லாமல், கவலைக்கிடமான சூழ்நிலையில் இருந்த பொழுது, அதற்காகப் போய்ப் பார்ப்பதற்கான பரோல் கேட்ட நேரத்திலே மறுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான அளவிற்கு கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் ஆதாரம் வைத்து இருக்கிறேன். முருகையன் கொலை வழக்கு சம்பந்தப்பட்ட **சுபாஷ் அவர்களுக்கு ஆறு மாதத்திற்கு மேல் பரோல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





(பிற்பகல் 2–20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாத காலத்திற்கு பரோல் அல்ல. அவர் பரோலை வாங்கித் தப்பித்து ஓடிவிட்டார். The Director-General of Police (Crime Branch) has been directed to trace him out and bring him back to the prison. அப்படித்தான் அவர் வெளியே இருந்து கொண்டிருக்கிறார். தக்க ஆணையிட்டு, அவரை விரைவிலே தேடிப் பிடிக்க வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதைப் போலவே சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்ற பெயர் மாற்றத்தை விரைவிலே கொண்டு வர வேண்டுமென்ற நல்ல கோரிக்கையை பலர் எழுப்பினார்கள். அதுகுறித்து நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஆனால், அது இன்னும் நடைபெறவில்லை. துரித நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமை நீதிபதியாக, தமிழ் தெரிந்தவர்; தமிழர் இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு வலியுறுத்தவில்லையோ என்ற பொருள் படும்படி பேசினார்கள். அது தவறு. இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், தமிழ் நாட்டிலே நீதிமன்றத்திலே தலைமை நீதிபதியாக தமிழர் ஒருவர் இருக்க வேண்டுமென்பதை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் பிறகு பல சட்டங்களில் அரசும் மைய அரசுக்கு தன்னுடைய கொள்கையை ஆணித்தரமாக வலியுறுத்தி வருகிறது. இன்னும் வலியுறுத்தி வருகிறது. Even, transfer of Judges— பொறுத்தவரையிலும், உயர்நீதிமன்றத்திலே, மற்ற உயர்நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை மாற்றக்கூடாது என்பதைக் கொள்கை அளவிலே மைய அரசுக்குத் தெளிவாக்கியிருக்கிறது. தொடர்ந்து அதை வலியுறுத்தி வருவோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மதுரைக்கு ஒரு உயர்நீதிமன்ற பெஞ்ச் வேண்டுமென்ற கோரிக்கையை மைய அரசுக்கு வலியுறுத்தி வருகிறோம் அவர்கள் இன்னும் செவி சாய்க்கவில்லை வடபுலத்துப் பல பகுதிகளுக்கு அத்தகைய சலுகையைச் செய்திருக்கிறது. ஏனோ, இங்கே செவி சாய்க்கவில்லை. அதை மிக மிக வற்புறுத்திக் கேட்டு வருகிறோம். ஒரு பிரச்னை அதிலே என்னவென்றால், நமது உயர்நீதிமன்றம், மதுரைக்கு பிராஞ்ச் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறது. உயர்நீதி மன்றத்தினுடைய பரிந்துரை தேவைப்படுகிறது. ஆனால், நமது உயர்நீதிமன்றம் இரண்டு முறை அந்தக் கோரிக்கையைக் கேட்டும், உயர்நீதிமன்ற பிராஞ்ச் தேவையில்லையென்று அதற்கான காரணங்களை அங்கே எழுதி விட்டார்கள். அந்தக் காரணங்களை வைத்துக்கொண்டு மைய அரசு அதைத் தாமதப்படுத்தி வருகிறது. இருந்தாலும், Overruling what the High Court has narrated the State Government has found out points and asked the Central Government to apply its mind at the earliest.

அதைப் போலவே, நீதிபதிகள் வேக்கன்சீஸ் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்பொழுது சொன்னார். ஒட்டு மொத்தமாக ஒரு விளக்கத்தை நான் சொல்லிவிட்டேன்.

அவர் இன்னொரு நல்ல ஆலோசனையைச் சொன்னார். அதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களும் இந்த நீதிபதிகளுடைய நியமனத்திலே தற்காலிக நீதிபதிகள் விஷயத்திலே, மாஜிஸ்டிரேட் அசோசியேஷனுக்கும் வழக்கறிஞர்கள் சங்கத்திற்கும் இருக்கிற பிரச்னைகளைச் சுமுகமான முறையில் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் நாம் அதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். வழக்கறிஞர்கள் சங்கம், இதில் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அரசு சலுகை செய்ததாக எண்ணுகிறது. உண்மையிலே அது தவறு. நான் ஏற்கனவே விளக்கியது போல, 1981 ஆம் ஆண்டிலே வழக்கறிஞர்கள் மத்தியிலே இருந்துதான் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று காபினெட் டெசிஷன் கொண்டு வந்ததே இந்த அரசுதான் என்பதை நான் மீண்டும் தெளிவாக்குகிறேன். அதைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதிமன்றத்திடம் இந்தப் பிரச்னை இருக்கிறது. உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சென்றிருக்கிறார்கள். இந்த மாதத்தில் 9 ஆம் தேதி உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கு வருகிறது. உச்ச நீதிமன்றம் இந்த இரு சாராருக்கும் ஏற்ப, சுமுகமாகத் தீர்க்க உரிய ஆலோசனைகளை நல்கும் என்று நம்புகிறோம். அந்த அடிப்படையில் இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கும்.



அதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. சிந்தன் பேசும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். நீதிபதிகளுடைய தீர்ப்புகள் காலத்திற்கேற்ற கருத்துக்களை சமுதாய, மாற்றத்தை மனதில் கொண்டு, குறிப்பாக, அடிமட்டத்தில் இருக்கிற மக்களின் நலன் கருதி இருக்கவேண்டுமென்ற கருத்தை அவர்களும் சொன்னார்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும் சொன்னார்கள். அந்தக் கருத்தோடு இந்த அரசின் கொள்கையும் இணைகிறது. அதைப் பொறுத்தவரைக்குப் மைய அரசிலே, பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில், இந்தக் கருத்தினை விளக்கி, மாநில அரசின் சார்பிலே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தற்போது இதற்கெல்லாம் ஒரு ஜெனரல் கைட்லைன்ஸ் கொடுப்பதற்கு மைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

நீதித் துறைகளைப் பொறுத்தவரையில் ஆங்காங்கு தவறுகள் நடைபெறுகிறபொழுது தட்டிக் கேட்கின்ற உரிமை மாநில அரசுக்கு இல்லையா என்று பல உறுப்பினர்கள் கேட்டார்கள். நீதித் துறையிலே தவறுகளே இல்லையென்று நான் சொல்லவில்லை. தவறுகள் ஆங்காங்கு நடைபெறலாம். ஆகவே, அதைப் பற்றிய தகவல்கள் எல்லாம் வழக்கறிஞர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்தும் அரசுக்கு அவ்வப்போது வருகின்றன. ஆனால், தற்போது இருக்கிற நிலைமைகளைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதிமன்றத்திற்கு அவற்றை அனுப்பி, கவனியுங்கள் என்று சொல்வதைத் தவிர, வேறு அதிகாரம் மாநில அரசிடம் இல்லை.

சபார்டினேட் ஜுடிஷியரி என்ற நிலையில் கூட அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டதற்குப் பிறகு the administration of the subordinate judiciary actually vests only with the High Court. அதற்கு judicial vigilance என்று ஒன்று இருக்கிறது. அதற்கு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அனுப்பப்படுகிறார்கள். they also come under the direct administrative control of the High Court only. எனவே மாநில அரசைப் பொறுத்தவரையில் நேரடி நடவடிக்கை எதையும் எடுக்க முடியாத நிலையில் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்புகிறோம்; நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். அவர்கள் தன்னிச்சையாகச் செயல்படுகிற காரணத்தால் இதற்கு மேல் ஒன்றும் செயல்பட முடியாமல் இருக்கிறது. இதுகுறித்துகூட அண்மையில் டெல்லியில் நடந்த சட்ட அமைச்சர்கள், தலைமை நீதிபதிகள் மாநாட்டில் பாரதப் பிரதமர் அக்கறை செலுத்தினார்.

ஏழை எளிய மக்கள் நிறைந்த இந்திய நாட்டில் அவர்கள்
நலனைப் பேணியாக வேண்டும்; அந்த வகையிலே கருத்துக்
கள் அமைய வேண்டும் என்று மத்திய சட்ட அமைச்சர்
அவர்கள் ஆலோசனைக் கேட்டார்கள்.
ஆலோசனைகள் தரப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ப
பொறுத்தவரையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நீதிமன்றங்களைப்
சொன்னதைப்போல அவர்களுடைய
'மானிட்டரி' செய்யக்கூடிய நடவடிக்கை மத்திய அரசில் நடவடிக்கைகளை
இல்லை என்ற முறையிலே நம்முடைய சட்டங்கள் இருக் கூட
கின்றன. அதை மாற்றி, நீதித்துறையின் சுதந்திரத்தில் தலை
யிடாமல், அதே நேரத்தில் தூய்மைப் படுத்த அரசு என்
னென்ன செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்ற தலைமை
நீதிபதியிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அவர்களும்
5 நீதிபதிகளைக் கொண்டு குழு ஒன்றை அமைத்து, ஆலோ
சனைக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் குழு ஆலோசனை
வழங்க இருக்கிறது. விரைவில் இதுகுறித்து தக்க நடவடிக்கையை
மத்திய அரசு எடுக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதைப்போன்றே இன்னொன்றையும் சொன்னார்கள்.
'அட்வோகேட் வெல்ஃபேர் ஆக்ட்' அதாவது வழக்கறிஞர்கள்
நலச்சட்டம் ஒன்று கொண்டு வரப்படும் என்று நான்தான்
ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவித்தேன். அது மத்திய
அரசினுடைய அனுமதியோடு வரவேண்டியிருக்கிறது.
இந்தக் கூட்டத் தொடரிலேயே வழக்கறிஞர்கள் நலநிதிச்
சட்டம் கொண்டுவரப்பட்டு, அந்த அமைப்பை உருவாக்க
நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அதைப்போலவே குமாஸ்தாக்களுக்கும் சட்டம் வேண்டு
மென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள்
பேசும்போது குறிப்பிட்டார்கள். அதற்கான நடவடிக்கையும்
அரசு எடுக்கவிருக்கிறது.

'டைரக்ட்ரேட் ஆஃப் புரொசீடிங்ஸ்' என்பதைப் பொறுத்த
வரையில் வழக்குகள் காலதாமதத்திற்குக் காரணம்
மேல்மட்டத்தில் இல்லை. மாவட்டத்திலே, மாவட்ட ஆட்சித்
தலைவவர் பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால்
வழக்குகள் சரியாக இருக்கின்றனவா என்று அவருக்குக் கீழே
இருக்கிற வழக்கறிஞர் கண்காணிக்க வேண்டியிருக்கிற சூழ்நிலை
யிலும் திறமையாக அந்தப் பணியை மேற்கொள்ள முடியாது.
ஆகவே, இதற்கென்று தனியாக டைரக்ட்ரேட் ஆஃப் புரொ
சீடிங்ஸ் என்ற அமைப்பை உடனடியாகக் கொண்டுவர அரசு
நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.



காமராஜ் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் நீதிமன்றம் தொடங்குவது தாமதப்படுகிறது என்று சொன்னார்கள். அங்கே சில பிரச்சனைகள் எழுந்து விட்டன. எந்த இடத்தில் மாவட்ட நீதிமன்றம் இருக்க வேண்டுமென்பதில் இரண்டு மாவட்டங்களுக்கிடையே பிரச்சனை எழுந்தது. அதனால் உயர்நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர்கள் சென்றிருக்கிறார்கள். ஒரு பகுதியில் அந்தப் பகுதியிலே வைக்க வேண்டுமென்றும், ஒரு பகுதியினர் இந்தப் பகுதியிலே வைக்க வேண்டுமென்றும் கூறியதால் பிரச்சனை எழுந்து, அதனால் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக இந்த தாமதம் போக்கப்பட்டு, சீர் செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவரவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே காமராஜர் மாவட்டம் தலைநகரில், விருதுநகரில் மாவட்ட தலைமை நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருக்கும்போது இப்போது இரண்டு இடங்களிலே கேட்டிருக்கிறார்கள்; அதனால் பிரச்சனை வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் இப்போது எந்த இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? இதற்கு உச்ச நீதிமன்றத்தின் அனுமதி அல்லது உயர்நீதிமன்றத்தின் அனுமதி தேவையா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இதை உயர்நீதிமன்றத்தோடு கலந்து செய்ய வேண்டும். காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் உள்ளவர்கள் இந்தப் பிரச்சனையை எழுப்பியதால், சென்ட்ரல் பிளேஸ் எது என்று பார்த்து முடிவு செய்ய உயர்நீதிமன்றம் கலக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில தினங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும்.

அதைப்போன்று ஸ்டேட் லா கமிஷன் ஒன்று தேவை என்று இங்கே சொன்னார்கள். பழைய சட்டங்களுக்கு வேண்டிய புதிய திருத்தங்களைக் கொண்டுவர இந்த ஆண்டு ஸ்டேட் லா கமிஷன் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-30)

மாண்புமிகு உறுப்பினர்கள் சிறைத்துறை நிர்வாகத்தை பொறுத்தவரையில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் அவற்றைக் களைய வேண்டிய வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்திச் சொன்னார்கள். எங்கெங்கு சிறைத்துறையிலே தவறுகள் நடக்கின்றன என்று குற்றச்சாட்டு வந்தாலும் உடனடியாக அதற்கான ஆணையினை

இடுகிறோம். குப்பரின்டென்டென்ட்ஸ் ஆஃப் ப்ரிசன்ஸ் என்ற முறையில் அதாவது தலைமைக் காவலர்களைப் பொறுத்த வரையில் இரண்டு பேர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஜெயிலர் இரண்டு பேர், டெப்புட்டி ஜெயிலர் ஒருவர், அசிஸ்டென்ட் ஜெயிலர் 4 பேர், வார்டன்ஸ் 44 பேர், ஜூனியர் அஸிஸ்டென்ட் ஒருவர், ப்ரபேஷன் ஆஃபிஸர் ஒருவர், ஆபீஸ் அஸிஸ்டென்ட் 3 பேர், இப்படி 60 பேர் பணியாளர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு திரு. உமாபதி அவர்கள் ஒரு கடிதம் எழுதி இருந்தார்கள். அதிலே உண்மை என்ன இருக்கிறது என்பதைக் கண்டறிய ஏற்பாடு செய்து, பின்னர் உண்மை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அந்த அதிகாரிகள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆகவே தவறுகள் சில இடங்களில் இருக்கின்றன. அந்தத் தவறுகளைக் களைகின்ற வகையில் அரசு துரித நடவடிக்கை எடுக்கிறது என்பதைச் சொல்வதற்காகத் தான் நான் இதைச் சொல்கிறேன்.....

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதியினுடைய விசாரணைக்கான அவசியம் இல்லை என்று சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டீர்கள். ஜூடிஷியரி என்கொயரி என்று போடுவதற்குப் பதிலாக...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னை விவாதத்தில் இழுக்க வேண்டாம். நமக்குள் கான்பிடன்ஸ் இருக்க வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நல்ல கருத்தை ஏற்றுக்கொண்டுதான் சிறையிலே நடக்கிற கொடுமைகளைப் பற்றி விசாரிப்பதற்கு, நேரில் கண்டறிவதற்கு, கைதிகளைப் பார்த்துப் பேசி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு அனைத்துக் கட்சி பிரதிநிதிகளையும் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைப்பார்களா என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலே உள்ள குறைகளைப் பொறுத்தவரைக்கும்.... (குறுக்கீடு).... மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற இயக்கத்தைச் சார்ந்தவர்தான் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதியிருந்தார்கள். பலரில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இயக்கத்தைச் சார்ந்தவர் ஒருவர் கொடுத்த குற்றச் சாட்டின் அடிப்படையிலும் தான் நடவடிக்கை எடுத்து டீ.ஜி.பி. அவர்களே நேரடியாக இருந்து அந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள்என்பதை நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.



சிறைத் துறையைப் பொறுத்தவரையில் சிறை கண்காணிப்புக் குழு ஏற்கெனவே போடப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிலே பிரதிநிதித்துவம் தரவேண்டுமென்று ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டு இருக்கிறது. அது நியாயமான கோரிக்கை. அதை விரைவில் ஈடேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது இந்தப் பிரச்சனை தீர்ந்து விடும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள்.

10 ஆண்டுகள் 15 ஆண்டுகள் என்று பணியாற்றிய Judicial Second Class Magistrate or District Munsiff என்ற பதவியில் இருப்பவர்களை parent department-க்கு ரிவர்ட் செய்துவிடுகிறார்கள், அது சரியில்லை என்று சொன்னார்கள். உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. உயர்நீதிமன்றம் இதிலே முடிவு எடுக்கவேண்டி இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்கள் நிலக்கோட்டையிலே நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கையைப் பல ஆண்டுகாலமாகச் சொல்லி வருகிறார்கள். நீதித் துறையைப் பொறுத்தவரைக்கும் ஒவ்வொரு வட்டத்திற்கும் நீதிமன்றம் வேண்டும் என்று கோரிக்கை மனு கொடுக்கிற போதெல்லாம் I use to very strongly recommend to Finance Minister. ஆனால் நிதித் தட்டுப்பாடு தடையாக இருப்பதால் அவ்வபோதுத்தடை ஏற்பட்டுவிடுகிறது. அடுத்து உயர்நீதிமன்றத்தைக் கலந்து ஆலோசிக்கிறோம். which is to be given priority is thema tei to be decided only by the High Court. ஹைக் கோர்ட்டிலேஇருந்து வருகிற நேரம் அது வேறிடத்திற்குச் சென்று விடுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கொடுத்த மனு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது. அங்கே நீதிமன்றம் வருவதற்கான நடவடிக்கையை அரசு விரைவில் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையிலே ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையுடன் இப்போது நான் அளித்த இந்த உரையையும் ஏற்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெனரலாக இருக்கிற லா மற்றும் போலீஸ் துறையிடம் கூட அல்ல, C./I.D. Crime has been entrustcd with tha wcιk.

திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை வேண்டாம் என்று நினைக்கிறேன். அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று சொல்லிவிடுகிறேன். பிறகு உங்கள் உத்தரவைப் போடுங்கள். தப்பு செய்தவர்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்யட்டும். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று பேர்கள் பேசியதும் வேண்டாம். அவற்றை அவைக் குறிப்பில் இருந்து நீக்கி விடுகிறேன்.

விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திருவாளர்கள் பொ. உத்திராபதி, பி.கே.எம். முத்துராமலிங்கம், எஸ். என். இராமசாமி, என். எஸ். வி. சித்தன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 13-நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,26,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

திருவாளர்கள் பொ. உத்திராபதி, பி.கே.எம். முத்துராமலிங்கம், எஸ்.என். இராமசாமி, என்.எஸ்.வி. சித்தன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,59,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

6. அறிவிப்பு

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 8-4-1986 (செவ்வாய்க்கிழமை) | .. | 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.<br>6—பத்திரப் பதிவு.<br>10—பால்வழங்கு திட்டங்கள்.<br>22—கால்நடை வளர்ப்பு. |
| 9-4-1986 (புதன்கிழமை) | .. | 18—மருத்துவம்.<br>19—பொதுச் சுகாதாரம்.<br>(தேவையிருப்பின் பேரவை மாலையிலும் கூடும்). |
| 10-4-1986 (வியாழக்கிழமை) முதல் 14-4-1986 (திங்கட்கிழமை) வரை | .. | —பேரவைக் கூட்டம் இல்லை. |

| | |
|---|---|
| 15-4-1986 (செவ்வாய்க்கிழமை) முதல் 22-4-1986 (செவ்வாய்க்கிழமை)வரை .. | ஏற்கனவே அறிவித்துள்ளபடி. |
| 23-4-1986 (புதன்கிழமை) .. | 12—தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம்.<br>25—சின்கோனா.<br>45—காட்டு வளத் துறை.<br>47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல்.<br>56—காட்டு வளம் குறித்த மூல தனச் செலவு. |
| 24-4-1986 (வியாழக்கிழமை) .. | 31—பழங்குடியினர், ஆதித்திராவிடர் முதலியோர் நலன். |
| 25-4-1986 (வெள்ளிக்கிழமை) .. | 24—தொழில்கள்.<br>51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| 26-4—1986 (சனிக்கிழமை). (இரண்டு அமைச்சர்கள்) .. | 44—எழுது பொருள் அச்சுத் துறை. (1 மணி நேரம்).<br>30—சமூக நலன் (2 மணிநேரம்). |
| 27—4—1986 (ஞாயிற்றுக்கிழமை) .. | விடுமுறை. |

(பிற்பகல் 2-40)

| | |
|---|---|
| 28-4—1986 (திங்கட்கிழமை) .. | 1—நிலவரித் துறை.<br>11—மாவட்ட நிர்வாகம்<br>41—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.<br>46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும். |
| 29—4—1986 (செவ்வாய்க்கிழமை) .. | 36—பாசனம்<br>37—பொதுப் பணிகள்-கட்டடங்கள்.<br>38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.<br>52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.<br>53—பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 30—4—1986 (புதன் கிழமை) .. | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |



| | |
|---|---|
| 1—5—1986 (வியாழக்கிழமை). .. | மே தினம் — விடுமுறை. |
| 2—5—1986 (வெள்ளிக்கிழமை) .. | 48—ஊரகத் தொழில்கள்<br>57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 3—5—1986 (சனிக்கிழமை). .. | 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்.<br>39—சாலைகளும் பாலங்களும்.<br>40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல்போக்குவரத்தும்.<br>54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.<br>55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்த குறித்து மூல தனச் செலவு. |
| 4—5—1986 (ஞாயிற்றுக்கிழமை). .. | விடுமுறை. |
| 5—5—1986 (திங்கட்கிழமை). 6-5-1986 (செவ்வாய்க்கிழமை). | } 15—காவல் துறை.<br>16—தீயணைப்புப் பணிகள். |
| 7—5—1986 (புதன் கிழமை). .. | 7—மாநிலச் சட்ட மன்றம்.<br>8—தேர்தல்கள்.<br>9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.<br>42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.<br>43—பல்வகை.<br>58—பல்வகை மூலதனச் செலவு.<br>59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் —<br>1. 1986—87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் — மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்தவரை விவாதமின்றி 1 மணிக்கு வாக்கெடுப்பு.<br>2. வாக்கெடுப்பிற்குப் பின் 1986—87-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல். |

| | |
|---|---|
| 8–5–1986 (வியாழக்கிழமை). | ..1986–87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு ஆய்வு செய்தலும், நிறை வேற்றுதலும். |
| 9–5–1986 (வெள்ளிக்கிழமை). | ..தனியார் அலுவல்கள். |
| 10–5–1986 (சனிக்கிழமை). | ..அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| 11–5–1986 (ஞாயிற்றுக்கிழமை) | ..விடுமுறை. |
| 12–5–1986 (திங்கட்கிழமை). 13–5–1986 (செய்வாய்க்கிழமை). | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் மற்றும் பிற அரசு அலுவல்கள். |

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (8–4–1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

65. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

72. கோரிக்கை எண் 13.—நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

73. கோரிக்கை எண் 14.—தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

74. கீழ்க்காணப் பெறும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்ற மேலவை 28–8–1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது.)

31–3–1984 ஆம் தேதியன்று உள்ளவாறு.

மாண்புமிகு டாக்டர் ம.பொ. சிவஞானம், மேலவைத் தலைவர்.



30–6–1984 ஆம் தேதியன்று உள்ளவாறு.

மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், மேலவைத் துணைத் தலைவர்.

31–3–1985 ஆம் தேதியன்று உள்ளவாறு.

1. திரு. பி. மாணிக்கம்.
2. திரு. எம். சி. சங்கரலிங்கம்.
3. திரு. கே. அருணாசலம்.
4. திரு. நெல்லை பாலாஜி.
5. திரு. ஈ.வே. அ. வள்ளிமுத்து.
6. திரு. வி. வி. வி. ஆனந்தம்.
7. மாண்புமிகு டாக்டர் ம.பொ. சிவஞானம், மேலவைத் தலைவர்.

## இணைப்பு I.

[7-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 404 [4944)-க்கான விடையைக்காண்க.)

(ஆ) தமிழ்நாட்டில் சணல் சாகுபடி பற்றிய பரிசோதனை பாத்திகள் 1971-72-ம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கோட்டத்தில் காமாட்சிபுரம் கிராமத்தில் தனியார் ஒருவர் வயலில் வேளாண்மைத் துறையால் அமைக்கப்பட்டது. அதிகச்செலவு செய்து சணல் உற்பத்தி செய்து பார்த்ததில், பதப் படுத்துவதிலும் நல்ல விலைக்கு விற்பனை செய்வதிலும் பல இன்னல்கள் ஏற்பட்டன என்று தெரியவந்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் சணல் பயிரிடுவது பற்றி சென்ற பத்து ஆண்டுகளாக ஆய்வுகள் நடத்தியுள்ளது. சணலை தனிப் பயிராகவோ/கலப்பு பயிராகவோ சாகுபடி செய்ய இயலும் எனக் கருத்து தெரிவித்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்படும் சணல் ஆராய்ச்சி நிலையம் துணை மையமாக, மைய, வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் (Indian Council of Agricultural Research) திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. புதிய இரகங்களின் இனப்பெருக்கம் மற்றும் மதிப்பாய்வு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுண் அணுக்கள், மதிப்பாய்வு போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கலப்பினம் மூலமாக இனப்பெருக்கம் செய்யப் பட்டு இந்த வகைகளை (Cultures) ஜே. ஆர். ஓ. 878, ஜே. ஆர். ஓ. 7835 மற்றும் ஜே. ஆர். ஓ. 7447 போன்ற இரகங்களுடன் சரிபார்க்கப்பட்டுள்ளன. பல சணல் இரகங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் ஜே.ஆர். ஓ. 878 என்ற இரகம் இதர

இரகங்களை விட அதிக மகசூல் கொடுக்கவல்லது என்பது தெரியவந்தது. சராசரியாக இந்த இரகம் ஹெக்டேருக்கு 18 குவிண்டால் சுத்தி செய்யப்பட்ட நார் கொடுக்கவல்லது. இது தவிர கே. ஒ. எம். 63 என்ற இரகமும் நல்ல இரகமாகத் தெரியவந்தன.

சணலை சோளத்துடனும், கருப்புடனும் ஊடுபயிராகப் பயிரிட்டு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. சோளத்தை இணை வரிசையில் பயிரிட்டு ஊடு பயிராக இரண்டிரண்டு வரிசைகள் சணல் பயிரிடப்பட்டது. அதிக வருமானத்தைத் தரும் என்று தெரிய வந்துள்ளது. ஆனால் கரும்புடன் சணல் ஊடு பயிராகப் பயிரிட்டதில் கரும்புப் பயிரைப் பாதிக்கும் என்பது தெரிய வந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இனப் பெருக்கம் மூலமாக, புதிய கண்டு பிடிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன; இதன் மூலமாக புதிய வகைகளான (Cultures) டி. ஜே. ஒ. 121, டி.ஜே. ஒ. 122. டி.ஜே. ஒ. 123, டி. ஜே. ஒ. 124 மற்றும் டி. ஜே. ஒ. 127 போன்றவைகள் ஆராய்ச்சியின் மூலம் மகசூலைக் கண்டறிய அனுசரணை ஆராய்ச்சி பாத்திகள் (Comparative trials) அமைக்கப்பட்டு வருகின்றன. அதைத் தவிர ஒருங்கிணைந்த ஆராய்ச்சிப் பாத்திகள் (Co-ordinated trials) ஒவ்வொரு ஆண்டும், அகில இந்திய கருத்தரங்கில் முடிவெடுப்பதற்கேற்ப நடத்தப்பட்டு வருகின்றன.

பெருவாரியாக சணல் பயிரிட, இன்னமும் தமிழ்நாட்டில் விற்பனை சூழ்நிலை உருவாகவில்லை.

விதைப் பயிராக பயிரிட்டதில் மற்ற மாநிலங்களைவிட அதிக சணல் விதை உற்பத்திக்கான சாத்தியக் கூறுகள் உள்ளதெனத் தெரிகிறது.

## இணைப்பு II.

[15-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 410 (1776)-க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 31-12-1984 முடிய பதிவு செய்து உயர்ப்பதிவேட்டில் உள்ளவர்களின் பிரிவு வாரியான விவரம்:



| பிரிவு விவரம். | 31-12-1984 முடிய பதிவு செய்து உயிர்ப் பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| (1) எஸ்.எஸ்.எல்.சி. தேறியோர் .. .. | 4,64,173 |
| (2) பி.யு.சி./மேல்நிலைக்கல்வி தேறியோர் .. | 1,84,913 |
| (3) பட்டதாரிகள் .. .. .. | 1,19,065 |
| (4) முதுநிலைப் பட்டதாரிகள் .. .. | 27,904 |
| (5) மற்றவர்கள் .. .. .. | 9,11,885 |
| மொத்தம் .. | 17,07,940 |

(ஆ) கடந்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டவர்களின் எண்ணிக்கை.

| பிரிவு வாரியாக விவரம். | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (1) எஸ்.எஸ்.எல்.சி. .. | 11,220 | 17,826 | 20,893 | 27,739 | 23,493 |
| (2) பி.யு.சி./மேல்நிலை கல்வி. | 1,686 | 2,216 | 4,106 | 6,766 | 6,113 |
| (3) பட்டதாரிகள் .. | 4,171 | 4,874 | 6,508 | 7,244 | 6,685 |
| (4) முதுநிலைப் பட்டதாரிகள். | 1,413 | 1,273 | 1,548 | 648 | 681 |
| (5) மற்றவர்கள் .. | 35,024 | 40,649 | 39,523 | 33,289 | 23,326 |
| மொத்தம் | 53,514 | 67,238 | 72,578 | 75,686 | 60,298 |

## இணைப்பு III.

(29—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 416 (6132) க்கான விடையைக் காண்க.)

(அ) 1983-84, 1984-85-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேனின் மொத்த மதிப்பு ரூ. 420.84 இலட்சம் ஆகும்.

மாவட்ட வாரியாக தேன் உற்பத்தி செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | 1983-84 அளவு (கிலோ). | 1984-85 அளவு (கிலோ). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சென்னை .. .. | 1,647 | 412 |
| 2 | வேலூர் .. .. | 86,412 | 86,588 |
| 3 | தர்மபுரி .. .. | 43,294 | 57,294 |
| 4 | கடலூர் .. .. | 6,176 | 9,235 |
| 5 | தஞ்சாவூர் .. .. | 1,235 | 2,412 |
| 6 | திருச்சி .. .. | 15,941 | 22,412 |
| 7 | மதுரை .. .. | 1,22,588 | 1,55,824 |
| 8 | திருநெல்வேலி .. | 99,882 | 1,28,353 |
| 9 | புதுக்கோட்டை .. | 45,647 | 56,235 |
| 10 | நாகர்கோவில் .. | 6,37,824 | 5,43,235 |
| 11 | சேலம் .. .. | 58,823 | 67,118 |
| 12 | பெரியார் .. .. | 235 | 1,118 |
| 13 | உதகை .. .. | 55,765 | 81,235 |
| 14 | கோயம்புத்தூர் .. | 45,941 | 42,647 |
| | மொத்தம் (கிலோ கிராம்) | 12,21,410 | 12,54,118 |



| | (மதிப்பு ரூ. 207.64 இலட்சம்) | (மதிப்பு ரூ. 213.20 இலட்சம்) |
|---|---|---|

(ஆ) தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் கீழ்க்கண்ட 9 மாவட்டங்களில் செயல்படுகின்றன:—

1. கன்னியாகுமரி மாவட்டம்.
2. திருநெல்வேலி மாவட்டம்.
3. காமராசர் மாவட்டம்.
4. அண்ணா மாவட்டம்.
5. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
6. வட ஆற்காடு மாவட்டம்.
7. தர்மபுரி மாவட்டம்.
8. சேலம்.
9. உதகமண்டலம் (நீலகிரி).

(இ) தஞ்சை மாவட்டத்தில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கிட வாய்ப்புகள் உள்ள இடங்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சங்கங்களை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கும்.

## இணைப்பு IV.

(50-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண். 13.

நீதி நிர்வாகம்—1986–87.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற்பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவினின்றும் இது தனித்து செயல்படுகின்றது. புதிதாகவும் கூடுதலாகவும் நீதிமன்றங்கள் அமைப்பது பற்றி உயர்நீதிமன்றம் பரிந்துரைப்பதின்பேரில் காலந்தாழ்த்தாது அரசு ஒப்புதல் வழங்குவதோடு, நீதிமன்றங்களுக்குத் தேவையான இட வசதி, பணியாளர், மரச்சாமான்கள் உட்பட அனைத்து வசதிகளுக்கும் வகை செய்வதன் வாயிலாக தனது பணிகளை ஆற்றுகிறது.

2. நீதி நிர்வாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் வருமாறு.—13ஆம் எண் கோரிக்கையும், 'நீதி நிர்வாகம்' தொடர்பான மானியங்களும் இதன்கீழ் குறிப்பிடப்பட்ட நீதி மன்றங்கள், அதிகாரிகள், பணியாளர் அமைப்பு ஆகியவை குறித்த செலவை குறிப்பதாகும்.—

(1) உயர் நீதிமன்றம், சென்னை.

(2) நொடித்தவர் சொத்தாட்சியர் உயர் நீதிமன்றம், சென்னை.

(3) சிவில் செசன்ஸ் நீதிமன்றங்கள் (சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட).

(4) சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை.

(5) மாநகர மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்.

(6) சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள் (நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள்).



(7) அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை..

(8) அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்

(9) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள் சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி செய்துகொள்ளப்படும் மேல் முறையீட்டுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு அதிகார மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்தத் துறையின் நிதிக்கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு, தொடர்புடைய துறைக் கணக்குகளில் பற்று எழுதப்படுகிறது.

3. நீதிமன்றங்கள், அலுவலகங்களிடையே பின்வருவனவற்றைப் பற்றிய செலவு, ''சாட்டிய செலவினம்'' என்றும் ''அனுமதிக்கப்பட்ட செலவினம்'' என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளது.—

| சாட்டியவை. (1) | அனுமதிக்கப்பட்டவை. (2) |
|---|---|
| 1. உயர் நீதிமன்றம் (நீதிபதிகள் பதிவாளர், மூல வழக்குகள் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் பணியாளர் அமைப்பு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத் துறை, சட்டத்துறை அறிவிப்பாளர்கள் மற்றும் பணியாளரமைப்பு உதவிப்பதிவாளர், புதுச்சேரி, புதுச்சேரிக்கு அதிகாரவரம்பை நீட்டித்தல் தொடர்பான பணியாளரமைப்பு, ஷெரிப், உயர் நீதிமன்றம், சென்னை பணியாளர்கள்). | 1. சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செசன்ஸ் நீதிமன்றங்கள். |
| | 2. சிறு வழக்குகள் நீதிமன்றம் சென்னை. |
| | 3. மாநகர மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், சென்னை. |
| | 4. குற்றவியல் சார்நிலை நீமன்றங்கள். |
| | 5. அரசுப்பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை. |
| | 6 அரசு சட்ட ஆலோசகர்கள்/வழக்குரைஞர்கள். |

சாட்டியவை.

2. நொடித்தவர், சொத்தாட்சி யரும் அவரது பணியாளரமைப்பும்.

அனுமதிக்கப்பட்டவை.

7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

8. முதன்மை பதிப்பு ஆசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு, சென்னை.

4. சென்னை உயர்நீதி மன்றம் :— இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர்நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

5. உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும் 'ரிட்' வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள் சொத்தின் மதிப்பு ரூ. 1,00,000-க்கு மேற்பட்டுள்ள அசல் தரப்பு வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி ஏனைய நீதிபதிகளுக்குப் பணிகளைப் பிரித்து வழங்குகிறார். தலைமை நீதிபதி உட்பட 21 நீதிபதிகள் தற்போது உள்ளனர். திங்கள் ஒன்றுக்கு தலைமை நீதிபதி ரூ. 4,000-மும் ஏனைய நீதிபதிகள் ஒவ்வொருவரும் ரூ. 3,500-ம் ஊதியமாகப் பெறுகின்றனர். நீதிபதிகளின் ஊதியம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் (பணி நிலைமைகள்) சட்டத்திற்குட்பட்டவையாகும்.

6. பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தில் நிர்வாக தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக பல அதிகாரிகள் அதாவது, கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப் படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலை கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர்.

உயர்நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. அவை நிருவாகத்துறை, நூலகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு; மேல்முறையீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் பிரிவு, மேல் முறையீடுகள் பரிசீலனையாளர் பிரிவு, நேர்முக உதவியாளர் பிரிவு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத் துறைப் பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, வரவு-செலவுத் திட்டப் பிரிவு மற்றும் ஆவணப்





பிரிவு ஆகியவையாகும். புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின்) தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்திற்குரியதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர் ஆகியோர் குறித்த செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக்கொண்டு, பின்னர் புதுச்சேரி அரசிடமிருந்து அத்தொகையை திரும்பப் பெறுகிறது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித்துறையின் நிருவாகத்திற்கும் உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

7. சட்ட அதிகாரிகள் :—மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட நியமிக்கப்பட்டுள்ள வழக்குரைஞர் குறித்த செலவுகளையும் வழக்கு தாக்கல் செலவுகள் உட்பட அரசு வழக்குரைஞரால் செய்யப்படுகிற செலவுகளையும் மாவட்டங்களிலுள்ள அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், நிலை-I, நிலை-II, ஆகியோரின் சம்பளம், படிகள் குறித்த செலவையும் இத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. மாநில அரசுத்தலைமை வழக்குரைஞர் ஒருவரும், அரசு உரிமையியல் வழக்கு நடத்துனர் ஒருவரும் உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். அரசு உரிமையியல் வழக்கு நடத்துனர் (Government Pleader) தவிர அரசு கூடுதல் வழக்குரைஞர் அறுவரும் (Additional Government Pleader) எட்டு அரசு வழக்கறிஞர்களும் (சிவில்). ஏழு வழக்கறிஞர்களின் (வரைவு) உதவியுடன் எதிர் உறுதிமொழிப் பத்திரம் தயாரிக்க ஒரு சிறப்பு அரசு வழக்கறிஞரும் உள்ளனர். வனத்துறை வழக்குகளுக்கான அரசு வழக்கறிஞர் ஒருவர் உள்ளார்.

தற்போது உள்ள எட்டு அரசு வழக்கறிஞர் பணியிடங்களில் (சிவில்) மூன்று பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. வரி குறித்த வழக்குகளை கவனிக்க இரு அரசு வழக்கறிஞர்கள் (சிவில்) பதவியிடங்களுக்கு அரசு இசைவு அளித்துள்ளது. இந்த இரு பதவியிடங்களும் இன்னும் நிரப்பப்படவில்லை.

குற்றவியல் வழக்குகளுக்காக குற்றவியல் வழக்கு நடத்துனர் ஒருவரும், ஒரு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர் (தற்போது பதவிகாலியாக உள்ளது) மற்றும் மூன்று அரசுத்தரப்பு வழக்கறிஞர்களும் (குற்றவியல் வழக்கு) உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். இவர்கள் தவிர, மாநகர அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் ஒருவர் மற்றும் மாநகர அரசு கூடுதல் உரிமையியல் வழக்கு நடத்துநர் இருவர், மாநகர அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், மற்றும் மாநகர அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துனர் இருவர் ஆகியோர் மாநகரிலுள்ள சட்ட அதிகாரிகளாவர். அண்மையில், அரசு நான்கு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துனர் பதவிகளுக்கு அனுமதியளித்துள்ளது. இப்பதவிகளில் தகுதியுள்ளவர்களை நியமிக்க பெயர்க்குறிப்புகளை அனுப்பும்படி சென்னை காவல் துறை கமிஷனர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

வெளியூர்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர்கள் அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் மற்றும் அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றி வருகின்றனர்.

மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் அரசுப் பணி ஆற்றுவதற்காக வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. அவர்கள் வழக்குரைஞர் தொடர்புரிமைக் கட்டணம் பெற இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத் தலைப்பில் பற்று வைக்கப்படுகின்றன. அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

8. குற்றவியல் உதவி வழக்கு நடத்துனர்கள் :—மாநகரிலும், பிற இடங்களிலும், உள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை I, II) மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளைக் கவனிக்கின்றனர். இவர்கள் குற்றவியல் நடைமுறை கோவை 25 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையான சம்பள விகிதம் பெறும் முழு நேர அரசுப் பணியாளர்களாவர்.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பள வீதம் வருமாறு :—

1. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர், நிலை I ரூ. 1,340—75—1,715—90—2,435.

2. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர், நிலை II, ரூ. 1,160—50—1,460—70—1,950.

மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் தற்போது துறைத் தலைவர் யாருமில்லை. நிருவாக வசதிக்காக வெளியூர்களிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டின் கீழும், சென்னை மாநகரிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள், சென்னை, காவல்துறை கமிஷனரின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர். குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கான இயக்ககத்தை ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வந்தது. இம்மாநிலத்தில் குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கான இயக்ககத்தை அமைப்பதற்கான கொள்கைக் குறிப்பை கொள்கையளவில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 1986—87-ல் இந்த இயக்ககத்தை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.



குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை II) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

9. அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவினம் தற்போது "214-A, நீதி நிர்வாகம்-AH. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்-AC. அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர்—04. அலுவலக செலவுகள்" என்பதன் கீழ் தற்போது பற்று வைக்கப்பட்டு வருகிறது.

1986–87 ஆம் ஆண்டில் "சட்ட அதிகாரிகள்" என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவுத் தொகை ரூ. 1,24,94,000 என்று மதிப்பிடப்படுகிறது. மேற்சொன்ன செலவில் வெளியூரிலுள்ள I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பளமும், படியும், பணியாளர்களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள் (வெளியூர்), அதாவது I, II, ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் செலவு, 1981–82 ஆம் ஆண்டு முதல் "AH. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்" என்ற தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

10. அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் : —(பொறுப்பு சொத்தாட்சியர்), சென்னை.—சென்னை, அரசு பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்), மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஒரு அதிகாரியாவார். அவருக்கு உதவியாக துணை அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்) ஒருவர் உள்ளார். அவருடைய சம்பள விகிதம் ரூ. 1,340–75–1,715–90–2,435 ஆகும். இவ்விரு அதிகாரிகளும் உரிய வயதடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள், மரணமடைந்தவர்களின் எஸ்டேட்டுகள் ஆகியவற்றை கவனித்து வருகின்றனர். அவர்கள் அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும் உள்ள விதிமுறைகளுக்கு இணங்க அவர்களிடம் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரிகளுக்குத் தொழில்நுட்ப முறையில் உதவி செய்வதற்காக ரூ. 1,160–50–1,460–70–1,950 என்ற சம்பள விகிதத்தில் உதவிப் பொறியாளர் பதவி ஒன்று உள்ளது. பட்டயக் கணக்குக் கல்வித் தகுதியுடைய சிறப்பு கணக்கர் பதவி ஒன்றும் இவ்வலுவலகத்தில் உள்ளது.

1986–87 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் ரூ. 5,08,000 செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

**11. பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்:** —இம்மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், பெருநகர் தலைமை கூடுதல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் உட்பட, 25 பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இரு மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் இரண்டு நடமாடும் நீதிமன்றங்களின் மாஜிஸ்டிரேட்டுகளாகப் பணியாற்றுகின்றனர். பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்டு இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவார். பெருநகர் தலைமைக் கூடுதல் மாஜிஸ்டிரேட்டு சார்நிலை நீதிபதி பதவித்தரத்தில் இருப்பவராவார். பொருளாதார குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த, மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் இரண்டு கூடுதல் தலைமை பெருநகர மாஜிஸ்டிரேட்டு பதவிகள் உள்ளன. இரண்டாம், மூன்றாம், நான்காம், பத்தாம், பதினொன்றாம் பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும் சார்நிலை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவராவர். ஏனைய அனைத்து பெருநகர் மாஜிஸ்ட்டிரேட்டுகளும் மாவட்ட முன்சீப் பதவித்தரத்தைச் சேர்ந்தோராவர். பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகள் சென்னை மாநகரிலுள்ள காவல் நிலையங்களையொட்டி அதிகார வரம்பைச் செலுத்துகின்றனர். 1986–87 ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களின் செலவினம் ரூ. 48,97,000 ஆகுமென மதிப்பிடப்படுகிறது.

பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக எழும்பூர் இரயில்வேநிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரு இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இது குறித்து ஏற்படும் செலவு முதற்கண் மாநில அரசால் ஏற்கப்படுகிறது. பின்னர், இச்செலவுத் தொகை இரயில்வே துறையிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

**12. மாநகர் சிவில் நீதிமன்றம் சென்னை :** — சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் 29 நீதித் துறை அதிகாரிகள் (10 மாவட்ட நீதிபதிகள், 19 சார்நிலை நீதிபதிகள், மாவட்ட முன்சீப் பதவித்தரத்தில் பதிவாளர் ஒருவர்) உள்ளனர். மாநகர் சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சென்னை-மாநகர் முழுவதுமாகும். சென்னை மாநகரில் சிவில் நீதிமன்றம் ரூபாய் 1,00,000 வரை பணஞ்சார்ந்த அதிகார வரம்பையும் ரூ.30,000 வரை மேல் முறையீட்டு அதிகார வரம்பையும் கொண்டுள்ளது. சென்னை செஷன்ஸ் கோட்டத்தின் (Divisions) செஷன்ஸ் நீதிமன்றமாகவும் இந்த மாநகர் சிவில்நீதிமன்றம் செயல்படுகின்றது. குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின்கீழ் வழக்குகளை (Calendar Cases) விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்கான அதிகாரம் சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த சில நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.



மாநகர் சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில், 1986–87 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூபாய் 50,01,000செலவு ஆகுமென்று மதிப்பிடப்படுகிறது.

**13. மாவட்டங்களிலுள்ள சிவில் நீதிமன்றங்கள்.**— இம்மாநிலத்தில் மொத்தம் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், தென்னாற்காடு, இராமநாதபுரம், வடாற்காடு, மதுரை (தெற்கு), பெரியார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன. அந்தந்த கோட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளே செஷன்ஸ் நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டிகள் சட்டம் போன்ற தனிச் சட்டங்களின்கீழ் சிறப்பு நடுவர்மன்றங்களாகவும் இந்த நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட கோட்டங்களில் சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களையும் மாவட்ட நீதிபதிகள் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள் பக்கத்திலுள்ள மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் குற்றவியல் சட்டத்திருத்தச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகார வரம்பு கொண்ட சிறப்பு நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். இந் நீதிபதிகள் ரூபாய் 30,000 வரையிலும் மேல்முறையீட்டு சிவில் அதிகார வரம்பு கொண்டவர்களாயுள்ளனர்.

மேலும் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்தில் ஆறு கூடுதல் நீதிமன்றங்களை சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைக்க அரசு 1982ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுமதி வழங்கியது. இது தொடர்பான செலவினம் ''214A நீதி நிருவாகம்'' என்ற தலைப்பின்கீழ் ''AF குற்றவியல் நீதிமன்றங்கள்'' என்பதன்கீழ் பற்று வைக்கப்படுகிறது.

**14. சார்நிலை நீதிமன்றங்கள் :** இம்மாநிலத்தில் 66 சார்நிலை நீதிமன்றங்கள் (Sub-Court) உள்ளன. இவற்றில் கோயம்புத்தூர், மதுரை ஆகிய இருஇடங்களிலுள்ள விற்பனைவரி மேல்முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் ஆயங்களைச்சேர்ந்த நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும். சார்நிலை நீதிபதிகள் அசல் தரப்பு வழக்குகளில் வரம்பேதுமின்றி பணம் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரமுடையவராவர். இவர்களுடைய அதிகார வரம்பு பற்றி சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் 15,000 ரூபாய் மதிப்புடைய பண வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள

மாவட்ட முன்சீப்கள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராகச் செய்யப்படும் மேல் முறையீடுகளையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரமுடையவராவர். சார்நிலை நீதிபதிகளே செஷன்ஸ் உதவி நீதிபதிகளுமாவர். மேலும், தற்போது சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் மோட்டார் வண்டி விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 10 ஆண்டுகள் நீதித் துறையில் பணியாற்றிய அனுபவமுள்ள சார்நிலை நீதிபதிகள் மோட்டார் வண்டி விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்களாகச் செயல்படுவதுடன் இந்நடுவர் மன்றங்களின் நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர்.

**15. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் :** இம்மாநிலத்தில் மாவட்டமுன்சீப் நீதிமன்றங்கள் 127 உள்ளன. அத்துடன் மாவட்ட முன்சீப் கோட்ட நீதித்துறை மாஜிஸ்ரேட் நீதிமன்றங்கள் 6-ம், மாவட்ட முன்சீப் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ரேட்டு நீதிமன்றங்கள் 2-ம் உள்ளன. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து ரூ. 15,000 வரையிலும் பணஞ்சார்ந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புவழங்கும் அதிகாரத்தை மாவட்ட முன்சீப்கள் பெற்றுள்ளனர். மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைக் கொண்டுள்ளன. இவர்கள் ரூபாய் 500 வரையிலுள்ள சிறுவழக்கு அதிகார வரம்பையும் செலுத்துகின்றனர். மேலும், இந்நீதிபதிகள் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் வாடகை கட்டுப்பாடு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

நகலெடுப்போர் நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வுசெய்வோர் ஆகிய பணியாளர்கள் அமைப்பு உட்பட, வெளியூர்களிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக 1986-87 ஆம் ஆண்டில் 7,98,06,000 ரூபாய் செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது. இச்செலவில், அதிகாரிகளின் சம்பளம், படிகள், அரசுப் பணி அஞ்சல் வில்லைகள, வீதங்கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள், குறிப்பிட்ட கால முறை வெளியீடுகள், மின் கட்டணம், தொலை பேசிக்கட்டணம் அறைக்கலங்கள் போன்றவை, உணவுக் கட்டணம், செஷன் நீதிமன்றங்கள் முதலியவற்றிற்கும் சாட்சியம் அளிக்க வரும் சாட்சிகளுக்கு வழங்கத்தக்க போக்குவரத்துக் கட்டணம் போன்ற சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

**16. சென்னை, மதுரை, கோயமுத்தூர் ஆகிய நீதிமன்றங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்:** —தொழிலாளர் நல நீதிமன்றங்கள் சென்னையில் நான்கும், மதுரையில இரண்டும் கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றங்கள் ஆகியவற்றில் நீதிபதிகள்,



மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அரசு அனுப்புகின்ற தொழில் தகராறுகள் குறித்தும், தரப்பினர் தாக்கல் செய்யும் கோரிக்கை மனுக்கள் குறித்தும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் முகாம் நீதிமன்றங்களை அமைத்து அவரவரது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் எழும் தொழிலாளர் தகராறுகளையும், கோரிக்கை மனுக்களையும் தீர்த்து வைக்கின்றனர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ''287 தொழிலாளர்-வேலைவாய்ப்பு-A. தொழிலாளர்-AB தொழில் உறவு-I திட்டத்தில் சேராதது-AC. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள்'' என்ற தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படுகிறது.

சென்னை தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் தொடர்பாக 1986-87 ஆம் ஆண்டில மொத்தம் ரூபாய் 15,80,000-செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

**17. சிறு வழக்கு நீதிமன்றம் சென்னை:**—மாவட்ட நீதிபதி பதவித்தரத்தைச் சேர்ந்த தலைமை நீதிபதியே இந்த நீதிமன்றத்தின் நீதிபதியாவார். சார்நிலை நீதிபதி (Sub Judge) பதவித் தரத்தைச் சேர்ந்த 7 நீதிபதிகளும், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்த 8 நீதிபதிகளும் உள்ளனர். மாவட்ட முன்சீப் பதவித்தரத்தைச் சேர்ந்த பதிவாளர் பதவி ஒன்று தனியாக உள்ளது. இப்பதிவாளரே நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். குறிப்பிட்ட சில நிறைவேற்பு மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதித்துறை அலுவல்களையும் இவர் கவனித்து வருகின்றார். மாநகர சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைத் தலைமை நீதிபதியும், பிற இளநிலை நீதிபதிகளும் செலுத்துகின்றனர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே நடுவர் மன்றமாக V ஆம் நீதிபதி பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக VI—VII ஆம் நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். VIII லிருந்து XIV வரையிலான நீதிபதிகள் சென்னை மாநகரத்தின் வாடகைக் கட்டுப்பாடு அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதியும், II, III, IV, நீதிபதிகள் மற்றும் VI, VII ஆம் நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாட்டு மேல்முறையீடுகளை விசாரணை செய்வதற்குரிய அதிகாரம் உடையவராவர். சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்பாக 1986—87 ஆம் ஆண்டில் 32,81,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள்—இனாம் எஸ்டேட்டுகள் ஒழிப்பு குறித்து இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டு பகிர்ந்தளிக்கும் பணிக்காகத் திருச்சிராப்பள்ளியிலும், இராமநாதபுரத்திலும் உள்ள நடுவர் மன்றம் தொடர்பாக இந்த உள்—சிறு தலைப்பின் கீழான 36,000 ரூபாய் செலவுத் தொகையும் மேற்சொன்ன தொகையில் அடங்கும்.

18. மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் : (i) நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள். இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களும், வனம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய சார்நிலை நீதிபதி பதவித்தரத்தில் தருமபுரி மாவட்டத்தில் கூடுதல் தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன; இந்நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகள் சார்நிலை நீதிபதி பதவித்தரத்தில் உள்ளனர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். இந்நீதிபதிகள் தங்கள் பதவித்தரத்திற்குரிய சம்பளத்தோடு திங்கள் ஒன்றுக்கு 50 ரூபாயை சிறப்பு ஊதியமாகப் பெறுகின்றனர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய நிருவாகப் பணியோடு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் விதித்துறைகளின்கீழ் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள், அந்நீதிமன்றங்களால் மேற்கூறிய நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்போது அவற்றை இவர்கள் விசாரணை செய்ய மேற்கூறிய சட்டக்கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

(ii) நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்:— நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 20 உள்ளன. இந்நீதிமன்றங்களில் நீதிபதிகள் மாவட்ட முன்சீப் பதவித்தரத்தில உள்ளவர்கள் ஆவர். அவர்கள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுக்குரிய அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆனால், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராகச் செய்யப்படும் மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை.

(iii) நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் :—மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 22, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 4, வணிகக் குற்றங்களை விசாரணை



செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 3 ஆகியவை உட்பட மொத்தம 58 நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இந்த நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு விசாரிப்பதற்குரிய வழக்குகளை முடிவு செய்வதில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உதவி செய்வர்.

(iv) நீதித்துறை இரண்டாம்வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் :—நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 144 உள்ளன. இந்த நீதிமன்றங்களிலுள்ள மாஜிஸ்டிரேட்டுகள், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களுக்குரிய அதிகார எல்லைக்குள் தாக்கல் செய்யப்படும் புகார்கள், வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்து முடிவு செய்கின்றனர்.

19. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் 1986–87 ஆம் ஆண்டில் 3,97,64,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

இவை தவிர, பயணச் சீட்டு இன்றிப் பயணம் செய்வது போன்ற குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ் விசாரணை செய்ய வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்குரிய செலவு, தொடக்கத்தில், மாநில அரசால் செய்யப்படுகிறது. பின்னர் சென்னை, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் மூலமாக இரயில்வேத் துறையிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

20. தமிழில் சட்ட இதழ்கள் :—:''தீர்ப்புத் திரட்டு' என்னும் சட்டத் தமிழ் (திங்கள்) இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளியிட்டுள்ளது. மாவட்ட நீதிபதி நிலை-II பதவித் தரத்தில், தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் கூட்டுப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவிப் பதிப்பாசிரியர் சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், படி திருத்துபவர், அலுவலக உதவியாளர்கள் ஆகிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. சட்டத் தமிழ் இதழ் தலைமைப் பதிப்பாசிரியர், அலுவலக பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள், குறித்த செலவு ''214. A. நீதி நிருவாகம்-AJ. ஏனைய செலவு—AG.சட்ட இதழ் வெளியிடுதல்'' என்னும் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 4,20,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சட்டத் தமிழ் (திங்கள்) இதழ் (தீர்ப்புத் திரட்டு) வழக்குரைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் ஓர் இதழ் ரூ. 5 என்ற மலிவு விலையில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

21. நீதிமன்றக் கட்டிடங்கள் :—உயர்நீதிமன்றக் கட்டிடங்களையும் உயர்நீதிமன்றக் கட்டிடங்கள் தவிர ஏனைய கட்டிடங்களையும் பராமரிப்பதற்குரிய செலவு 13 ஆம் எண் மானியக் கோரிக்கையில் ''259. பொதுப்பணிகள்'' என்கிற கணக்குத் தலைப்பின் கீழ் காட்டப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டில் செய்யக் கருதியுள்ள செலவு ரூ. 11,00,000 ஆகும்.

22. 1985–86 ஆம் ஆண்டில் பின்வரும் இனங்களுக்கான செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

(1) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில், 0.49 லட்சம் ரூபாய் செலவில் வராந்தாவை அடைத்தல் ;

(2) உயர்நீதிமன்றத்தின் சுற்றுச் சுவரின் உயரத்தை 1.75 இலட்சம் ரூபாய் செலவில் உயர்த்துதல் ;

(3) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் 0.56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டுதல் ;

(4) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை துணை நீதிமன்றத்தில், மாவட்ட முதன்மை, கூடுதல் முன்சீப் அலுவலகத்திற்கு 0.17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டுதல் ;

(5) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் பணியாளர்களுக்காக 0.49 இலட்சம் ரூபாய் செலவில் சைக்கிள் கொட்டகை கட்டுதல் ;

(6) சென்னை, சைதாப்பேட்டை, சட்ட உதவி நிலையத்திற்கு 0.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் இட வசதி செய்தல் ;

(7) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் 0.10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேல்நிலை நீர்த்தொட்டி கட்டுதல் :

(8) கோயம்புத்தூர், தொழிலாளர் நல நீதிமன்ற வளாகத்திலுள்ள பல்வேறு நீதிமன்றங்களில் பணிபுரியும் மகளிருக்காக 0.61 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பறை கட்டுதல் ;

(9) எழும்பூரில் தற்போதைய பெருநகர V ஆம் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றக் கூடத்தில் 0.68 இலட்சம் ரூபாய் செலவில் சில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் ;



(10) திண்டிவனத்திலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் 0.49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மோட்டார் பம்புசெட்டுடன் கூடிய மேல்நிலை நீர்த்தொட்டி கட்டுதல்;

(11) மதுரையில் காவல்துறை பணியாளர்கள், விசாரணைக் கைதிகள் (பெண்கள்) ஆகியோருக்கு ரூ. 0.55 இலட்சம் மதிப்பீட்டுச்செலவில், கழிப்பறையுடன் கூடிய ஓய்வறை கட்டுதல்.

(12) சென்னை, ஜார்ஜ் டவுனிலுள்ள பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்ற வளாகத்தில் ரூ. 0.19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கிணறு தோண்டுதல்;

(13) சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள பெருநகர் குடிநீர் வழங்கு பெருங்குழாய்க்கு அருகில் நீரேற்று விசைப் பொறி அறையும் கூடுதல் நிலத்தடி நீர்த்தொட்டி ஒன்றும் ரூ. 0.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைத்தல்;

(14) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை, மாவட்ட முன்சீப் நீதிமன்ற வளாகத்திற்குள் போதிய நீர் வசதியுடன் நீரடிக் கழிப்பிடங்கள் நான்கும், சிறுநீர் கழிப்பிடங்கள் இரண்டும், மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்றும் ரூ. 0.66 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஏற்படுத்துதல்.

(15) சைதாப்பேட்டையிலுள்ள பெருநகர் IV-ஆம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு அருகில் ரூ. 0.23 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், நிலத்தடி நீர்த்தொட்டி ஒன்றையும் மேல்நிலை நீர்த் தொட்டி ஒன்றையும் அமைத்தல் ; அறையொன்றை கழிப்பிடமாக மாற்றுதல்;

(16) சென்னை உயர்நீதிமன்றம், தலைமை நீதிபதி அறையில் ரூ. 1.77 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சீர்வளி (Air Condition) வசதி செய்தல்.

23. மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல். மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்து 1972-ம் ஆண்டிலேயே பரிசீலிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ம் பிரிவின்படி உயர் நீதி மன்றத்தினை அமைக்கும் அதிகாரம் மத்திய நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவே, இம் மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள வழக்குத் தொடுக்கும் பொதுமக்களின் தேவையினை நிறைவு செய்யும் வகையில், உயர்நீதிமன்றத்தின் ஆயம் அல்லது முகாம் நீதிமன்றத்தையாவது நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு 1973-ம் ஆண்டிலேயே மைய அரசுக்கு இம்மாநில அரசு கடிதம் எழுதியது. ஏற்கெனவே மைய அரசு, மாநகரத் தலைநகரங்கள் தவிர ஏனைய இடங்களில் உயர் நீதி மன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்து அனைத்துக் கூறுகளையும் கண்டறிவதற்காக உச்ச நீதிமன்றத்

தின் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த்சிங் என்பவர் தலைமையில் குழு ஒன்றினை நியமித்தது. தமிழக அரசின் மேற்படி கோரிக்கையை மைய அரசு இக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது. திரு. ஜஸ்வந்த்சிங் தலைமையிலான குழு 1984-ல் தமிழ்நாட்டிற்கு மூன்று முறை வருகை தந்து இம்மாநில அரசின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியது. கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும் வழக்காடு மக்கள், இதில் ஆர்வமுள்ள மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்தது ; சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியுடனும் தமிழக அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் விவாதித்தது. ஜஸ்வந்த்சிங் குழு தம்முடைய அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. இக்குழுவின் அறிக்கையின் பேரில் மத்திய அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை. அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

24. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல் (Setting up of a Bench of the Supreme court at Madras)—இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ஆம் பிரிவின் படி உச்ச நீதிமன்றத்தினை நிறுவுதல், அமைத்தல், அதிகாரவரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ணயித்தல் ஆகியவை மத்திய அரசின் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130-ஆம் பிரிவின்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்திய தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக் கூடியவாறு டில்லியில் அல்லது வேறு இடம் அல்லது இடங்களில் உச்சநீதிமன்றம் கூடும். சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவதற்கு மைய அரசின் இசைவினைப் பெற வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்குமாறு மாநில அரசு மைய அரசைக் கேட்டுக் கொண்டது. அமைக்கக் கருதியுள்ள உச்ச நீதிமன்றத்தின் ஆயம், நீதிபதிகளின் குடியிருப்பு ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் போன்ற தேவையான வசதிகளை செய்து தருவதாகவும் இம்மாநில அரசு மைய அரசுக்கு தெரிவித்துள்ளது. இது தொடர்பாகச் செயற்குறிப்பு இந்திய தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மைய அரசு 1983-ம் ஆண்டு ஜுன் திங்களில் இம்மாநில அரசுக்குத் தெரிவித்தது. இதற்குரிய பதில் அவரிடமிருந்து மத்திய அரசுக்கு இன்னும் வரவில்லை. இந்திய தலைமை நீதிபதியின் பரிந்துரை கிடைத்தவுடன் இச்செயற் குறிப்பின் மீது மைய அரசு முடிவு எடுக்கும்.

25. பொது.—தற்போது சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படுகிறது. இதுபோன்றே மாநகர் சிவில் நீதி மன்றத்தின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மாநில சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும் வரையறுக்கப்





பட்டுள்ளன. மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது. சார்நிலை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்சீப் நீதிமன்றத்துக்கு நீட்டிக்கப்படுகிறது. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களைப் பொறுத்த மட்டில், அவற்றின் அதிகார வரம்பு கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் வருவாய் மாவட்டம் முழுவதற்குமாக நீட்டிக்கப்படுகிறது.

குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களின் அதிகார வரம்பு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களை நீதித்துறை சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பு பல நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள் அதிக அளவில் இருப்பதை தவிர்ப்பதற்காகவும், தங்களுடைய வழக்குகளுக்காக தலைமை இடங்களுக்கு செல்வது கடினமாக இருக்கிறது என்பதால் வழக்கு தொடுக்கும் பொது மக்களுக்குத் தகுந்த உதவி அளிப்பதற்காகவும், தலைமை இடங்களில் உள்ள நீதி மன்றங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று அரசும், உயர்நீதி மன்றமும் கருதுகின்றன. சிவில், குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பை மாநிலம் முழுவதும் ஆய்வு செய்வதற்காக 1970-ஆம் ஆண்டில் அரசால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் குழு, 1973-ஆம் ஆண்டில் தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியது. மேற்சொன்ன குழு, புதிதாக 28 சிவில் நீதி மன்றங்களையும், 27 குற்றவியல் நீதிமன்றங்களையும் அமைக்கப் பரிந்துரைத்தது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்து ஆய்வு செய்த இக் குழுவின் பரிந்துரையை, அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு (1975) ஐந்தாண்டுக்கால அளவில் படிப்படியாக அப் பரிந்துரைகளை நிறைவேற்ற முடிவு செய்துள்ளது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொருட்டு, உயர்நீதிமன்றம், சிவில், குற்றவியல் நீதி மன்றங்களை அமைக்க முன்னுரிமைப் பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளது.

நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்து குழு பரிந்துரைத்த 28 சிவில் நீதிமன்றங்களில் கீழ்க்காணும் 27 சிவில் நீதி மன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது:—

1. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

2. சார் நிலை நீதிமன்றம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

[1986 ஏப்ரல் 7

3. சார் நிலை நீதிமன்றம், நாமக்கல், சேலம் மாவட்டம்.

4. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், இராசிபுரம், சேலம் மாவட்டம்.

5. சார்நிலை நீதிமன்றம், திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம்.

6. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், செஞ்சி, தென்னாற்காடு மாவட்டம்.

7. சார் நிலை நீதிமன்றம், திருவள்ளூர், செங்கற்பட்டு மாவட்டம்.

8. சார்நிலை நீதிமன்றம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

9. சார்நிலை நீதிமன்றம், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

10. சார்நிலை நீதிமன்றம், விருத்தாசலம், தென்னாற்காடு மாவட்டம்.

11. சார்நிலை நீதிமன்றம், பெரியகுளம், மதுரை மாவட்டம்.

12. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பொன்னேரி, செங்கற்பட்டு மாவட்டம்.

13. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், உத்தமபாளையம், மதுரை மாவட்டம்.

14. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், மேட்டூர், சேலம் மாவட்டம்.

15. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

16. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

17. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

18. சார்நிலை நீதிமன்றம், அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



1986 ஏப்ரல் 7]

19. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

20. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஜெயங்கொண்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

21. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம், மதுரை (வடக்கு), திண்டுக்கல்.

22. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், போளூர், வடாற்காடு மாவட்டம்.

23. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பவானி, பெரியார் மாவட்டம்.

24. சார்நிலை நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், காமராஜர் மாவட்டம்.

25. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்.

26. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நன்னிலம், தஞ்சாவூர் மாவட்டம்.

27. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

26. வள்ளியூரில் மாவட்ட முன்சீப் மற்றும் சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் (நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த குழு பரிந்துரையில் எஞ்சிய நீதிமன்றம்) அமைப்பதை பொறுத்த வரையில் ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையின் படி மத்திய அரசு வழங்கிய நிதியுதவியைக் கொண்டு, திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் அமைக்க ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரே சமயத்தில் சிவில் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும் விசாரிக்கும் முறை தற்போது வெற்றிகரமாகச் செயற்படவில்லையென்று தெரிய வந்துள்ளதாக அதிகார வரம்பு குறித்த குழு தெரிவித்ததின் பேரில், சிவில் வழக்குகளை (வள்ளியூர் மாவட்ட முன்சீப் சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றமாக) விசாரணை செய்ய, வள்ளியூர் சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்திற்கு சிவில் அதிகாரங்களைக் கொடுக்க உயர்நீதிமன்றம் விரும்பவில்லை. வள்ளியூரில் தனியே மாவட்ட முன்சீப் நீதி மன்றம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பையும் சேரன்மாதேவியில் நீதித்துறை சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பையும் உயர்நீதிமன்றம் அனுப்பியுள்ளது.

இச்செயற்குறிப்புகளை அரசு தனியே பரிசீலித்து வருகிறது. வள்ளியூரில் மாவட்ட மூன்சீப் நீதிமன்றம் அமைக்கப்பட்டு விட்டால், சிவில் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் நீதி மன்ற அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிந்துரையை முழுமையாக நிறைவேற்றியதாகிவிடும்.

27. நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த குழு பரிந்துரைத்த 27 குற்றவியல் நீதிமன்றங்களில், கீழ்க்காணும் 19 குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது :—

1. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திருவண்ணாமலை.

2. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், பொன்னேரி.

3. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், பொள்ளாச்சி.

4. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.

5. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், சிதம்பரம்.

6. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திருவள்ளூர்.

7. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

8. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், குளித்தலை.

9. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், திருக்கழுக்குன்றம்.

10. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், பாலக்கோடு.

11. நீதித்துறை கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், குழித்துறை.

12. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், திண்டுக்கல்.

13. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், உசிலம்பட்டி.



14. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

15. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், இராமநாதபுரம்.

16. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், மேட்டூர்.

17. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், துறையூர்.

18. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், விளாத்திகுளம்.

19. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், அம்பத்தூர்.

28. இராஜபாளையத்திலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும் நீதி மன்ற ஆயங்கள் அமைப்பதைப் பொறுத்த மட்டில், (நீதி மன்ற அதிகாரம் குறித்த குழு பரிந்துரைத்தபடி இரண்டு குற்றவியல் நீதிமன்றங்கள்) அவ்வாறு நீதிமன்ற ஆயங்களை அமைக்க, 1973 ஆம் ஆண்டு புதிய குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையில் விதித்துறை ஏதுமில்லை. இதன் காரணமாக, ஸ்ரீவில்லிபுத்தூரிலும் இராஜபாளையத்திலும் நீதிமன்ற ஆயங்களை அமைக்க, நீதிமன்ற அதிகாரம் குறித்த குழு கொடுத்த பரிந்துரையைச் செயலாக்க இயலவில்லை.

எஞ்சியுள்ள ஆறு குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் :—

1. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், உத்தமபாளையம்.

மதுரை மாவட்டத்தை 15–9–1985 முதல் மதுரை மாவட்டம், அண்ணா மாவட்டம் என இரண்டு மாவட்டங்களாக பிரித்ததன் காரணமாக ஏனையவற்றிற்கிடையே உத்தமபாளையத்தில் நீதித்துறை துணைக்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் ஒன்றை அமைக்க உயர்நீதிமன்றப் பதிவாளர் கருத்துருக்களை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

பின்வரும் குற்றவியல் நீதிமன்றங்கள் இரண்டைப் பொறுத்த மட்டில் உயர்நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், தருமபுரி.

இச்செயற்குறிப்புகளை அரசு தனியே பரிசீலித்து வருகிறது. வள்ளியூரில் மாவட்ட மூன்சிப் நீதிமன்றம் அமைக்கப்பட்டு விட்டால், சிவில் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் நீதி மன்ற அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிந்துரையை முழுமையாக நிறைவேற்றியதாகிவிடும்.

27. நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த குழு பரிந்துரைத்த 27 குற்றவியல் நீதிமன்றங்களில், கீழ்க்காணும் 19 குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது :—

1. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திருவண்ணாமலை.

2. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், பொன்னேரி.

3. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், பொள்ளாச்சி.

4. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.

5. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், சிதம்பரம்.

6. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திருவள்ளூர்.

7. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

8. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், குளித்தலை.

9. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திருக்கழுக்குன்றம்.

10. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், பாலக்கோடு.

11. நீதித்துறை கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், குழித்துறை.

12. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திண்டுக்கல்.

13. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், உசிலம்பட்டி.



14. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

15. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், இராமநாதபுரம்.

16. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், மேட்டூர்.

17. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், துறையூர்.

18. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், விளாத்திகுளம்.

19. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், அம்பத்தூர்.

28. இராஜபாளையத்திலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும் நீதிமன்ற ஆயங்கள் அமைப்பதைப் பொறுத்த மட்டில், (நீதிமன்ற அதிகாரம் குறித்த குழு பரிந்துரைத்தபடி இரண்டு குற்றவியல் நீதிமன்றங்கள்) அவ்வாறு நீதிமன்ற ஆயங்களை அமைக்க, 1973 ஆம் ஆண்டு புதிய குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையில் விதித்துறை ஏதுமில்லை. இதன் காரணமாக, ஸ்ரீவில்லிபுத்தூரிலும் இராஜபாளையத்திலும் நீதிமன்ற ஆயங்களை அமைக்க, நீதிமன்ற அதிகாரம் குறித்த குழு கொடுத்த பரிந்துரையைச் செயலாக்க இயலவில்லை.

எஞ்சியுள்ள ஆறு குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் :—

1. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், உத்தமபாளையம்.

மதுரை மாவட்டத்தை 15–9–1985 முதல் மதுரை மாவட்டம், அண்ணா மாவட்டம் என இரண்டு மாவட்டங்களாக பிரித்ததன் காரணமாக ஏனையவற்றிற்கிடையே உத்தமபாளையத்தில் நீதித்துறை துணைக்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் ஒன்றை அமைக்க உயர்நீதிமன்றப் பதிவாளர் கருத்துருக்களை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

பின்வரும் குற்றவியல் நீதிமன்றங்கள் இரண்டைப் பொறுத்த மட்டில் உயர்நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், தருமபுரி.

2. முகாம் நீதிமன்றம், அரூர்.

கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள இளங்குற்றவாளிகள் நீதி மன்றங்களைப் பொறுத்த மட்டில், தமிழ்நாட்டில் சென்னை மாநகரிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இளங்குற்றவாளிகள் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கு வகை செய்து, தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு இளங்குற்றவாளிகள் நீதிமன்றங்கள் விதிகளைத் திருத்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. மேற்சொன்ன விதிகள் இயற்றப்பட்ட பின்னர் இளங்குற்றவாளிகள் நீதிமன்றங்களை அமைப்பது பற்றி கருதிப் பார்க்கப்படும்.

29. 1985–86 ஆம் ஆண்டில் பின்வரும் உரிமையியல் குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

1. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அரக்கோணம்.

2. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சங்ககிரி.

3. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பண்ருட்டி.

4. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சத்தியமங்கலம்.

5. நீதித்துறை முதல் வகுப்பு தனி மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், தருமபுரி.

30. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகள் நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப்படலாமென்றும், மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் அவற்றை இணைக்கலாமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இருவகையினரும், மாவட்ட, செஷன்ஸ் நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை அறிந்திருக்க வேண்டி, மாஜிஸ்டிரேட்டுகள் சிவில் வழக்குகள் விசாரணை பற்றி அனுபவம் பெறவும், சிவில் நீதிபதிகள் குற்றவியல் வழக்குகள் விசாரணை பற்றி அனுபவம் பெறவும் வகை செய்வதே இதன் நோக்கமாகும். இதனைச் செயல்படுத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. விரைவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

31 உயர்நீதிமன்றம், அசல் தரப்பு, மேல் முறையீட்டு தரப்பு ஆகியவற்றின் கீழ் வரும் வழக்குகளின் மூலமும், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களும் ''நீதி நிருவாகம்'' என்ற தலைப்பின் கீழ் வருவாய் பெறுவது முக்கியமானதொரு தொடர்பான கூறு ஆகும்.



''065ஏ. நீதி நிருவாகம் மற்றும் 030பி. நீதித்துறை முத்திரைத் தாள்கள் (முத்திரைத் தாள் வகையில் வசூலிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணங்கள்)'' என்ற தலைப்பின் கீழ் கிடைத்த வருவாய் வரவு, ''214ஏ., நீதி நிருவாகம்'' என்பதன் கீழ் 1981–82, 1982–83, 1983–84, 1984–85, 1985–86, 1986–87 ஆம் ஆண்டுகளுக்கான செலவு ஆகியவை பின்வரும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

| (1) | 1981-82 ஆம் ஆண்டு கணக்குகள். (2) | 1982-83 ஆம் ஆண்டு கணக்குகள். (3) | 1983-84 ஆம் ஆண்டு கணக்குகள். (4) | 1984-85 ஆம் ஆண்டு கணக்குகள். (5) | 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். (6) | 1985-86 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகள். (7) | 1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| வரவுகள்: | | | | | | | |
| 065 ஏ. நீதி நிர்வாகம் | 195.37 | 253.15 | 276.94 | 311.42 | 318.65 | 345.37 | 330.62 |
| 030 பி. நீதித் துறை முத்திரைத் தாள்கள். | 652.26 | 774.46 | 781.06 | 843.64 | 878.00 | 883.31 | 1,000 |
| மொத்த வரவு | 847.63 | 1027.61 | 1058.00 | 1155.06 | 1196.65 | 1228.68 | 1330.62 |
| செலவு: | | | | | | | |
| 214ஏ. நீதி நிர்வாகம் | 867.20 | 1103.91 | 1266.00 | 1458.37 | 1427.51 | 1590.86 | 1638.56 |



32. ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை உதவி:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39–ஏ பிரிவின்படி, ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு 1977-ம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு, உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக் குழுக்கள் இருப்பதுடன், மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகளும் அமைக்கப் பட்டுள்ளன. இம் மாநிலத்திலுள்ள 34 சட்ட உதவி மையங்களுடன் 18 மாவட்டக் குழுக்களும், 85 வட்டக் குழுக்களும் உள்ளன. இக்குழுவின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.

33. இக்குழு, ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதியுடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும், சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர இக் குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித் தர உதவி செய்வதும், மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கை செலவுப் படியைப் பெற்றுத் தர உதவி செய்வதும், இக்குழுவின் பணித் திட்டங்களில் அடங்கும்.

34. அரசு அதிகாரிகளும், ஏனையோரும் உள்ள ஒரு நிருவாகக் குழு, சட்ட ஆலோசனை உதவிக் குழுவின் பணிகளை நிருவகிக்கின்றது. மேற்கூறிய குழுவின் செலவிற்காக 1985–86 ஆம் ஆண்டில் மானியமாக ரூ. 38 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 38 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு, கூடுதல் உதவித் தொகைக்காக அரசை அணுகும் பொழுதெல்லாம் அத்தொகையை அரசு வழங்கும்.

35. மக்கள் நீதிமன்றம் (Lok Adalat): தமிழ்நாடு சட்ட உதவி ஆலோசனைக்குழு, 15–2–1986 அன்று இம்மாநிலத்தில் மக்கள் நீதிமன்றத்தைத் தொடங்கி வைத்தது. இம்மக்கள் நீதிமன்றம் இரு நோக்கங்களை உடையதாகும். (1) தகராறுகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் நீதி மன்றங்களில் வழக்காடுதைத் தடுப்பது; (2) நீதிமன்றங்களிலும் நடுவர் மன்றங்களிலும் முடிவடையாமலுள்ள தகராறுகளை உயர்நீதி மன்றம் ஏற்பளித்த நடைமுறையின் மூலமும், சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் இசைவு பெற்றும் தீர்த்து வைத்தல், இந்த நடைமுறை, நீதிமன்ற முறையிலுள்ள சுமையைக் குறைக்கும்.

முதல் மக்கள் நீதிமன்றத்தில், மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் (இவர்களின் நேர்வில் ஈட்டுறுதி நிறுவனர்கள் இழப்பீடு வழங்க வேண்டும்) உரிமைக் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கும் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்பட்டது. நடுவர் மன்றத்தில் முடிவடையாமலுள்ள வழக்குகளுக்கு மக்கள் நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறுவதற்கு நடுவர் மன்றம் அனுமதிக்க இயலும் வகையில் உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது. சட்ட உதவிக் குழு உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகள், சென்னை அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர், அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள், முதுநிலை வழக்குரைஞர்கள் ஆகியோர் அடங்கிய மக்கள் நீதிமன்றங்களை அமைத்தது. அந்நாள் நிலவரப்படி 8 மக்கள் நீதிமன்றங்கள் இருந்தன. தமிழ்நாடு சட்ட உதவிக்குழு உதவி செய்த மொத்தம் 137 வழக்குகள், கட்சிக்காரர்கள் தங்கள் வழக்குரைஞர்கள் மூலம் செய்து கொண்ட சுமார் 100 உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றை மக்கள் நீதிமன்றம் எடுத்துக் கொள்வதற்காக அவை பட்டியலிடப்பட்டன. அன்று மக்கள் நீதிமன்றப் 115 உரிமைக் கோரிக்கைகளுக்கும், குழு உதவி செய்த 83 வழக்குகளுக்கும், தனி வழக்குரைஞர்கள் தொடுத்த 22 வழக்குகளுக்கும் தீர்ப்பளித்தது. தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட தொகை சுமார் ரூ. 18 இலட்சமாகும்.

நடுவர் மன்றங்கள், அந்த இடத்தில் அந்த நாள் விடுமுறையாக இருந்த போதிலும் கூட, மக்கள் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்ட தீர்ப்பையொட்டி உடனடியாக ஆணைகளைப் பிறப்பிக்க உயர்நீதிமன்றம் அனுமதியளித்தது.

தீர்ப்பளிக்கப்பட்ட தொகைக்கு உடனடியாகக் காசோலைகளை அளிக்க ஈட்டுறுதி நிறுவனங்கள் ஒப்புக் கொண்டன.

இது, சட்ட உதவிக் குழு நடத்திய, முதல் மக்கள் நீதிமன்றமாகும். மாவட்டங்களிலும் இது போன்ற மக்கள் நீதி மன்றங்களை நடத்துவதன் மூலம் இத்திட்டத்தை விரிவுப்படுத்த இயலும் என்று நம்பப்படுகிறது.

**36.** இயல் நீதிமன்றங்கள்.—இயல் நீதிமன்றம் ஒன்று **1976** ஆம் ஆண்டிலிருந்து மதுரையில் இயங்கி வருகிறது. பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரிக்க நீதித்துறை 2 ஆம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு தலைமையில் இந்த நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. பெருகி வரும் குற்றங்களைத் தடுக்கவும், குற்றங்களை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், அரசு மீண்டும் இயல் நீதி மன்றங்களை சென்னை மாநகரில் (இந்நீதிமன்றங்கள் 1977 ஆம் ஆண்டில் செயல்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது) செயலுக்கு கொண்டு வந்துள்ளது. சென்னை மாநகரில் பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்வதற்கு மாவட்ட முன்சீப்



பதவித் தரத்தில் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக இரண்டு இயல் நீதிமன்றங்களை தேவையான பணியாளர்களுடன் அமைப்பதற்கு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இயல் நீதிமன்றங்கள் 31–3–1983 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. கோயம்புத்தூரில் உள்ள நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் (எண் 4) இயல் பேக்குவரத்து நீதிமன்றமாக மாற்ற 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**37.** உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்குதல்—உயர்நீதிமன்றத்தின் கீழுள்ள நடுவர் மன்றங்கள், வாடகை குறித்த நீதிமன்றங்கள் வருவாய் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல் நீதிமன்றங்களில் 1–2–1982 ஆம் நாளிலிருந்து தமிழில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.—

**38. 1985–86** ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்—(1) தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்ட அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை II) பதவிகள் 19-ஐ அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை I) ஆக நிலை உயர்த்துதல்.

(2) உரிமையியல் நீதிமன்றங்களில் 19 பகுதி நேர மசால்சிகளை (Masalchi) முழு நேர மசால்சிகளாக மாற்றுதல்.

(3) (i) புதுக்கோட்டை, (ii) இராமநாதபுரம் இருப்பு (மதுரை) ஆகிய இடங்களில் மாவட்ட நீதிமன்ற நூலகங்களை ஏற்படுத்தல்.

(4) ஏனைய உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் போன்ற சீரிய பெருமக்களின் வருகை தொடர்பான மரபுப் பணியைக் கவனிக்கும் பொருட்டு, சென்னை, உயர்நீதிமன்ற உதவிப் பதிவாளர் பதவித் தரத்தில் மரபு அதிகாரி பதவி (Protocal Officer) ஒன்றைத் தற்காலிகமாக ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது.

(5) சில நிருவாக விஷயங்களையும், நீதித்துறைக் கட்டிடங்கள் தொடர்பான பணியையும், உயர்நீதிமன்றத்தில் விதிகள் தொடர்பான விஷயங்களையும் கவனிப்பதற்கு அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்காலிகமாக உதவிப்பதிவாளர் பதவி ஒன்றையும், அலுவலக உதவியாளர் பதவி ஒன்றையும் ஏற்படுத்த அனுமதித்தது.

(6) உயர்நீதிமன்ற நூலகத்தில முடிவுறாமலுள்ள பணிகளை முடிக்கவும், அன்றாடப் பணிகளைக் கவனிக்கவும், அரசு, சென்னை உயர்நீதிமன்ற நூலகப் பிரிவுக்குத் தற்காலிகமாக புத்தகம் கட்டுபவர் (Binder) பதவியை (நிலை II) ஏற்படுத்த அனுமதி வழங்கியது.

(7) சென்னை, உயர்நீதிமன்றத்தில் இரவு காவலாட்கள் தோட்டக்காரர்கள, பெருக்குபவர்கள் ஆகியோரின் பணியைத் திறம்பட கண்காணிப்பதற்கு, அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்காலிகமாக மேற்பார்வையாளர் பதவி ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கியது.

(8) சென்னை உயர்நீதிமன்றத்தின் பி.ஏ (P.A.) பிரிவின் பணிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு, அப்பிரிவில் கூடுதலாக மேலாளர் பதவி ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது.

(9) சென்னை உயர்நீதிமன்றத்தில் அதிகரித்து வரும் பணிச் சுமையை சமாளிப்பதற்காக, அரசு, சென்னை, உயர்நீதிமன்றத்தின் தற்காலிகமாக 4 பதிவுரு எழுத்தர்கள, 9 அலுவலக உதவியாளர்கள் ஆகிய பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கியது.

(10) சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் வரைவுப் பிரிவில் பணிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு அரசு தற்காலிகமாக 8 உதவியாளர்கள் 15 தட்டச்சர்கள், 2 பதிவுரு எழுத்தர்கள் ஆகிய பதவிகளை ஏற்படுத்தவும், 3 இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாக நிலை உயர்த்தவும் அனுமதி வழங்கியது.

39. நீதித்துறை பணியிடங்களை நிரப்புதல்.—1. தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலமாக 126 மாவட்ட முன்சீப்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் செயற்குறிப்பிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2. தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலமாக அனுப்பப்பட்ட மாவட்ட முன்சீப் பட்டியலுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3. நீதித்துறையில் சப்-ஜட்ஜ் பதவிகளை நேரிடையாகத் தேர்ந்தெடுத்து, கீழ்நிலையிலிருந்து சப்-ஜட்ஜ் பதவி உயர்வு பெறும் அதிகாரிகளுடன் சேர்ந்து நிரப்புவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அதற்கு தக்கவாறு விதிகளில் திருத்தம் செய்யப்படும்.



40. 1983, 1984, 1985 ஆகிய மூன்று ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றத்திலும், சார் நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல் குற்றவியல்) தாக்கல் செய்த, முடிவு செய்த, முடிவு செய்யப்படாமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளி விவரங்களை குறிப்பிடும் விவர அறிக்கை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

1983-1984 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம் சார் நிலை நீதிமன்றங்கள் சிவில் ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட முடிவு பற்றிய செய்யப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் புள்ளி விவரங்கள் வருமாறு:

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| உயர் நீதிமன்றம், சென்னை | | | | | | | | | | | | |
| | 1983 | | | | 1984 | | | | 1985 | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 708 | 2,592 | 583 | 2,009 | 918 | 2,927 | 352 | 2,575 | 789 | 3,364 | 300 | 3,064 |
| 2 உயில் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 20 | 72 | 23 | 49 | 20 | 69 | 8 | 61 | 29 | 90 | 9 | 81 |
| 3 இல்வாழ்க்கை, தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 45 | 98 | 40 | 58 | 41 | 99 | 37 | 62 | 44 | 106 | 23 | 83 |
| 4 நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் மனு | 38 | 108 | 3 | 105 | 62 | 167 | 39 | 128 | 37 | 165 | 28 | 137 |
| 5 இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் மனு. | 297 | 358 | 217 | 141 | 243 | 384 | 242 | 142 | 291 | 433 | 266 | 167 |
| 6 ஏனைய அசல் தரப்பு மனுக்கள் .. | 107 | 242 | 46 | 196 | 107 | 303 | 114 | 189 | 184 | 373 | 127 | 246 |
| 7 நிறுவனங்கள்-சங்கங்கள் கலைப்பு .. தொடர்பான வழக்குகள். | 63 | 231 | 79 | 152 | 81 | 233 | 50 | 183 | 47 | 230 | 46 | 184 |
| 8 நிறுவனம் தொடர்பான ஏனைய மனுக்கள். | .. | 20 | .. | 20 | 42 | 62 | 17 | 45 | 45 | 90 | 41 | 49 |
| 9 தேர்தல் மனுக்கள் .. .. .. | .. | 12 | 6 | 6 | 12 | 18 | 5 | 13 | 6 | 19 | 11 | 8 |
| 10 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 59 | 86 | 50 | 36 | 74 | 110 | 51 | 59 | 64 | 123 | 54 | 69 |
| 11 நிறைவேற்று மனுக்கள் .. | 124 | 165 | 111 | 54 | 121 | 175 | 148 | 27 | 143 | 170 | 139 | 31 |
| 12 நிறுவனம் தொடர்பான விண்ணப்பங்கள். | 673 | 1,259 | 802 | 457 | 836 | 1,293 | 613 | 680 | 557 | 1,237 | 658 | 579 |

| வழக்குகளின் தன்மை. (1) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (2) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (3) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (4) | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (5) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (6) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (7) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (8) | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (9) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (10) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (11) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (12) | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 அவதூறு தொடர்பான விண்ணப்பங்கள். | 128 | 238 | 54 | 184 | 206 | 390 | 166 | 224 | 294 | 518 | 258 | 260 |
| 14 பல்வகை விண்ணப்பங்கள்:— | | | | | | | | | | | | |
| நொடிப்பு நிலை மனுக்கள் தொடர்பான கோப்புகள். | 408 | 517 | 354 | 163 | 395 | 558 | 446 | 112 | 337 | 449 | 326 | 123 |
| 15 முதலாம் மேல்முறையீடுகள் .. | 834 | 4,821 | 579 | 4,242 | 872 | 5,114 | 354 | 4,760 | 1,089 | 5,844 | 522 | 5,327 |
| 16 அசல் தரப்பு மேல்முறையீடுகள் .. | 207 | 628 | 114 | 514 | 219 | 733 | 109 | 624 | 192 | 816 | 96 | 720 |
| 17 முத்திரைப்பத்திரம் தொடர்பான மேல் முறையீடுகள். | 148 | 417 | 99 | 318 | 110 | 428 | 132 | 296 | 113 | 409 | 81 | 323 |
| 18 ரிட்மேல் முறையீடுகள் .. .. | 1,281 | 2,814 | 616 | 2,198 | 1,218 | 3,416 | 1,432 | 1,984 | 1,195 | 3,179 | 1,093 | 2,086 |
| 19 இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 2,337 | 8,689 | 1,320 | 7,369 | 2,089 | 9,458 | 1,073 | 8,385 | 2,158 | 10,543 | 1,015 | 9,528 |
| 20 ஆணைக்கு எதிரான மேல் முறையீடுகள். | 889 | 2,455 | 249 | 2,206 | 782 | 2,988 | 192 | 2,796 | 932 | 3,728 | 218 | 3,510 |
| 21 மேல் முறையீட்டு ஆணைக்கு எதிரான மேல் முறையீடுகள். | 72 | 178 | 18 | 160 | 78 | 238 | 15 | 223 | 86 | 309 | 12 | 297 |
| 22 சிவில் மறு விசாரணை மனுக்கள் .. | 5,621 | 9,341 | 3,877 | 5,464 | 4,934 | 10,398 | 3,961 | 6,437 | 4,551 | 10,988 | 2,602 | 8,186 |
| 23 வரி வழக்குகள் .. .. .. | 1,164 | 6,386 | 713 | 5,673 | 2,200 | 7,873 | 566 | 7,307 | 1,667 | 8,974 | 679 | 8,295 |
| 24 வரிவழக்கு மனுக்கள் .. .. | 564 | 1,128 | 713 | 415 | 502 | 917 | 401 | 516 | 840 | 1,356 | 847 | 509 |
| 25 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படுகிற வழக்குகள். | 8 | 22 | — | 22 | 12 | 34 | .. | 34 | 19 | 53 | 2 | 5 |
| 26 இல்வாழ்க்கை தொடர்பான வழக்குகள் | 22 | 51 | — | 51 | 25 | 76 | 20 | 56 | 31 | 87 | 25 | 62 |
| 27 ரிட் மனுக்கள், .. .. .. | 12,469 | 31,438 | 6,479 | 24,959 | 12,943 | 37,902 | 7,873 | 30,029 | 13,539 | 43,568 | 6,456 | 37,112 |
| 28 உச்சநீதிமன்ற இசைவு (மனுக்கள்) .. | 187 | 360 | 210 | 150 | 144 | 294 | 168 | 126 | 559 | 685 | 92 | 593 |
| 29 தனி நடுவர்மன்ற மேல்முறையீடுகள் | 53 | 546 | 4 | 542 | 68 | 610 | .. | 610 | 34 | 644 | 2 | 642 |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 30 அவதூறு தொடர்பான மேல் முறையீடுகள். | 6 | 18 | 4 | 14 | 3 | 17 | 9 | 8 | 10 | 12 | 8 | 10 |
| 31 **வணிகக் குறி** தொடர்பான மேல் முறையீடுகள். | 2 | 15 | .. | 15 | 11 | 26 | ... | 26 | 6 | 32 | .. | 32 |
| 32 வணிகத் தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள். | 1 | 3 | .. | 3 | .. | 3 | ... | 3 | .. | 3 | .. | 3 |
| 33 பல்வகை வழக்குகள் .. .. | 38,264 | 71,894 | 31,877 | 40,017 | 39,057 | 79,074 | 29,664 | 49,410 | 37,683 | 87,093 | 30,739 | 56,354 |
| மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 10,462 | 27,264 | 12,246 | 15,018 | 10,780 | 25,798 | 11,296 | 14,502 | 11,021 | 25,523 | 9,811 | 15,712 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 25,535 | 46,608 | 24,906 | 21,702 | 24,556 | 46,258 | 26,409 | 19,849 | 32,772 | 52,621 | 28,352 | 24,269 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. | 507 | 932 | 536 | 396 | 734 | 1,130 | 580 | 550 | 780 | 1,330 | 758 | 572 |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள் | 274 | 457 | 279 | 178 | 361 | 539 | 311 | 228 | 359 | 587 | 390 | 199 |
| 5 நிறைவேற்று நடை முறைகள் .. | 2,552 | 5,326 | 2,507 | 2,819 | 2,876 | 5,695 | 2,894 | 2,801 | 3,174 | 5,975 | 3,129 | 2,846 |
| சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 4,916 | 7,329 | 4,602 | 2,727 | 5,026 | 7,753 | 4,611 | 3,142 | 4,422 | 7,564 | 4,048 | 3,516 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 19,555 | 24,020 | 19,155 | 4,865 | 18,344 | 23,209 | 17,740 | 5,469 | 17,790 | 23,259 | 16,656 | 6,603 |
| 3 ஆணை நிறைவேற்று நடைமுறைகள். | 2,235 | 3,395 | 1,937 | 1,458 | 883 | 2,341 | 1,362 | 979 | 980 | 1,959 | 397 | 1,562 |
| மாவட்ட நீதி மன்றங்கள்— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 904 | 1,009 | 926 | 83 | 1,668 | 1,751 | 1,515 | 236 | 1,355 | 1,591 | 1,412 | 179 |
| 2 சிவில் மேல் முறையீடுகள் .. | 3,906 | 5,891 | 4,042 | 1,849 | 4,072 | 5,921 | 3,869 | 2,052 | 3,539 | 5,591 | 3,278 | 2,313 |
| 3 சிவில் பல்வகை மேல் முறையீடுகள் | 1,238 | 2,270 | 1,390 | 880 | 1,766 | 2,646 | 1,706 | 940 | 1,587 | 2,427 | 1,372 | 1,055 |
| 4 **சிவில் பல்வகை வழக்குகள்** .. | 29,071 | 33,891 | 28,602 | 5,289 | 36,727 | 42,016 | 35,397 | 6,619 | 24,803 | 31,422 | 27,627 | 3,795 |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில், தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள் .. | 202 | 346 | 264 | 82 | 324 | 406 | 286 | 120 | 279 | 399 | 276 | 123 |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | .. | .. | .. | .. | 3 | 3 | 2 | 1 | 3 | 4 | 3 | 1 |
| துணை நீதிமன்றங்கள்— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 15,613 | 27,761 | 13,025 | 14,736 | 19,137 | 33,873 | 14,866 | 19,007 | 10,158 | 29,165 | 11,641 | 17,524 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 97,831 | 1,22,092 | 94,562 | 27,530 | 1,17,812 | 1,45,342 | 1,09,060 | 36,282 | 1,07,105 | 1,43,387 | 1,11,438 | 31,949 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. | 5,694 | 10,150 | 5,135 | 5,015 | 5,182 | 10,197 | 5,011 | 5,186 | 5,061 | 10,247 | 4,720 | 5,527 |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள் | 2,703 | 5,293 | 2,716 | 2,577 | 2,668 | 5,245 | 2,283 | 2,962 | 2,138 | 5,102 | 1,985 | 3,117 |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள் .. | 5,794 | 10,093 | 5,272 | 4,821 | 6,198 | 11,019 | 5,583 | 5,436 | 5,508 | 10,944 | 5,315 | 5,629 |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 657 | 1,218 | 560 | 658 | 629 | 1,287 | 610 | 677 | 604 | 1,281 | 606 | 675 |
| மாவட்ட முன்சீப் நீதிமன்றம்— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 92,628 | 2,06,592 | 1,00,765 | 1,05,827 | 96,981 | 2,02,808 | 86,954 | 1,15,854 | 85,691 | 2,01,545 | 74,443 | 1,27,102 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 3,02,076 | 4,01,660 | 3,00,315 | 1,01,345 | 3,18,408 | 4,19,753 | 3,05,395 | 1,14,358 | 2,54,894 | 3,69,252 | 2,54,296 | 1,14,306 |
| 3 நிறைவேற்று மனுக்கள் .. | 48,119 | 88,819 | 48,033 | 40,786 | 47,943 | 88,729 | 45,734 | 42,995 | 41,985 | 84,980 | 40,629 | 44,301 |
| 4 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 173 | 326 | 180 | 146 | 122 | 268 | 166 | 102 | 216 | 318 | 102 | 219 |

சென்னை உயர்நீதி மன்றத்திலும் (குற்றவியல்) சார் நிலை நீதிமன்றங்களிலும் 1983, 1984 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட, முடிவு செய்யப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

| வழக்குகளின் தன்மை. (1) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (2) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (3) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (4) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (5) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (6) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (7) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (8) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (9) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (10) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (11) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (12) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983. | | | | 1984. | | | | 1985. | | | |
| உயர் நீதிமன்றம், சென்னை— | | | | | | | | | | | | |
| 1 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள். | 12 | 17 | 7 | 10 | 11 | 21 | 14 | 7 | 19 | 26 | 16 | 10 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 901 | 2,908 | 451 | 2,45 | 888 | 3,345 | 558 | 2787 | 968 | 3,755 | 7,759 | 80 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 920 | 2,550 | 468 | 2,082 | 934 | 3,016 | 672 | 2,344 | 838 | 3,182 | 631 | 2,551 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள். | 14 | 27 | 7 | 20 | 4 | 24 | 8 | 16 | .. | .. | .. | .. |
| 5 பல்வகை வழக்குகள் .. .. | 8,930 | 13,063 | 8,978 | 4,085 | 9,251 | 13,336 | 8,217 | 5,119 | 1,825 | 6,944 | 1,403 | 5,541 |
| செசன்ஸ் நீதிமன்றங்கள்— | | | | | | | | | | | | |
| 1 செசன்ஸ் வழக்குகள் .. .. | 3,321 | 4,924 | 3,155 | 1,769 | 3,220 | 4,989 | 3,029 | 1,960 | 3,218 | 5,178 | 3,120 | 2,058 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 5,377 | 7,883 | 5,315 | 2,568 | 5,061 | 7,629 | 4,909 | 2,720 | 4,417 | 7,137 | 4,481 | 2,656 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 1,257 | 1,896 | 1,184 | 712 | 1,230 | 1,942 | 1,274 | 668 | 867 | 1,535 | 931 | 604 |
| பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள்— | | | | | | | | | | | | |
| நீதி மன்றம்— | | | | | | | | | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள். | 2,24,997 | 2,45,727 | 2,24,001 | 21,726 | 2,28,578 | 2,50,804 | 2,30,595 | 19,709 | 2,25,796 | 2,45,505 | 2,21,862 | 23,842 |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள்— | | | | | | | | | | | | |
| 1 மேல் முறையீடுகள் .. .. | 772 | 882 | 634 | 248 | 862 | 1,110 | 823 | 287 | 967 | 1,254 | 927 | 327 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் .. | 4,60,350 | 5,64,369 | 4,40,313 | 1,24,056 | 4,17,652 | 5,41,708 | 4,67,102 | 74,606 | 4,90,442 | 5,65,048 | 4,78,157 | 86,891 |
| 3. இந்திய தண்டனை சட்டக் கோவையின் கீழ்வரும் வழக்குகள். | 1,15,588 | 1,76,449 | 1,13,655 | 62,794 | 1,10,658 | 1,73,452 | 1,08,805 | 64,647 | 1,12,145 | 1,76,792 | 1,07,756 | 69,036 |
| 4 குற்றவியல் நடைமுறைக்கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 26,468 | 28,059 | 25,654 | 2,405 | 31,961 | 34,668 | 31,887 | 2,479 | 37,500 | 39,979 | 37,264 | 2,715 |

## இணைப்பு—V

*(50ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### தமிழ்நாடு சிறைகள் நிருவாகம்.

### 14 ஆம் எண் மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1986–87.

இம்மாநிலத்தில் உள்ள எட்டு மத்திய சிறைகள், புதுக்கோட்டையில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளி, சென்னை அருகே புழலில் உள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம், வேலூரிலுள்ள மகளிர் சிறை, சேலம் (ஆடவர்), திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்தவெளிச் சிறை. சேலம் மத்திய சிறையோடு இணைக்கப்பட்டுள்ள பண்ணைச் சிறை, இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றை சிறைத் துறை கவனிக்கிறது. குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவும் இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து நன்கு செயற்படவும் உரிய பயிற்சிகளை நல்கி, சீர்திருத்தி, அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே அரசின் தலையாய நோக்கமாகும். முன்னதாக மருத்துவப் பணிகள்—குடும்ப நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலிருந்த 10 அரசு மறுவாழ்வு இல்லங்களும், சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமும் சிறைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு உள்ளன.

**1.** சிறைகளின் வகைப்பாடு ;

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் பின்வருமாறு ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) மத்தியச் சிறைகள்;

(2) தனி வகைச் சிறை (மாநில மகளிர் சிறை, வேலூர்):

(3) திறந்தவெளிச் சிறைகள்;

(4) தனிக் கிளைச் சிறைகள் ;

(5) கிளைச் சிறைகள்.



பொதுவாக ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும், ஒரு திங்களுக்கும் குறைவாகத் தண்டனை பெற்றவர்களும், கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள் இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். ஆண் கைதிகளும், பெண் கைதிகளும், தனித் தனி சிறைகளில் வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்தலையே தொழிலாகக் கொண்ட கைதிகள் (Habitual priscners) சேலத்திலும், கடலூரிலும் உள்ள மத்தியச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கு மேலாகச் சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையில் வைக்கப்படுகின்றனர். இச் சிறை பெண்களுக்கே உரிய சிறையாகும். பெரும்பாலும் பெண்களே இங்கு அதிகாரிகளாக இருந்து இச் சிறையை நிருவகிக்கின்றனர். இளங் கைதிகளைக் காவலில் வைத்திருப்பதற்காகப் புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி இயங்குகிறது. மன நோய் கைதிகள் சென்னை, அரசினர் மன நலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோய்க் கைதிகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்க தனிச் சிறைக் கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் வருமாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| (1) மத்திய சிறைகள் | .. | .. | .. | 8 |
| (2) மாநில மகளிர் சிறை | .. | .. | .. | 1 |
| (3) சீர்திருத்தப் பள்ளி | .. | .. | .. | 1 |
| (4) தனிக் கிளைச் சிறைகள் | | .. | .. | 3 |
| (5) கிளைச் சிறைகள் | .. | .. | .. | 119 |
| (6) திறந்தவெளிச் சிறை | .. | .. | .. | 1 |
| (7) பண்ணைச் சிறை | .. | .. | .. | 1 |
| (8) ஆடவர் பிற்காப்பு இல்லம் | | .. | .. | 1 |
| (9) அரசு மறுவாழ்வு இல்லங்கள் | | .. | .. | 10 |
| (10) அரசு காப்பு முகாம் | .. | .. | .. | 1 |

கிளைச் சிறைகள் மற்றும் மத்திய சிறைகளில் மொத்தம் 15,741 பேருக்கு இடவசதியளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4,250 பேருக்கு (பெரியவர்கள் 4,000; சிறுவர்கள் 250) இடவசதியளிக்க அனுமதியளிக்கப்பட்டு இருக்கிறது. மேல்பாகத்திலுள்ள அரசு காப்பு முகாமில் 950 பேருக்கு (ஆண்கள் 770; பெண்கள் 180) இட வசதி அளிக்க அனுமதி வழங்கப்பட்டது. சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள் குறித்த பட்டியலொன்று இணைப்பு IV-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. நிருவாகம் :

சிறைத் துறையின் நிருவாக அமைப்பைக் காட்டும் விளக்கப்படம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையை காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1975–76 முதல் 1984–85 வரையிலான ஆண்டுகளில் சிறைத் துறையில் செலவினங்கள், 1985–86 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1986–87 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1975–76 முதல் 1984–85 ஆம் ஆண்டு வரை சிறைத் துறையின் ''வரவினங்கள்'', 1985–86 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிளைச் சிறைச்களைப் படிப்படியாக சிறைத்துறையின் நிருவாகத்தில் எடுத்துக் கொள்ளுதல் :

இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகள் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தன. இவை சிறைத் துறையின் நிருவாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு நிருவாகத்தை மாற்றும் திட்டம் ஏழாம் நிதிக் குழு பரிந்துரைக்கிணங்க செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஆ) சிறைக்காவலர்கள் பயிற்சிப் பள்ளி :

சிறைக் காவலர்கள் பயிற்சிப்பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 48 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்குச் சீர்திருத்த முறைகள், சிறை நிருவாகம், உடற் பயிற்சி, ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 6 திங்களாகும். மேலும் 6 முதல் நிலை சிறைக் காவலர்களுக்கும், 6 முதன்மைத் தலைமைக் காவலர்களுக்கும், முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி கைதிகளை அணுகும் முறை குறித்துப் பயிற்சி அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கிளைச் சிறைகள் அனைத்தையும் சிறைத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக் கொண்டதையடுத்து பயிற்சிப் பள்ளியில் பயிற்சி அளிக்கப்படுவோரின் எண்ணிக்கை 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



(இ) (குற்றவாளிகள்) சீர்திருத்த அலுவலர்களுக்கான வட்டாரப் பயிற்சிப் பள்ளி.

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான வட்டாரப் பயிற்சிப்பள்ளி, வேலூரில் 1–10–1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவு, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் சீர்திருத்தப் பணியிலும், அது தொடர்பான பணிகளிலும் ஈடுபட்டிருக்கிற இதுபோன்ற பிற நிறுவனங்களிலுள்ள அலுவலர்களுக்கு, குற்றங்களைத் தடுக்கவும் குற்றவாளிகளைச் சீர்திருத்தவும், குற்றவாளிகளைச் சிறந்த முறையில் நடத்திக் காலத்திற்கேற்ற மறுவாழ்வு அளிக்கவும், தக்க நடைமுறை நுணுக்கங்கள், வழிமுறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதே இப்பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். இப்பயிற்சி அளிக்கப்படும் அதிகாரிகளில் மத்திய சிறைகளில் உதவிச் சிறை அலுவலர் முதற்கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையுள்ளவர்களும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித் தர அலுவலர்களும் அடங்குவர். குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளங்குற்றவாளிகள், நன்னடத்தை, சமூக நலப்பணி, சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 9 அலுவலர்களுக்கு இந் நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை, இம்மாநிலத்தைச் சார்ந்த 93 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இந் நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா இனச் செலவுகள் நான்கு தென் மாநிலங்களாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

3. திறந்தவெளிச் சிறைகள் :

இம்மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்தவெளிச் சிறை, தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இட வசதி உள்ளது. இதைத் தவிர, சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

திறந்தவெளிச் சிறைகளின் நோக்கங்களாவன—

(அ) சிறைகளில் நெருக்கடியைத் தவிர்த்தல்.

(ஆ) சிறைவாசிகளின் எதிர்காலப் புதுவாழ்விற்காக, அவர்களுக்குச் சரியான முறையில் வேளாண்மையில் பயிற்சியளித்தல்.

(இ) உணவுப் பொருள்கள் உற்பத்தியில் சிறைகள் தன்னிறைவு அடைதல்.

(ஈ) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளுக்கு நம் பிச்சையின்பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல் ;

(உ) கைதிகள் குறைந்த அளவே அடைத்து வைக்கப்பட வேண்டும் ; சிறைகளில் அவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும் ; அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டுவருதல்.

**4. கைதிகளின் வகைப்பாடும் சிறப்புரிமைகளும் :**

சிறைகளில் உள்ள கைதிகளுக்காக 'ஏ', 'பி', என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளன. விசாரணை மற்றும் வழக்குக்குட்பட்ட கைதிகளுக்கு சிறப்பு வகுப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு கைதியின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை , முன் வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அக்கைதிக்கு 'ஏ' வகுப்பு அரசால் வழங்கப்படுகிறது. சமூகத் தகுதி, கல்வி, பழக்க வழக்கம் ஆகியவற்றால் உயர் வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் சிறைவாசிகள் 'ஏ' வகுப்புப் பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரீகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்து கொண்ட குற்றத்தை செய்ததற்காக தண்டிக்கப்பட்ட எவருக்கும் 'ஏ' வகுப்பு அளிக்கப்பட மாட்டாது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும், சிறையில் 'ஏ' வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர். 'ஏ' வகுப்பைச் சேராத இதர சிறைவாசிகள் 'பி' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

**5. (அ) (1) உணவு—சாதாரண உணவு முறை :**

'ஏ' வகுப்புச் சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் உணவு பின்வரும் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் ;
(2) சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள் ;
(3) அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் :
(4) அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள்.

'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புச் சிறைவாசிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர் கைதிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக, பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய், பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.



**(2) திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு :**

தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் கமிஷன் பரிந்துரைத்ததின் பேரிலும், ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசால் அளிக்கப்பட்ட பண உதவியைக் கொண்டும், 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவுமுறை அனைத்து மத்திய சிறைகள், மாநில மகளிர் சிறை, வேலூர், தனிக் கிளைச் சிறைகள் மற்றும் திறந்தவெளிச் சிறைகளில் அடைக்கப்படும் அனைத்து 'பி' வகுப்பு தண்டனை பெற்ற கைதிகளுக்காகவும் மற்றும் சாதாரண காவல் மற்றும் வழக்குக்குட்பட்ட கைதிகளுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய, மேம்படுத்தப்பட்ட, திருத்தப்பட்ட உணவு முறையின் கீழ், புளிச் சாதம், தேங்காய் சாதம் மற்றும் தயிர் சாதம் போன்ற பல்வேறு உணவுகள் பொருத்தமான கூட்டுக்கறியுடன் வழங்கப்படுகின்றன. இவ்வுணவை மேலும் சத்து கொண்டதாக மாற்றவும், சிறைவாசிகள் விரும்பும் வகையில் செய்யவும், 1984 ஆம் ஆண்டு செப்டம்பரில்இவ்வுணவு வகையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இப்புதிய திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவு முறைக்கு முன் இருந்த உணவு முறையின் கீழ் வழங்கப்பட்டு வந்த சோளம் போன்ற தானியங்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டு, அதற்குப் பதில் மில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

**(3) உணவுக்கான செலவு :**

(அ) பல்வேறு வகைச் சிறைவாசிகளுக்கு, சிறைவாசி ஒருவருக்கு நாளொன்றுக்கு உணவுக்காக ஆகும் தோராயமான செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) 'ஏ' வகுப்பு சிறைவாசிகள்.

| | ரூ. பை. |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைவாசி ஒருவருக்கு .. .. | 9.49 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைவாசி ஒருவருக்கு.. .. .. | 8.80 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைவாசி ஒருவருக்கு .. .. | 10.38 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைவாசி ஒருவருக்கு .. .. | 8.77 |

(2) ' பி ' வகுப்புச் சிறைவாசிகள், சாதாரண காவலில் வைக்கப்பட்டவர்கள், வழக்குக்குட்பட்ட சிறைவாசிகள் ஆகியோருக்கு திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு :—

| | அரிசி உணவு. | கோதுமை உணவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்தோர் .. .. | 5.89 | 5.19 |

சிறப்புணவு.—பொங்கல், சுதந்திர தினம் ஆகிய நாட்களில் சிறைவாசிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. மேற்காணும் சிறப்பு நாட்களில், பெண் சிறைவாசிகளின் குழந்தைகளுக்கு ரூ. 1 கூடுதல் செலவில் சிறப்புணவு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) உடையும்-படுக்கையும் :

'ஏ' வகுப்புச் சிறைவாசிகள் சொந்தப்படுக்கையைப் பயன்படுத்தவும் வேலை நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச்சாலை உடையில் இருக்க வேண்டும். ' ஏ ' வகுப்புச் சிறைவாசிகள் அவர்களின் உறவினர்களைக் காணும்போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். ' பி ' வகுப்புச் சிறைவாசிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணியவேண்டும். அனைத்து மத்தியச் சிறைகள், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறை, தனிக்கிளைச் சிறைகள், சிங்காநல்லூரிலுள்ள திறந்தவெளிச் சிறை ஆகியவற்றில் வைக்கப்பட்டுள்ள ' பி' வகுப்புச் சிறைவாசிகளுக்கும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியில் உள்ளவர்களுக்கும் உறையுடன் கூடிய ஒரு தலையணை வழங்க அரசு அனுமதித்துள்ளது.

(இ) சோப்பு முதலியன :

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைவாசி ஒவ்வொருவருக்கும் திங்களுக்கொருமுறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு சிகைக்காய்த் தூளும், சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்தியச் சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைவாசிகளுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புச் சிறைவாசிகளும், தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பல்பொடி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.



(ஈ) நேர்காணலும் கடிதங்களும் :

' ஏ ' வகுப்பு சிறைவாசிகள் வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு சமயத்தில் மூவருடன் அரைமணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். ' பி ' வகுப்புச் சிறைவாசிகள் மாதத்திற்கு இரு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(உ) செய்தித் தாள்களும் இதழ்களும் :

அரசுச் செலவில் ' பி ' வகுப்புச் சிறைவாசிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன :—

(1) தினமணி,

(2) சுதேசமித்திரன்,

(3) அண்ணா ,

(4) தினத்தந்தி,

(5) தினமலர்,

(6) இந்து.

' ஏ ' வகுப்புச் சிறைவாசிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித்தாள்களை வாங்கிக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புச் சிறைவாசிகளும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர, சிறைவாசிகளின் பயனுக்காக, நல்ல கல்வித்தரமான புத்தகங்கள் சிறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியல் ஒன்று அவசியமேற்பட்டால் அவற்றை வாங்குவதற்குச் சிறைக் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.

(ஊ) இதர சலுகைகள் :

' ஏ ' வகுப்புச் சிறைவாசிகள் மேசை, நாற்காலி, கொசு வலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்துவதற்கும், தேவைப்படும் அவர்களது சொந்த கலன்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள் ; இதற்கு முன் சிறைத்

தண்டனை அடையாத, வழக்கமாகக் குற்றஞ் செய்யாத, சிறை மருத்துவமனையில் இருக்கும் சிறைவாசிகள் மருத்துவ ஆலோசனையின் பேரில், சிறை மருத்துவமனையின் வெளிப்புறத்தில் தகுந்த காவலோடு உறங்க சிறைக் கண்காணிப்பாளர் விருப்பத்தின் பேரில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைச் சிறைவாசிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொருத்தும், அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவுக் காவற்காரர்கள் (Convict Night Watchmen), மேற்பார்வையாளர்கள் (Convict Overseers), காவலர்கள் (Convict Warder) என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

(எ) பொழுது போக்கு வசதிகள் :

ஞாயிற்றுக் கிழமைகள், சிறை விடுமுறை நாட்களில் மத்தியச் சிறைகளிலுள்ள எல்லாச் சிறைவாசிகளும் கைபந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையின் பெண் சிறைவாசிகள் வளைபந்து (Tenni Koit) விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியானமுறை, அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் சிறைவாசிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள மத்திய சிறைச் சிறைவாசிகளுக்கு சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்தவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை மத்தியச் சிறையிலுள்ள சிறைவாசிகள், இத்திட்டத்திற்கு அளிக்கும் வரவேற்பினைப் பொறுத்து, இதனை இதர சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

6. சிறைவாசிகளுக்கான செய்தொழிலும், சிறைகளில் தொழிற்சாலைகளும் :

கடுங்காவல் தண்டனை பெற்ற சிறைவாசிகள் சிறையில் பலவித வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். சிறைவாசிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்குப் புது வாழ்வு கிடைக்க வகை செய்வதே அதன் நோக்கமாகும். எனவே, பயனில்லா மற்றும் வேலை உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறைவேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி சிறைவாசிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. சிறைவாசிகளின் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல்,



காகிதம் செய்தல், சோப்பு செய்தல், மற்றும் பினைல் (Phenyle) செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. சிறைவாசிகள், தங்கள் விடுதலைக்குப்பின் தங்களைச் சொந்த தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில், நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு, சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. இத்தொழிற்சாலைப் பிரிவுகள் 1977—79-ல் மத்திய அரசின் உதவி பெற்று நவீனப் படுத்தப் பட்டுள்ளன. மத்திய சிறைகள், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறை, புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி, புழலிலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலும் உள்ள தொழில்களின் வாழ்க்கைத் தொழில்களின் பட்டியல் இணைப்பு V-ல் குறிக்கப்பட்டுள்ளது.

எளிய சிறு தொழில்கள்.—தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரைக்கிணங்க மத்திய அரசு வழங்கிய நிதி உதவியிலிருந்து எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், பின்வரும் எளிய சிறு தொழில்களைத் தொடங்கவும், அவற்றில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், அரசு ஏற்பளித்துள்ளது:—

(1) செங்கல் உற்பத்தித் தொழில்.

(2) குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல்.

(3) எளிய மின் இணைப்புப் பயிற்சி.

(4) வண்ணம் பூசுதல் (பெயர்ப்பலகை எழுதுதல் உட்பட) மற்றும்

(5) சைக்கிள் பழுது பார்த்தல்.

இதுவரை, இத்தொழில்கள் கோவை மத்திய சிறையைத் தவிர்த்து, இதர மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் தொடங்கப்பட்டிருக்கின்றன. கோவை மத்திய சிறையில், சமீபத்தில் சிறு தொழில் பயிற்றுனர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். எனவே இந்த நிறுவனத்திலும் இத்தொழில் விரைவில் துவக்கப்படும்.

சிறைகளில் தொடங்கப்பட்டுள்ள எளிய சிறு தொழில்களைக் காட்டும் பட்டியல் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொழில்களில், பயிற்சி பெற்ற சிறைவாசிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் செய்யலாம்.

சிறைவாசிகள் கீழ்க்காணும் வீதங்களில் பணிக்கொடை பெறத்தகுதியுள்ளவர்களாவார்கள் :—

| | பணிக் கொடையின் வீதம். (ஒரு திங்களுக்கு). |
|---|---|
| | ரூ. பை. |
| (1) சிறைவாசி இரவுக் காவலர்கள் .. .. | 0.50 |
| (2) சிறைவாசிகள் மேற்பார்வையாளர்கள் .. | 1.00 |
| (3) சிறைவாசிகள் காவலர் .. .. .. | 2.00 |

அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும் தற்போது சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலிலுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சிறைவாசி ஒருவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஊதிய வீதங்கள் பின் வருமாறு :—

| | ரூ. பை. |
|---|---|
| (1) தேர்ச்சி பெற்ற வேலையாள் .. .. | 1.00 |
| (2) ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாள் .. | 0.50 |
| (3) தேர்ச்சி பெறாத வேலையாள் .. .. | 0.25 |

(7) மருத்துவ, துப்புரவு வசதிகள் :

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு வசதிகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவ மனை உள்ளது. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் (அம்மாவட்டத்தின் மாவட்ட மருத்துவ அதிகாரி அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர் வேறு ஊரில் இருந்தால், உள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரியிலுள்ள சிவில் மருத்துவரின் பதவி நிலையிலுள்ள மருத்துவ அலுவலர்), ஒரு செவிலியரும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், 2 அல்லது 3 செவிலியர் உதவியாளர்களும் உள்ளனர். கண்மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரி பரிந்துரையின் பேரில் அரசு செலவில் தேவைப்படுகின்ற சிறைவாசிகளுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும்



பல் உதவி மருத்துவரால் சிறைவாசிகளுக்குப் பல்நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழு நோய் சிறைவாசிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, தனிக்கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத சிறைவாசிகள் மன நோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உள நோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு மன நல காப்பகத்திற்கு அனுப்பப் படுகின்றனர்.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், தனிக்கிளைச் சிறைகளிலும் மற்றும் அநேகமாக எல்லா கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள எல்லாச் சிறைகளிலும், இம்மாதிரியான வசதியை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும். எஞ்சியுள்ள கிளைச் சிறைகளிலும் இத்தகைய வசதிகளைச் செய்து தரும் பணி, படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

(8) சிறைவாசிகளுக்குக் கல்வி வசதி அளித்தல் :

கல்வியின் மூலம் பயனடையக் கூடிய, தகுதியுள்ள சிறைவாசிகளுக்குச் சிறையில் கல்வி வசதி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக்கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க, சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு, சிறைகளில் புதிய முறையில் முதியோருக்குக் கல்வி புகட்டப் படுகின்றது. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்துச் சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். சிறைவாசிகள் அஞ்சல் வழிக்கல்வி மூலம் முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வும், பி. ஜி. எல். பி.எல்., பி.எட்., எம். எட்., முதலிய தொழிற் கல்வித் தேர்வுகளையும் எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக் கட்டணம் குறித்த செலவு, இதர செலவு ஆகிய செலவுகளை அரசு ஏற்றுக் கொள்கிறது. சிறைவாசிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறு முறையும் அரசு செலவில் தேர்வு எழுதலாம். இது போன்று மொத்தம் மூன்று தடவை தேர்வுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைவாசிகள் தேர்வு எழுதச் செல்லும்போது அவர்கள் சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள் அதே போன்று அவர்களைக் காவல் காத்து அழைத்துச்

செல்லும் வழித்துணைக் காவலர்களும், சாதாரண உடை அணிந்து செல்கின்றனர். நீதி அல்லது சமயம் சம்பந்தமாக உரைகள் என்ற பெயரால் மதமாற்றம் செய்தல் கூடாது என்பதோடு, விரிவுரையாற்றுவோர், எம்மதத்தைச் சார்ந்தவராக உள்ளாரோ, அம்மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளிடம் மட்டுமே உரையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் சிறையில், சமயம் நீதி, நெறி வகையான விரிவுரைகளும், போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன.

(9) சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை:

இப்பள்ளியில், 18 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள இளங் குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது:—

(1) தச்சுவேலை,

(2) கருமார் வேலை,

(3) புத்தகம் கட்டுதல்,

(4) தையல் வேலை,

(5) வேளாண்மை,

(6) கட்டுமான வேலை,

(7) சலவைத் தொழில்,

(8) பாண்டு இசைக் கருவிப் பயிற்சி

(9) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள் அங்கிருந்து அனுப்பப்பட்ட பின்னர் வேலை தேடிக்கொள்ள இயலும் பொருட்டு, அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங் குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு, அங்கு 24–25 வயதுத் தொகுதியைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இவர்கள் இங்கு 25 வயது வரை வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற்கூடம், 1894 ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின்கீழ் "சிறையாக" அறிவிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப்பள்ளியிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் புது வாழ்வுக்காக எந்திரங்கள், பசு அல்லது எருமை வாங்க நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வகையாக, அவர்களுக்கு அளிக்கப்படும் நிதிஉதவி அவர்களிடமிருந்து எளிய தவணையில் வசூலிக்கப்படுகிறது.



(10) ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல் :

சீர்திருத்தப்பள்ளிகளிலிருந்தும், சீர்திருத்தப்பள்ளி சாராத பிற நிறுவனங்களிலிருந்தும் வெளி வரும் அத்தகையோர்ஆதாயம் தரத்தக்க சொந்தத் தொழில் புரிந்து, நல்லமுறையில் வாழ்வை அமைத்துக்கொள்ள இயலும் வகையில், இரண்டு ஆண்டுகளுக்கு தச்சு வேலை, உலோக வேலை, தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக, புழலில், ஆடவர் பிற்காப்பு இல்லம் அமைக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுவதோடு, முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 1.50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதமும் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவர்களுக்கு தொழில் பயிற்சி நிலையங்களில் நடைமுறையில் உள்ள பாடத் திட்டத்தின்படி, ஆனால் பிற்காப்பு இல்லத்தின் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்றாற்போல் உரிய மாற்றங்களுடன், பயிற்சி அளிக்கப்படுகிறது. உரிய வயது வந்த ஆடவர் மட்டுமே, இந்த இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். மத்திய சிறைகளில் உள்ள 'பி' வகுப்புச் சிறைவாசிகள், சாதாரண காவல் சிறைவாசிகள், விசாரணைச் சிறைவாசிகள் ஆகியோருக்கு வழங்கப்படும் புதிய, மேம்பட்ட உணவு, இப்பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

முன்னதாக, பல்லாவரத்தில், தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்த இவ்வில்லம், புழல் கிராமத்தில் புழலேரிக்கு அருகே அரசுக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு 1—11—1983 முதல் அங்கு செயல்பட்டு வருகிறது.

11. சிறைப் பார்வையாளர்கள் :

மாஜிஸ்டிரேட்டுகளையும், நீதிபதிகளையும், மருத்துவம். துப்புரவு, நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள், இதர பிற துறைகளில் நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களையும் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாக, சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவ வல்லுநர்கள், உளநூல் வல்லுநர்கள், சமூகவியலாளர்கள், தமிழ்நாடு சிறைவாசிகள் நலக்குழு உறுப்பினர்கள் ஆகியோரும், ஒவ்வொரு சிறையிலும் அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் உதவி சங்கத்தில் உறுப்பினர்களாகவும் சிறைவாசிகளின் நலத்தில் அக்கறை கொண்டுள்ளவர்களாகவும் உள்ளவர்களே பெரும்பாலும் அவ்வாறு அரசுசார்பற்ற சிறைப்பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்தும் விதம், சிறைகளைநிருவகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை, விதி ஆகியன, சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்று தெரிந்து கொள்ளவும்

சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள சிறைவாசிகளைப் பார்வையிடுவதும், சிறைவாசிகள் எவரேனும் அவரிடம் புகார் செய்தால் அதனைக் கேட்டு விசாரணை செய்வதும் பார்வையாளர்களின் கடமை ஆகும். சிறைப்பார்வையாளரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

12. சிறைவாசிகளை விடுப்பில் விடுத்தல்:

சிறைவாசிகள், தங்களது குடும்பத் தேவைகளைக் கவனிப்பதற்காக சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலரின் அறிக்கையைப் பெற்ற பிறகு அவர்களுக்கு அரசால் விடுப்பு அளிக்கப்படுகிறது. அதிகார வரம்புடைய சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர். சிறைவாசிகளின் முதல் விடுப்புக்கோரிக்கை சம்தப்பட்ட எல்லா இனங்களிலும், உள்ளூர்க்காவல்துறை உதவி ஆய்வாளரைக் கலந்தாலோசித்து, தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, தனது அறிக்கையை அரசுக்கு நேரடியாக அனுப்புகிறார். அதன்பிறகு அனுமதிக்கப்படும் விடுப்பிற்கான கோரிக்கைகளின் மீதான தனது அறிக்கையை, குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர், உள்ளூர்க் காவல் துறை உதவி ஆய்வாளரைக் கலந்து ஆலோசிக்காமலேயே அரசுக்கு அனுப்புகிறார். ஐந்து ஆண்டு சிறைவாசம் அனுபவித்துள்ளவரும், இதுவரையில் விடுப்பில் செல்லாதவருமான சிறைவாசிகளுக்கு முதலில் ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு, கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள் சிறைவாசம் அனுபவித்து பிறகு மீண்டும் விடுப்பு அளிக்கப்படுகிறது. இன்னும் 3 ஆண்டுக் காலம் மட்டுமே சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய சிறைவாசிகளுக்கு, அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவற்றோடு, சிறைவாசிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/கணவன்/மனைவி, சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரி/சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களைச் சென்று பார்க்கவும்; நெருங்கிய உறவினர்களான சொந்தமகன்/சொந்த மகள்/சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும், அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள், ஒரு சிறைவாசிக்கு 4 முறைகளில், சிறையில் அச்சிறைவாசியின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.



13. தண்டனைக் குறைப்பு:

சிறைவாசிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகளின் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், சாதாரண வகைத் தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும், ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்வோராகவும் பணிபுரியவேண்டிய சிறைவாசிகளுக்கு இவ்விதிகளின்கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக்குறைப்போடு, மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படுகிறது. தண்டனைக் கைதிகளாக இருந்து பின்னர் சிறைவாசிக் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளின் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைப் பேணிவரும் சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்ட்னைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30, நாட்களும் சிறந்த நற்பணிக்காக சிறப்புத் தண்டனைக் குறைப்பாக சிறைத்துறை இயக்குநரால் ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகின்றன. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு ஓராண்டுக்காலச் சிறப்பு தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரு நேரத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த சிறைவாசிகளை அக்கால அளவிற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக் குழு பரிசீலனை செய்கிறது.

அந்த சிறைவாசியின் கடந்த கால நன்னடைத்தைப் பற்றிய குறிப்புகளையும், உள்ளூர் அதிகாரிகளின், அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறைவாசியை, அவருக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க அரசின் பரிசீலனைக்காக இக்குழு தனது பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

இந்திய அரசு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவைச் சேர்க்கும் முன்னர் ஆயுள் தண்டனைச் சிறைவாசிகளை, அவர்களுடைய

தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது பற்றிப் பரிசீலனை செய்வதற்காக அத்தகையோர் பற்றிய தகவல்கள் ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்பட்டு வந்தது. ஆனால், அவர்கள் சிறையில் நன்முறையில் நடந்திருக்க வேண்டும் என்பதோடு, 10 ஆண்டு சிறைத் தண்டனையும் அனுபவித்திருக்க வேண்டும். இந்த 10 ஆண்டில் அவர்கள் இருவகைகளின்கீழ் ஈட்டிய தண்டனைக் குறைப்புக் காலமும் அடங்கும். ஆனால் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-ஏ என்னும் புதிய பிரிவின்படி, ஆயுள் தண்டனை அடைந்த சிறைவாசிகள் அவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்பு நீங்கலாக 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பின்னரே, அவர்களுக்குரிய தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் விடுதலை செய்வது பற்றி ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்படும். இப்புதிய பிரிவின் செயல்திறன் சரியே என்று ஏற்கையில் இப்புதிய பிரிவு அது நடைமுறைக்கு வந்த நாளுக்கு முன்னர், அதாவது 18–12–1978-க்கு முன்னர், விசாரணை நீதிமன்றத்தால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு பொருந்தாது என்றும் 18–12–1978 ஆம் நாளோ, அதற்குப் பின்னரோ, குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், இந்திய உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. இந்திய உச்சநீதிமன்றத்தின் மேற்சொன்ன கருத்தினையொட்டி குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-ஏ என்னும் புதிய பிரிவு செயலுக்கு வருவதற்கு முன்னர் ஆலோசனைக் குழு திட்டத்தின்கீழ் செயலிலிருந்த நடைமுறை, விசாரணை நீதிமன்றத்தால் 18–12–78-க்கு முன்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைவாசிகள் குறித்து பரிசீலனை செய்வதற்குப் பின்பற்றப்படும் என்று உள்துறையின் 6–1–1981 நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் அரசாணை பிறப்பித்துள்ளது.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் சிறைவாசிகளுக்கும், 55 வயதிற்கு மேற்பட்ட பெண் சிறைவாசிகளுக்கும் முதன் முறையாகத் தண்டனை மட்டும் அளிக்கப்பட்டிருந்து, அவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்பு உட்பட 2½ ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்து இருந்தால், 'வயது மூப்புத் திட்டத்தின்' கீழ் அவர்களை விடுதலை செய்ய, அவர்கள் ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்படுவதற்குத் தகுதி உடையவர்களாவர். மாநிலச் சிறைகள் நடைமுறை நூல் விதிகளில் குறிப்பிட்டவாறு, சிறை மருத்துவ அதிகாரி, சான்றிதழ் வழங்குவதன் பேரில், நோயுற்ற ஆயுள் தண்டனைச் சிறைவாசிகள், அவர்களது தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யப் பரிசீலனை செய்யப்படுகிறது.



புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில், தண்டனைக் காலம் முடியுமுன் விடுதலை செய்யும் முறை செயலில் உள்ளது. ஆனால், இது குறித்துப் பின்பற்றப்படுகிற நடைமுறை வேறாகும். இம்முறை ''நல்லிணக்கத்தின்பேரில் விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல்'' என்று அழைக்கப்படுகிறது. 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விபரங்களையும், உரிய விசாரணைகளைச் செய்து, அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர், வெளியூர்களிலுள்ள அந்தந்த மாவட்ட குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர்களுக்கும், சென்னை மாநகரில் குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்ப தலைமைக் கண்காணிப்பாளருக்கும் சீர்திருத்தப்பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள சிறைவாசிகள் பற்றிச் சிறைத் துறை இயக்குநர் பரிசீலித்து, பின்னர் ஆணை பிறப்பிக்கிறார்.

1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப்பள்ளிகள் சட்டத்தின் 10-ஏ பிரிவின்கீழ், ஏனைய மத்திய சிறைகளிலிருந்து மாற்றப்பட்டு சீர்திருத்தப் பள்ளியில் உள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகள் 23 வயது முடிவடைவதற்கு முன்னர், அவர்களின் தண்டனைக் காலத்தில், 3 மாதம் குறைப்பது பற்றி அரசு பரிசீலிக்கிறது.

10-ஏ பிரிவின் கீழ், சீர்திருத்தப் பள்ளிக்கு அரசால் மாற்றப் பட்டுள்ள ஆயுள் தண்டனை பெற்ற இளங்குற்றவாளிகள் 23 வயது அடையும்போது விடுதலை செய்யப்பட வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் 981/84 ஆம் எண் ரிட் மனுவில் [வேலூர் மத்திய சிறையிலிருந்து சி. ஏழுமலைக்கும் (சிறைவாசி எண். 5782) தமிழ்நாடு அரசுக்கும் இடையேயான வழக்கு] ஆணை பிறப்பித்துள்ளது.

## 14. சிறைவாசிகளின்நலன்.

தற்போது, சிறைவாசிகள் நல அலுவலர் பதவிகள் மொத்தம் 10 உள்ளன. அதாவது, மத்திய சிறைகள் ஒவ்வொன்றிலும், ஒரு பதவி வீதம் எட்டு மத்திய சிறைகளில் எட்டு பதவிகளும் வேலூரில் மாநில மகளிர் சிறையில் ஒரு பதவியும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியில் ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர் சிறையின் விதிமுறைக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும் அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார் மேலும் தனிப்பட்ட முறையில் மேல் முறையீடும் செய்ய வசதி இல்லா சிறைவாசிகளுக்கு மேல் முறையீடு செய்யவும் உதவி செய்கிறார்

[1986 ஏப்ரல் 7

பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால் அக்குழந்தைகள் தாயோடு, சிறையில் வைக்கப்படுகின்றனர். அக் குழந்தைகளுக்காக ஒரு குழந்தை காப்பிடமும், வேலூரில் மாநில மகளிர் சிறையில் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களைச் சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன் வராவிட்டால், அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன், சென்னை மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால் சென்னையிலுள்ள பால மந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர இடங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் மதுரை காந்தி கிராமத்திலுள்ள குழந்தைகள் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

சிறைவாசிகளின் பயனுக்காக ஒவ்வொரு மத்திய சிறையிலும் கலாச்சாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கலாச்சாரக் குழு, சிறைக் கைதிகளின் நன்மைக்காக சிறைக்குள் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திரைப்படம் காட்டுகிறது. மேலும் வெளியில் உள்ளவர்களைக் கொண்டு பல்வகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்கிறது.

மத்திய சிறைகள் அனைத்திலும், சிறைவாசிகளுக்காகச் சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும், பணிக்கொடை ஈட்டும் சிறைவாசிகளும், இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்திய குடியரசுத் தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைவாசிகளின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/மனைவி/கணவன்/மகள்/மகன்/சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகிய நெருங்கிய உறவினர்கள் 5 நபர்களுக்கு மேற்படாமல், அச்சிறைவாசி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்ப்பதற்கு வசதியாக, தமிழ் நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம் குறைந்த பட்ச வகுப்பில் புகைவண்டி அல்லது சாலை வழிப் பயண் போக்குவரத்துச் செலவுகளை அனுமதிக்க, எல்லா மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை ஆகியவற்றின் கண்காணிப்பாளர்களுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.

## 15. சிறைவாசிகளின் பஞ்சாயத்து முறை.

சிறைகளில் ஒழுங்கமைதியைப் பராமரிப்பதற்காக சிறைவாசிகள் சிறை நிருவாகத்தில் பங்கேற்பதற்கு பஞ்சாயத்து முறை வாய்ப்பு அளிக்கிறது. எனவே, வழக்கமாகச் சிறைப்படும்



1986 ஏப்ரல் 7]

சிறைவாசிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட சேலம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைகளைத் தவிர்த்து, இதர எல்லா மத்தியச் சிறைகளிலும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையிலும் இப்பஞ்சாயத்து முறை கொண்டு வரப்பட்டுள்ளது. பொதுவாக, இம்முறை அனைத்து சிறைகளிலும் நல்ல முறையில் இயங்கி வந்த போதிலும், திருச்சி, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைகளில் தற்சமயம் இத்திட்டம் செயல்பாட்டில் இல்லை. இதற்குக் காரணம், சிறைவாசிகள் தேர்தலில் தன்னிச்சையாக செயல்பட்டு நிருவாகத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டது தான். எனவே, இந்த நிறுவனங்களில் இத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## 16. சிறைவாசிகளுக்குச் சட்ட உதவி.

விசாரணைச் சிறைவாசிகளுக்கும், தண்டனை அடைந்த சிறைவாசிகளுக்கும், தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு, சட்ட உதவி அளித்து வருகிறது. மேலும், சிறைவாசிகளின் பிரச்சினையை ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்ய, மத்திய சிறைகளிலும், தனிக் கிளைச் சிறைகளிலும், கிளைச் சிறைகளிலும் வழக்குரைஞர்களை அமர்த்தும் திட்டத்தை இக்குழு கொண்டு வந்துள்ளது.

## 17. சிறைகளில் புகார்ப் பெட்டிகள் வைத்தல்.

அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின்படி, எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க இயலும் வகையில், புகார் மனுக்களைத் தாக்கல் செய்ய, முத்திரையிடப்பட்ட புகார்ப் பெட்டிகள் சிறைவாசிகளுக்கு எளிதில் எட்டும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகள் தங்கள் புகார்களை எழுதி அப்பெட்டிகளில் இட, எழுது பொருட்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. புகார் மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகள் ஒவ்வொரு மாதத்தின் முதல் பணி நாளில், சிறை அதிகாரிகளால், மாவட்ட செசன்ஸ் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டு வரப்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் அவர்கள் திறந்து அம்மனுக்களை ஆய்வு செய்து, சிறை அதிகாரிகள் அல்லது அரசு அல்லது சிறைத்துறைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டி அவற்றின் பகுதி நகல்களை அனுப்புவர். சிறைவாசிகள் கொடுக்கும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சில மத்திய சிறைகளிலிருந்து சிறை அதிகாரிகள் புகார்ப் பெட்டிகளின் அடிப்பலகையினைக் கழற்றி புகார் மனுக்களை எடுப்பதாக புகார் வந்ததையடுத்து, இதனைத் தவிர்ப்பதற்

காக. எவ்வகையிலும் முறைகேடு செய்ய இயலாவண்ணம் இரும்பினால் தயாரிக்கப்பட்ட புகார்ப் பெட்டிகள் அனைத்து மத்திய சிறைகளிலும் தற்போது வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சிறையில் இருக்கும் புகார்ப் பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு:—

| சிறையின் பெயர். | பெட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 சென்னை மத்திய சிறை ... ... ... | 3 |
| 2 வேலூர் மத்திய சிறை .. ... ... | 3 |
| 3 கடலூர் மத்திய சிறை ... ... ... | 3 |
| 4 திருச்சிராப்பள்ளி மத்திய சிறை .. ... | 3 |
| 5 சேலம் மத்திய சிறை ... ... ... | 3 |
| 6 கோயம்புத்தூர் மத்திய சிறை .. ... | 3 |
| 7 மதுரை மத்திய சிறை .. ... ... | 3 |
| 8 பாளையங்கோட்டை மத்திய சிறை ... | 3 |
| 9 புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளி .. | 3 |
| 10 மகளிருக்கான மாநில சிறை, வேலூர் ... | 2 |

18. குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புப் பணி:

குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணியானது குற்றவாளிகளின் சுற்றுப்புற சூழ்நிலையையும், அவர்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றியும், பிணையப் பத்திரத்தின் பேரில் உரிய காலத்திற்கு முன்கூட்டியே நன்னடத்தை ஜாமீன் அளிப்பதன் பேரில் விடுதலையான குற்றவாளிகள் பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆகியோர் குறித்தும் விசாரிப்பது, கண்காணிப்பது, அவர்களைப் பற்றி நீதி மன்றங்களுக்குத் தகவல் கொடுப்பது முதலியன ஆகும். சிறைத்துறை இயக்குநரின் முழுக் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்ட நன்னடத்தைக் கண்காணிப்பு பிரிவு, நன்னடத்தைத் தலைமை கண்காணிப்பாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. நன்னடத்தை வட்டார அலுவலர் ஒருவரைக் கொண்ட நன்னடத்தை ஆராய்ச்சிப் பிரிவும் இப்பிரிவில் உள்ளது.



தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டத்திற்குப் பதிலாக 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புச் சட்டம் எனப்படும் மத்திய சட்டம் ஒன்று (மத்தியச் சட்டம் 20/1958) கொண்டு வரப்பட்டது. இம்மத்திய சட்டம் சென்னை மாநகரத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் 1—12—1962ஆம் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இது 1—5—1964 ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு முழுவதற்கும் நீடிக்கப்பட்டது. குற்றவாளிகள் புரியும் குற்றமானது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அபராதத் தண்டனை அல்லது இவ்விரு தண்டனைகள் விதிக்கக்கூடிய குற்றமாக இருந்தாலும், இதற்கு முன்னர், குற்றம் எதுவும் குற்றமிழைத்தவருக்கு எதிராக நிரூபிக்கப்படாமலிருந்தாலும், நன்னடத்தை கண்காணிப்பின் பேரில் உரிய எச்சரிக்கையுடன் விடுதலைசெய்ய இச் சட்டம் நீதி மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மத்தியச் சட்டத்தின் விதித்துறைகள் சீர்திருத்த நிருவாகத்தின் தற்காலப் போக்கிற் கேற்ப உள்ளன.

19. தமிழ்நாடு விடுதலையடைந்த சிறைவாசிகள் உதவிச் சங்கம்:

தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகளின் உதவிச் சங்கம் 1921-ல் அமைக்கப்பட்டது. தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளங் குற்றவாளிகளும், கைதேர்ந்த குற்றம் புரிகிறவர்களாக மாறுவதைத் தடுக்கும் நோக்குடன், சிறைவாசிகளுக்குப் புது வாழ்வு அமைத்துக் கொடுத்தல், அவர்களுக்குத் தேவைப்படும் பலவித உதவிகள் செய்து கொடுத்தல், அவர்களின் நலனுக்காக சட்டங்களை இயற்றுதல், ஏற்கெனவே இருக்கும் சட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி புதிய சட்டங்களை இயற்றுதல் ஆகியவை இச் சங்கத்தின் நோக்கங்களாகும். விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் சிறுதொழில்களை மேற்கொண்டு நடத்தவும், கருவிகள், தேநீர்கெட்டில், தையல் எந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும் இச்சங்கம் உதவித் தொகை கொடுக்கிறது. மேலும் புகைவண்டி அல்லது பேருந்து கட்டணத்திற்கான உதவித் தொகையையும் தொழில்களின் பயிற்சி பெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும், வழக்காட சட்ட உதவி பெறுவதற்கும், வயது முதிர்வு ஓய்வூதியம் பெறுவதற்கும் உதவித் தொகை அளிப்பதோடு, ஆடைகள், மூக்குக் கண்ணாடி முதலியவற்றையும் வழங்குகிறது.

அரசால் இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 18,000 உதவி மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

20. சென்னை மாநகரிலும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் உள்ள தண்டனைச் சிறைவாசிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையை புழலில் (செங்குன்றம்) கட்டுதல்:

புழல் கிராமத்தில் தற்போது சிறைத்துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

21. சிறை சீர்திருத்தக் குழு:

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான பிறகு சமுதாயத்தில் கண்ணியமாகவும், நேர்மையுடனும் வாழ்க்கை நடத்தும் வகையில், அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதும், சமூகத்தில் மதிப்பை ஏற்படுத்துவதும் இம் மாநிலத்தில் சிறைச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறாக நல்ல குடிமக்களாக வாழ அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கப்படுகிறது. இம்மாநிலச் சிறை நிருவாகத்தில் செய்ய வேண்டிய மேம்பாடுகள் குறித்து பரிசீலிப்பதற்கும் இச் செயல் நோக்கத்திற்காக பொருத்தமான சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டியும் 1978 பிப்ரவரியில் சிறை சீர்திருத்தக் குழுவை அரசு நியமித்தது. பாட்னா உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆர். எல். நரசிம்மன், ஐ. சி. எஸ். (ஓய்வு) அவர்கள் இக்குழுவின் தலைவர் ஆவார். முன்னாள் சிறைத் துறைத் தலைவர் திரு. எஸ். எம். டயஸ் அவர்ளும், பேராசிரியர் டாக்டர் வெங்கோபராவ் (உளவியல் மருத்துவப் பேராசிரியர் மற்றும் உளவியல் துறைத் தலைவர்). அவர்களும் இதன் உறுப்பினர்களாவர். சிறைகள் மற்றும் சிறைவாசிகள் தொடர்பாக பல பரிந்துரைகளை இக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை முழுவதும் மொத்தம் 223 பரிந்துரைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசு இது வரை 93 பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. மீதமுள்ள 130 பரிந்துரைகளில் 51 பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. மாநிலத்தின் நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டு நிதிச் செலவு சம்பந்தப்பட்ட இக் குழுவின் ஏனைய பரிந்துரை களுக்கும், சிறைச்சட்டங்களில், திருத்தம் செய்வதற்கும், அரசு கவனம் செலுத்தி வருகிறது.

22. சிறை சீர்திருத்த அனைத்திந்திய குழுவின் அறிக்கை (நீதிபதி திரு. ஏ. என். முல்லா இதன் தலைவர் ஆவார்):

இந்தியாவின் எல்லா மாநிலங்களிலுமுள்ள சிறைகள் நிருவாகத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து



பரிசீலிப்பதற்கும், செயல்படுத்தப்பட வேண்டிய தக்க சீர்திருத் தங்களைத் தெரிவிக்கும் பொருட்டும், நீதிபதி திரு. ஏ. என். முல்லா தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. மத்திய அரசிடமிருந்து வந்த அறிக்கையில் 656 பரிந்துரைகள் உள்ளன. முல்லா குழு அளித்த பரிந்துரைகள் சிறைத்துறை இயக்குநருடன் கலந்தாலோசித்து ஆய்வு செய்யப்பட்டு வரு கிறது. ஏற்கனவே பகுப்பாய்வு செய்யப்பட்ட சில பரிந்துரை களின் மீதான இந்த அரசின் கருத்து மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டு வருகிறது.

23. 1986—87 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசித்துள்ள சிறை நிருவாக மேம்பாட்டுத் திட்டங்கள்:

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | செலவு (ரூபாயில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சிறைகள்—மத்தியச் சிறைகள்—போக்குவரத்து வசதியளித்தல். | 3,00,000 |
| 2 | சிறைகள்—மத்திய சிறைகள்—ஒவ்வொரு மத்திய சிறையிலும், புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலும் ஒரு முடி வெட்டுபவரை நியமித்தல். | 65,000 |
| 3 | சிறைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் கிளைச் சிறைகளை ஆய்வு செய்வதற்காக இரண்டு உதவியாளர் பதவிகள் ஏற்படுத்துதல். | 28,000 |
| 4 | சிறைகள்—மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி கட்டிடங்களைப் பழுது பார்த்தல். | 6,03,000 |
| 5 | சிறைகள்—மத்தியச் சிறை—கோயம்புத்தூர் நெசவு செய்யும் சாயம் தோய்க்கும் கட்டிடத்தின் மேற்கூரையைப் பழுது பார்த்தல். | 1,000 |
| 6 | சிறைகள் —மதுரையில் பெண்களுக்கான தனிச் சிறை உருவாக்குதல் பணியாளர் நியமித்தல். | 1,07,000 |

## சிறைத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற விவர அறிக்கை.

[1986 ஏப்ரல் 7

## இணைப்பு

### சிறைத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற விவர அறிக்கை.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயர்களும். | | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சிறைத் துறை இயக்குநர் .. .. | 1 |
| 2 | சிறைத் துறைத் துணைத் தலைவர் .. | 1 |
| 3 | கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4 | உதவி கணக்கு அலுவலர் .. .. | 1 |
| 5 | சிறைத் துறை இயக்குநரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6 | சிறைக் கண்காணிப்பாளர்கள் .. | 9 |
| 7 | மாநில மகளிர் சிறை கண்காணிப்பாளர், வேலூர் .. .. .. | 1 |
| 8 | கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல் .. .. .. | 1 (தற்சாலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 9 | சிறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் .. | 6 |
| 10 | புதுக்கோட்டை இளங் குற்றவாளிகள் சிறைப்பள்ளி, மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை, துணை கண்காணிப்பாளர்கள் .. .. .. | 2 |
| 11 | ஜெயிலர்கள் .. .. .. | 9 |
| 12 | அரசு உதவி மருத்துவர்கள் .. .. | 18 |
| 13 | தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் | 1 |
| 14 | துணைத் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் .. .. .. | 2 |
| 15 | மண்டல நன்னடத்தை அலுவலர்கள் .. | 12 |



1986 ஏப்ரல் 7]

## பணியாளர் அமைப்பு

### பொதுவான வகையினர்

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயர்களும். | | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 16 | அலுவலக கண்காணிப்பாளர் .. | 9 |
| 17 | உதவியாளர்கள் .. .. .. | 95 |
| 18 | இளநிலை உதவியாளர்கள் .. .. | 84 |
| 19 | சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் .. | 3 |
| 20 | தட்டச்சர்கள் .. .. .. | 43 |
| 21 | பதிவுரு எழுத்தர்கள் .. .. | 37 |
| 22 | டபேதார் .. .. .. | 1 |
| 23 | அலுவலக உதவியாளர்கள் .. .. | 94 |

### சிறப்பான வகையினர்.

| | | |
|---|---|---|
| 24 | மூதாய் .. .. .. | 4 |
| 25 | துணை ஜெயிலர்கள் .. .. | 16 |
| 26 | உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 27 | துணை உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 28 | தனி கிளைச் சிறைகளின் கண்காணிப்பாளர்கள் .. .. .. | 3 |
| 29 | உளவியல் வல்லுநர்கள் .. .. | 3 |
| 30 | சமூகப் பணியாளர்கள் .. .. | 3 |
| 31 | உதவி ஜெயலர்கள் .. .. .. | 139 |
| 32 | தொழிற்சாலை மேலாளர் .. .. | 1 |
| 33 | செவிலியர் .. .. .. | 10 |
| 34 | மருந்தாக்குநர்கள் .. .. .. | 18 |
| 35 | ஆண்/பெண் உதவி செவிலியர்கள் .. | 29 |
| 36 | முதன்மைத் தலைமைக் காலவர்/வாயிற் காப்போர்கள் .. .. .. | 38 |
| 37 | சிறைக் காவலர்கள்/சிற்றலுவலர் (நிலை-1) | 356 |
| 38 | சிறைக் காவலர்கள்/சிற்றலுவலர் (நிலை-2) | 2,180 |
| 39 | அலுவலக மேலாளர் (நிலை-1) .. | 10 |
| 40 | சிப்ப எழுத்தர்கள .. .. .. | 10 |
| 41 | இடைநிலை ஆசிரியர்கள் .. .. | 35 |
| 2 | தொடக்க நிலை ஆசிரியர் .. | 1 |

[1986 ஏப்ரல் 7

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயர்களும். | | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | சிறப்பான வகையினர்—தொடர்ச்சி. | |
| 43 | உடற்பயிற்சி ஆசிரியர் | 1 |
| 44 | தச்சுப் பயிற்றுநர் மற்றும் கம்மியர் | 16 |
| 45 | நெசவுப் பயிற்றுநர்கள் | 7 |
| 46 | உற்பத்தி உதவியாளர் | 1 |
| 47 | பயிற்சி பெற்ற வேலையாட்கள் | 5 |
| 48 | புத்தகம் கட்டும் மேற்பார்வையாளர்கள் | 2 |
| 49 | தையற் பயிற்றுநர்கள் | 11 |
| 50 | கருமார் தொழில் பயிற்றுநர்கள் | 3 |
| 51 | தச்சு முதலாள் | 3 |
| 52 | மின் கம்பியாள் | 12 |
| 53 | நன்னடத்தை அலுவலர்கள் | 96 |
| 54 | நல அலுவலர்கள் | 10 |
| 55 | லாரி ஓட்டுநர்கள | 8 |
| 56 | பிரம்புத் தொழில் பயிற்றுநர் | 1 |
| 57 | லாரி ஆள் | 2 |
| 58 | பூட் தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 59 | பூட் பணி கம்மியர் | 1 |
| 60 | பூட் பணி மேஸ்திரிகள் | 3 |
| 61 | அலுமினியப் பட்டரை முதலாள் | 1 |
| 62 | வண்டிக்காரர் | 8 |
| 63 | நெசவு ஆசிரியர் | 1 |
| 64 | சாய வேலை ஆசிரியர் | 2 |
| 65 | பாவு ஆசிரியர் | 1 |
| 66 | இசைக்குழு ஆசிரியர் | 1 |
| 67 | கூடாரப் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 68 | பாவு அமைத்துக் கஞ்சிபோடும் பணியாளர் | 1 |
| 69 | சொதிகலன் பணியாளர் | 1 |
| 70 | பொருத்துத் தச்சர் | 2 |
| 71 | நெசவுப் பணியாளர்கள் | 5 |
| 72 | விசையேற்ற நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கும் பொருத்துநர் | 1 |
| 73 | கட்டு கட்டும் பணியாளர் | 1 |
| 74 | குழாய் பொருத்துநர் | 1 |
| 75 | கொதிகலன் எரியூட்டுபவர் | 1 |



1986 ஏப்ரல் 7]

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயர்களும், | | | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| | சிறப்பான வகையினர்—தொடர்ச்சி. | | |
| 76 | மோட்டார் பணியாட்கள் | | 2 |
| 77 | மின் மேற்பார்வையாளர் | | 1 |
| 78 | தோட்டக்காரர் | | 2 |
| 79 | பினைல் தயாரிப்பு உதவியாளர் | | 1 |
| 80 | நூற்பு ஆசிரியை | | 1 |
| 81 | செய்முறை விளக்குநர் | | 1 |
| | | (தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) | |
| 82 | இயந்திரம் இயக்குபவர், நிலை-1 | டி | 1 |
| 83 | தச்சர்கள் | டி | 4 |
| 84 | பால்காரன் | | 1 |
| 85 | கால்நடை உதவி ஆய்வாளர்கள் | | 5 |
| 86 | உலோகம் பற்றவைப்பவர்கள் | | 2 |
| 87 | தலைமை ஆயா | | 1 |
| 88 | ஆயாக்கள் | | 8 |
| 89 | மின் மோட்டார் பணியாட்கள் | | 3 |
| 90 | மேற்பார்வையாளர்கள்—ஆசிரியர்கள் (கைமுறை காகிதத் தொழில்) | | 5 |
| 91 | சவுக்கார வேதியல் பணியாளர் | | 1 |
| 92 | என்ஜின் ஓட்டுநர் | | 1 |
| 93 | மெருகிடும் உதவியாளர் | | 1 |
| 94 | காகிதக் கூழ் செய்யும் உதவியாளர்கள் | | 3 |
| 95 | காவலாட்கள் | | 11 |
| 96 | இயல் மருத்துவத் தொழில் நுட்பப் பணியாளர் | | 1 |
| 97 | கால்நடை மேய்ப்பவர் | | 1 |
| 98 | டிராக்டர் ஓட்டுநர்கள் | | 2 |
| 99 | துப்புரவாளர்/பெருக்குபவர் | | 13 |
| 100 | சமையற்காரர்கள் | | 20 |
| 101 | டிராக்டர் சுத்தம் செய்பவர் | | 1 |
| 102 | சுகாதாரப் பணியாளர்கள் | | 5 |
| 103 | கைத்தொழில் பயிற்றுநர்கள் | | 9 |

## இணைப்பு.

(2-ம் எண் இனத்தைக் காண்க.)

1975–76 முதல் 1984–85 ஆம் ஆண்டு வரை சிறைத் துறை தொடர்பான செலவு, வருவாய் குறித்த விவரங்களையும், 1985–86 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டையும், 1986–87 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டையும் காட்டும் விவர அறிக்கை:—

(ரூ. ஆயிரத்தில்)

1. செலவு.—

| | | |
|---|---|---|
| 1975–76 | .. .. .. | 4,78,26 |
| 1976–77 | .. .. .. | 4,56,44 |
| 1977–78 | .. .. .. | 4,27,02 |
| 1978–79 | .. .. .. | 4,53,23 |
| 1979–80 | .. .. | 5,32,94 |
| 1980–81 | .. .. .. | 5,61,44 |
| 1981–82 | .. .. .. | 6,30,72 |
| 1982–83 | .. .. .. | 6,38,62 |
| 1983–84 | .. .. .. | 6,87,96 |
| 1984–85 | .. .. .. | 8,34,66 |
| 1985–86 திருத்திய மதிப்பீடு | .. .. | 9,08,86 |
| 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | | 9,01,51 |

2. வருவாய்/வரவுகள்—

| | | |
|---|---|---|
| 1975–76 | .. .. .. | 99,82 |
| 1976–77 | .. .. .. | 1,18,61 |
| 1977–78 | .. .. .. | 1,24,99 |
| 1978–79 | .. .. .. | 1,14,02 |
| 1979–80 | .. .. .. | 80,43 |
| 1980–81 | .. .. .. | 1,41,20 |
| 1981–82 | .. .. .. | 1,60,13 |
| 1982–83 | .. .. .. | 1,53,57 |
| 1983–84 | .. .. .. | 1,34,06 |
| 1984–85 | .. .. .. | 1,25,89 |
| 1985–86 திருத்திய மதிப்பீடு | .. | 1,28,87 |
| 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | | 1,28,87 |



## இணைப்பு.

(1-ம் இனத்தைக் காண்க.)

சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்கள்:

1. மத்திய சிறை, சென்னை.
2. மத்திய சிறை, வேலூர்.
3. மத்திய சிறை, கடலூர்.
4. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி.
5. மத்திய சிறை, சேலம்.
6. மத்திய சிறை, கோயம்புத்தூர்.
7. மத்திய சிறை, மதுரை.
8. மத்திய சிறை, பாளையங்கோட்டை.
9. மாநில மகளிர் சிறை, வேலூர்.
10. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.
11. தனிக் கிளைச் சிறை (ஆண்கள்), சேலம்.
12. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்.
13. தனிக் கிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி.
14. திறந்தவெளிச் சிறை, சிங்காநல்லூர்.

15ஏ. ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல், சென்னை.

(1) செங்கற்பட்டு மாவட்டம்:

15. கிளைச் சிறை (நிலை-1), சைதாப்பேட்டை.
16. கிளைச் சிறை (நிலை-2), செங்கற்பட்டு.
17. கிளைச் சிறை (நிலை-2) மதுராந்தகம்.
18. கிளைச் சிறை (நிலை-2), பூவிருந்தவல்லி.
19. கிளைச் சிறை (நிலை-2), திருவள்ளூர்.
20. கிளைச் சிறை (நிலை-2), திருத்தணி.
21. கிளைச் சிறை (நிலை-2), பொன்னேரி.
22. கிளைச் சிறை (நிலை-2), காஞ்சிபுரம்.

(2) கோயம்புத்தூர் மாவட்டம்:

23. கிளைச் சிறை, அவினாசி.
24. கிளைச் சிறை, மேட்டுப்பாளையம்.
25. கிளைச் சிறை, திருப்பூர்.
26. கிளைச் சிறை, உடுமலைப்பேட்டை.
27. கிளைச் சிறை, பொள்ளாச்சி.
28. கிளைச் சிறை, பல்லடம்.

(3) பெரியார் மாவட்டம் :

29. கிளைச் சிறை, தாராபுரம்.
30. கிளைச் சிறை, பவானி.
31. கிளைச் சிறை, ஈரோடு.
32. கிளைச் சிறை, கோபிசெட்டிபாளையம்.
33. கிளைச் சிறை, காங்கேயம்.
34. கிளைச் சிறை, சத்தியமங்கலம்.
35. கிளைச் சிறை, பெருந்துறை.

(4) நீலகிரி மாவட்டம் :

36. கிளைச் சிறை, உதகமண்டலம்.
37. கிளைச் சிறை, குன்னூர்.
38. கிளைச் சிறை, கூடலூர்.

(5) வட ஆற்காடு மாவட்டம் :

39. கிளைச் சிறை, அரக்கோணம்.
40. கிளைச் சிறை, ஆம்பூர்.
41. கிளைச் சிறை, செய்யாறு.
42. கிளைச் சிறை, ஆரணி.
43. கிளைச் சிறை, செங்கம்.
44. கிளைச் சிறை, குடியாத்தம்.
45. கிளைச் சிறை, போளூர்.
46. கிளைச் சிறை, திருப்பத்தூர்.
47. கிளைச் சிறை, திருவண்ணாமலை.
48. கிளைச் சிறை, வாணியம்பாடி.
49. கிளைச் சிறை, வாலாஜாபேட்டை.
50. கிளைச் சிறை, வந்தவாசி.

(6) தென்னாற்காடு மாவட்டம் :

51. கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி.
52. கிளைச் சிறை, சிதம்பரம்.
53. கிளைச் சிறை, கடலூர்.
54. கிளைச் சிறை, செஞ்சி.
55. கிளைச் சிறை, காட்டுமன்னார்கோவில்.
56. கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை.
57. கிளைச் சிறை, திண்டிவனம்.
58. கிளைச் சிறை, திருக்கோவிலூர்.
59. கிளைச் சிறை, உளுந்தூர்பேட்டை.
60. கிளைச் சிறை, விழுப்புரம்.
61. கிளைச் சிறை, விருத்தாச்சலம்.
62. கிளைச் சிறை, பண்ருட்டி.



(7) சேலம் மாவட்டம் :

63. கிளைச் சிறை, ஆத்தூர்.
64. கிளைச் சிறை, நாமக்கல்.
65. கிளைச் சிறை, ஓமலூர்.
66. கிளைச் சிறை, பரமாத்தி.
67. கிளைச் சிறை, இராசிபுரம்.
68. கிளைச் சிறை, சங்ககிரி.
69. கிளைச் சிறை, திருச்செங்கோடு.
70. கிளைச் சிறை, (மகளிர்), சேலம்.

(8) அண்ணா மாவட்டம் :

71. கிளைச் சிறை, திண்டுக்கல்.
72. கிளைச் சிறை, நிலக்கோட்டை.
73. கிளைச் சிறை, பழனி.
74. கிளைச் சிறை, வேடசந்தூர்.
75. கிளைச் சிறை, கொடைக்கானல்.

(9) மதுரை மாவட்டம் :

76. கிளைச் சிறை, மேலூர்.
77. கிளைச் சிறை, உசிலம்பட்டி.
78. கிளைச் சிறை, திருமங்கலம்.
79. கிளைச் சிறை, பெரியகுளம்.
80. கிளைச் சிறை, உத்தமபாளையம்.

(10) கன்னியாகுமரி மாவட்டம் :

81. கிளைச் சிறை, தக்கலை.
82. கிளைச் சிறை, குழித்துறை.
83. கிளைச் சிறை, நாகர்கோவில்.

(11) இராமநாதபுரம் மாவட்டம் :

84. கிளைச் சிறை, திருவாடானை.
85. கிளைச் சிறை, பரமக்குடி.
86. கிளைச் சிறை, முதுகுளத்தூர்.
87. கிளைச் சிறை, இராமநாதபுரம.

(12) காமராசர் மாவட்டம் :

88. கிளைச் சிறை, திருவில்லிபுத்தூர்
89. கிளைச் சிறை, சாத்தூர்.
90. கிளைச் சிறை, அருப்புக்கோட்டை
91. கிளைச் சிறை, விருதுநகர்.

13. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் :

92. கிளைச் சிறை, சிவகங்கை.
93. கிளைச் சிறை, திருப்பத்தூர்.

14. திருச்சிராப்பள்ளி மாவட்டம் :

94. கிளைச் சிறை, அரியலூர்.
95. கிளைச் சிறை, செயங்கொண்டான்.
96. கிளைச் சிறை, குளித்தலை.
97. கிளைச் சிறை, லால்குடி.
98. கிளைச் சிறை, மணப்பாறை.
99. கிளைச் சிறை, முசிறி.
100. கிளைச் சிறை, பெரம்பலூர்.
101. கிளைச் சிறை, துறையூர்.
102. கிளைச் சிறை, கரூர்.

15. புதுக்கோட்டை மாவட்டம் :

103. கிளைச் சிறை, புதுக்கோட்டை.
104. கிளைச் சிறை, அறந்தாங்கி.
105. கிளைச் சிறை, கீரனூர்.
106. கிளைச் சிறை, திருமயம்.

16. திருநெல்வேலி மாவட்டம் :

107. கிளைச் சிறை, அம்பாசமுத்திரம்
108. கிளைச் சிறை, கோவில்பட்டி.
109. கிளைச் சிறை, சங்கரன்கோவில்.
110. கிளைச் சிறை, தூத்துக்குடி
111. கிளைச் சிறை, திருவைகுண்டம்.
112. கிளைச் சிறை, தென்காசி.
113. கிளைச் சிறை, திருச்செந்தூர்.
114. கிளைச் சிறை, நாங்குனேரி.

17. தஞ்சாவூர் மாவட்டம் :

115. கிளைச் சிறை, கும்பகோணம்.
116. கிளைச் சிறை, மயிலாடுதுறை.
117. கிளைச் சிறை, மன்னார்குடி.
118. கிளைச் சிறை, நாகப்பட்டினம்.
119. கிளைச் சிறை, நன்னிலம்.
120. கிளைச் சிறை, பட்டுக்கோட்டை
121. கிளைச் சிறை, பாபநாசம்.
122. கிளைச் சிறை, சீர்காழி.



17. தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி

123. கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.
124. கிளைச் சிறை, திருவையாறு.
125. கிளைச் சிறை, திருவாரூர்.
126. கிளைச் சிறை, தரங்கம்பாடி.
127. கிளைச் சிறை, திருவிடைமருதூர்.
128. கிளைச் சிறை, தஞ்சாவூர்.

18. தருமபுரி மாவட்டம் ;

129. கிளைச் சிறை, ஓசூர்.
130. கிளைச் சிறை, அரூர்.
131. கிளைச் சிறை, தருமபுரி.
132. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.
133. கிளைச் சிறை, ஊத்தங்கரை.

அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் காப்பு முகாம் பற்றிய பெயர்கள் பகுதி II, III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு 1.

(6-ஆம் இனத்தைக் காண்க).

மத்திய சிறைகள், வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை/புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி/புழலிலுள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழிற்சாலைகள்/வாழ்க்கைத் தொழில்/கைவினைப் பொருட்கள் தயாரிப்பு நிலையங்கள் குறித்த பட்டியல்.

| தொடர் எண் மற்றும் நிறுவனம். (1) | தொழில்கள். (2) |
|---|---|
| 1 மத்திய சிறை, சென்னை. | தச்சு, தையல், பினையல் உற்பத்தி, கூர்நாடா உற்பத்தி, புத்தகம் கட்டுதல், முத்திரை அரக்கு, காகித உற்பத்தி. |
| 2 மத்திய சிறை, வேலூர். | நெசவு, தையல், புத்தகம் கட்டுதல், தச்சு, காலணி தயாரித்தல், பலவகை. |
| 3 மத்திய சிறை, சேலம். | அலுமினியம், கருமார் பட்டறை, தச்சு, நெசவு, காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தையல். |
| 4 மத்திய சிறை கோயம்புத்தூர். | நெசவு சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் தயாரித்தல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், சோப்பு தயாரித்தல், தச்சு. |
| 5 மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | தச்சு நெசவு, பாய்முடைதல், தையற் புத்தகம் கட்டுதல், சோப்பு தயாரித்தல். |



| | |
|---|---|
| 6 மத்திய சிறை, மதுரை .. | நெசவு, தையல், காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு. |
| 7 மத்திய சிறை, பாளையங்கோட்டை. | தச்சு, நெசவு, தையல், கைமுறை காகித உற்பத்தி புத்தகம் கடடுதல். |
| 8 மத்திய சிறை, கடலூர் .. | நெசவு, தையல், தச்சு. |
| 9 ஆடவர் பிற்காப்பு இல்லம் புழல், சென்னை. | தச்சு, தையல், உலோக வேலை. |
| 10 பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | தச்சு, தையல், புத்தகம் கடடுதல் கருமார் பட்டறை. |
| 11 மாநில மகளிர் சிறை, வேலூர். | நாடா உற்பத்தி, முறுக்கு நூல் உற்பத்தி, தையல், நெசவு. |

## இணைப்பு.

### எளிய சிறு தொழில்கள்.

(6 ஆம் இனத்தைக் காண்க.)

சிறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எளிய சிறு தொழில்கள் குறித்த பட்டியல்.

| | சிறையின் பெயர். | எளிய சிறிய தொழிலின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | மத்திய சிறை, மதுரை | குழாய் பொருத்து வேலை. |
| 2 | மத்திய சிறை, சென்னை | சாதாரண மின்கம்பி இணைப்புப் பணி. |
| 3 | மத்திய சிறை, பாளையங்கோட்டை. | குழாய் பொருத்து வேலை. |
| 4 | மத்திய சிறை, வேலூர் | கொல்லத்து வேலை. |
| 5 | மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | குழாய் பொருத்து வேலை. |
| 6 | மத்திய சிறை, சேலம் | குழாய் பொருத்து வேலை. |
| 7 | மத்திய சிறை, கடலூர் | சாதாரண மின்கம்பி இணைப்புப் பணி. |
| 8 | மத்திய சிறை, கோயம்புத்தூர். | பெயர்ப் பலகை எழுதுதல் உட்பட வண்ணம் பூசும் பணி. |
| 9 | பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | சாதாரண மின்கம்பி இணைப்புப் பணி. |



## பகுதி II.

### தமிழ் நாட்டில் அரசு மறுவாழ்வு இல்லங்கள்.

தொழு நோயால் அவதியுறும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்து அவர்கள் அவ்வில்லங்களை விட்டு வெளியேறும்போது சுயமாகவும், சுதந்திரமாகவும், பிச்சை எடுக்காது வாழ வழி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கென மறுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது :—

1. பரனூர், செங்கற்பட்டு மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னார்க்காடு மாவட்டம்.
3. பர்கூர், தர்மபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. வின்னப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேரிப்பட்டி, தஞ்சை மாவட்டம்.
7. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, வட ஆற்காடு மாவட்டம்.
9. செல்லியம்பட்டி, தர்மபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

அரசு ஆணை (நிலை) எண் 1780, உள்துறை, நாள் 13–8–1984-ன்படி மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின் கீழ் இயங்கி வந்த அரசு மறுவாழ்வு இல்லங்கள், 1–12–1984 முதல் சிறைத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றன.

### அனுமதி மற்றும் நீக்கம்

ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களும் மற்றும் பிச்சை எடுத்ததற்காக தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களில் கணவனோ அல்லது

மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால், மற்றவரையும் இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

உள்ளிருப்போர்கள், தொழுநோய் இல்லாதவர்கள் என்று மருத்துவ அதிகாரிகளால் சான்று அளிக்கப்பட்டால், அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த வெளியில் அனுப்பப்படுகிறார்கள், மேலும் திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வோர் மற்றும் இல்லம் சீரியமுறையில் நடைபெற தடையாய் இருப்போர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள்:

இவ்வில்லத்திலுள்ள உள்ளிருப்போருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும், திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

உணவு :

இல்லத்திலிருப்பவர்களுக்கு காலை சிற்றுண்டியும், தேநீரும் மதிய உணவும், மாலை தேநீரும் மற்றும் இரவு உணவும் அளிக்கப்படுகின்றன. நாள்தோறும் மோர் வழங்கப்படுகிறது. வாரம் ஒரு முறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. இதற்காக வயது வந்த நோயாளி ஒவ்வொருவருக்கும் தினமும் ரூ. 4.00-ம் அவர்களைச் சார்ந்த உறவினர் மற்றும் சிறுவருக்கு தினமும் ரூ. 2.50—ம் செலவிடப்படுகிறது. சுதந்திர தினம், காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் முக்கியமான குறிப்பிடப்பட்ட நாட்களிலும் ஒவ்வொரு உள்ளிருப்போருக்கும் கூடுதல் ரூபாய் ஒன்றுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

இருப்பிடம்:

உளுந்தூர்பேட்டை மற்றும் பர்கூர் இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ்தளத்தில் கட்டப்பட்டுள்ளன. மேலும் முதல் மாடியில் தனிப்பட்டவர்கள் தங்குவதற்கு துயில் கூடங்கள் (Dormitories) கட்டப்பட்டு உள்ளன. உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்கள் ஒற்றைக் கட்டிடமாகவும் நிரந்தர கொட்டகையாகவும் கட்டப்பட்டுள்ளன.



உடை :—

பொங்கல் நாள் மற்றும் சுதந்திர நாள் அன்று உள்ளிருப்போருக்கு இரண்டு ஜதைத் துணிகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு ஆண்டு தோறும் காலணிகளும் வழங்கப்படுகின்றன.

இதர வசதிகள்:

பாய், தட்டு, கரண்டி, எண்ணெய், சோப்பு, பற்பொடி, பல் துலக்கும் பிரஷ் (விரல்கள் செம்மையாக இல்லாதவர்களுக்கு மட்டும்) ஆகிய பொருட்கள் ஒவ்வொரு நபருக்கும் அளிக்கப்படுகின்றன. கண் நோயால் அவதியுறுபவர்களுக்கு பரிசோதனைக்குப் பின் மூக்குக் கண்ணாடிகளும் மற்றும் கறுப்பு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மாவட்ட காசநோய் மருத்துவ நிபுணர்களும்-மற்றும் கண் மருத்துவ நிபுணர்களும் இவ்வில்லவாசிகளின் மற்ற நோய்களையும் கண்டு அறிய இவ்வில்லங்களைப் பார்வையிடுகின்றனர். இல்லவாசிகளுக்காக இரு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகின்றன. அவர்களின் இலக்கியம் மற்றும் பொதுக்கல்வி மேம்பாட்டிற்காக இலக்கிய நூல்கள் வழங்கப்படுகின்றன.

இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள்:

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஏத்தாப்பூர் என்னும் இடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத இல்லவாசிகளின் குழந்தைகள் கூடுமானவரையில் தனியாக பிரிக்கப்பட்டு இவ்வில்லங்களில் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். முதன்மை செலவினங்களுக்காகவும் உடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 75 அரசு வழங்குகிறது.

மறுவாழ்வு இல்லங்களிலிருந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு வகுப்பு வாரியாக ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை. | ரூபாய் 20 (இருபது மட்டும்) ரூபாய் 120 (ஆறு வருடங்கட்கு.) |

128—55—32

| | |
|---|---|
| எட்டாம் வகுப்பு மற்றும் } | ரூபாய் 30 (முப்பது மட்டும்). |
| ஒன்பதாம் வகுப்புகளுக்கு } | ரூபாய் 60 (இரண்டு வருடங்கட்கு.) |
| பத்தாம் வகுப்பிற்கு .. | ரூபாய் 50 (ஐம்பது மட்டும்). |
| பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கு | ரூபாய் 75 (எழுபத்தைந்து மட்டும்.) |
| | ரூபாய் 150 (இரண்டு வருடங்கட்கு). |

விளையாட்டும் பொழுதுபோக்கும்:

ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 200 அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகள் இன்புற்று இருக்க இசைக் கருவிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

மருத்துவ வசதிகள்:

இல்லவாசிகளுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள், ஒரு ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், ஒரு மருந்தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு தாய்மை மருத்துவத் துணைச் செவிலியர் ஒரு உதவி ஆண் செவிலியர், ஒரு உதவி பெண் செவிலியர், முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகளின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். அங்குள்ளவர்களுக்கு தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. முழுக்கவனத்திற்கும் ஆளாகின்ற நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு உணவு மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சை செய்யுமிடங்கள் பர்கூர், உளுந்தூர்பேட்டை இல்லங்களைத் தவிர, மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள் கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இல்லவாசிகளாலேயே செய்யப்படும் தனிச்சிறப்பு வாய்ந்த காலணிகள் மற்றும் செயற்கை முன்றை காலுறைகள் முதலியவைகள் வழங்க இல்லம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 300 செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது:



உடற்பயிற்சியும் தொழில் நுட்பமும்:

ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். இவர் மின் தூண்டு கருவி (Electric Stimilator) மெழுகுத் தொட்டி (Wax Bath) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்புகளுக்கும், உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உளளிருப்போர் அனைவருக்கும் பயிற்சிகள் அளிக்கிறார். புண்ணுள்ள மற்றும் வளர்ச்சி குன்றிய நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் நிர்ணயம் செய்து அறுவை சிகிச்சைக்கான நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன..

பரனூர், புதுக்கோட்டை மற்றும் தேவியாக்குறிச்சி அரசு மறுவாழ்வு இல்லங்களில் மூன்று உடற்பயிற்சியாளர்கள் நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

தலைமைத் தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் கடமைகளும் செயல்பாடுகளும்.

தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமைத் தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் மற்ற இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பட்டியலை ஆய்வு செய்வதிலும், உடற்கூறு பயிற்சியாளர்கள் சோதனைச்சாலை தொழில் நுட்பப் பணியாளர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் குறிப்புகளைக் கவனிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். இவர் மறுவாழ்வு இல்லங்களைப் பார்வையிடும்போது அங்குள்ள உற்பத்திப் பிரிவுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதையும் உடற்கூறு பயிற்சியாளர்கள் நடவடிக்கைகள் மற்றும் ஆபத்தான தொழில் நுட்ப விஷயங்களை நோயாளிகளுக்கு விளக்குவதுடன், நோயாளிகளின் சக்திக்கேற்ப வெவ்வேறு தொழில் பயிற்சிக்கு இல்லவாசிகளைத் தேர்ந்தெடுக்கின்றார்.. உணர்வு இல்லாதவர்களுக்கு சிறு பொறியமைப்பு மற்றும் முறிந்த எலும்பு கட்ட உதவும் வரிச்சல்கள், நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர் பாதுகாப்புள்ள கருவிகளையும் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சாதனங்களையும் கொடுக்கும்படியும், மறுவாழ்வு திட்டங்களுக்கு நோயாளிகளை தயார் செய்யும்படியும் உடற்சிகிச்சைத் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடற்கட்டுடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன :—

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி).
2. பாய் பின்னுதல்.
3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
4. தையல்.
5. தச்சுவேலை.
6. விவசாயம்.
7. கிராமப்புற நூற்பு கேந்திரம் (கைராட்டை).
8. பட்டுப்புழு வளர்ப்பு.
9. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லம் மட்டும்).

நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடம் :

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில், காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவை சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள மேற்படி சங்கத் தொழிற்சாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் உள்ளிருப்போருக்கு பட்டறைகளில் (வேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக இத்தொழிற்சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள் :

தற்பொழுது 135 தறிகள் எல்லா இல்லத்திலும் நடைமுறையில் உள்ளன. 77 பாய் தறிகளும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக, மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு விற்கப்படுகின்றன. கிராமப்புற நூற்பு கேந்திரம் யா. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்



பட்டுள்ளது. இவைகளில் பிரதி மாதம் 10,000 சிட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 34 தையல் மிஷின்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள், தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

காகித உறை தொழிற் பிரிவு :

புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தொழிற் பிரிவு 1—2—1978 முதல் இயங்கி வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, இல்லங்களின் உற்பத்தித் திறன், உற்பத்தி பொருட்கள் விற்பனை விவரம், இல்லவாசிகள் வேலைக்கு அமர்த்தப்பட்ட எண்ணிக்கை, அலுவலர்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் இல்லங்களில் தயாரித்த பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த இலாப நட்ட விவரங்கள் முறையே அட்டவணைகள் 1, 2 (அ), 2 (இ), 3, 4, 5 மற்றும் 6-ல் உள்ளன.

அட்டவணை 1.

10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் நவம்பர் 1985 நிலவரப்படி தங்கியுள்ள உள்ளிருப்போரின் விவரம்.

| வரிசை எண்ணும் மறு வாழ்வு இல்லத்தின் பெயரும் | பெரியோர். | | சிறியோர் | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | ஆண். | பெண். | சிறார். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 பரனூர் .. .. .. | 223 | 143 | 47 | 8 | 4 | 425 |
| 2 உளுந்தூர்பேட்டை .. .. | 181 | 118 | 20 | 7 | 4 | 330 |
| 3 பர்கூர் .. .. .. .. | 210 | 131 | 10 | 6 | 2 | 359 |
| 4 புதுக்கோட்டை .. .. | 235 | 110 | 9 | 2 | 9 | 365 |
| 5 மனையேரிப்பட்டி .. .. | 289 | 93 | 11 | 7 | 5 | 405 |
| 6 யா. புதுப்பட்டி .. .. | 256 | 110 | 18 | 6 | 2 | 392 |
| 7 மல்லவாடி .. .. .. | 167 | 74 | 3 | 5 | 7 | 256 |
| 8 தேவியாக்குறிச்சி .. .. | 202 | 102 | 20 | 8 | .. | 332 |
| 9 விண்ணப்பள்ளி .. .. | 138 | 75 | 10 | 5 | 2 | 230 |
| 10 செல்லியம்பட்டி .. .. | 170 | 83 | 2 | .. | 13 | 268 |
| மொத்தம் | 2,071 | 1,039 | 150 | 54 | 48 | 3,362 |



அட்டவணை 2 (அ).

மறுவாழ்வு இல்லங்களின் உற்பத்திப் பொருட்களின் விவரம்

(அக்டோபர் 1984 முதல் செப்டம்பர் 1985 வரை.)

| மறுவாழ்வு இல்லத்தின் பெயர். | காய்கறி. (கி.கி.) | தானியம். (கி.கி.) | எலுமிச்சை. | தேங்காய். |
|---|---|---|---|---|
| | | | (எண்ணிக்கை.) | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பரனூர் .. .. .. .. .. | .. | .. | .. | .. |
| 2 உளுந்தூர்பேட்டை .. .. .. | 266.6 | 367.5 | .. | 12 |
| 3 பர்கூர் .. .. .. .. .. | 1,324.3 | 1,114.5 | .. | 52 |
| 4 புதுக்கோட்டை .. .. .. | 1,903.7 | 4.5 | .. | 270 |
| 5 மனையேரிப்பட்டி .. .. .. | 1,347.4 | 8.0 | .. | 492 |
| 6 யா. புதுப்பட்டி .. .. .. .. | 21.0 | .. | .. | 27 |
| 7 மல்லவாடி .. .. .. .. | 1,853.0 | .. | .. | 367 |
| 8 தேவியாக்குறிச்சி .. .. .. | 834.3 | .. | 6,000 | .. |
| 9 விண்ணப்பள்ளி .. .. .. .. | .. | .. | .. | .. |
| 10 செல்லியம்பட்டி .. .. .. .. | 772.45 | .. | .. | 6 |
| மொத்தம் .. | 8,322.75 | 1,494.5 | 6,000 | 1,226 |

அட்டவணை 2 (அ)— தொடர்ச்சி.

மறுவாழ்வு இல்லங்களின் உற்பத்திப் பொருட்களின் விவரம்
(அக்டோபர் 1984 முதல் செப்டம்பர் 1984 வரை.)-தொடர்ச்சி

| மறுவாழ்வு இல்லத்தின் பெயர். | விறகு. (கி.கி.) | துடைப்பம். (எண்ணிக்கை.) | பாய். | காலணி. |
|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) |
| 1 பரனூர் | .. | .. | 114 | 215 |
| 2 உளுந்தூர்பேட்டை | 110 | .. | 492 | 55 |
| 3 பர்கூர் | 1,820 | .. | 414 | 65 |
| 4 புதுக்கோட்டை | .. | .. | 660 | .. |
| 5 மனையேரிப்பட்டி | .. | .. | 1,208 | 264 |
| 6 யா. புதுப்பட்டி | .. | .. | 842 | 74 |
| 7 மல்லவாடி | .. | .. | 1,422 | 208 |
| 8 தேவியாக்குறிச்சி | 50 | .. | 147 | 30 |
| 9 விண்ணப்பள்ளி | .. | 50 | 1,091 | 50 |
| 10 செல்லியம்பட்டி | .. | 70 | 512 | 80 |
| மொத்தம் | 1,980 | 120 | 6,908 | 1,041 |



அட்டவணை 2 (இ).

மறுவாழ்வு இல்லங்களின் உற்பத்திப் பொருட்களின் விவரம்
(அக்டோபர் 1984 முதல் செப்டம்பர் 1985 வரை).

| மறுவாழ்வு இல்லத்தின் பெயர். | தையல் மையம். | | | | கட்டு கட்டும் துணி. | சல்லாத் துணி. | காடா துணி. |
|---|---|---|---|---|---|---|---|
| | சட்டை. | ரவிக்கை. | பாவாடை | சிறு பிள்ளைகள் சட்டை. | | | |
| | (எண்ணிக்கையில்.) | | | | | (மீட்டரில்.) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 பரனூர் | 419 | 274 | 529 | 113 | 25,581 | .. | 2,163.5 |
| 2 உளுந்தூர்பேட்டை | 190 | 35 | 56 | 59 | 1,973 | .. | 128 |
| 3 பர்கூர் | 50 | .. | 57 | .. | 2,933 | 176 | 132 |
| 4 புதுக்கோட்டை | 233 | 181 | 308 | .. | 3,950 | .. | 520 |
| 5 மனையேரிப்பட்டி | 414 | 72 | 119 | 103 | 1,500 | .. | 240 |
| 6 யா. புதுப்பட்டி | .. | .. | .. | .. | 3,656 | .. | 50 |
| 7 மல்லவாடி | 239 | 82 | 170 | 49 | 8,394 | .. | 581 |
| 8 தேவியாக்குறிச்சி | 331 | 135 | 88 | 74 | 1,260 | .. | 960 |
| 9 விண்ணப்பள்ளி | 125 | 134 | 159 | 64 | 6,669 | .. | 462 |
| 10 செல்லியம்பட்டி | 150 | 170 | 75 | 13 | 3,312 | .. | 198 |
| மொத்தம் | 2.151 | 1,083 | 1,561 | 475 | 59,228 | 176 | 5,434.5 |

| | சேலை. (எண்ணிக்கையில்). (9) | வேட்டி. (10) | துண்டுகள். (11) | சட்டைத் துணி மற்றும் ரவிக்கை. (மீட்டர்). (12) | அம்பர் சர்க்கா மையம் (சிட்டங்கள்). (13) |
|---|---|---|---|---|---|
| 1 பரனூர் .. .. .. | 215 | .. | .. | 756 | .. |
| 2 உளுந்தூர்பேட்டை .. .. | 15 | .. | 600 | 48 | 69,015 |
| 3 பர்கூர் .. .. .. | 8 | 240 | .. | 256 | .. |
| 4 புதுக்கோட்டை .. .. | .. | 380 | 735 | .. | .. |
| 5 மனையேரிப்பட்டி .. .. | 192 | .. | 432 | 500 | |
| 6 யா. புதுப்பட்டி .. .. | 21 | 54 | 245 | 415.5 | 63,800 |
| 7 மல்லவாடி .. .. .. | 120 | 285 | 329 | 493 | .. |
| 8 தேவியாக்குறிச்சி .. .. | 148 | 368 | 480 | .. | .. |
| 9 விண்ணப்பள்ளி .. .. | 167 | .. | .. | 965 | .. |
| 10 செல்லியம்பட்டி .. .. | 124 | 22 | .. | 75 | .. |
| மொத்தம் .. | 1,005 | 1,349 | 2,821 | 3,508.5 | 132,815 |



அட்டவணை 3.

அரசு மறுவாழ்வு இல்லம்—விற்பனைப் பொருட்களின் விவரம்.

(ஜனவரி 1985 முதல் டிசம்பர் 1985 வரை).

| மறுவாழ்வு இல்லத்தின் பெயர். (1) | பாய்கள். (எண்ணிக்கை). (2) | கட்டு கட்டும் துணி. (மீட்டர்). (3) |
|---|---|---|
| 1 பரனூர் .. .. .. | .. | 22,649 |
| 2 உளுந்தூர்பேட்டை .. | 16 | .. |
| 3 பர்கூர் .. .. .. | 71 | .. |
| 4 புதுக்கோட்டை .. .. | 600 | .. |
| 5 மனையேரிப்பட்டி .. | 1,079 | .. |
| 6 யா. புதுப்பட்டி .. .. | 729 | 300 |
| 7 மல்லவாடி .. .. .. | 712 | 5,100 |
| 8 தேவியாக்குறிச்சி .. .. | 400 | .. |
| 9 விண்ணப்பள்ளி .. .. | 405 | .. |
| 10 செல்லியம்பட்டி .. .. | 501 | .. |
| மொத்தம் .. | 4,513 | 28,119 |

அட்டவணை 4.

பணியில் அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை.

(அக்டோபர் 1984 முதல் செப்டம்பர் 1985 வரை.)

அரசு மறுவாழ்வு இல்லங்கள்.

| | | பரனூர். (1) | உளுந்தூர்பேட்டை. (2) | பர்கூர். (3) | புதுக்கோட்டை. (4) | மனையேரிப்பட்டி. (5) | யா. புதுப்பட்டி. (6) | மல்லவாடி. (7) | தேவியாக்குறிச்சி. (8) | விண்ணப்பள்ளி. (9) | செல்லியம்பட்டி. (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1984—** | | | | | | | | | | | |
| அக்டோபர் | .. | 82 | 154 | 210 | 117 | 72 | 123 | 141 | 103 | .. | 77 |
| நவம்பர் | .. | 84 | 155 | 110 | 120 | 74 | 121 | 134 | 98 | .. | 73 |
| டிசம்பர் | .. | 80 | 161 | 106 | 112 | 75 | 122 | 130 | 103 | .. | 73 |
| **1985—** | | | | | | | | | | | |
| ஜனவரி .. | .. | 81 | 150 | 118 | 115 | 74 | 119 | 146 | 102 | .. | 75 |
| பிப்ரவரி | .. | 88 | 147 | 216 | 118 | 75 | 122 | 43 | 103 | .. | 72 |
| மார்ச் .. | .. | 86 | 141 | .. | 111 | 73 | 115 | 132 | 100 | .. | 74 |
| ஏப்ரல் .. | .. | 87 | .. | .. | 111 | 71 | 130 | 128 | 88 | .. | 78 |
| மே .. | .. | 87 | .. | .. | 113 | 67 | 103 | 125 | 93 | .. | 74 |
| ஜூன் .. | .. | 89 | .. | .. | 113 | 77 | 110 | 120 | 93 | 325 | 74 |
| ஜூலை .. | .. | 96 | .. | .. | 115 | 74 | .. | .. | 93 | .. | 76 |
| ஆகஸ்டு | .. | 93 | .. | .. | 110 | 71 | .. | 93 | 117 | .. | .. |
| செப்டம்பர் | .. | 98 | .. | .. | 115 | 70 | .. | 86 | 111 | .. | .. |
| மொத்தம் | .. | 1,051 | 908 | 760 | 1,370 | 873 | 1,065 | 1,278 | 1,204 | 325 | 746 |

அட்டவணை 5.

10 அரசு மறுவாழ்வு இல்லங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

உதவி இயக்குநர் (மறுவாழ்வு இல்லங்கள்) சிறைத்துறை அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

| வ. எண். | பதவியின் பெயர். | பதவிகள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | உதவி இயக்குநர் (மறுவாழ்வு இல்லங்கள்) .. | 1 |
| 2 | உதவி சிறப்பு அலுவலர் (மருத்துவம்) .. .. | 1 |
| 3 | இளநிலை கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4 | தலைமை தொழில்நுட்ப பணியாளர் .. .. | 1 |
| 5 | கண்காணிப்பாளர்கள் .. .. .. .. | 2 |
| 6 | உதவியாளர்கள் .. .. .. .. .. | 5 |
| 7 | இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 1 |
| 8 | தட்டச்சர் .. .. .. .. .. | 1 |
| 9 | உதவி இயக்குநருக்கான சுருக்கெழுத்தர் .. | 1 |
| 10 | உதவி இயக்குநருக்கான (மறுவாழ்வு இல்லங்கள்) அலுவலக உதவியாளர் | 1 |
| 11 | நிலைய அலுவலக உதவியாளர் .. .. .. | 1 |
| 12 | ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் .. .. | 1 |
| 13 | உதவி சிறப்பு அலுவலருக்கான (மருத்துவம்) நியமிக்கப்பட்ட அலுவலக உதவியாளர்; | 1 |
| 14 | அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் .. | 1 |

10 மறுவாழ்வு இல்லங்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | நிர்வாக அலுவலர்கள் .. .. .. .. | 10 |
| 2 | உதவி மருத்துவர்கள் .. .. .. .. | 20 |
| 3 | செவிலியர்கள் .. .. .. .. .. | 20 |
| 4 | தாய்மை மருத்துவத் துணைச் செவிலியர்கள் .. | 10 |



| வ. எண். | பதவியின் பெயர். | பதவிகள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 5 | தொழுநோய் உடற்கூறு பயிற்சியாளர்கள் .. | 10 |
| 6 | ஆய்வுக்கூட தொழில் நுட்ப பணியாளர்கள் நிலை-1 | 10 |
| 7 | மருந்தாளுநர்கள் .. .. .. .. | 10 |
| 8 | ஆண் செவிலி உதவியாளர்கள் நிலை-2 .. .. | 10 |
| 9 | பெண் செவிலி உதவியாளர்கள் நிலை-2 .. | 10 |
| 10 | துப்புரவுப் பணியாளர்கள் .. .. .. | 20 |
| 11 | சமையலாளரின் உதவியாளர்கள் .. .. | 20 |
| 12 | அலுவலக உதவியாளர்கள் .. .. .. | 10 |
| 13 | சமையலாளர்கள் .. .. .. .. | 10 |
| 14 | அலுவலக கண்காணிப்பாளர்கள் .. .. | 10 |
| 15 | பண்டக காப்பாளர் மற்றும் கணக்காயர்கள் .. | 10 |
| 16 | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்கள் .. | 10 |
| 17 | ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர்கள் .. .. | 10 |
| 18 | தொழில்நுட்பப் பணியாளர்கள் .. .. | 3 |
| 19 | தலைமைக் காப்பாளர்கள் .. .. .. | 20 |
| 20 | காப்பாளர்கள் .. .. .. .. .. | * 80 |
| 21 | மின் வினைஞர்கள் நிலை 2 .. .. .. | 10 |
| 22 | மின்விசை தறி விரிவுரையாளர் .. .. | 1 |
| 23 | இளநிலை முதலாளர் .. .. .. .. | 1 |
| 24 | இளநிலை புத்தகம் கட்டுபவர்கள் .. .. | 2 |

*ஆண் 60
பெண் 20;

அட்டவணை 6.

மறுவாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த இலாப/நட்ட விபரம்.

| | 1980–81. | 1981–82. | 1982–83. | 1983–84 | 1984–85 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 3.50 | 2.98 | 2.53 | 3.69 | 4.00 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு. | 2.95 | 2.98 | 3.53 | 3.56 | 3.95 |
| இலாப/நட்டம் .. | (—) 0.55 | இல்லை. | (+)1.00 | (—) 0.13 | (—) 0.05 |





**மருத்துவ வசதிகள் :**

இவ்விடுதிக்கென ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும் இரு செவிலியரும், இரண்டு ஆண் உதவி செவிலியரும், இரு பெண் உதவி செவிலியரும் மற்றும் இரு மருந்தாளுநரும் பணியாற்றுகின்றனர். சாதாரண பிணிகளை நீக்கும் மருந்துகளும் மற்றும் மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன. சிறப்பு தன்மை உடைய வைத்திய வசதிக்காக, நோய்களுக்கேற்ப சென்னையில் உள்ள பல்வேறு மருத்துவ மனைகளுக்கு பிணியாளர்கள் சோதனைக்கு அனுப்பப்படுகிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் கால முறைப்படி தயாசதனுக்கு மாற்றம் செய்யப்படுகிறார்கள். மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், இம்மாநிலத்தில் அருகாமையிலுள்ள தொழுநோய், புனர்வாழ்வு இல்லங்களுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர். சென்னை மனநல மருத்துவ மனையிலிருந்து மனநல மருத்துவர் வாரத்திற்கு ஒரு முறை விடுதிக்கு வந்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்து [illegible]

மொ[illegible]

**[illegible] நடவடிக்கைகள் :**

இவ்வில்லத்திலுள்ள உடல்வல்மையுள்ள பிச்சைக்காரர்கள் ஏதாவதொரு சிறு தொழிலில், ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வில்லவாசிகளுக்கு கைத்தறி, தச்சு, மண்பாண்டம் செய்தல், தையல் மேலும் புத்தகம் கட்டுதல் போன்ற சிறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபடும் இல்லவாசிகளுக்கு ஒரு ஆளுக்கு நாளொன்றுக்கு 10 காசு ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது.

**நெசவு :**

கைத்தறிப் பிரிவில் 10 பெடல் தறிகளும், 9 மேசைத் தறிகளும் உள்ளன. சுமார் 25 இல்லவாசிகள் இதில் பயிற்சி பெறுகிறார்கள். இத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகள் இவ்வில்லவாசிகளின் ஆடைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

**தையல் பிரிவு :**

ஆறு தையல் இயந்திரங்கள் இப்பிரிவில் உள்ளன. பெண் இல்லவாசிகள் இப்பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள்.

**புத்தகக் கட்டுமானம் :**

பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் பத்திரிகைகள், அரசுப் பதிப்புகள், பதிவேடுகள் மற்ற பிற புத்தகங்கள் இங்கு கட்டுமானம் செய்யப்படுகிறது. எழுது பலகைகள, மற்றும் கோப்பு அட்டைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. சுமார் இருபது இல்லவாசிகள் இப்பிரிவில் வேலை செய்கிறார்கள்.

**மண்பாண்டப் பிரிவு :**

பூ ஜாடிகள், தண்ணீர் ஜாடிகள் மற்றும் கூஜாக்கள் தயாரிக்கப்பட்டு பல்வேறு அரசுத் துறைகளுக்கு அளிக்கப்படுகின்றன. இருபது இல்லவாசிகள் இப்பிரிவில் செயல்படுகின்றனர்.

**தச்சு வேலை :**

இப்பிரிவில் 20 இல்லவாசிகள் வேலை செய்கிறார்கள். அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் எல்லா விதமான ... சாமான்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு அத்து... அனுப்பப்படுகின்றன.

மேல்பாக்கம் அரசு காப் ... யலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை வேலைக்கு அம... தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை, உற்பத்தித் திறன், உற்பத்திப் பொருட்களின் விற்பனை விவரம், அலுவலர்கள் பற்றிய விவரங்கள் மற்றும் காப்புமுகாமில் தயாராகும் பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த இலாபம் நட்ட விவரங்கள் முறையே அட்டவணைகள் அ, இ, உ, எ, ஐ மற்றும் ஒ வில் உள்ளன.

**அட்டவணை அ.**

மேல்பாக்கம் அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதியில் 1985-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி நிலவரப்படி தங்கியுள்ள உள்ளுறுப்பினர்களின் விவரம்.

| பெரியோர். | | சிறியோர். | | சிறார். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| ஆண். | பெண். | ஆண். | பெண். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 187 | 22 | 2 | 1 | .. | 212 |



**அட்டவணை [illegible]**

அரசினர் ஏழைகள் பராமரிப்[illegible] மேல்பாக்கம்
1985 ஆம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்[illegible]ள் உறுப்பினர்களின் எண்ணிக்கை.
(ஜனவரி 1985 மு[illegible]ம்பர் 1985 வரை.)

| மாதமும் வருடமும். | தச்சுப் பிரிவு. | தையற் பிரிவு. | [illegible] | நெசவுப் பிரிவு. | மண் பாண்டப் பிரிவு. | இதர பணியில் உள்ளவர்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1985— | | | | | | | |
| ஜனவரி .. .. | 7 | [illegible] | .. | 7 | 16 | 15 | 53 |
| பிப்ரவரி .. .. | .. | 10 | .. | 7 | 16 | 15 | 48 |
| மார்ச் .. .. | 10 | 10 | 18 | 10 | 15 | 18 | 81 |
| ஏப்ரல் .. .. | 8 | 13 | 15 | 12 | 18 | 13 | 81 |
| மே .. .. .. | 9 | 7 | 27 | 12 | 18 | 20 | 81 |
| ஜூன் .. .. .. | 6 | 8 | 17 | 12 | 18 | 20 | 93 |
| ஜூலை .. .. | 11 | 8 | 18 | 11 | 17 | 23 | 81 |
| ஆகஸ்டு .. .. | 5 | 8 | 16 | 10 | 17 | 14 | 88 |
| செப்டம்பர் .. .. | 8 | 5 | .. | 12 | 17 | 18 | 70 |
| அக்டோபர் .. .. | 9 | 4 | 14 | 13 | 17 | 18 | 60 |
| நவம்பர் .. .. | 9 | 5 | 11 | 12 | 17 | 20 | 75 |
| டிசம்பர் .. .. | 7 | .. | 11 | 12 | 17 | 25 | 74 |

### அட்டவணை (உ).

அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் உள்ள தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விவரம்.

(ஜனவரி 1985 முதல் டிசம்பர் 1985 வரை.)

தையற் பிரிவு :

| கால்சட்டை. (எண்ணிக்கை) | மேல்சட்டை. (எண்ணிக்கை.) |
|---|---|
| (1) | (2) |
| 480 | 484 |

நெசவுப் பிரிவு :

வெள்ளை காடா. (1)
944 மீட்டர்.

? காப் ... யுள்ள ...வாசிகளின்
? அமர் ...தப்பா ... இல்லை ...
...ன், ... எண்ணிக்கைகள்.

தச்சுப் பிரிவு :

| (1) | எண்ணிக்கைகள். (2) |
|---|---|
| நாற்காலிகள் .. | 51 |
| மேசை .. | 6 |
| சாய்வு பெஞ்சுகள் .. | 3 |
| டைனிங் நாற்காலி .. | 7 |
| ஸ்கிரீன் ஸ்டாண்ட் .. | 1 |
| வரைபடத் தாங்கி .. | 1 |

புத்தகப் பிரிவு :

3,000 கோப்பு அட்டைகள்—கட்டுமானம் செய்த 9 லாங் ரோல் புத்தகங்கள்.

மண்பாண்டப் பிரிவு :

| மண் பானைகள். | மண் கூஜாக்கள். | பூந்தொட்டிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 51 | 51 | 50 |



### அட்டவணை (எ).

அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்.

விடுதி விற்பனைப் பொருட்களின் விபரம்.

(அக்டோபர் 1984 முதல் செப்டம்பர் 1985 வரை)

| பொருட்களின் பெயர். (1) | எண்ணிக்கை. (2) | மதிப்பு. (3) |
|---|---|---|
| | | ரூ. பை. |
| கோப்பு அட்டைகள் .. .. | 1,750 | 8,571.70 |
| மண் கூஜாக்கள் .. .. | 51 | 505.50 |
| மண் பானைகள் .. .. | 51 | 178.50 |
| மொத்தம் .. | | 9,255.70 |

## அட்டவணை (ஐ).

அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்.

அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

| வரிசை எண்ணும், பதவியின் பெயரும். (1) | பதவியின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 ஆட்சியர் | 1 |
| 2 துணை ஆட்சியர் | 1 |
| 3 மருத்துவ அலுவலர் | 1 |
| 4 கண்காணிப்பாளர் | 1 |
| 5 உதவியாளர்கள் | 2 |
| 6 இளநிலை உதவியாளர்கள் | 1 |
| 7 தட்டச்சர் | [illegible] |
| 8 சமூக நல ஊழியர் | [illegible] |
| 9 போதகர்கள் | [illegible] |
| 10 அலுவலக உதவியாளர்கள் | 3 |
| 11 தலைமைக் காவலர் | 1 |
| 12 காவலர்கள் | 11 |
| 13 வாயிற் காவலர்கள் | 2 |
| 14 தலைமைக் காப்பாளர் | 1 |
| 15 காப்பாளர்கள் | 9 |
| 16 சமையலர் | 3 |
| 17 துப்புரவுப் பணியாளர்கள் | 3 |
| 18 சலவையாளர்கள் | 3 |
| 19 சவரப் பணியாளர்கள் | 2 |
| 20 மருந்தாளுநர்கள் | 2 |
| 21 செவிலியர்கள் | 2 |
| 22 பெண் செவிலியர் உதவியாளர்கள் | 2 |
| 23 ஆண் செவிலியர் உதவியாளர்கள் | 2 |
| 24 ஓட்டுநர் | 1 |
| மொத்தம் | 61 |



## அட்டவணை (ஐ).

அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி மேல்பாக்கத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த நட்ட விபரம்.

(ரூபாய் இலட்சங்களில்.)

| (1) | 1980-81. (2) | 1981-82. (3) | 1982-83. (4) | 1983-84. (5) | 1984-85. (6) |
|---|---|---|---|---|---|
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 0.20 | [illegible] | 0.12 | 0.35 | 0.27 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு. | 0.23 | 0.23 | 0.13 | 0.42 | 0.32 |
| இலாப/நட்டம் | (+) 0.03 | (+) 0.04 | (+) 0.01 | (+) 0.07 | (+) 0.05 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-1.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras..

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.